உ
சிவமயம்.
கணபதிதுணை.

ஸ்ரீமத் குமரகுருபர சுவாமிகள்
திருவாய்மலர்ந்தருளிய

# சிதம்பரச் செய்யுட் கோவை.

இது
திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
உ௪-வது மஹா சந்நிதானம்
ஸ்ரீ ல ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த
பரமாசாரியவர்ய சுவாமிகள்
கட்டளையிட்டருளியபடி,

---

வைத்தீசுவரன்கோவில் மகா-ள-ள-ஸ்ரீ
வித்வான், மு. ஷண்முகதேசிகரவர்கள்
இயற்றிய
பதவுரை, குறிப்புரைகளுடன்

---

சீகாழி வித்துவசிகாமணி, மகா-ள-ள-ஸ்ரீ
ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை அவர்களால்
பார்வையிடப்பெற்று

---

சீகாழி
ஸ்ரீ அம்பாள் பிரஸில் அச்சிடுவிக்கப்பெற்றது.

காப்பிரைட்] 1937 [பிரதிகள் ௫00.



திருக்கயிலாய பரம்பரைத் திருத் தருமபுர ஆதீனம்

உ௪-வது மகா சந்நிதானம்

ஸ்ரீ சண்முக தேசிக பரமாசார்ய சுவாமிகள்

உ

சிவமயம்.

# சிதம்பரச் செய்யுட் கோவை

## முன்னுரை.

திருச்சிற்றம்பலம்.

பொருவிடை யொன்றுடைப் புண்ணிய மூர்த்தி புலியதளன்
உருவுடை யம்மலை மங்கை மணாளன் உலகுக்கெல்லாம்
திருவுடை யந்தணர் வாழ்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்
திருவடி யைக்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே.

திருச்சிற்றம்பலம்.

இந்நூல், "சோழவளநாடு சோறுடைத்து" என்று ஆன்றோரால் போற்றப் பெற்ற சோழநாட்டில் கொள்ளிட நதியின் வடபால் "தீர்த்தமென்பது சிவகங்கையே, ஏத்தருந்தலம் எழிற் புலியூரே, மூர்த்தி அம்பலக் கூத்தனதுருவே" என்று புகழப் பெறுவதும், பஞ்சபூத தலங்களில் தரிசிக்க முத்திதரும் ஆகாய க்ஷேத்திரம் எனக் கூறப்படுவதும் ஆகிய தில்லையம்பதியின்கண் கோயில் கொண்டுள்ள ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ நடராசப் பெருமானது பெருமையைப் பற்றிக் கூறுவதாகும்.

இது, திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலே நான்காவது குருமூர்த்திகளாய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ மாசிலாமணி தேசிக சுவாமிகளிடம் ஞானோபதேசம் பெற்ற ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளால் பாடப்பெற்றது.

சைவ சமயத்தை நிலைநாட்டுபவரும், சைவசமய குருபரரும், கண்டார் போற்றும் கண்ணியரும் ஆகிய திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் உச-வது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரியவர்ய சுவாமிகள் நீ சிதம்பரச் செய்யுட் கோவைக்கு உரை எழுதுக என்று எனக்குக் கட்டளையிட்டருளினர்கள். அப்பணியைச் சிரமேற்றாங்கி, இலக்கியப்

பயிற்சி பெறுபவரும், இந்நூலிலேயே ஒன்று என்று கூறப் பெறும் சிவப்பேற்றை அடைய விரும்புபவரும் விளக்கமாய்ப் பயிலும் நூல்களில் இஃதும் ஓர் சிறந்த நூலாகலானும், இந் நூற்கு முன்னரே எழுதியுள்ள குறிப்புரைகள் நுண்ணறிவு டைய ஒருசிலர்க்கேயன்றி ஏனையோர்க்கு அறிதற்கரியவாகலா னும், இதுகாறும் இந்நூற்கு விளக்கமான உரை வெளிவந்திரா மையானும், சென்னைச் சர்வகலாசாலையாரும் அண்ணாமலைச் சர்வ கலாசாலையாரும் இந்நூலின் அருமை பெருமைகளை உணர்ந்து இதனை வித்துவான் பிரிலிமினரி வகுப்பிற்குத் தேர்வு பாடமாக வைத்திருப்பதானும் இப்புத்துரையை எழுதத்துணிந்தேன்.

இந்நூலில் மாணவரேயன்றி மற்றியாவரும் தெளிவாய்ப் பொருளறிந்துகொள்ளும் நிலையில் பதவுரை குறிப்புரை ஆங் காங்கு வரும் புராண வரலாறு முதலியவற்றை என் அறிவிற் கெட்டியவாறு எழுதியிருக்கின்றேன்.

இந்நூலை விரைவுடன் புத்தக ரூபமாக வெளிவரும்படி செய்த திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் உச-வது மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய வர்ய சுவாமிகளுக்கு யான் எழுமையும் கடப்பாடுடையேன்.

இந்நூலைப் பதிப்பிக்கும் காலத்தில் உடனிருந்து ஆராய்தல் ஒப்புநோக்குதல் முதலிய உதவிகளைச் செய்த சீகாழி லுத்தரன் ஹைஸ்கூல் தமிழாசிரியர் வித்துவான் D. சுந்தரேச ஆச்சாரியார் அவர்களுக்கும், சபாநாயகமுதலியார் ஹிந்து ஹைஸ்கூல் ஆக்டிங் தமிழாசிரியர் வித்துவான் M. சுவாமிநாத தேசிகர் அவர்களுக்கும் என் வந்தனம் செலுத்துகிறேன்.

இங்ஙனம்,

சபாநாயகமுதலியார்
ஹிந்து ஹைஸ்கூல், சீகாழி.
12—6—36.

**வை. மு. ஷண்முக தேசிகன்,**
தமிழாசிரியன்.

உ

குருபாதம்.

திருத்தருமபுரவாதீனத்து

உசு-வது மகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த**

**பரமாசாரிய சுவாமிகள்**

# சிதம்பரச் செய்யுட் கோவை

அச்சிடுவதற்குத்

**திரவியோபகாரஞ் செய்தருளிய**

**சிறப்பு.**

---

சிற்பர மாசி லாமணி யார்சீர்
திகழ்த்திய முத்தமிழ்க் குமர
நற்பரர் செய்யுட் கோவையச் சியற்ற
நனிபொரு ளுதவிய வள்ளல்
பொற்பர னடிக்க ணமர்த்திய முனிவர்
புலவர்கள் பரசருட் சேங்கோல்
தற்பர தரும புரத்தினி தோச்சும்
சண்முகர் தாளிணை துதிப்பாம்.

பூமியெங்கும் பொலிகசிவஞ்சிவ, காமியன்பர் கருதறமோங்குக
மாமினுந்தரு மைப்பதிசண்முக, சாமிஞானசம் பந்தர்தழைக்கவே.

ப. அ. முத்துத்தாண்டவராயன்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# குமரகுருபர சுவாமிகள்

# வரலாறு.

---

குமரகுருபர சுவாமிகள் பாண்டிவளநாட்டில் ஸ்ரீவைகுண்டம் என்னும் கைலாசபுரத்தில் பாண்டிச் சைவவேளாளர் குலத்தில் சண்முகசிகாமணிகவிராயர்க்குச் சிவகாமசுந்தரிபால் அவதரித்த தெய்வத் திருக்குமாரர். இவர் பிறந்து ஐந்து ஆண்டுவரை வாய் பேசாதிருந்தமை கண்ட தாய் தந்தையர் திருச்செந்தூர் சென்று ஆங்குள்ள முருகப்பிரானை வணங்கி அவர் சந்நிதியிலுள்ள சண்முக விலாசத்திற்றங்கி வதனும்பர தீர்த்தத்தில் ஸ்நானம்செய்து எம் பெருமானே இக்குழந்தையைப் பேசும்படி செய்து ஆட்கொள்ள வேண்டும் என்று பிரார்த்தித்துக்கொண்டிருந்தார்கள். சண்முகப் பெருமானும் கவிராயருக்குத் திருவருள் செய்ய நினைத்து ஓர் நாள் அர்ச்சகவடிவங்கொண்டு குழந்தையின் நாவில் ஷடாக்ஷரத்தை எழுதி, குமரகுருபரா நமது விசுவரூப தரிசனத்திற்கு விரைவில் வருவாயாக எனக் கட்டளையிட்டு மறைந்தருளினர். இவர் உடனே பேசுஞ்சக்தியும் பாடுஞ் சக்தியும் பெற்றுக் கந்தர்கலிவெண்பா என்னும் நூலைப் பாடியருளினர்.

மறுநாட்காலையில் குமரகுருபரசுவாமிகள் இனி ஞானசாரியரைப் பெறவேண்டுமென்னும் விருப்பத்தோடு முருகக்கடவுளைத் தியானித்துப் பிரதிதினமும் அவர் ஆலயத்தைப் பிரதக்ஷிணம் செய்யும்போது நீ இவண் நீங்கி உத்தரயாத்திரை செய்யுங்கால் எங்கே யாரால் உன் வாக்குத்தடைபடுமோ அங்கே அவரால் ஞானோபதேசம் பெறக்கடவை என்று அக்கடவுள் திருவருளால் ஓர் அசரீரி எழுந்தது. சுவாமிகளும் திருவுளமகிழ்ந்து திருச்செந்தூரை அரிதின் நீங்கி ஜன்மதலமாகிய கைலாசபுரஞ் சென்று சுவாமி தரிசனஞ் செய்து கைலைக்கலம்பகம் பாடிமுடித்தார். பின் தலயாத்திரை

செய்யும் விருப்பத்தால் பெற்றோர்பால் விடைபெற்றுத் தம்பியாராகிய குமார கவிகளும் உடன்வர மதுரைக்குச்சென்று சுவாமி தரிசனம்செய்து மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழைப் பாடிமுடித்துத் திருப்பரங்குன்றத்தை யடைந்தார்.

அன்றிரவு மீனாட்சியம்மையார் மதுரையை ஆளும் திருமலைநாயகரது சொப்பனத்தில் தோன்றி "நம் இளங்குமரனது அருள்பெற்ற ஒருவன் திருப்பரங்குன்றத்தில் வந்திருக்கின்றான். அவன் நம்மைக்குறித்துப்பாடிய பிள்ளைத்தமிழை என் சந்நிதியின் முன்னே அரங்கேற்றுவாயாக" என ஆக்ஞாபித்து மறைந்தருளினார். நாயகரும் உடனே விழித்தெழுந்து குதூகலமடைந்து திருப்பரங்குன்றம் சென்று சுவாமிகளைக்கண்டு அம்மையின் ஆக்ஞையைத் தெரிவித்து, சுவாமிகளை மதுரைக்கு அழைத்து வந்து அந்நூலை அரங்கேற்றுவித்தார். குருபரரும் தினமும் ஒவ்வொரு பருவமாகப் பிரசங்கித்து வந்தார். அவர் வருகைப் பருவத்தைப் பிரசங்கிக்கையில் மீனாட்சியம்மையார் அர்ச்சகரது பெண் குழந்தைபோன்று திருமலைநாயகர் மடிமீது எழுந்தருளியிருந்தனர். தொடுக்குங்கடவுள் என்னும் செய்யுளைக் குருபரர் வாசிப்பித்துப் பொருளுரைக்கும் தருணத்தில் நாயகர் இன்னும் ஒருமுறை இச் செய்யுட்குப் பொருள் உரைக்க என, அவ்வாறே அச் செய்யுட்கும் பிற செய்யுட்கும் இறுதிச் செய்யுட்கும் பொருளுரைத்து முடித்தவுடன் மீனாட்சியார் மறைந்தருளினார். அர்ச்சகரது பெண்குழந்தையென்று கருதியிருந்த நாயகர் அம்மையின் அருளை வியந்து சுவாமிகளுக்குக் கனகாபிஷேகஞ்செய்து வேண்டிய பரிசுகளையும் விருதுகளையும் அரியநாயகபுரம் என்னும் ஊரையும் கொடுத்து அவர்க்கென்று ஒருமடமும் கட்டுவித்தார்.

அதன்பின் சுவாமிகள் நாயகர் முதலியோர் வேண்டுகோளின்படி மீனாட்சியம்மை குறம் மீனாட்சியம்மை யிரட்டைமணிமாலை மதுரைக்கலம்பகம் என்னும் பிரபந்தங்களைப்பாடி முடித்தார். ஒருநாள்நாயகர் வெகுநேரம் வரையில் போசனஞ் செய்யாதிருந்தமை கண்டு "வகுத்தான் வகுத்த" என்ற குறட்பாவை எடுத்துச் சுவாமிகள் கூற அரசர் உவந்து அதன் அருமையை உணர்ந்து திருக்குறளைச் சுருக்கி ஒரு நீதிநூல் செய்தருளவேண்டும் என்று பிரார்த்திக்கச் சுவாமிகள் நீதிநெறிவிளக்கம் என்னும் ஓர் அரியநூலை இயற்றியருளினார். சிலநாட்கழிந்தபின் தம்முடன் இருந்த குமாரகவிகளைப் பெற்றோர் அனுமதியின்படி கைலாசபுரத்திற்கு அனுப்பி இல்லறவாழ்வில் இருக்கும்படி பணித்து நாயகர்பால் விடைபெற்றுப் பாண்டிநாட்டுத் தலங்களைத் தரிசித்துச் சோணாடடைந்து ஆங்குள்ள தலங்களைத் தரிசித்து, திருவாரூர்ப்பெருமானைத் தொழுது திருவா

ரூர் நான்மணிமாலை பாடியருளினர். பின்பு திருக்கைலாய பாரம்பரை சு-வது சந்நிதானம் ஸ்ரீமாசிலாமணிதேசிக சுவாமிகளுடைய திருவருட்சிறப்பைக் கேள்வியுற்றுத் தருமையம்பதியை அடைந்தார்.

அடியார் கூட்டங்களும் வித்வ கோஷ்டிகளும் புடைசூழ வீற்றிருந்த மாசிலாமணி தேசிகரைச் சுவாமிகளும் தமக்குள்ள விருதுகளோடு சென்று அவர் சந்நிதியிலே உத்தரீயத்தோடு ஆசனத்தமர்ந்து சந்நிதானம் வினவிய வினக்களுக்கு விடையிறுத்து வந்தார். தேசிகரும் புன்முறுவல் செய்து பெரிய புராணத்தில் "ஐந்து பேரறிவு" என்று தொடங்கும் செய்யுளின் அனுபவப்பயனை வினவ, சுவாமிகளுக்கு வாக்குத்தடைபட்டது. உடனே சுவாமிகள் இருக்கைவிட்டெழுந்து மாசிலாமணி தேசிகரை வணங்கி அடியேன் அறியாமையாற் செய்த குற்றத்தை மன்னித்து என்னை ஆட்கொண்டருளவேண்டும் என்று பிரார்த்தித்தார். அதனைத் திருச்செவியேற்ற தேசிகர் நீர் காசியாத்திரை முடித்து மீளுவிரேல் ஆட்கொள்ளுவோம் என்றார். காசிக்குச் சென்று திரும்புவது அசாத்தியமாகுமே, தேகநிலையும் காலநிலையும் எந்நிலையை அடையுமோ என்று வருந்தி எங்ஙனமேனும் இப்பொழுதே ஆண்டருளவேண்டும் என்று மன்றாடினர். தேசிகர் சிதம்பரத்திலேயாவது ஒரு மண்டலம் தங்கி வருக என்று பணித்தருளினர்.

சுவாமிகள் அவ்வாக்ஞையைச் சிரமேற்றாங்கி அனுமதி பெற்றுத் திருப்புள்ளிருக்கு வேளூரை அடைந்து வைத்தியநாத சுவாமியையும் தையனாயகியம்மையையும் முத்துக்குமாரசுவாமியையும் தரிசனம்செய்து திருமடத்தில் தங்கியிருந்தபோது, முத்துக்குமாரக்கடவுள் அர்ச்சகவடிவமாகக்*கனவில் தோன்றி விபூதியளித்து நம்மைக் குறித்துப் பிள்ளைத் தமிழ்பாடுவீராக எனப்பணித்து மறைந்தருளினர். சுவாமிகளும் இங்ஙனம் வந்தவர் முருகப்பிரானே என உணர்ந்து எப்படிப்பாடுவேன் என்று திகைக்கும்போது "பொன்பூத்த குடுமி" என்று ஓர் அசரீரி வாக்கு எழுந்தது. குருபரரும் அதனை முதலாகக் கொண்டு முத்துக்குமாரசுவாமிபிள்ளைத் தமிழ் என்னும் பிரபந்தத்தைப்பாட ஆரம்பித்துச் செங்கீரைப்பருவம்பாடும்போது "செத்துப்பிறக்கின்ற தெய்வங்கள் மணவாளன்" எனவும், "தேனூறு கிளவிக்கு" என்று தொடங்குங்கால் வாயூறி நின்றவன் எனவும் இன்னனவாகத் தெய்வகதியாய்ப் பிறர்பால் நிகழ்ந்த சொற்களையும் சேர்த்துப்பாடி முடித்துக் குமரன் சந்நிதியிலே அரங்கேற்றினர்.

பின்னர்ச் சுவாமிகள் சீர்காழியைப் பணிந்து சிதம்பரம் சார்ந்து சுவாமி தரிசனம் செய்துகொண்டு அமரும் நாளில் சிதம்பர

* வழியில் தோன்றினர் என்று கொள்வாருமுளர்.

மும்மணிக்கோவை என்னும் ஒருபிரபந்தத்தைப் பாடியருளினர். அந்நாளில் குருபரர் சுவாமி தரிசனத்துக்குப் பரிசனங்களோடு செல்லுந்தருணத்தில் வழியில் புராண பிரசங்கம் செய்துகொண் டிருந்த ஒருவர் தவிர அது கேட்போர் யாவரும் சுவாமிகளைக்கண்டு மரியாதை செய்தார்கள். அவர்களுள் ஒருவர் புராணிகரை நோக்கிப் புலவர் திலகரும் சிவானுபூதிச் செல்வரும் ஆகிய சுவாமிகளைக் கண்டு நீர் மாத்திரம் மரியாதை செய்யாதது என்னை? என்று வினவ, புராணிகர் அவர் இலக்கண கவியா? வரகவிதானே என்றார். அது பொறாத ஒருவர் சுவாமிகளுக்கு அதனைத் தெரிவிக்க, சுவாமிகள் புன்முறுவல் செய்து தாம் வரகவியோடு இலக்கணகவி என்பதைத் தெரிவிக்கச் சிதம்பரச் செய்யுட்கோவை என்னும் ஒரு சிறந்த பிரபந்தத்தை இயற்றியருளிப் பின் சிவகாமியம்மை யிரட்டைமணிமாலையையும் பாடியருளினர்.

இதனைப் பாடியபின் தில்லையில் ஒருமண்டலம் தங்கி, அத் தலத்தை நீங்கித் தருமபுரத்தை அடைந்து தம் ஞானசாரியரைக் கண்டு தரிசித்து அவரைத் துதித்தியற்றிய பண்டார மும்மணிக்கோவையை அவர் முன்னிலையில் அரங்கேற்றினர். ஸ்ரீ மாசிலாமணிதேசிகர் சிவ சின்னங்களைக் குருபரர்க்கு அளித்து ஆட்கொண்டு ஞானேபதேசம் செய்தருளினர். அதன் பின் சுவாமிகள் திருவெண்ணெய்நல்லூர் துறையூர் திருவருணை முதலிய தலங்களை வணங்கிக் காஞ்சிபுரம் அடைந்து சுவாமி தரிசனம் செய்து பிறகு அவ்விடத்தினின்றும் நீங்கித் திருக்காளத்தி முதலிய தலங்களை வணங்கிக் காசியம்பதியின் எல்லையை அணுகினர். அணுகியவுடன் சிவிகையினின்றும் இறங்கிக் கங்கையை வந்தித்து ஸ்நானம் செய்து தம் நியதி முடித்துஅன்றிரவு அருநித்திரை செய்தார். அப்பொழுது அங்குக் காடுகளால் மறைக்கப்பட்டிருந்த கேதாரத்தில் எழுந்தருளிய சிவபெருமான் அவர் சொப்பனத்தில் தோன்றி எம்மைப் பூசிப்பாயாக என்றுகூறி மறைந்தருளினர். சுவாமிகளும் அவ்வாறே மறுநாள் கேதாரத்தை அடைந்து காடுகளை அழிப்பித்து ஆங்குள்ள சிவபெருமானைப் பூசித்துப் பின் விசுவநாதரையும் விசாலாக்ஷியம்மையையும் அருச்சித்துத் துண்டி விநாயகர் பதிகமும் காசிக்கலம்பகமும் இயற்றியருளினர். அத்தலத்தில் வசிக்கும் நாளில் அந்நகரை ஆண்டுகொண்டிருந்த டில்லிபாதுஷாவின் பிரதிநிதியைக்கண்டு தருமம் இயற்றுதற்கு இடம்பெற விரும்பி அவருக்குரிய இந்துஸ்தான் பாஷையைத் தெரிவித்தருளும்படி சரசுவதி தேவியைப் பிரார்த்தித்துச் சகலகலாவல்லிமாலை என்னும் பிரபந்தத்தைப் பாடியருளினர். உடனே சரசுவதியார் திருவருள் சுரந்து அப்பாஷையை விளக்கியருளச் சுவாமிகள் களிகூர்ந்து அவ்வரசன் சமுகத்துக்கெழுந்தருளினர். அந்த நபாபு சுவாமிகள்

தன்மையைச் சிறிதும் அறியாதவராகையால் சிங்காதனத்திலிருந்து கொண்டே வரலாற்றை வினவினர். சுவாமிகளும் அதனாலே தமக்கு ஒரு குறைவும் இல்லையாயினும் அவருக்குக் கெடுதி நேரிடும் என்பதை யோசித்து மகாராஜாவே உம்மை ஆசீர்வதிக்க வந்த நம்மை இப்படி நிறுத்திக்கொண்டு வினவுவது தகுதியல்ல என்றுரைத்தருளினர். அது கேட்ட நபாபு உம்மிடத்தில் தெய்வீகம் கண்டாலன்றி நான் மரியாதை செய்யேன் என்று சொல்ல, சுவாமிகள் ஆனால் அதனை நாளைக்குக் காட்டுவோம் என்று மற்றை நாளில் காளியின் அனுக்கிரஹத்தால் சிங்கத்தின்மேல் ஏறி அரண்மனை புகுந்து அரசனைநோக்கி நீர் இருப்பது உயிரற்ற சிங்கம் நான் இருப்பது உயிருற்ற சிங்கம் ஆயினும் நீர் அஞ்சவேண்டுவதில்லை, இது உமக்குமட்டும் பசுவாகத் தோன்றும் என்று சொல்லி அதிலிருந்தபடியே அவர் வினக்களுக்கு உத்தரங்கொடுத்து அவரை வணங்கும்படிசெய்தருளினர்.

அக்காலத்தில் நபாபுவும் பிறரும் மகிழும்படி சிற்றின்பத்தைப் பற்றியும் யுத்தவிஷயங்களைப்பற்றியும் கேட்போர் அவ்வம்மயமாகும் வண்ணம் பிரசங்கங்கள் செய்தருளினர். சிற்றின்பத்தைக் குறித்துப்பேசும்போது துருக்கர்கள் இவருக்கு இவ்விஷயத்தில் அநுபவமில்லாமலே பேச முடியுமா என்று சுவாமிகளைக் குறித்து இவர் பகற் சந்நியாசி போலும் என்று பிதற்றினர். சுவாமிகளும் களிம்புள்ள செப்புப்பாத்திரத்தைக் கொணர்வித்து அவர்களெதிரே மலத்திற் புதைத்தெடுத்துப் பொன்போல் பிரகாசிக்கும்படி மெய்ப்பித்தார். அதுகண்ட துருக்கருட் சிலர் இது மலம் புளிப்பாதலால் இப்படிப் பிரகாசிக்கின்றதென, உடனே சுவாமிகள் அவர்களை நோக்கி நீர் மலம்புளிப்பென்றது அனுபவத்தால் போலும் என்றார். அதுகேட்ட துருக்கர்கள் கோபங்கொண்டு சூழ, சுவாமிகள் அவர்களை நோக்கி நேற்றைக்கு இப்படிப்பட்ட கோபம் நமக்கும் உண்டாயிருக்குமே என்று சொல்லிக்கொண்டிருக்கும் சமயத்தில் விவேகிகளான அரசர் முதலாயினோர் அவர்களை அடக்கிச் சுவாமியைப் புகழ்ந்தார்கள்.

அத்துருக்கர்கள் முன்னையினும் பொறாமை யுடையவர்களாய் அவ்வரசனிடம் சென்று உமது நண்பராகிய குமரகுருபர சுவாமிகள் சாஸ்திரங்களில் வல்லவரேனும் அவர் கைக்கொண்ட தெய்வமோ பொய்யென்றனர். இவ்விஷயத்தை அரசனால் கேள்விப்பட்ட சுவாமிகள் அத்துருக்கர்கள் முன்னிலையில் காய்ச்சப்பட்ட இரும்பைக் கொணர்வித்து அதைத் தமது திருக்கரத்தால் ஏந்திச் சிவபெருமானே பரம்பொருள் என்றுகூறி நிரூபித்தார்.

மற்றொருநாள் அத்துருக்கர்கள் அரசனை அடைந்து துறவிகளுக்குச் சாதி பேதம் கூடாது என்று சாஸ்திரங்களில் சொல்லப்

பட்டிருத்தலால் இத்துறவியாகிய குமரகுருபர சுவாமிகளை நமது கிருகத்தில் உண்பிக்க வேண்டும் என்று கூற அதற்குடன்பட்ட அரசரும் சுவாமிகளுக்கு விண்ணப்பஞ் செய்தார். அதற்கும் இசைந்து சுவாமிகள் தமது வேலைக்காரன் ஒருவனை ஒருதட்டிலே சில செவ்வரத்தம்பூவை வைத்து ஒரு வெள்ளைப்பரிவட்டத்தால் மறைத்துக்கொண்டு விரைவில் வரும்படி நியமித்துவிட்டு அங்குச் சென்று தமக்காகப் படைக்கப்பட்டிருந்த பதார்த்தங்களை யெல்லாம் திவ்வியாமுதமாக்கியருளினர். அதுகண்ட அரசர் சுவாமிகளை வணங்கி அடியேன் தங்களுக்குச் செய்யவேண்டிய பணி யாது என்று வினவ, சுவாமிகள் உமது ஆளுகையிலுள்ள காசி நகரத்தில் நாம் எண்ணி வந்த தருமத்தை நடாத்துதற்கு ஓர் இடம் வேண்டும் என்றார். நபாபுவும் தேவரீருக்குப் பிரீதியான இடந்தருவோம் என்று உடன்பட்டார். ஒரு நாள் கேதாரேச்சுவரர் சுவாமிகளின் சொப்பனத்தில் தோன்றி அன்ப நீ அரசனிடத்தில் உபயகருடன் வட்டமிடும் இடத்தைக் கேள் என்று பணித்து மறைந்தருளினர். சுவாமிகள் விழித்தெழுந்து கேதாரேச்சுவரரைத் தரிசித்து வெளி வரும்போது அந்தக்கேதார கட்டத்தின் அருகிலுள்ள பள்ளி வாசலில் உபய கருடன் வட்டமிடுவதைக் கண்டு திருவுளம் மகிழ்ந்து அவ்விடத்தைத் தமக்குக் கொடுக்கும்படி கேட்க நபாபுவும் அவருக்கு அவ்விடத்தைக்கொடுத்து ஒரு மடத்தையுங் கட்டுவித்து வேண்டிய மற்றைச் சிறப்புகளையும் செய்தார். இம்மடாலயம் குமார சுவாமி மடம் எனலாயிற்று.

பின்பு சுவாமிகள் அத்திருமடத்தில் எழுந்தருளியிருந்து ஒரு சத்திரம் கட்டுவித்துக் கேதாரநாதருக்கு ஆலயம் அமைத்துக் காலந்தோறும் தரிசனம் செய்துகொண்டு அத்தலத்திலே வசித்திருந்தார். ஒரு நாள் தமது ஞானசாரியரைத் தரிசிக்கவேண்டும் என்னும் அன்பு அதிகரித்தலால் அவண் நீங்கித் தருமபுரத்தை யடைந்து ஞானசாரியரைத் தரிசித்துச் சிலநாள் உடனிருந்து மீண்டுங் காசியை அடைந்தார். இங்ஙனம் மூன்று முறை சென்ற பின்பு நான்காவது முறை ஞானசாரியருடைய சந்நிதியில் நின்று இனி அடியேனுக்கு எம்பெருமானுடைய தரிசனத்தை விட்டுக் காசியிலிருக்க மனமில்லை என்று விண்ணப்பஞ்செய்ய அப்போது ஞானசாரியர் "காட்டிருந்தாலும்" என்று தொடங்கும் செய்யுளை அருளிச்செய்து சொக்கலிங்கமூர்த்தியையும் மீனாக்ஷியம்மையையும் எழுந்தருளப் பண்ணிக்கொடுத்து விடையளித்தார், சுவாமிகள் அவ்வாக்ஞையைச் சிரமேற்கொண்டு வணங்கி விடைபெற்று அரிதின் நீங்கிக் காசியை யடைந்து சிவானுபூதிச் செல்வராய்ச் சிலகாலம் வீற்றிருந்து வைகாசி மாதக் கிருஷ்ணபக்ஷத் திருதியையிலே சிவபெருமான் திருவடி நீழலில் கலந்துள்ளார்.

# குமரகுருபர சுவாமிகள்

## சரித்திர காலம்.

இதன்பின்னர்க் கண்டவை கர்ணபரம்பரைச் செய்திகளையும் தேச சரித்திரத்தையும் நன்குணர்ந்த பெரியோர்பாற் கேட்டு எழுதப்பட்டன. இதன்மேலும் நுண்ணிதின் ஆராய்ந்து பொருந்தியவற்றைக் கொள்ளுதல் மாணவர்க்குத் தக்கதாகும்.

குமரகுருபரர் ... ... கி. பி. 1625—88
ஜன—ஆனித் திருவாதிரை சுக்ல துவிதியை (குரோதன?)
பரி—வைகாசி மூலம் கிருஷ்ண திருதியை (விபவ?)
திருமலைநாயகர் ஆட்சி ... ...1623—59
ஔரங்கசீபு ஆட்சி ... ... ...1658—1707
ஜேபுன்னீஸா— ... ... ...1639—89

குமரகுருபர சுவாமிகளின் சரித்திரம் சிதம்பரம் ஈசானிய மடத்து இராமலிங்க சுவாமிகள் எழுதிய கையெழுத்துப் பிரதிக்கிணங்கப் பெரும்பாலும் இங்கே வெளிவந்துள்ளது. இனி இவரது பிரபாவங்களை நன்கு உணரவேண்டும் என்னும் பேரவாவுடையார் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் இயற்றிய செய்யுள் நூலையும், சேற்றூர் சமஸ்தான வித்துவான் சுப்பிரமணியகவிராயரவர்கள் இயற்றிய செய்யுள் நூலையும் நோக்குதல் வேண்டும்.

குமரகுருபரர் தென்னாட்டில் முப்பத்துமூன்று வருடகாலம் சைவசமயஸ்தாபனம் செய்து, 1658-க்குமேல் ஔரங்கசீபு டில்லியை அரசாண்டகாலத்தில் அந்தப் பாதுஷாவின் நபாபுவைக் காசியம்பதியில் சென்று கண்டுகொண்டார். அன்றியும் 1660-ம்வருடம் ஔரங்கசீபுபாதுஷாவின் குமாரத்தியாகிய ஜேபுன்னீஸா என்னும் மாதுசிரோன்மணி தமது குரு ஷாருஸ்தம் காஸி என்பவரின் விருப்பத்தின்படி டில்லியில் சமயப்பெரியார்களது பரிஷத்தைச் சேர்த்தபோது சுவாமிகள் ஆண்டு விஜயஞ்செய்து சைவசமய வுண்மையை வாக்குவல்லபத்தாலும் அற்புத சித்தியாலும் விளக்கியருளினர்.

திருச்செந்தூர் முருகப்பெருமானுல் குமரகுருபரர் என்னும் திருநாமமும், இளம்பிராயத்திற்றனே சிவதீக்கையும், சைவ சந்நியாசமும் கொடுத்தருளப்பெற்ற இந்தச் சுவாமிகளது சமயக் கொள்கை வேதாகமோக்த சுத்தாத்துவித சைவ சித்தாந்தமென்பது, இன்னேர் இயற்றியருளிய நூல்களாலும், பாண்டியம் சோழம் துண்டீரம் ஆந்திரம் கருநாடகம் மாளவம் விராடம் மத்திமம் இந்துஸ்தானம் நேபாளம் முதலிய தேசங்களில் உள்ள சிவஸ்தலங்கள் யாவற்றையும் தரிசித்து ஆங்காங்குச் செய்துவந்த சைவப் பேருரைகளாலும், மதுரை வேங்கடகிரி வடதிருநகரி முதலிய சம்ஸ்தானங்களை ஆண்ட மன்னர்களின் சபையில் நிகழ்த்தி வந்த சொற்பொழிவுகளாலும், மதுரை திரிசிரபுரம் சிதம்பரம் காசி முகரங்கி முதலிய தலங்களில் இவர் ஸ்தாபித்த சைவ நிலயங்களாலும், திரிசிரபுரத்தில் பாஞ்சராத்திரிகளையும் திருவாரூரில் சிவசமவாதிகளையும் சிதம்பரத்தில் ஏகான்மவாதிகளையும் கண்டித்து நிலை நாட்டிய சைவ சமயத்தின் உண்மைகளாலும், திருவாவடுதுறையில் திருமூலர் திருமாளிகைத் தேவர் பஞ்சாக்கர மூர்த்திகள் இவர்களுடைய திருவுருவங்களையும், தருமபுரத்தில் குருஞானசம்பந்தர் திருவுருவத்தையும் தரிசித்து ஆங்காங்குச் சைவசமயம் ஓங்குதல் வேண்டும் என்று வேண்டிக்கொண்ட விருப்பங்களாலும், தமக்குப் பின் ஸ்ரீ காசியம்பதியில் சுவாமிகளாக நியமிக்கப்பட்ட சொக்கநாதசுவாமிகள் முதலிய நால்வருக்கும் சிவமூல மந்திரத்தை உபதேசித்தருளி அவர்கள் நால்வரும் எவ்வெட்டாண்டு முறையே காசியம்பதியில் வரும் பக்குவிகளுக்கு இம்மந்திரோபதேசத்தை அநுக்கிரகித்துவரல் வேண்டும் என்று கட்டளையிட்டருளிய ஆஞ்ஞையாலும், சைவ சாதனங்களுட்சிறந்த கண்மணி உற்பத்தியாதற்கு ஹேதுவாகிய முகரங்கி ஸ்தலத்தைத் தாம் பெருமுயற்சியெடுத்துக் கைப்பற்றி அதன்கணின்றும் அன்றும் இன்றும் என்றும் உருத்திராக்கம் பெருகுதற்கு உளத்திற்கொண்ட பெருங் கருணையினுலும், அச்சிவமணியை இன்றும் திருப்பனந்தாளில் வேண்டுவார்க்கு ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அளித்தற்கு இச் சுவாமிகள் காரணபூதராய் இருந்ததனுலும் இனிது விளங்கும்.

சிதம்பரச் செய்யுட்கோவை பாடியதற்கு ஓர் காரணம் முன்னர்க் காட்டப்பட்டிருப்பினும் அஃது என் துணிபல்ல. திரிசிரபுரம் மகாவித்துவான் அவர்கள் கூறிய காரணமே எனது துணிபாகும். ஸ்ரீ மீனுட்சிசுந்தரம்பிள்ளையவர்களின் பாடல்கள் வருமாறு :-

பூதி சாதனக் கிழமையர் சிலர்வந்து போற்றி
நீதி நூன்முதற் பலவுரைத் தீர்நிகழ் யாப்பிற்
காதி நாளுதா ரணமேலாம் பரமத மவாவு
மோதி யாமுயு மாறருள் செய்விரேன் றுரைப்ப. (உ௦ரு)

காவை நேர்தர மகிழ்ந்துளங் கனிந்துபல் செய்யுட்
கோவை யாப்பியற் காட்டினி துரைத்தனர் கொடுத்தார்
மாவை வெண்டிரை வாரியை விலங்கலை மாய்த்த
தூவை வேலுடைத் தோன்றலார் சேவடித் தொழும்பர். (௨௦௬)

பிரமஸ்ரீ, Dr. உ. வே. சாமிநாதய்யரவர்கள் பதிப்பு.

நீதிநெறிவிளக்கப் பாயிரத்திற் கண்டபடி இவர்கள் செய்த நூல்கள் பன்னிரண்டே எனவும், மீனாட்சியம்மை குறம் மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை சிவகாமியம்மை இரட்டைமணிமாலை துண்டிவிநாயகர்பதிகம் ஆகிய நான்கு நூல்களும் இவர் இயற்றியன அல்ல எனவும், இவற்றுள் துண்டிவிநாயகர் பதிகம் தருமையாதீனத்துச் சிவஞானதேசிகர் பாடியது எனவும், ஏனைய மூன்று நூல்களும் குருநமச்சிவாய மூர்த்திகளின் சீடருள் ஒருவராகிய இரண்டாங் குமரகுருபரர் எழுதியவை எனவும் சிலர் கூறுவர். மீனாட்சியம்மை குறம் கச்சித் திருமலைபூபதியை வாழ்த்துவதனாலும், அப்பூபதியின் காலம் இவர் காலத்திற்குப் பல ஆண்டுகளுக்கு முற்பட்டதாகையாலும், அதில்கண்ட கச்சித்திருமலைபூபதி முதல் கச்சித்திருமலைபூபதியாய் இருத்தல் பொருந்தாது; அவரையன்றி அவர் பேரனாகிய இரண்டாங்கச்சித் திருமலைபூபதியை வாழ்த்தியதாகக் கொள்ளின் காலத்தோடு முரண்படாது. ஏனைய மூன்று நூல்களும் இவர் பிரபந்தங்களடங்கிய ஏட்டுச்சுவடிகளில் காணப்படாமலிருந்தும், இவற்றின் நடை மற்றப் பிரபந்தங்களின் நடையினின்று வேறுபட்டிருந்தும் ஆன்றோர்களால் இவர் நூல்களாகவே போற்றப்பட்டு வருகின்றன.

மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் எழுதிய சரித்திரத்தால் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி ஆதிகுமரகுருபர சுவாமிகளும் அவருக்குப் பின் 1688-முதல் 1719-வரையும் வந்த ஸ்ரீலஸ்ரீ காசிவாசிகள் சொக்கநாதசுவாமிகள் அருணாசலசுவாமிகள் அம்பலவாணசுவாமிகள் சடையப்பசுவாமிகள் ஆகிய நால்வரும் ஸ்ரீ காசியம்பதித் திருமடத்திலும், ஸ்ரீலஸ்ரீ காசிவாசிகள், 6-தில்லைநாயகசுவாமிகள் (1720), 7-குமரகுருபரசுவாமிகள் (1756), 8-சிதம்பரநாதசுவாமிகள் (1790), 9-சடையப்பசுவாமிகள் (1798), 10-கணபதிசுவாமிகள் (1836), 11-இராமலிங்கசுவாமிகள் (1838), 12-சொக்கலிங்கசுவாமிகள் (1841), 13-கணபதிசுவாமிகள் (1852), 14-இராமலிங்கசுவாமிகள் (1853), 15-பொன்னம்பலசுவாமிகள் (1894), 16-சோமசுந்தரசுவாமிகள் (1898), 17-சொக்கலிங்கசுவாமிகள் (1914), 18-சொக்கலிங்கசுவாமிகள் (1919), ஆகிய இவர்கள் ஸ்ரீ பனசையம்பதித் திருமடத்திலும் சுவாமிகளாக எழுந்தருளியிருந்தவர்கள். இவர்களுள் ௧௪-ஸ்ரீலஸ்ரீ காசிவாசி இராமலிங்க

சுவாமிகள் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களைக்கொண்டு குமாரகுரு பரார் சரித்திரத்தைப்பாடுவித்து, இக்குருபரார் திருவுருவத்தை ஆகமவிதிப்படி பிரதிஷ்டை செய்வித்தார்கள். இப்போது 1930-ம் வருஷம் தொடங்கி ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாதசுவாமிகள் பனசைக் காசிமடத்துக்குத் தலைவராய்ச் சிவஞானத்தையும் சிவதருமங்களையும் செவ்வன நடாத்திப் புலவர்கள் அனைவரையும் புரந்து வருகின்றார்கள்.

வேண்டுகோள்.

சைவத் திருமடங்கள் சம்பிரதா யங்களேன்றும்
உய்வைத் தருமிங் குவந்து.

ப. அ. முத்துத்தாண்டவராயன்.

உ

சிவமயம்.

## சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துச் செந்தமிழ்ப் போதகாசிரியர்

## மகா-௱-௱-ஸ்ரீ சர்க்கரை இராமசாமிப்புலவரவர்கள்

இயற்றிய

# சிறப்புப்பாயிரம்.

தெண்டிரைநித் திலங்கொழிக்கும் செந்திற் செவ்வேள்
  திருவருளால் கலைகளெலாம் சேரத் தேர்ந்து
வண்டமிழிற் சைவநலம் ததும்பப் பன்னூல்
  வகுத்தாறு முகப்பெருமான் வாக்கைக் கொண்டு
புண்டரிகை யுறைதருமை வரலும் ஞான
  போதகனை லாட்கொண்டு புரக்கப் பெற்றோன்
கொண்டனிகர் குமரகுரு பரன்செய் செய்யுட்
  கோவைக்கின் னுரைவரைந்து கொடுத்தான் மன்னோ.

அன்னவன்யா ரெனின்வேளூர் அபிஷே கத்தார்
  அருமரபி லுதித்துயர்நா லனைத்து மோர்ந்தோன்
கன்னல்வளர் சீகாழி ஹிந்து ஹைஸ்கூல்
  கண்வருமா ணாக்கருளம் களிக்க நாளும்
தன்னனைய தமிழ்நூல்கள் சாற்றும் மேலோன்
  தயைவாய்மை பொறையடக்கம் சாந்தம் மிக்கோன்
பொன்னனைய சடையான்செங் கமல பாதம்
  போற்றுவைமு சண்முகப்பேர்ப் புலவ ரேறே.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# சிதம்பரச் செய்யுட் கோவை.

## நூல்.

வெண்பா விகற்பம்.

பூங்கொன்றைக் கண்ணியான் பொன்மன் றிறைஞ்சிடுக
வாங்கொன்றைக் கண்ணி யவர்.

இது சீர்முழுதும் எதுகையொன்றத் தொடுத்தமையாற்றலையா கெதுகை. பூங் கொன்றைக் கண்ணியான் (எ - ம்) பொன்மன்றிறைஞ்சிடுக (எ - ம்) வெண்சீர் வெண்டளையும், இயற்சீர் வெண்டளையும் விரவிவருத லின், இது ஒழுகிசைச் செப்பலோசைத்து. இதனானே, வெண்பா இரண் டடிச் சிறுமையுடைத் தென்பதூஉங் கொள்க. இதனுட் கண்ணியவர் என் னும் ஒருமொழியைக் கண்ணியெனவும், அவரெனவும், வகையுளி செய்து சீர் கொள்ளப்படுதலின், இது மலரென்னும் வாய்பாட்டான் முடிந்த ஒரு விகற்பக் குறள்வெண்பா.

(இதன் பொருள்) ஆங்கு ஒன்றை கண்ணியவர் - ஒன்று என்று சிறப்பித்துக் கூறப்பெற்ற சிவப்பேற்றை அடையக் கருதுபவர், பூ கொன்றை கண்ணியான் - அழகிய கொன்றைமலர் மாலையைத் தரித்த சிவபெருமானது, பொன் மன்று இறைஞ்சிடுக - கனகசபையை வணங்குவா ராக; (என்றவாறு.)

பூ என்னும் மங்கலமொழி இனமென்மை பெற்றது. கொன்றை முதலாகுபெயர்; கொன்றைமாலை இறைவனுக்கு அடையாளப்பூ. இது பிரணவம் என்னும் பேருடைமையானும் இறைவன் அச்சூக்கும வைந் தெழுத் துருவனாய் ஐந்தொழில் நடாத்துவனாதலானும் அறிகுறி ஆயிற்று. கண்ணி—தலையிற் சூடும் மாலை. தார் முதலிய மாலைவிசேடங்களை முன் னர்க் காண்க. கண்ணிகார்நறுங்கொன்றை என்றார் பிறரும் (புறம்).

ஆன்றோர் ஆசாரம் பற்றியும் ஓதுவார் இனிது பயிலுதல் பற்றி யும் இம்மங்கலமொழியான் இந்நூலைத் தொடங்கினர்.

பொன்மன்று—பொற்சபை; மதுரை, திருநெல்வேலி, குற்றாலம், திருவாலங்காடு ஆகிய வேறு தலங்களிலுள்ள இரசித சபை, தாமிர சபை, சித்திர சபை, இரத்தின சபை இவைகளின்று வேறுபடுத்துதற்காகவே பொன்மன்று என்றார்.

பொன்மன்று—தில்லைச்சிற்றம்பலம்; இதுவே வேதாகமங்களில் மீக்கூறப்பெற்ற தகராலயம்; பொற்சபை சிற்சபை நிருத்தசபை தேவசபை இராஜசபை என ஐந்து சபைகள் தில்லைக்கண் உளவாயினும், ஈண்டுச் சிறப்பால் சிற்றம்பலத்தையே பொற்சபை என்றார், அப்பெயர்களான் இவ்வம்பலத்தையே குறித்தல் ஆன்றோர் மரபாதலின்.

இறைஞ்சிடுதல்—அபரா அன்பின் அரன்கழல் தொழுதல். இடுதல்—வைத்தல் முதல் இருபது (வினைகளை) தொழில்களை உணர்த்தும் வினையாயினும் ஈண்டு ஒருதுணைவினையாய் நின்றது.

ஆங்கு—அவ்விடம், அக்காலத்தில், அப்படி என்னும் பொருள் குறித்து வருவதுமன்றி ஏழனுருபாகவும் அசைநிலையாகவும் வரும். ஆங்கொன்று ஒருசொல் நேர்மைத்துமாம்.

ஒன்று—ஈண்டு முத்தி; வீடுபேறு என்பர் நிகண்டாசிரியர்; இறையுணர்வு என்பாரும் உளராதலின், ஈண்டுப் பாசநீக்கத்தின்கண் பெறப்படும் சிவப்பேற்றை உணர்த்திற்று. அப்பேறும் பொன்மன்றை இறைஞ்சுதலால் எய்தப் பெறும். அவ்வொன்றைப் பெற உள்ளத்தான் உணர்வார் அம்மன்றை இறைஞ்சிடுவர் என்றார். "திருக்கோட்டும் அயன் திருமால் செல்வமும் ஒன்றோ என்னச் செய்யுந் தேவே" என்றார் பிறரும் (சித்தியார் காப்பு).

ஒன்று—ஓர் எண், மதிப்புக்குரிய பொருள், ஒற்றுமை, வாய்மை அஃறிணை ஒருமைப்பால், ஒப்பற்றது எனும் பலபொருளினும் விகற்பப் பொருளினும் இந்நூலகத்து வருந்தோறும் அறிந்துகொள்க.

கண்ணுதல்—இடையறாது கருதுதல், கணித்தல்.

இவ்வாறு சிதம்பரத்தின்கண்ணுள்ள சிற்சபேசரது பெருமையைக் குறள் வெண்பாத் தொடங்கிப் பல பாவாலும் பாவினத்தாலும் கோவை படத் தொகுத்த காரணத்தால் இதற்குச் சிதம்பரச் செய்யுட் கோவை என்று பெயராயிற்று. கருவியாகுபெயர்.

இதனை ஓதுவார்க்கு இம்மை இருவகைச் செல்வமும் அம்மை வீட்டின்பங்களும் உண்டாகும். அன்றியும் இதனைப் படனம் செய்யும் மாணவர்கள் இப்பயன்களை அடைவதனோடு இதன் ஈற்றுச் செய்யுளிற் கண்ட சொன்னயம் பொருணயம் முதலியவற்றைத் துய்த்து இன்பநலம் அடைவர். (க)

அறனன்று மாதவ னென்ப துலகெந்தை
தாள்காணார் நாணுக் கொள.

இது இருவிகற்பக் குறள் வெண்பா. மோனை முதலிய தொடையும், தொடை விகற்பமும் போலாது தொடுத்தமையால், இது செந்தொடை.

(இ - ள்) எந்தை தாள் காணார் - எமது தந்தையாகிய சிவபெருமானது திருவடித் தாமரையைக் காணாதவராகிய திருமால், நாணுக்கொள - வெட்கங் கொள்ளுமாறு, உலகு - இப்பூவுலகில் உள்ளவர்கள், மாதவன் என்பது - மாதவன் என்று சொல்வது, அறன் அன்று - தர்மம் அன்று; (எ - று.)

மாதவன் என்பது அறன் அன்று என இயைக்க. அறன் மொழியிறுதிப்போலி. மா—தவன் இலக்குமி நாயகன், மா—தவன் மிக்க தவத்தையுடையவன் எனவும் ஒருபொருளில் நிற்பதால் எந்தை தாளைக் கண்டிருப்பாராயின் மாதவன் என்பது ஏற்புடைத்தாகும்; அப்போது அவர் நாணுக் கொளார். அவரை இலக்குமி நாயகன் என்னும் பொருளோடு மாதவன்என்னும்போது பெருந்தவன் என்னும் பொருள் தொனிப்பதால் அவர் நாணுக்கொள்வார்; அங்ஙனங் கூறுதல்முறையன்று என்றார். காணார் எதிர்மறை வினையாலணையும்பெயர். உலகம் என்பது தமிழ்மொழியேயாமென்பர் நச்சினார்க்கினியர்; லோகமென்ற வடசொல்லின் திரிபென்பாருமுளர். உலகு—ஆகுபெயர். எந்தை—என் தந்தை என்பதன் மரூஉ; தை—முறைப் பெயர் விகுதி எனினுமாம். நாணு—உகரச் சாரியை. (உ)

கண்ணுதல் காட்சி கிடைத்த விழிக்கில்லை
வெல்கூற்றின் றோற்றங் கொளல்.

இதுவுமது. அனுவெழுத்தால் இணைமோனை அமைத்து, எனைத் தொடையும், தொடை விகற்பமும் போலாது தொடுத்தமையால், இது மருட்செந்தொடை.

(இ - ள்) கண்ணுதல் காட்சி கிடைத்த விழிக்கு - நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமானைத் தரிசித்த கண்களுக்கு, வெல் கூற்றின் - யாவரையும் வெல்லும் இயமனது, தோற்றம் கொளல் - வடிவத்தைக் காண்பது, இல்லை—; (எ - று.)

கொளல் இல்லையென முடிக்க. கண்ணுதல் இரண்டாம் வேற்றுமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகை. நுதல்—ஆகுபெயர் உடையவனை உணர்த்திற்று. கண்ணுதல் நுதற்கண் மரூஉ. வெல் கூற்று வினைத்தொகை. கூற்று சொல்லால் அஃறிணையும் பொருளால் உயர்திணையுமான காரண இடுகுறிப்பெயர். இன் ஐந்தனுருபு, ஏழனுருபு, இறந்தகால விடைநிலை, சாரியை எனப் பல பொருள்களில் வரும். ஆங்காங்கு உய்த்துணர்க. இல்லை ஐம்பால் மூவிடத்தும் வரும் வினைமுற்று. (௩)

திருமுடியிற் கண்ணியு மாலையும் பாம்பு
திருமார்பி லாரமும் பாம்பு—பெருமான்
றிருவரையிற் கட்டிய கச்சையும் பாம்பு
பொருபுயத்திற் கங்கணமும் பாம்பு.

இது குறளிரண்டாய் இடையே தனிச்சொற் பெற்று ஒருவிகற்பமாய் நடத்தலின் ஒருவிகற்பத் திருகுற ணேரிசை வெண்பா. அடிதோறும் ஈற்றுச்சீர் ஒரு சொல்லே வரத் தொடுத்தமையால் அடியியைபு. இது காசென்னும் வாய்பாட்டுக் குற்றியலுகர இயற்சீரான் முடிந்தது.

(இ - ள்) பெருமான் - கடவுளது, திரு முடியில் கண்ணியும் மாலையும் பாம்பு - அழகிய முடியில் அணிந்துள்ள கண்ணியும் மாலையும் சர்ப்பமாகும், திரு மார்பில் ஆரமும் பாம்பு - அழகிய மார்பினிடத்து அணிந்துள்ள ஆரமும் சர்ப்பமாகும், திரு அரையில் கட்டிய கச்சையும் பாம்பு - அழகிய இடையில் கட்டின உதரபந்தமும் சர்ப்பமாகும், பொரு புயத்தில் - போர் செய்தலில் வல்ல புயத்தில் அணிந்துள்ள, கங்கணமும் - கடகமும், பாம்பு - சர்ப்பமாகும்; (எ - று.)

கச்சை உதரபந்தம், அகடசக்கர வின்மணி (கந்தபுராணம்.) திரு கண்டோர் விரும்பும் தன்மை. உம்மைகள் எண்ணுப்பொருள. கட்டிய கச்சை—பெயரெச்சம் செயப்படுபொருளைக்கொண்டுமுடிந்தது. (௪)

கறையரவுக் கஞ்சாது தஞ்சுறூஉந் திங்க
ளிறைவி நறுநுதலைக் கண்டு—பிறைமுடியோன்
கைம்மா னடமுவந்த காற்புலிக்கஞ் சாதஞ்சு
மம்மான் விழிமானைக் கண்டு.

இதுவும் அவ்வாறே இருவிகற்பத்தா னடந்தமையான், இருவிகற்பத் திருகுற ளேரிசை வெண்பா. அடிதோறும் இரண்டாமெழுத்தொன்றி வரத் தொடுத்தமையால் அடியெதுகை. இதனுள் முதற்சீருடை இரண்டா மெழுத்து மாத்திரையே ஒன்றத் தொடுத்தமையால் இடையா கெதுகையுமாம்.

(இ - ள்) திங்கள் - சந்திரன், கறை அரவுக்கு அஞ்சாது - விஷத்தையுடைய பாம்பிற்குப் பயப்படாமல், இறைவி - பார்வதிதேவியாரது,நறு நுதலைக்கண்டு - ஒளிபொருந்திய நெற்றியைப்பார்த்து, அஞ்சுறூஉம் - பயப்படும், பிறைமுடியோன் கைமான் - மூன்றாம் பிறைச்சந்திரனை அணிந்த சடாமுடியையுடைய சிவபெருமானது கையின்கண் உள்ள மானானது, நடம் உவந்த கால் புலிக்கு அஞ்சாது - திருநடனத்தைக்கண்டு ஆனந்தித்த வியாக்கிரபாதராகிய புலிக்குப்பயப்படாமல், அ மான் - அந்தமான் போன்ற உமாதேவியின், மான் விழியைக்கண்டு - மான்போன்ற கண்ணைப் பார்த்து, அஞ்சும் - பயப்படும்; (எ - று.)

அ மான் அ பண்டறிசுட்டுச் சிறப்பின்கண் வந்தது; அம் அழகு எனினுமாம்; அம்மான் இறைவி என்னும் பொருளளவாய் நின்றது. ஐ என்னும் உருபைப் பிரித்துக் கூட்டுக. திங்கள் தன் பகையாகிய அரவுக்கஞ்சாது தனக்கு நட்பாயதானுலும் நறுநுதலின் வண்ணத்தைத் தான் பெறுமையின் அந்நுதலுக்கு அஞ்சும், மான் தனக்குப் பகையாகிய புலிக்கு அஞ்சாமல் தனக்கு நட்பாயதானுலும் விழித்தன்மையைத் தான் பெறுமையான் அவ்விழிக்கு அஞ்சும் என்க. மான்விழி முன்பின்னுகத்தொக்க உவமைத்தொகை. அஞ்சுறூஉம் இன்னிசை யளபெடை. நறுநுதல் பண்புத்தொகை. பிறை பிறப்பது என இளஞ்சந்திரனுக்குக் காரணக்குறி. பிறைமுடியோன் திங்கள் என்றும் கூட்டுக. (௫)

வணங்கு சிறுமருங்குற் பேரமர்க்கண் மாதர்க்
கணங்கு புரிவ தறமாற்—பிணங்கி

நிணங்காலு முத்தலைவே னீள்சடையெங் கோமாற்
கிணங்காது போலு மிரவு.

இது குறளிரண்டாய் முதற்குறளீற்றின்கண், ஓராசிடையிட்டுத் தனிச்சொற் பெற்று, ஒருவிகற்பமாய் நடத்தலான் ஒருவிகற்பத் தோரா சிடை நேரிசை வெண்பா. இதனுள் முதலடி நடுவிரு சீரும் முரணத் தொடுத்தமையால் இடைப்புணர் முரண். இது பிறப்பென்னும் வாய்பாட்டு முற்றுகர இயற்சீரான் முடிந்தது.

(இ - ள்) வணங்கு - வளையும், சிறு மருங்குல் - சிறிய இடையினையும், பேர் அமர் கண் மாதர்க்கு - பெரிய செவியுடன் போர் செய்கின்ற கண்ணிணையுமுடைய பெண்களுக்கு, அணங்கு புரிவது - வருத்தத்தைச் செய்வது, அறம் ஆல் - தருமம் அன்று, பிணங்கி - மாறுபட்டு, நிணம் காலும் - மாமிசத்தினை ஒழுகவிடும், முத்தலை வேல் நீள் சடை எம் கோமாற்கு - மூன்று முனைகளையுடைய சூலத்தையும் நீண்ட சடைமுடியையுமுடைய எமது தலைவனாகிய சிவபெருமானுக்கு, இரவு - இராப்போதானது, இணங்காது போலும் - பொருந்தாது போலும்; (எ - று.)

கோமானை வணங்கும் மாதர்க்கு அணங்கு புரிவதையே அறமாகக் கொண்டிருத்தலால் இரவு அப்பெருமானுக்கு இணங்காதுபோலும் என்றார். வேல் ஈண்டுச் சூலத்தின்மேல் நின்றது. இரா—இரவு. போலும் ஒப்பில் போலி. கோமான் ஆண்பாற் பெயர். மூன்று தலை - முத்தலை. ஆல்—அசை, ஒலிக்குறிப்பினுல் அறம் அன்று என்றபடி. பிணங்கு உடையான் கருவியின்மேல் ஏற்றப்பெற்றது. பேர் கண் எனக்கூட்டுக. (௬)

வரத்திற் பிறப்பொன் றருள்கெனினும் வள்ளல்
கரத்திற் கபாலத்தைக் காணூஉப்—புரத்தை
யிரும்புண்ட ரீகபுரத் தெய்தினார்க் கீயா
னரும்புண்ட ரீகத் தயன்.

இதுவும் அவ்வாறே இருவிகற்பமாய் நடத்தலான் இருவிகற்பத் தோராசிடை நேரிசை வெண்பா. இதனுள் முதலடி முதற்சீரும் ஈற்றுச் சீரும் முதலெழுத்தொன்றத் தொடுத்தமையால் ஒரூஉமோனை.

(இ - ள்) அரும் புண்டரீகத்து அயன் - அரிய தாமரை மலர் மேல் எழுந்தருளியுள்ள பிரமதேவன், வரத்தில் பிறப்பு ஒன்று அருள்க எனினும் - ஒருவர் தவத்தினால் மேலான பிறவி ஒன்று பெற அருள் செய்வாய் என்றாலும், வள்ளல் கரத்தில் கபாலத்தை காணூஉ - வேண்டுவார் வேண்டுவதை ஈபவனாகிய சிவபெருமானது கையின்கண்ணுள்ள பிரமகபாலத்தைக்கண்டு, புரத்தை - சரீரத்தை, இரும் புண்டரீக புரத்து எய்தினார்க்கு - சிறந்த புலியூரை அடைந்தவர்கட்கு, ஈயான் - கொடுக்கமாட்டான்; (எ - று)

அயன் கபாலத்தைக் காணூஉ புண்டரீக புரத் தெய்தினார்க்குப் புரத்தை ஈயான் என்றியைக்க. வரத்தில் இல் உருபு மயக்கம். காணூஉ செய்யூ என்னும் வாய்பாட்டு இறந்தகாலவினையெச்சம் அளபெடுத்தது. அருள்கெனினும் அகரம் தொகுத்தல். புண்டரீகம்—தாமரை புலி என்னும் பலபொருளில் வரும் ஒருசொல். இருமை சிறப்பின் மேற்று. (எ)

கூற்றங் குமைத்த குரைகழற்கால் கும்பிட்டுத்
தோற்றந் துடைத்தேந் துடைத்தேமாற்—சீற்றஞ்செய்
யேற்றினன் றில்லை யிடத்தினு னென்னினியாம்
போற்றினு னல்கும் பொருள்.

இது முதற்குறளீற்றின்கண் இரண்டாசிடையிட்டு ஒருவிகற்பமாய் நடத்தலால் ஒருவிகற்பத்தீராசிடை நேரிசைவெண்பா.

(இ - ள்) கூற்றம் குமைத்த குரை கழல் கால் கும்பிட்டு - இயமனை உதைத்த ஒலிக்கின்ற வீரக்கழலை அணிந்த திருவடியை வணங்கி, தோற்றம் துடைத்தேம் துடைத்தேம் ஆல் - பிறவியை ஒழித்தோம் ஒழித்தோம் ஆதலால், சீற்றம் செய் ஏற்றினன் - கோபத்தைச் செய்யும் இடபத்தையுடையவனும், தில்லை இடத்தினன் - சிதம்பரத்தை வாசஸ்தானமாகக் கொண்டுள்ளவனுமாகிய சிவபெருமான், யாம் போற்றினல் - நாம் துதித்தால், நல்கும் பொருள் - அளிக்கின்ற பொருள், இனி என் - இனி என்ன உளது; (எ - று.)

தில்லை தரிசிக்க முத்திதரும்தலம் என்பது பெற்றும். குரைகழல் வினைத்தொகை. துடைத்தேம் துடைத்தேம், காலவழுவமைதியும் அடுக்கும் விரைவுபற்றியும் துணிவு பற்றியும் வந்தன. குமைத்த கழல் பெயரெச்சத்தொடர் கருவிப்பெயரைக் கொண்டது. ஆல் ஆதலால் என்னும் பொருளில் வருவதோர்இடைச்சொல். (அ)

நீரிற் குமிழி யிளமை நிறைசெல்வ
நீரிற் சுருட்டு நெடுந்திரைக—ணீரி
லெழுத்தாகும் யாக்கை நமரங்கா ளென்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று.

இதுவும் அவ்வாறே இருவிகற்பமாய் நடத்தலால் இருவிகற்பத்தீராசிடை நேரிசை வெண்பா.

(இ - ள்) நமரங்காள் - நம்மவர்களே!, இளமை நீரில் குமிழி - இளமைப் பருவமானது நீரினிடத்துத்தோன்றும் கொப்புளத்திற்குச் சமமாகும், நிறை செல்வம் - நிறைந்த செல்வமானது, நீரில் சுருட்டும் நெடும் திரைகள் - தண்ணீரிற் சுருண்டுபோகும்படியான நீண்ட அலைகளுக்குச் சமமாகும், யாக்கை - சரீரமானது, நீரில் எழுத்து ஆகும் - தண்ணீரில் எழுதப்பட்ட எழுத்திற்குச் சமமாகும், (ஆதலால்) எம் பிரான் மன்று வழுத்தாதது என் - எமது பெருமான் எழுந்தருளியுள்ள பொற்சபையைத் துதிக்காதிருப்பது எதற்காக ; (எ - று.)

நமரங்காள் மன்று வழுத்தாதது என் என்றியைக்க. என் வினு வினைக்குறிப்பு. இளமை முதலியவற்றின் நிலையாமை கூறப்பட்டது. இச் செய்யுளை நீதிநெறிவிளக்கத்திற்குக் காப்பாக முன்னோர்கள் கொண்டுள்ளார். (கூ)

வாழி திருமன்றங் கண்ட மலர்க்கண்கள்
வாழி பெருமான் புகழ்கேட்ட வார்செவிகள்
வாழி யவனை வணங்கு முடிச்சென்னி
வாழியவன் சீர்பாடும் வாய்.

இது நான்கடியாய்த் தனிச்சொலின்றி ஒரு விகற்பமாய் நடத்தலின் ஒருவிகற்பத்தின்னிசை வெண்பா. இது அடிதோறும் முதலெழுத் தொன்றத் தொடுத்தமையால் அடிமோனை. இதனுள் அடிதோறும் ஈற்றுச் சீர் முரணத் தொடுத்தமையால் கடைமுரணுமாம்.

(இ - ள்) திரு மன்றம் கண்ட மலர் கண்கள் வாழி - அழகிய பொற்சபையைத் தரிசித்த மலர்போன்ற கண்கள் வாழ்க, பெருமான் புகழ் கேட்ட வார் செவிகள் வாழி - நடராசப் பெருமானது கீர்த்தியைக் கேட்ட நீண்ட காதுகள் வாழ்க, அவனை வணங்கும் முடி சென்னி வாழி - அப்பெருமானைப் பணியும் முடியையுடைய தலை வாழ்க, அவன் சீர் பாடும் வாய் வாழி - அவனது சிறப்பைப் பாடும் வாய் வாழ்க; (எ - று.)

மன்றம் அம் சாரியை. கண் முதலிய பொறிகள் சிவன் பக்கல் ஈடுபட்டிருத்தலால் அவற்றை வாழி என்றார். (க0)

பூந்தண் பசுந்துழாய்ப் போது நறுவிரி
தேந்தண் டிரடிண்டோட் டேவற்குந் தேவிக்குங்
காந்தன் பதமலர்கள் காமுற்றார் காமுறார்
பாந்தண் முடிச்சூடும் பூ.

இதுவுமது. இதனுள் மூன்றுமடி இரண்டாஞ் சீரொழிந்து ஏனை முச்சீரும் முதலெழுத் தொன்றத் தொடுத்தமையால் மேற்கதுவாய் மோனை. இதனுள்ளே போ என நெட்டெழுத்துத் தனியே நின்றும், து எனக் குற்றெழுத்துத் தனியே நின்றும், பூந் என நெட்டெழுத் தொற்றடுத்து நின்றும், தண் எனக் குற்றெழுத் தொற்றடுத்து நின்றும், நேரசை நான்கும் வந்தன. விரி எனக் குறிலிணைந்தும், நறு எனக் குறி னெடி லிணைந்தும், பசுந் எனக் குறிலிணைந் தொற்றடுத்தும், துழாய் எனக் குறினெடிலிணைந் தொற்றடுத்தும் நிரையசை நான்கும் வந்தன. ஓரசைச் சீரிரண்டனுட், பூ என நேரசைச்சீரும் வந்தவாறு காண்க. இது நாளென்னும் வாய்பாட்டான் முடிந்தது.

(இ - ள்) பூம் தண் பசும் துழாய் போது - அழகிய குளிர்ச்சி பொருந்திய பசிய துளசி மலரானது, நறு விரி - மணம் வீசும், தேம் தண் திரள் திண் தோள் தேவர்க்கும் - தேனுல் குளிருந் தன்மையையுடைய திரண்ட வலிமையான தோள்களையுடைய திருமாலுக்கும், தேவிக்கும் - பார்வதிதேவிக்கும், காந்தன் - நாயகனது, பதமலர்கள் - பாதமாகிய தாமரைகளை, காமுற்றார் - விரும்பியவர், பாந்தள் முடி சூடும் பூ - ஆதிசேடன் திருமுடியிற் றாங்கியுள்ள பூமியை, காமுறார் - விரும்பமாட்டார்கள்; (எ - று.)

பதமலர்கள் காமுற்றார் பாந்தள் முடிச்சூடும் பூ காமுறார் என்றியைக்க. திருமாலுக்கும் காந்தன் என்றார், திருமால் நால்வகைச் சத்தியுள் தானும் ஒரு சத்தியாகலின். "அரியலாற் றேவி யில்லை ஐயனையாறனார்க்கே" என்றார் திருநாவுக்கரசரும். போது விரி என்க. நறு—தேன். தேம்—இனிமை. காமுறுதல்—ஆசை கொள்ளுதல். பாந்தள்—பாம்பு. பதம் குறுக்கல் விகாரம். துழாய் துளசீ என்னும் வடமொழிச் சிதைவு. மலர்களைக் காமுற்றார் பூவைக் காமுறார் என்னும் சொல்நயத்தைக் காண்க. (கக)

புனலமுவம் புக்குடைந்தோர் தாளூன்றி நின்று
வனசங்காள் செய்தவநீர் வாழியரோ வாழி
பொருவிடையோன் றெய்வப் புலியூரை யொப்பா
டிருமுகத்துக் கொப்பச் செயின்.

இது பலவிகற்பத்தின்னிசை வெண்பா. தமிழ் வழக்கால் இருவிகற்பமும் பலவிகற்ப மெனப்பட்டது. இதன் முதலடி முதற்சீரிரண்டும் முதலெழுத்தொன்றிவரத்தொடுத்தமையால் இணைமோனை. இது முதற்றொடை ஓரெதுகைத்தாயும், ஏனைத்தொடை வேறோரெதுகைத்தாயும் வந்தமையால் இரண்டடி எதுகை என்க. இதனுள்ளே தாளூன்றி எனத் தேமாங்காயும், வனசங்காள் எனப் புளிமாங்காயும், புனலமுவம் எனக் கருவிளங்காயும், புக்குடைந்தோர் எனக் கூவிளங்காயுமாக வெண்சீர் நான்கும், செயின் என, நிரையசைச் சீரும் வந்தன.

(இ - ள்) வனசங்காள் - தாமரை மலர்களே, பொருவிடையோன் - போர் செய்கின்ற இடபத்தை யுடைய கடவுளது, தெய்வ புலியூரை ஒப்பாள் - தெய்வத்தன்மை வாய்ந்த தில்லையைப்போலும் பொலிவினை யுடையாளது, திரு முகத்துக்கு ஒப்ப செயின் - அழகிய முகத்துக்குப் பொருந்தும்படியாகச் செய்தால், நீர் - நீங்கள், புனல் அழுவம் புக்கு உடைந்து - தண்ணீரின் ஆழத்திலே புகுந்து வருந்தி, ஓர் தாள் ஊன்றி நின்று - ஒரு தாளைப் (நாளம்) பூமியிற் பதித்து நின்று கொண்டு, செய்தவம் வாழி வாழி - செய்கின்ற தவம் வாழ்க வாழ்க; (எ - று.)

வனசங்காள் முகத்துக்கு ஒப்ப செயின் நீர் செய்தவம் வாழி வாழி என்றியைக்க. வனஜம்—நீரில் தோன்றுவது. அரோ ஈற்றசை, வாழியர் என வியங்கோளாக்குதலுமாம். புக்கு பகுதியிரட்டித்து இறந்த காலம் காட்டிற்று. இது தலைவியைப் புகழ்தல். (கஉ)

ஆதி முதலுணர்ந்தியா மன்புசெயப் பெற்றவா
வோஒ பெரிது மரிதே யெளிதேயோ
வேதந் துறைசெய்தான் மெய்துணியான் கைதுணிந்தான்
பேதுற்றும் வெஃகேம் பிற.

இதுவுமது. இதனுள் இரண்டாமடி ஈற்றுச்சீரிரண்டும் முரணத் தொடுத்தமையால் கடையிணை முரண். இதனுள்ளே ஆ என நெட்டெழுத்தும், தி எனக் குற்றெழுத்தும், ஆ என வுயிரெழுத்தும், ஓஒ என அளபெடை யெழுத்தும், வெஃகேம் என ஆய்த வெழுத்தும், உணர்ந்தியாம் எனக் குற்றியலிகரமும், அன்பு எனக் குற்றியலுகரமும், துறை என ஐகாரக் குறுக்கமும் வல்லெழுத்து மெல்லெழுத்து இடையெழுத்துக்களும் மெய்யும் உயிர்மெய்யுமாகிய அசைக்குறுப்பாமெழுத்துப் பதின்மூன்றுங் காண்க. முதலுணர்ந்தியா மெனக் கனிச்சீர் வெள்ளையின் விரவிவரலாகாமையிற் குற்றியலிகரம் அலகு பெறாதெனத் தள்ளிக் கருவிளங்காய் எனச் சீர் கொள்க. ஐகாரம் கை எனக் குறுகாதவழி நெட்டெழுத்தினியல்பிற்றாயும், துறை எனக் குறுகியவழிக் குற்றெழுத்தினியல்பிற்றாயும், நின்றவாறு காண்க.

(இ - ள்) யாம் ஆதிமுதல் உணர்ந்து - நாம் பழமையான முதற்கடவுளை அறிந்து, அன்பு செய பெற்றவா - அன்புசெய்யப் பெற்றவாறு,

ஓ பெரிதும் அரிது - மிகவும் அருமையாகும், எளிதேயோ - எளிமையாகுமோ, வேதம் துறை செய்தான் - வேதத்தைப் பாகுபாடுசெய்த வியாசன், மெய் துணியான் கை துணிந்தான் - உண்மைப்பொருளை அறியாதவனாய்க் கைவெட்டப்பட்டான், (ஆதலால்) பிற பேதுற்றும் வெஃகேம் - மற்றைத் தெய்வங்களை மயங்கியும் விரும்பமாட்டேம்; (எ - று.)

சிவபெருமானது பரத்துவம் கூறப்பெற்றது. ஓ முன்னது வியப்பு பின்னது எதிர்மறை. துணியான் முற்றெச்சம். வெஃகேம் தன்மைப் பன்மை எதிர்மறை வினைமுற்று. (கங)

பொன்மன்றம் பொற்றா மரையொக்கு மம்மன்றிற்
செம்ம றிருமேனி தேனொக்கு மத்தேனை
யுண்டு களிக்குங் களிவண்டை யொக்குமே
யெம்பெரு மாட்டி விழி.

இதுவும் பலவிகற்பத்தின்னிசை வெண்பா. இதன் முதலடியிரண்டும் மூன்றாமெழுத்தொன்றிவரத் தொடுத்தமையால், மூன்றாமெழுத்தொன்றெதுகை.

(இ - ள்) பொன்மன்றம் - பொற்சபையானது, பொன் தாமரை ஒக்கும் - பொன்னாற்செய்யப்பட்ட தாமரைப்பூவை ஒத்திருக்கும், அ மன்றில் - அச்சபையில் எழுந்தருளியிருக்கின்ற, செம்மல் திருமேனி தேன் ஒக்கும் - கடவுளது அழகிய சரீரமானது (தாமரைப் பூவிலுள்ள) தேனை ஒத்திருக்கும், எம் பெருமாட்டி விழி - எம்பெருமாட்டியாகிய பார்வதிதேவியினது கண், அ தேனை உண்டு களிக்கும் களி வண்டை ஒக்கும் - அந்தத் தேனை அருந்தி மகிழும் செருக்கிய வண்டினை ஒத்திருக்கும்; (எ - று.)

செம்மல்—பெருமையை யுடையவர், ஆண்பாற் பெயர். பெருமான் என்பதன் பெண்பால் பெருமாட்டி. பலவிடங்களில் உவமஉருபு வெளிப்பட்டுவருதலின் இது பலவயிற்போலி யுவமை. (கச)

ஆடகச் செம்பொ னணிமன் றிடங்கொண்ட
பாடகச் சீறடியாள் பாகத்தான்—சூடகக்கைக்
கங்கையாள் கேள்வன் கழறொழூஉக் கைகூப்பி
நின்றிறைஞ்சச் சென்றிறைஞ்சுங் கூற்று.

இதுவும் இரண்டாமடியினிறுதி தனிச்சொற்பெற்று மூன்று விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா. இதன் மூன்றாமடி முதற்சீரும் மூன்றாஞ் சீரும் முதலெழுத் தொன்றத் தொடுத்தமையால் பொழிப்பு மோனை. இதனுட் செம்பொன் எனத் தேமாவும், அணிமன் எனப் புளிமாவும், கழறொழூஉ எனக் கருவிளமும், ஆடக எனக் கூவிளமுமாக ஆசிரிய வுரிச்சீர் நான்கும் வந்தன.

(இ - ள்) ஆடகம் செம்பொன் அணி மன்று இடம் கொண்ட - ஆடகம் என்னும் செம்பொன்னால் வேயப்பட்ட அழகிய சபையை இடமாகக்கொண்டுள்ள, பாடகம் சீறடியாள் பாகத்தான் - பாடகம் என்ற காலணியை அணிந்த குறுகிய பாதங்களையுடைய உமாதேவியை ஒருபாகத்திலே கொண்டுள்ளவனும், சூடகம் கை கங்கையாள் கேள்வன் - வளையல்களை

அணிந்துள்ள கையையுடைய கங்காதேவிக்கு நாயகனும் ஆகிய சிவபெருமானது, கழல் தொழூஉ கை கூப்பி நின்று இறைஞ்ச - பாதங்களைத் தோத்தரித்துச் சிரசின்மேற் கை குவித்து நின்று வணங்க, கூற்று சென்று இறைஞ்சும் - அத்தகையரை இயமன் வந்து வணங்குவான்; (எ - று.)

ஆடகம்—பொன்விசேடம். கேள்வன்—உரியன். சூடகம்—கைவளை. சென்று இறைஞ்சும் இடவழுவமைதி. சிறுமை அடி சீறடி. இறைஞ்சும் செய்யுமென்முற்று. (௧௫)

காதன் மகளிர் கலக்கக் கலக்குண்டு
பேதுற்ருர் நெஞ்சும் பிழைத்தகன்ருர் நன்னெஞ்சும்
போதம் படரும் புலியூரே—தாதுண்டு
வண்டுறங்கு நீள்சடையோன் வைப்பு.

இது மூன்ருமடியினிறுதி தனிச்சொற்பெற்று இரண்டு விகற்பத்தான்வந்த இன்னிசை வெண்பா. இதன் முதலடியிரண்டாமெழுத்துத் தகர அகரமும், இரண்டாமடி யிரண்டாமெழுத்துத் தகர உகரமுமாக வந்தமையால் வருக்க வெதுகை.

(இ - ள்) தாது உண்டு - மகரந்தங்களை அருந்தி, வண்டு உறங்கும் - வண்டுகள் தூங்கும், நீள் சடையோன் வைப்பு - நீண்ட சடாபாரத்தையுடைய சிவபெருமான் வசிக்கும் இடம், காதல் மகளிர் கலக்க - ஆசையையுடைய பெண்கள் தம் அழகினுல் கண்டோர் அறிவைக் கெடுக்க, கலக்குண்டு - வருந்தி, பேதுற்ருர் - மயங்கினுரது, நெஞ்சு - மனம், போது அம்பு அடரும் - மன்மதனது புஷ்பபாணம் வருத்துதற்கிடமாயிருப்பதும், பிழைத்து அகன்ருர் - அம்மகளிரின் மாயவலையிற் சிக்குருமற் றப்பிச் சென்றவர்களது, நல் நெஞ்சு - நல்ல மனம், போதம் படரும் புலியூர் - ஞானம் பரவ இடமாயிருப்பதும் சிதம்பரமென்னுந் தமைாகும்; (எ - று.)

பேதுற்ருர் நெஞ்சும் போது அம்பு அடரும் எனவும், பிழைத்தகன்ருர் நன்னெஞ்சும் போதம் படரும் எனவும் சிலேடையாற் பொருள் கொள்க. (௧௬)

காம ருயிர்செகுக்குங் கண்ணென்றே—காமருசீர்
மாதர் நலனழிக்குங் கண்ணென்றே—மாதருக்
கின்னு விரவொழிக்குங் கண்ணென்றே—யிந்நிலத்திற்
றன்னே ரிலாதான் றனக்கு.

இது அடிதோறும் ஒரூஉத்தொடையமைய முதன் மூன்றடிகளினும் தனிச்சொற்பெற்றுப் பலவிகற்பத்தான்வந்த இன்னிசைவெண்பா. இதன் மூன்ருமடி யீற்றயற் சீரொழிந்து ஏனமுச்சீரும் முதலெழுத்தொன்றத் தொடுத்தமையால் கீழ்க்கதுவாய் மோனே.

(இ - ள்) இ நிலத்தில் - இப்பூவுலகத்தில், தன் நேர் இலாதான் தனக்கு - தனக்கு ஒப்பாக வேருெருவர் இல்லாத சிவபெருமானுக்கு, காமர் உயிர் செகுக்கும் - மன்மதனது உயிரை அழிக்கும், கண் ஒன்று - அக்கினியாகிய கண் ஒன்ருகும், காமருசீர் - அழகிய சிறப்புப் பொருந்திய, மாதர்

நலன் அழிக்கும் - பெண்களது நலனைக்கெடுக்கின்ற, கண் ஒன்று - சந்திரனாகிய கண் ஒன்றாகும், மாதருக்கு - பெண்களுக்கு, இன்னா இரவு ஒழிக்கும் - துன்பத்தைத்தரும் இராக்காலத்தை நீக்கும், கண் ஒன்று - சூரியனாகிய கண் ஒன்றாகும்; (எ - று.)

காமர்—இகழ்ச்சிக் குறிப்பின்கண் வந்த பன்மை. ஏனைத் தேவர்கட்கெல்லாம் கண்களிரண்டேயாகத் தான் முக்கண்ணுடைச் சிறப்பு நோக்கிச் சிவனைத் தன்னேரிலாதான் என்றார். (கஎ)

செக்கர் சடையிற் பசுங்குழவி வெண்டிங்காண்
முக்க ணொருவற்கு நின்னோ டிருசுடரு
மொக்க விழித்தலா லுய்ந்தே மொருநீயே
யக்க ணொருமூன்று மாயின்மற் றுய்வுண்டே
மைக்கண் மடவா ருயிர்க்கு.

இது ஒருவிகற்பத்து ஐந்தடிப் பஃறொடைவெண்பா. இதன் முதலடி யிரண்டாஞ்சீரொழிந்து ஏனைமுச்சீரும் முரணத்தொடுத்தமையால் மேற்கதுவாய் முரண். இரண்டாமடி யீற்றயற் சீரொழிந்து ஏனைமுச்சீரும் முரணத் தொடுத்தமையால் கீழ்க்கதுவாய் முரண். இது பிறப்பென்னும் வாய்பாட்டுக் குற்றுகர இயற்சீரான் முடிந்தது.

(இ - ள்) செக்கர் சடையில் பசுங்குழவி வெண் திங்காள் - சிவந்த சடாபாரத்தில் விளங்கும் பசுமைவாய்ந்த இளைய வெண்மைநிறம் பொருந்திய சந்திரனே, முக்கண் ஒருவற்கு - மூன்றுகண்களையுடைய ஒப்பற்ற சிவபெருமானுக்கு, நின்னோடு - உன்னோடு, ஒக்க - பொருந்த, இரு சுடரும் - சூரிய சந்திரர்களாகிய இரண்டு சுடர்களும், விழித்தலால் - விழியாக விளங்குதலின், உய்ந்தேம் - யாங்கள் பிழைத்தோம், ஒருநீயே - ஒருவனாகிய நீயே, அ கண் ஒருமூன்றும் ஆயின் - அக்கண்கள் ஒருமூன்று மானால், மை கண் மடவார் உயிர்க்கு - மை தீட்டப்பெற்ற கண்களையுடைய பெண்களின் உயிர்க்கு, உய்வு உண்டே - பிழைத்தல் உண்டா (பிழைத்தல் அரிதாம்); (எ - று.)

இதுவும் முன்னர்க்கவியும் விரகமுற்றதலைவியின் கூற்று. இறைவன் முச்சுடரையும் கண்களாகக்கொண்டு விளங்குதலை விழித்தலால் என்றார். விழித்தலாவது பிரச்சுவலித்தல் என்பர் தக்கயாகப்பரணி உரையாசிரியர் (௩௩௪). இஃது இலக்கணை வழக்கு. ஏகாரம் முன்னது பிரிநிலை, பின்னது எதிர்மறை. மற்று அசை. (கஅ)

பொன்புரிந்த செஞ்சடைக்கு வெள்ளிப் புரிபுரிக்கும்
வெண்டிங்கட் கண்ணியான் வெல்கொடியு மானேறே
யங்கவன்ற னூர்தியுமற் றவ்வேறே யவ்வேற்றின்
கண்டத்திற் கட்டுங் கதிர்மணிக்கிங் கென்கொலோ
பைந்தொடியார் செய்த பகை.

இது பலவிகற்பத்து ஐந்தடிப் பஃறொடைவெண்பா. இதன் முதலடி முதற்சீரும் மூன்றாஞ்சீரும் முரணத் தொடுத்தமையால் பொழிப்பு

முரண். நான்காமடி யிறுதிச் சீரொழிந்து ஏனை முச்சீரும் முதலெழுத் தொன்றத் தொடுத்தமையால் கூழைமோனே. இது அடிதோறு மிரண்டா மெழுத்து மெல்லினம் வரத் தொடுத்தமையால் இனவெதுகை.

(இ - ள்) பொன் புரிந்த - பொன்னுற் செய்தாலொத்த, செம் சடைக்கு - செம்மைநிறம் பொருந்திய சடாபாரத்திற்கு, வெள்ளி புரி புரிக்கும் - வெள்ளிக் கம்பியாற் றகுதிபடக் கட்டியதை யொத்த, வெண் திங்கள் கண்ணியான் - வெண்மைநிறம் பொருந்திய சந்திரனை முடியில் கண்ணியாகத் தரித்துள்ள சிவபெருமானது, வெல் கொடியும் ஆன் ஏறே - வெல்லும் துவசமும் இடபமேயாகும், அவன் தன் ஊர்தியும் - அப்பெருமானது வாகனமும், அ ஏறே - அவ்விடபமே, அ ஏற்றின் - அவ் விடபத்தின், கண்டத்தில் கட்டும் கதிர் மணிக்கு - கழுத்தில் கட்டும் ஒளி பொருந்திய மணிக்கு, பைந்தொடியார் செய்த பகை என் - பசிய வளையல் களை அணிந்த பெண்கள் இழைத்த பகைமை என்ன; (எ - று.)

மாலைப்பொழுதின்கண் திரும்பிவரும் ஆனேற்றின் கண்டத்திற் கட்டும் மணியொலி காமோத்தீபகமானதுபற்றி இங்ஙனம் கூறினர். "ஊர்தி வால்வெள் ளேறே சிறந்த சீர்கெழு கொடியும் அவ்வே றென்ப" என்பது புறநானூறு. இது செவிலிகூற்று, தோழி கூற்றெனினுமாம். மாலைப் பொழுதின்கண் வறுகண்டிரங்குதல் தலைவியர்க்கியல்பு. (கக)

கருந்தாது கொல்லுங் கருங்கைத்திண் கொல்லர்
வருந்தா தியன்றதொரு வல்விலங்கு பூண்டு
திருந்தாதார் முன்றிறொறுஞ் சென்றுசிலர் தூங்க
விருந்தேங் களிதூங்கி யர்மேமற் றம்ம
வருந்தா தலர்தில்லை யம்பலத்திற் றூங்கும்
பெருந்தேன் முகந்துண்ணப் பெற்று.

இது ஒரு விகற்பத்து ஆறடிப் பஃறொடை வெண்பா.

(இ - ள்) சிலர் - சிலபேர், கரும் தாது கொல்லும் - கருமைநிறம் பொருந்திய இரும்பை அடிக்கின்ற, கரும் திண் கை கொல்லர் - மிக்க வலிமையான கைகளையுடைய கொல்லர்கள், வருந்தாது - வருத்தமின்றிச் சுலபமாய், இயன்றது ஒரு வல் விலங்கு பூண்டு - செய்ததாகிய ஓர் வலிய விலங்கைத் தரித்து, திருந்தாதார் முன்றில் தொறும் சென்று தூங்க - பகைவரது வாயிற்படிதோறும் போய் நின்று வருந்த, யாம் - நாம், வருந்தாது - வருத்தமில்லாமல், அலர் தில்லை அம்பலத்தில் தூங்கும் - விளங்குகின்ற தில்லையம்பலத்தின்கண் தொங்கி, பெரும் தேன் முகந்து - சிறந்தமதுவினை மொண்டு, உண்ணப்பெற்று - அருந்தப்பெற்று, களிதூங்கி இருந்தேம் - சந்தோஷங்கொண்டு விளங்கினேம்; (எ - று.)

இச்செய்யுளில் சிவனை வணங்காதார்க்குண்டாகும் சிறுமையும் வணங்குவார்க்குண்டாகும் பெருமையும் விளக்கிக் காட்டுகின்றார். கொல்லர்களால் வருந்தாது அமைக்கப்பெற்ற வல்விலங்கு என்பதை ஆசைத்தளையெனக் கோடலும் ஒன்று. அது தன்னையுடையானைப் பொருளாதிய காரணம் பற்றிப் பகைவர் வாயிலினும் அகலாது காக்குமாறு

புரியவல்லதாகலின் அதனை வல்விலங்கு என்றார். கருந்தாது—கரும்பொன், இரும்பு. பெருந்தேன் என்றது நடராசப்பெருமானை; அவர் ஆனந்தநிருத்தஞ்செய்து அமர்தலைத் தூங்கும் என்றார். தேறல் குனிக்கும் என்றார் மதுரைக்கலம்பகத்தும். முன்றில்—இல்முன், இலக்கணப்போலி. ஏ மற்று அசைநிலைகள். அம்ம—வியப்பிடைச்சொல். (௨௦)

வின்மதனை வென்ற தலர்விழியே யொன்னார்தம்
பொன்னெயி றீமடுத்த தின்னகையே பூமிசையோன்
றார்முடி கொய்தது கூருகிரே யாருயிருண்
கூற்றுயி ருண்ட தடித்தலமே யேற்றான்
பரசும் பினாகமுஞ் சூலமு மென்னே
கரமலர் சேப்பக் கொளல்.

இது பலவிகற்பத்து ஆறடிப் பஃறொடை வெண்பா. இதன் முதலடி யீற்றயற் சீரொழிந்து ஏனைமுச்சீரும் இரண்டாமெழுத்தொன்றத் தொடுத்தமையால் கீழ்க்கதுவா யெதுகை. இரண்டாமடி முதற்சீரும் மூன்றாஞ்சீரும் இரண்டாமெழுத்தொன்றத் தொடுத்தமையால் பொழிப்பெதுகை. மூன்றாமடி முதலயற் சீரொழிந்து ஏனைமுச்சீரும் இரண்டாமெழுத்தொன்றத் தொடுத்தமையால் மேற்கதுவா யெதுகை. நான்காமடி முதற்சீரும் ஈற்றுச்சீரும் இரண்டாமெழுத்தொன்றத் தொடுத்தமையால் ஒரூஉ வெதுகை.

(இ - ள்) வில்மதனை வென்றது - கரும்புவில்லையுடைய மன்மதனை வென்றது, அலர் விழி - பரவிய நெற்றிக்கண்ணாகும், ஒன்னார்தம் பொன் எயில் தீ மடுத்தது - பகைவர்களது (செம்பொன், வெண்பொன், கரும்பொன்னாற் செய்யப்பெற்ற) மதிலை நெருப்புண்ணும்படி செய்தது, இன் நகை - இனிய புன்முறுவலாகும், பூமிசையோன் தார்முடி கொய்தது - தாமரைப்பூவின்மேல் எழுந்தருளியுள்ள பிரமதேவனது மாலையை அணிந்த சிரத்தினைக் கிள்ளியது, கூர் உகிர் - கூரிய நகமாகும், ஆர் உயிர் உண் கூற்று உயிர் உண்டது - பூவுலகத்தில் நிறைந்துள்ள ஜீவராசிகளினது உயிர்களை உண்ணும் இயமனது உயிரைக்குடித்தது, அடி தலம் - பாதமாகும், (இவ்அவயவங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் காரியங்களைச் செய்வதனால்) ஏற்றான் - இடபவாகனத்தையுடைய சிவபெருமான், பரசும் பினாகமும் சூலமும் - மழுவையும் வில்லையும் சூலத்தையும், கரம் மலர் சேப்ப கொளல் - கரமாகிய மலர்கள் சிவக்கும்படியாகக் கொண்டிருத்தல், என் - எதற்காக; (எ - று.)

சிவபெருமானது அங்கங்களே இத்தொழில்களைச் செய்யாநிற்ப அவர் கையில் கருவிகளை ஏற்றது என் எனக் கூறினார். அலர்விழி—மலர்போன்ற கண் எனினும் ஆம். கொளல்—தொழிற்பெயர். ஏகாரம் நான்கும் தெரிநிலை. (௨௧)

வானே நிலனே கனலே மறிபுனலே
யூனே யவ்வூனி லுயிரே யுயிர்த்துணையே
யானேறு மேறே யரசே யருட்கடலே
தேனே யமுதே யளியேங்கள் செல்வமே

யானே புலனு நலனு மிலனன்றே
யானு மென்போன்மற் றார்பெற்றா ரம்பலத்துண்
மாநா டகங்காணும் வாழ்வு.

இது ஒருவிகற்பத்து ஏழடிப் பஃறொடைவெண்பா. இதன்முதலடி நாற்சீரும் இறுதியெழுத்தொன்றத் தொடுத்தமையால் முற்றியைபு. இரண்டாமடி முதலயற்சீரொழிந்து ஏனைமுச்சீரும் இறுதியெழுத்தொன்றத்தொடுத்தமையால் கீழ்க்கதுவாயியைபு. மூன்றாமடி முதற்சீரொழிந்து ஏனை முச்சீரும் இறுதியெழுத்தொன்றத் தொடுத்தமையால் கூழையியைபு. நான்காமடி யீற்றயற்சீரொழிந்து ஏனைமுச்சீரும் இறுதியெழுத்தொன்றத் தொடுத்தமையால் மேற்கதுவாயியைபு. ஐந்தாமடி முதற்சீரும் இறுதிச்சீரும் இறுதியெழுத்தொன்றத் தொடுத்தமையால் ஒரூஉ வியைபு. இது காசென்னும் வாய்பாட்டு முற்றுகர இயற்சீரான் முடிந்தது.

(இ - ள்) வானே - ஆகாயமே, நிலனே - பூமியே, கனலே - நெருப்பே, மறி புனலே - மடங்கிவீசும் நீரே, ஊனே - உடலே, அ ஊனில் உயிரே - அவ்வுடலின்கண்ணுள்ள ஜீவனே, உயிர்துணையே - ஜீவனுக்குத் துணையே, ஆன் ஏறும் ஏறே - இடபவாகனத்தின்மேல் ஏறுகின்ற இடபமே, அரசே - அரசரே, அருள்கடலே - கிருபாசமுத்திரமே, தேனே—, அமுதே - தேவாமிர்தமே, அளியோங்கள் செல்வமே - எளியோங்களது செல்வமே, யான் - நான், புலனும் - அறிவும், நலனும் - நன்மையும், இலன் - இல்லாதவன், ஆனாலும் - ஆயினும், என்போல் - என்னைப்போல், அம்பலத்துள் மாநாடகம் காணும் வாழ்வு - தில்லையம்பலத்தினிடத்துப் பெருமைபொருந்திய திருநடனத்தைத் தரிசிக்கின்ற வாழ்க்கையை, மற்று யார் பெற்றார் - வேறு எவர் அடைந்தார்கள்; (எ - று.)

வாழ்வாவது சுத்தாத்துவிதக் கலப்பு, அருக்கன் ஒளியிற் கண்ணொளிபோலத் தன்மையால் ஒன்றாகியும் பொருளாலிரண்டாகியும் நிற்கும் அனுபவம்; "அப்பொருளு மான்மாவு மாரணநூல் சொன்னபடி தப்பிலாச்சித்தொன்றாஞ் சாதியினால்" என முன்னோர் இக்கருத்துப்படக் கூறுதலுங் காண்க. அளியோம்—அளிக்கத்தக்க யாம், எளியோம். ஏறு—சிங்கமுமாம். வானே முதலியவற்றின் ஏகாரம் விளிப்பொருளன. யானே ஏகாரம் பிரிநிலை. அன்று, ஏ—அசைள். (௨௨)

வண்டுஞ் சுரும்பு ஞிமிறுங் குடைந்தார்ப்பத்
தண்டே னிறைக்கு மிதழி நறுங்கண்ணி
யெண்டோண்முக் கண்ணு னிமையம் புனைமன்றி
லண்டர்கள் கண்களிப்பத் தொண்ட ரகங்குளிர்ப்ப
நின்றாடு மாடற் குருகா திருத்திரால்
வன்றிண் மறலி புடைத்துக் கொடிறுடைக்கு
மன்று முருகீர்கொல் லாம்.

இது பலவிகற்பத்து ஏழடிப்பஃறொடைவெண்பா. இதனிரண்டாமடி இறுதிச் சீரிரண்டும் இறுதியெழுத்தொன்றத் தொடுத்தமையால்

இணையியைபு. மூன்றுமடி முதற்சீரும் இரண்டாஞ்சீரும் இரண்டாமெழுத்தொன்றத் தொடுத்தமையால் இணையெதுகை. நான்காமடியிறுதிச்சீரொழிந்து ஏனைமுச்சீரும் இரண்டாமெழுத்தொன்றத் தொடுத்தமையால் கூழையெதுகை. அதுவே இரண்டாஞ்சீரும் இறுதிச்சீரும் இறுதியெழுத்தொன்றத் தொடுத்தமையால் பொழிப்பியைபு. ஐந்தாமடி முதற்சீரும் இறுதிச்சீரும் முரணத்தொடுத்தமையால் ஒரூஉமுரண்.

(இ - ள்) வண்டும்—, சுரும்பும்—, ஞிமிறும்—, குடைந்து ஆர்ப்ப - பூக்களைக்கிண்டித் (தேனையுண்டு) சப்திக்க, தண் தேன் இறைக்கும் - குளிர்ந்த மதுவினைச் சிந்தும், இதழி நறும் கண்ணி - கொன்றை மலரால் ஆகிய வாசனையுள்ள மாலையை அணிந்த, எண் தோள் முக்கண்ணன் - எட்டுத்தோள்களையும் மூன்று கண்களையுமுடைய சிவபெருமான், இமையம் புனை மன்றில் - இமயத்தை ஒத்த சபையினிடத்து, அண்டர்கள் கண் களிப்ப - தேவர்கள் நேத்திரானந்தங்கொள்ள, தொண்டர் அகம் குளிர்ப்ப - அடியார்கள்மனம் குளிர்ச்சியை அடைய, நின்று ஆடும் ஆடற்கு - நின்றுகொண்டு ஆடும் நடனத்திற்கு, உருகாது இருத்திர் - மனமிளகாமல் இருக்கின்றீர்கள், வன் திண் மறலி - வலிமையும் திண்மையுமுடைய இயமன், புடைத்து கொடிறு உடைக்கும் அன்றும் - அடித்துக் கன்னத்தை உடைக்கும் அக்காலத்திலும், உருகீர் கொல் ஆம் - மனமுருக மாட்டீர்களோ! (எ - று.)

கண்ணன் ஆடும் ஆடல் என்க. வண்டு சுரும்பு ஞிமிறு சாதி விசேடம். புனை—உவம உருபு; அன்றியும் இமையம்புனை—பொன்னாற் புனைதல் செய்த எனினுமாம். உருகீர்—முன்னிலைப்பன்மை எதிர்மறை வினைமுற்று. இருத்திர் முன்னிலைப் பன்மை உடன்பாட்டு வினைமுற்று.

(உசு)

கங்கைக்குக் கண்மலர் சாத்தக் கருங்குவளை
செங்குவளை பூத்தாள் செயலென்னே—யெங்கோமான்
பங்குற்றுந் தீரா பசப்பு.

இது மூன்றடியாய் இரண்டாமடியினிறுதி தனிச்சொற்பெற்று ஒரு விகற்பத்தால் வந்தமையால் ஒரு விகற்ப நேரிசைச் சிந்தியல் வெண்பா.

(இ - ள்) கங்கைக்கு - கங்கா தேவியின்மீது, கண்மலர் சாத்த - கட்பார்வை செலுத்த, கரும் குவளை செங்குவளை பூத்தாள் - கரிய குவளைப் பூவை ஒத்த கண்களைச் செங்குவளை போன்று ஆக்கிய உமாதேவியினது, செயல் என் - செய்கை என்ன ?, எம் கோமான் பங்கு உற்றும் - எம்பெருமான் ஒருபாகத்திலே (உமாதேவி) பொருந்தியிருந்தும், பசப்பு - பசலையானது, தீரா - நீங்கா; (எ - று.)

உமாதேவிக்கு ஊடலின்கண் உண்டாகிய கண் உடல் இவற்றின் நிறவேறுபாட்டைக் குறிக்கின்றார். பெருமான் கங்கையை நோக்கிய அளவிற்கும் சகியாமல் உமாதேவி கொண்ட பசப்பு தான் எல்லா உயிர்கள் மாட்டும் வைத்த காருண்யத்தையும் ஆன்மாக்களின் போகத்திற்குக் காரணமாதலையும் சிவகாமி என்ற பெயரையும் விளக்கும். கண்சிவத்தல் சினக்

குறிப்பு. கண்மலர்—கண்ணுகிய மலர் இருபெயரொட்டு. பூத்தாள் வினையாலணையும்பெயர். கங்கைக்கு—உருபு மயக்கம். கண்மலர்சாத்தல் என்பது காதற் குறிப்புணர்த்தல். (உச)

கம்பக் கரடக் களிற்றின் கபாயணிந்த
வம்பொற் புயத்தார்க் கமைந்ததா—லம்பை
முலையானைக் கோடணிந்த மார்பு.

இதுவும் அவ்வாறே இருவிகற்பத்தான் வந்தமையால் இருவிகற்ப நேரிசைச் சிந்தியல் வெண்பா. இதன் முதலடி நாற்சீரும் முதலெழுத் தொன்றத் தொடுத்தமையால் முற்றுமோனை.

(இ - ள்) அம்பை - சிவகாமி அம்மையின், முலை யானை கோடு அணிந்த மார்பு - முலையாகிய யானைக்கொம்பைத் தரித்த மார்பானது, கம்ப கரட களிற்றின் - யாவரும் நடுங்கும்படியாக மதத்தோடுகூடத் திரியும் யானையினது, கபாய் அணிந்த - தோலாகிய நிலையங்கியைத்தரித்த, அம் பொன் புயத்தார்க்கு அமைந்தது - அழகிய பொன்மயமான புயங்களை யுடைய சிவபெருமானுக்குப் பொருந்தியது சாலும்; (எ - று.)

கரடம்—யானைமதம், மதம்பாய் சுவடு. கம்பம் கட்டுத்தறியுமாம். கபாய்—திசைச்சொல் உருது. அம்பை—அம்பா என்பதன் ஆகார ஈறு ஐகார ஈறாய்த் திரிந்தது. (உரு)

போற்றுமின் போற்றுமின் போற்றுமின் போற்றுமின்
கூற்றங் குமைக்க வருமுன் னமரங்கா
ளேற்றுவந்தான் பொற்றா ளிணை.

இது தனிச்சொலின்றி மூன்றடியாய் ஒரு விகற்பத்தான் வந்த ஒரு விகற்பத்தின்னிசைச் சிந்தியல் வெண்பா. இதன் முதலடி நாற்சீரும் ஒரு சொல்லே வரத் தொடுத்தமையால் இரட்டைத்தொடை.

(இ - ள்) நமரங்காள் - நம்மவர்களே, கூற்றம் குமைக்க வரும் முன் - இயமன் நம்மை வருத்த வருவதற்கு முன்பே, ஏற்றுவந்தான் - இடபத்தின்மேல் வருகின்ற சிவபெருமானது, பொன் தாளிணை - பொன் போன்ற திருவடிகளை, போற்றுமின்... - வணங்குங்கள்...; (எ - று.)

அடுக்கு இசைநிறை. உவந்தான் எனப் பிரித்துப் பொருள் கொள்ளலுமாம். நமரங்காள் விளி, அம் சாரியை. (உசு)

உம்பர் பெருமாற் கொளிர்சடிலம் பொன்பூத்த
தம்பொற் புயம்வேட்டேந் தார்முலையும் பொன்பூத்த
பொன்பூத்த பூங்கொன்றை சூழ்ந்து.

இது இரண்டு விகற்பத்தால்வந்த இன்னிசைச் சிந்தியல் வெண்பா. இதன் முதலடியினிறுதியெழுத்து இரண்டாமடிக்கு முதலாகவும் அவ்வடியினிறுதிச்சீர் மூன்றுமடிக்கு முதலாகவும் தொடுத்தமையால் அந்தாதித்தொடை.

(இ - ள்) பொன்பூத்த பூ கொன்றை சூழ்ந்து- பொன் போல் மலருகின்ற கொன்றைப்பூமாலை சூழ்ந்திருத்தலால், உம்பர் பெருமாற்கு - தேவதேவருக்கு, ஒளிர்சடிலம் - விளங்குகின்ற சடை, பொன்பூத்த - பொன்னிறத்தைக்கொண்டன, பொன்பூத்த பூங்கொன்றை சூழ்ந்து - பொன் போல் மலருகின்ற கொன்றைப்பூமாலையைக் கருதிக்கொண்டிருப்பதால், தம் பொன் புயம் வேட்டேம் - அவரது அழகிய புஜங்களை விரும்பிய எங்கள், தார் முலையும் பொன் பூத்த - மாலையையணிந்த தனமும் பொன்னிறத்தைக் கொண்டன; (எ - று.)

கொன்றைசூழ்ந்து (சுற்றியிருத்தலால்) பொன் (மலர்) பூத்த, கொன்றையைச்சூழ்தலால் (கருத்துட்கொண்டிருத்தலால்) முலையும் பொன் (பீர்) பூத்த என அன்வயித்துப்பொருள் கொள்ளினும் ஆம். இது தலைவி கூற்று. பொன், முலை பால்பகாவஃறிணைப்பெயர். சூழ்ந்து வினையெச்சத் திரிபு. பூத்த அஃறிணைப்பலவின்பால் வினைமுற்று. அன்சாரியை குறைந்து நின்றது. வேட்டேம் தன்மைப்பன்மைவினையாலணையும் பெயர். வேட்டோர்க்கும் வேட்கப்பட்டோர்க்கும் நிகழ்ச்சி ஒன்றாயிற்றென்று வியந்தவாறு. (உஎ)

கருமிடற்றன் செஞ்சடையன் வெண்ணீற்ற னென்னு
மழுவலத்தன் மானிடத்த னென்னு—முழுவலத்த
மன்றுடையான் றார்வேட்ட மான்.

இது பலவிகற்பத்தின்னிசைச் சிந்தியல் வெண்பா. இதன் முதற்றொடை இரண்டாமெழுத்தின் மேனின்ற உயிரொன்றத்தொடுத்தமையால் உயிரெதுகை. இதன் முதலடி இறுதிச் சீரொழிந்த வனைமுச்சீரும் முரணத் தொடுத்தமையாற் கூழைமுரண்.

(இ - ள்) அத்தம் மன்று உடையான் - பொற்சபையையுடைய சிவபெருமானது, தார் வேட்ட - மாலையை விரும்பிய, உழுவல் மான் - பேரன்புள்ள மான்போன்றவள், கரு மிடற்றன் - (அக்கடவுளைக்) கரிய கண்டத்தையுடையவன், செம் சடையன் - சிவந்த சடையையுடையவன், வெண்ணீற்றன் - வெள்ளிய விபூதியைத்தரித்தவன், என்னும் - என்று சொல்லுவாள், (மேலும்) மழு வலத்தன் மான் இடத்தன் என்னும் - மழுவினை வலக்கரத்திற் கொண்டவன் மானினை இடக்கரத்திற் கொண்டவன் என்றும் கூறுவாள்; (எ - று.)

தோழி தலைவியின் ஆற்றாமையைக் கூறியது. மழுப்படையை வலக்கரத்திற்கொண்டுள்ளாரென்பது மதுரைக்கலம்பகத்திலும் காசிக்கலம்பகத்திலும் முறையே "வலங்கொண்ட மழுவுடையீர்" "மழுவலத்தினை" எனக்கூறப்பட்டிருத்தலாற் காண்க. உழுவல் எழுமையுந் தொடர்ந்த அன்பு. வேட்ட இறந்தகாலப்பெயரெச்சம், வேள்பகுதி. என்னும் செய்யுமென் முற்று உயர்திணைப்பெண்பாலில் வந்தது. (உஅ)

வெண்பா விகற்பம் முற்றிற்று.

## வெண்பாவினம்.

செம்பொன் வேய்ந்த செழுமணி மன்றத்
தம்பொன் மேருவுக் கடிமுடி யின்றே.

இது விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையும் உடைத்தாய் அடி யிரண்டாய்த் தம்மில் ஒத்து வந்தமையால் குறள் வெண் செந்துறை.

(இ - ள்) செம்பொன் வேய்ந்த - சிவந்த பொன்னால் வேயப் பெற்ற, செழு மணி மன்றத்து - சிறந்த அழகிய சபையில் விளங்கும், அம் பொன் மேருவுக்கு - அழகிய பொன்மலைபோன்ற சிவபெருமானுக்கு, அடி முடி இன்று - அடியும் முடியும் இல்லை; (எ - று.)

அடிமுடி யின்று என்பது அவரது தோற்றக் கேடில்லாமையை உணர்த்திற்று. மணி இரத்தினமுமாம். பொன் மேரு என்றது சிவபெருமானை; 'பொன்போல மிளிர்வதோர் மேனியினீர்' எனவும், 'பொன்னார் மேனியனே' எனவும், 'பொன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண மேனி' எனவும் வரும் திருவாக்குக்களானறியப்படும். (௧௯)

கம்பைமாநதி யின்கரைச்சிறு கன்னிபார முலைத்தழும்பணி
யும்பர்கோன்விடை யொன்றுலகேழு முண்டதுவே.

இது அடியிரண்டாய்ச் சீர்வரையறையின்றி யீற்றடிகுறைந்து வந்தமையால் குறள்வெண்டாழிசை.

(இ - ள்) கம்பை மா நதியின் கரை - கம்பை என்னும் பெரிய நதியின் கரையில், சிறு கன்னி பாரம் முலை தழும்பு அணி - இளைய கன்னிகையின் பாரமாயுள்ள தனங்களின் வடுவினை மார்பிற் கொண்டுள்ள, உம்பர் கோன் விடை ஒன்று - தேவர்க்குத் தேவனாகிய சிவபெருமானது இடபம் ஒன்று, உலகு எழும் உண்டது - உலகம் ஏழையும் விழுங்கியது; (எ - று.)

உம்பர்கோன் விடை திருமால்; "இடபமதாய்த் தாங்கினான் திருமால்காண் சாழலோ" என்னும் திருவாசகத்தானறிக. இவர் இடையிட்ட பிரளயதில் எழுலகங்களையும் உண்டார் என்பது புராணவரலாறு. சிவபெருமானுக்கு விடையாவார் திருமாலேயன்றித் திருநந்திதேவரும், சைலாதியும், தருமதேவதையுமென்க. இனிச் சிவபெருமானுக்குத் திருநந்திதேவர் இரண்டாஞ்சம்புவாகவும், முதற் சீடராகவும், முதற்குரவராகவும், அதிகாரராகவும், வாயில்காப்பவராகவும், மத்தளங் கொட்டுபவராகவும், விடையாகவும், கொடியாகவும், சேனை நாயகராகவும், சில அவதாரங்களில் அவதார மூர்த்தியாகவும், அறக்கடவுளாகவும், சிலாதபுத்திரராகவும் விளங்குவார். கம்பா—கம்பை. கன்னி—உமாதேவியார். (௨0)

முன்புல கீன்ற முகிழ்முலைக் கன்னியோ
டின்புறும் யோகி யெழுபுவிக் கரசே.

இது ஒழுகியவோசையும் விழுமியபொருளுமின்றிக் குறள் வெண் செந்துறையோடு மாறுபட்டுவந்த குறள்வெண்டாழிசை.

(இ - ள்) முன்பு - முற்காலத்தில், உலகு ஈன்ற - இவ்வுலகத்திலுள்ள ஜீவராசிகளைப்பெற்ற, முகிழ் முலை கன்னியோடு - அரும்பையொத்த

தனங்களையுடைய உமாதேவியோடு, இன்புறும் யோகி - இன்பத்தை அனுப விக்கும் யோகியாய் விளங்குபவன், எழு புவிக்கு அரசு - ஏழ் உலகங்களுக் கும் தலைவன் ஆவான்; (எ - று.)

"இங்கயற்கண் அகனுலகம் எண்ணிறந்த சராசரங்கள் ஈன்றுந் தாழாக் கொங்கை......குமரி" என்றார் பிறரும். (திருவிளையாடல்) சிவ ஞானசித்தியார் க—டுo, உ—எஎ முதலிய செய்யுட்களால் இச்செய்யு ளின் கருத்தும் சொல்நயமும் நோக்குக. அரசு சொல்லால் அஃறிணையும் பொருளால் உயர்திணையுமானதோர் சொல். (ரு௧)

பின்றாழ் நறுங்கூந்தற் பிடிதழீஇ மால்யானைக்
கன்றீனு முக்கட் களிறு.

இது குறள்வெண்பா செப்பலோசையிற் சிதைந்துவந்த குறள் வெண்டாழிசை. இவையிரண்டும் குறள்வெண்பாவினம்.

(இ - ள்) முக்கண் களிறு - மூன்று கண்களையுடைய ஆண் யானை, பின்தாழ் நறும் கூந்தல் பிடி தழீஇ - பின்புறம் தாழ்ந்துள்ள வாசனை வீசுகின்ற கூந்தலையுடைய பெண் யானையைத் தழுவி, மால் யானை கன்று ஈனும் - பெரிய யானைக் கன்றைப் பெறும்; (எ - று.)

களிறு தழீஇ ஈனுமென முடிக்க. களிறு—சிவபெருமான். பிடி - உமாதேவி. கன்று—விநாயகக்கடவுள். மால்—பெருமை முதல் பலபொருள் குறித்து வரும் ஒருசொல். இக்கருத்தினை, "பிடியதனுருவுமை கொளமிகு கரியது வடிகொடு தனதடி வழிபடு மவரிடர் கடிகணபதிவர அருளினன்" என்னும் தேவாரத்துங் காண்க. தாழ் கூந்தல் வினைத்தொகை. நறுங் கூந் தல் பண்புத்தொகை. தழீஇ சொல்லிசை யளபெடை. (ரு௨)

கனக மார் கவின்செய் மன்றி
லனகநா டகற்கெம் மன்னை
மனைவிதாய் தங்கை மகள்.

இது மூன்றடியாய் வெண்பாவேபோன் முடிந்தமையால் வெள் ளொத்தாழிசை. இதனுள் ஆர் என நேரசைச்சீர்நின்று மேலே கவினென நிரையசைவர மாஞ்சீர்போல இயற்சீர் வெண்டளையாயினவாறு காண்க.

(இ - ள்) எம் அன்னை - எமது தாயாகிய பார்வதிதேவியார், கனகம் ஆர் கவின் செய் மன்றில் அனகம் நாடகற்கு - பொன் நிறைந்து அழகைச்செய்யும் பொற்சபையில் பாவத்தைப் போக்கும் நடனமாடுகின்ற சிவபெருமானுக்கு, மனைவி - மனையாளாகவும், தாய் - தாயாகவும், தங்கை - தங்கையாகவும், மகள் - புத்திரியாகவும் ஆவார்; (எ—று.)

சிவபிரானுக்கு உமாதேவியார் மனைவி தாய் தங்கை மகள் என் றது, போகசத்தியா யிருத்தலின் மனைவியெனவும், சத்தி சிவத்தை யுதிப் பித்தலின் தாயெனவும், சிவஞ் சத்தி என்னும வேறுபாட்டில் முன்னர்ச் சிவமும் பின்னர்ச் சத்தியுமாயுதித்தலின் தங்கையெனவும், சிவத்தினின் றும் சத்தியுதித்தலின் மகளெனவும் கூறும் முறைபறறி; "எம்பெருமான்

இமவான் மகட்குத் தன்னுடைக் கேள்வன்மகன் றகப்பன் றமையனெம்மை யன்ருள்கள்பாடி'' என்ருர் திருவாசகத்தும். ஆவார் என்னும் ஆக்கச்சொல் வருவித்துரைத்தாம். அனகம் பாவமின்மை. (௩௩)

அம்பேருண் கண்ணுர்க் கழிந்த மடநெஞ்சே
கொம்பே றுடையான் கழலிறைஞ்சா தென்கொலியாம்
வம்பே யிறந்து விடல்.

வாணேருண் கண்ணுர்க் கழிந்த மடநெஞ்சே
நீணுகம் பூண்டான் கழலிறைஞ்சா தென்கொலியாம்
வீணே யிறந்து விடல்.

கோளாருண் கண்ணுர்க் கழிந்த மடநெஞ்சே
யாளாக வாண்டான் கழலிறைஞ்சா தென்கொலியாம்
வாளா விறந்து விடல்.

இது சிந்தியல் வெண்பா ஒரு பொருண்மேல் மூன்றடுக்கிவந்த வெள்ளொத்தாழிசை. இதில் ஆளாக ஆண்டான் என முதலிருசீரும் முரணத்தொடுத்தமையால் இணைமுரண்.

(இ - ள்) அம்பு ஏர் உண் கண்ணுர்க்கு - அம்பையொத்த மையுண்ட விழிகளையுடைய பெண்களுக்காக, அழிந்த மடம் நெஞ்சே-வருந்திய அறியாமையையுடைய உள்ளமே, யாம் - நாம், கொம்பு ஏறு உடையான் கழல் இறைஞ்சாது - கொம்பினையுடைய இடபத்தை வாகனமாகக் கொண்டுள்ள சிவபிரானது திருவடிகளை வணங்காமல், வம்பே இறந்துவிடல் என்கொல் - வீணுக மடிதல் எதற்காக ;

வாள் நேர் உண் கண்ணுர்க்கு - வாளாயுதத்தை ஒத்த மையுண்ட விழிகளையுடைய பெண்களுக்காக, அழிந்த மடம் நெஞ்சே - உடைந்த அறியாமையையுடைய உள்ளமே, யாம் - நாம், நீள் நாகம் பூண்டான் கழல் இறைஞ்சாது - நீண்ட பாம்பை ஆபரணமாகப் பூண்டுள்ள எம்பிரானது திருவடிகளை வணங்காமல், வீணே இறந்துவிடல் என்கொல் - வீணுக இறந்துபோதல் யாதுகாரணம் பற்றியோ;

கோள் ஆர் உண் கண்ணுர்க்கு - வருத்துதலைச்செய்யும் மையுண்ட விழிகளையுடைய பெண்களுக்காக, அழிந்த மடம் நெஞ்சே - உடைந்த அறியாமையையுடைய உள்ளமே, யாம் - நாம், ஆளாக ஆண்டான் கழல் இறைஞ்சாது - நம்மை அடிமையாகக்கொண்ட சிவபிரானது பாதங்களை வணங்காமல், வாளா இறந்துவிடல் என்கொல் - வீணுக இறந்துபோதல் எதற்காக; (எ - று.)

கழல் ஆகுபெயர். கொல் அசைநிலை. ஏர் நேர் உவம உருபுகள். ஏர் அழகு எனினும் ஆம். நீணுகம் நீள் நாகம் எனவும், வாணேர் வாள் நேர் எனவும் பிரிக்க. வம்பே வீணே வாளா என்பன பயனின்மைப்பொருளில் வரும் இடைச்சொற்கள். கோள்—முதனிலை திரிந்த தொழிற்பெயர். (௩௪)

பரசிருக்குந் தமிழ்மூவர் பாட்டிருக்குந் திருமன்றிற்
பரசொன் றேந்தி
யரசிருக்கும் பெருமானுர்க் காட்செய்யா ரென்செய்வார்
முரசிருக்கும் படைநமனுர் முன்னுகு மந்நாளே.

இது முதலடி அறுசீராய் ஏனையடி நாற்சீராய் வந்த மூன்றடி வெண்டுறை.

(இ - ள்) பரசு இருக்கும் - துதித்தல் நிறைந்துள்ள, மூவர் தமிழ் பாட்டு இருக்கும் - சம்பந்தர், அப்பர், சுந்தரர் என்ற மூவர்களது தமிழ்ப் பாடல்கள் விளங்கும், திருமன்றில் - அழகிய சபையில், பரசு ஒன்று ஏந்தி - மழுவாயுதம் ஒன்றைத்தாங்கி, அரசு இருக்கும் பெருமானுர்க்கு - அரசாய்த் திகழும் சிவபிரானுக்கு, ஆள் செய்யார் - ஆளாகத் தொண்டு செய் யாதவர்கள், முரசு இருக்கும் - முரசவாத்தியத்தை வைத்திருக்கும், படை நமனுர் முன் ஆகும் அ நாள் - யமபடர்களையுடைய இயமன் முற்பட்டு வரும் அக்காலத்தில், என் செய்வார் - யாது செய்வார்கள்; (எ - று.)

பரசு முதனிலைத்தொழிற்பெயர். மூவர் முதலிகள் திருமன்றத் தைப் பாடிய சிறப்புக் கூறப்பட்டது. நமனுர் இகழ்ச்சிக்கண்வந்த பன்மை. படை சூலம், பாசம் எனினுமாம். (ஙடு)

படர்தரும்வெவ் வினைத்தொடர்பாற் பவத்தொடர்பப்
பவத்தொடர்பாற் படரா நிற்கும்
விடலரும்வெவ் வினைத்தொடர்பவ் வினைத்தொடர்புக்
கொழிபுண்டே வினையேற் கம்மா
விடர்பெரிது முடையேன்மற் றென்செய்கே னென்செய்கே
னடலரவ மரைக்கசைத்த வடிகேளோ வடிகேளோ.

இது முதலடியிரண்டும் அறுசீராய் ஏனையடி நாற்சீராய்வந்த நான்கடி வெண்டுறை.

(இ - ள்) அடல் அரவம் அரைக்கு அசைத்த அடிகேளோ அடிகேளோ - வலிமை பொருந்திய சர்ப்பத்தினை இடைக்குக் கச்சையாகத் தரித்துள்ள கடவுளே கடவுளே, இடர் பெரிதும் உடையேன் - துன்பம் மிகவும் உடையேன், என்செய்கேன் என்செய்கேன் - என்ன செய்வேன் என்ன செய்வேன், வினையேற்கு - தீவினையையுடைய எனக்கு, வெவ் வினை தொடர்பால் - கொடிய தீவினைச் சம்பந்தத்தால், பவத்தொடர்பு படர்தரும் - பிறவித்துன்பம் வந்து சேரும், அ பவத்தொடர்பால் - அப்பிறவிச் சம் பந்தத்தால், விடல் அரும் வெவ் வினைதொடர்பு படரா நிற்கும் - விடுதற்கரிய கொடிய தீவினைச்சம்பந்தமானது வந்து சேரும், அ வினை தொடர்புக்கு ஒழிபு உண்டே - அத்தீவினையின் சம்பந்தத்திற்கு நீக்கம் உண்டோ? (அது நீங்கும் வண்ணம் அருள் புரிவீராக); (எ - று.)

படர்தரும் படராநிற்கும் என்பவற்றைப் பெயரெச்சமாகக் கொள் வாரும் உளர். அடிகள் ளகரவீற்று உயர்திணைப் பெயரின் ஈற்றயல் அகரம் ஏகாரமானது விளித்தனு. அடி—முதல், முதலி, முதல்வன். செய்கேன் ககரஒற்று எதிர்காலங் காட்டிற்று. உண்டே ஏகாரம் எதிர்மறைக்கண்

வந்தது, தேற்றம் எனினுமாம். அடுக்குகள் அச்சத்தின்கண் வந்தன. மற்று வினைமாற்று. அம்மா இரங்கற் குறிப்பு. அரவம் அரா என்பது ஈறு குறுகி உ அம் சாரியை பெற்றது. (௩௬)

கூற்றிருக்கு மடலாழிக் குரிசின்முத லோரிறைஞ்சக்
கொழுந்தேன் பில்கி
யூற்றிருக்குந் தில்லைவனத் தசும்பிருக்கும் பசும்பொன்மன்றத்
தொருதா ளூன்றி

வண்டுபா டச்சுடர் மகுடமா டப்பிறைத்
துண்டமா டப்புலித் தோலுமா டப்பகி
ரண்டமா டக்குலந் தகிலமா டக்கருங்
கொண்டலோ டுங்குழற் கோதையோ டுங்கறைக்
கண்டனா டுந்திறங் காண்மினோ காண்மினோ.

இது முதலடியிரண்டும் அறுசீராய் ஓரோசைத்தாய் எனையடி நாற்சீராய் வேறோரோசைத்தாய் வந்தமையால் எழடி வேற்றொலி வெண்டுறை.

(இ - ள்) கூற்று இருக்கும் அடல் ஆழி குரிசில் முதலோர் இறைஞ்ச - இயமன் கொலைத்தொழில் பொருந்திய வலிய சக்கரப் படையைக் கையிற்கொண்டுள்ள திருமால் முதலிய தேவர்கள் வணங்க, கொழும் தேன் பில்கி - சிறந்த மது துளித்து, ஊற்றிருக்கும் - ஒழுகிக் கொண்டிருக்கும், தில்லைவனத்து அசும்பு இருக்கும் பசும்பொன் மன்றத்து - தில்லைமரங்கள் நிறைந்த காட்டின்கண்ணுள்ள வழுக்கு நிலமாயிருக்கும் பசியபொற்சபையின்கண், ஒரு தாள் ஊன்றி - ஒரு திருவடியைப் பதித்து, வண்டு பாட - வண்டுகள் கீதங்களைப்பாட, சுடர் மகுடம் ஆட - பிரகாசம் பொருந்திய கிரீடம் ஆட, பிறை துண்டம் ஆட - பிறைச்சந்திரன் ஆட, புலி தோலும் ஆட - புலியினது தோலும் ஆட, பகிரண்டம் ஆட - வெளியண்டங்கள் ஆட, அகிலம் குலைந்து ஆட - உலகிலுள்ள ஜனங்களெல்லாம் நிலைகுலைந்து ஆட, கரும் கொண்டலோடும் - கருமையான மேகம் போன்ற நிறத்தையுடைய திருமாலோடும், குழல் கோதையோடும் - கூந்தலையுடைய உமாதேவியோடும், கறை கண்டன் ஆடும் திறன் காண்மின் காண்மின் - விஷம் பொருந்திய கழுத்தினையுடைய சிவபிரான் நடனமாடுகின்ற தன்மையைக் காணுங்கள் காணுங்கள்; (எ - று.)

அகிலம் ஆகுபெயர், இயற்பெயராக்கிப் பொருள் கூறினும் அமையும். குரிசில்—ஆண்மகனிற் சிறந்தவன். காண்மின் காண்மின் அடுக்கு விரைவுப்பொருள். கொண்டலைக்கூந்தலுக்கு உவமையாக்கிப் பொருள் கூறுதலும் ஒன்று. ஓடும் உவமஉருபு. கோதை பெண் என்னும் பொருளளவாய் நின்றது. ஊற்றிருத்தல்—இடையறாதொழுகல். சிவபிரான் சர்வவியாபி என்பதை உணர்த்தும். (௩௭)

உருவல னருவல னொருவன்மற் றிருவருக்
கரியவ னெனவுணர்ந் தறைகுந ரறைகமற்

பரவைதன் மனைவயிற் பாவல னேவலி
னிருமுறை திரிதலி னெளியனென் றெளியனும்
பரவுவன் மன்றம் பணிந்து.

இதுவும் ஈற்றடி ஒருசீர் குறைந்து வந்தமையால் ஓரொலி வெண்டுறை. இதன் முதலடி நாற்சீரும் முரணத்தொடுத்தமையால் முற்று முரண். அதுவே நாற்சீரும் இரண்டாமெழுத்தொன்றத் தொடுத்தமையால் முற்றெதுகையுமாம்.

(இ - ள்.) உரு அலன் - உருவம் இல்லாதவன், அரு அலன் - அருவம் இல்லாதவன், ஒருவன் - ஒருவன்தான், இருவருக்கு அரியவன் - பிரம விட்டுணுக்களால் காண்பதற்கரியவன், என உணர்ந்து அறைகுநர் அறைக - என்று அறிந்து சொல்பவர்கள் சொல்லட்டும், பாவலன் ஏவலின் - பாடுதலில்வல்ல சுந்தரமூர்த்திநாயனாரின் ஏவலால், பரவைதன் மனை வயின் - பரவைநாச்சியாரின் இல்லத்திற்கு, இருமுறை திரிதலின் - இரண்டு தடவை சென்றதால், எளியன் என்று - யாவர்க்கும் இலேசான வன் என்று, எளியனும் - எளியனாகிய யானும், மன்றம் பணிந்து - பொற் சபையை வணங்கி, பரவுவன் - துதிப்பேன்; (எ - று.)

மற்று மன் அசை. அலன் தொகுத்தல் விகாரம். அறைகுநர் ந் பெயரிடைநிலை; குகரச்சாரியை பெற்றது. பரவுவன் தன்மை ஒருமை வினைமுற்று. (ருஅ)

அங்கட் கமலத் தலர்கமல மேயீரு நீரேபோலும்
வெங்கட் சுடிகை விடவரவின் மேயீரு நீரேபோலுந்
திங்கட் சடையீருந் தில்லைவனத் துள்ளீரு நீரேபோலும்.

இது அடிதோறும் தனிச்சொற்பெற்று மூன்றடியால் வந்தமை யால் மூன்றடி வெளிவிருத்தம்.

(இ - ள்) அம்கண் கமலத்து அலர் கமலம் மேயீரும் நீரே போலும் - அழகிய இடமகன்ற நீரில் மலர்கின்ற தாமரைமலர் மேலுள்ள பிரமனும் நீர்தாம் போலும், வெம் கண் சுடிகை விட அரவின் மேயீரும் நீரே போலும் - கொடிய கண்களையும் உச்சி மணியையும் விடத்தையு முடைய சர்ப்பத்தின்மேல் யோகநித்திரை புரிபவரும் நீர்தாம் போலும், திங்கள் சடையீரும் தில்லைவனத்து உள்ளீரும் நீரே போலும் - சந்திரனைச் சடையில் தரித்துள்ளவரும் தில்லைவனத்தின்கண் வசிப்பவரும் நீர்தாம் போலும்; (எ - று.)

தில்லைவனம் சுழுனைத்தானமாதலானும் அதன்கண் சிவமாகிய ஞானாகாயம் என்றும் விளங்குதலானும் இத்தலத்தைச் சிதம்பரம் என்பர். இத்தல மகிமை அனைத்தையும் வடமொழி தென்மொழிகளில் கூறப்பெற்ற இத்தலமான்மியங்களில் தெள்ளிதின் உணர்ந்து கொள்ளலாம். சிவபிரானே முத்தொழிற்குரியவர் என்பது கூறப்பட்டது. இதனை "உரைத்த வித் தொழில்" எனத்தொடங்கும் செய்யுளில் நோக்குக (சித்தியார்.). கமலம் - நீர்; கமலம்—நீரை அலங்கரிப்பது தாமரை. போலும் அசை. (ருகூ)

வெஞ்சம னஞ்ச வேலொ டெதிர்ந்தா னமரங்கா
ளஞ்ச லெனுஞ்சொல் லார்சொல வல்லார் நமரங்காண்
மஞ்சிவ ரிஞ்சி மன்ற மிறைஞ்சீர் நமரங்கா
ணஞ்ச மயின்றார் நல்குவர் மாதோ நமரங்காள்.

இது நான்கடியாய் அடிதோறும் தனிச்சொற்பெற்று வந்தமையால் நான்கடி வெளிவிருத்தம்.

(இ - ள்) நமரங்காள் - நம்மவர்களே, வெம் சமன் அஞ்ச வேலொடு எதிர்ந்தால் - கொடிய இயமன் நாம் பயப்படுமாறு வேலாயுதத்தோடு எதிரில் வந்து விட்டால், நமரங்காள்—, ஆர் அஞ்சல் எனும் சொல் சொல வல்லார் - எவர் பயப்படாதீர்கள் என்ற வார்த்தையைச் சொல்ல வல்லவர்கள், (ஒருவரும் இல்லை யாதலால்) நமரங்காள்—, மஞ்சு இவர் இஞ்சி மன்றம் இறைஞ்சீர் - மேகங்கள் வந்து தவழும் மதிலையுடைய பொற்சபையினை வணங்குங்கள், (அப்படி வணங்கினால்) நமரங்காள்—, நஞ்சம் அயின்றார் நல்குவர் - விடத்தினை அருந்திய சிவபிரான் (அஞ்சல் என்னும் சொல்லை) அளிப்பார்; (எ- று.) (௩0)

மாது ஒ அசை. அஞ்சல் அல் ஈற்று எதிர்மறை வியங்கோள். யார் ஆர் என மருவிற்று.

வெண்பாவினம் முற்றிற்று.

---

## ஆசிரியப்பா.

---

பொற்றாது பொதிந்த சிற்சபை பொலியப்
பச்சிளங் கொடியொடு படருஞ்
செக்கர் வார்சடைக் கற்பகத் தருவே.

இது ஈற்றயலடி முச்சீராய் ஏனையடி நாற்சீராய் வந்தமையால் நேரிசையாசிரியம். இது அடிதோறும் முதற்சீர் முரணத்தொடுத்தமையால் அடிமுரண். இதனுள் பொதிந்த சிற்சபை என நேரொன்றாசிரியத்தளையும், சிற்சபை பொலிய என நிரையொன்றாசிரியத்தளையும், வந்தவாறுகாண்க. இதனானே ஆசிரியம் மூன்றடிச் சிறுமையுடைத்தென்பதூஉமறிக.

(இ - ள்) பச்சிளங்கொடி - பசிய இளமையுடைய கொடி, பொன் தாது பொதிந்த சிற்சபை பொலிய - பொற்பொடி நிறைந்த ஞானசபை விளங்க, செக்கர் வார்சடை கற்பக தருவொடு - செவ்வானத்தையொத்த நீண்டசடையையுடைய கற்பக விருக்ஷத்தோடு, படரும் - படர்ந்து விளங்கும்; (எ- று.)

தருவொடு கொடிபடரும் என்றியைக்க. கற்பகத்தருவில் காமவல்லி படர்ந்திருப்பதுபோல் சிவபெருமான் பக்கலில் உமாதேவியார் விளங்குகின்றார். கொடியொடுதருபடரும் என மாற்றியுரைப்பாருமுளர். (௩க)

பூஉந் தண்ண் புனமயி லகவ
மாஅங் குயில்கள் சாஅய்ந் தொளிப்பக்
கோஅ டரங்கண் முசுவொடும் வெரீஇக்
காஅ றழீஇக் கவிழ்ந்ந் தொடுங்கச்
சூஉன் முதிர்ந்து காஅல் வீஇழ்
வாஅன் றாஅழ் மழைப்பெய றலைஇத்
தேஎன் றாஅழ் பூஉங் காஅ
வளங்ங் கனிந்த மணிமன் றுள்
விளங்ங் கொளியை யுளங்கொள றவமே.

இதுவுமது. இது அடிதோறு முதற்கண்ணே அளபெடுத்தமையால் அடியளபெடை. இதனுள், இணையளபெடை முதலாகிய விகற்பம் ஏழும் முறையானே வந்தவாறுகாண்க. ஏனைத்தொடை ஏழும் விகற்பம் இருபத்தெட்டும் முன்னர்க்காட்டப்பட்டன.

(இ - ள்) பூதண் புனம் மயில் அகவ - அழகிய குளிர்ந்த முல்லை நிலத்திலுள்ள மயில்கள்யாவும் அகவவும், மா குயில்கள் சாய்ந்து ஒளிப்ப - மாமரத்தின்கண்ணுள்ள குயில்கள் யாவும் சாய்ந்துசாய்ந்து (பொந்தின்கண்) ஒளித்துக்கொள்ளவும், கோடரங்கள் முசுவொடும் வெரீ - கோடரங்கள் யாவும் முசுக்களோடு பயந்து, கால் தழீ கவிழ்ந்து ஒடுங்க - கால்களைத் தழுவிக்கொண்டு தலைகுனிந்து ஒடுங்கியிருக்கவும், சூல் முதிர்ந்து கால் வீழ் - கருப்ப முதிர்ச்சிபெற்றுக் கால் இறங்கிய, வான்தாழ் மழை பெயல் தலை - வானத்தில் தங்கிய மேகம் மழையைச் சொரிய, தேன் தாழ் பூ கா - தேன்ஒழுகுகின்ற அழகிய சோலையின், வளம் கனிந்த மணிமன்றுள்-வளப்பம் மிக்க அழகிய சபையினிடத்து, விளங்கு ஒளியை - பிரகாசித்துக்கொண்டிருக்கின்ற ஜோதி வடிவை, உளம் கொளல் தவம் - மனத்தில் தியானித்துக் கொண்டிருத்தல் சிறந்த தவமாகும்; (எ - று.)

சாய்தல்—வருந்தல் எனினுமாம். கோடரம், முசு குரங்கின் சாதி விசேடம். கார்கண்டு மயில் களிப்பதும் குயில் கவல்வதும் இயற்கை. வெரீஇ, தழீஇ, தலைஇ சொல்லிசையளபெடை. வீழ், தாழ்மழை வினைத்தொகை. தலைஇ எச்சத்திரிபு. (சுஉ)

தண்ணென் கடுக்கை கண்ணீர் கலுழ்தர
வெண்மதிக் கண்ணி சூடுங்
கண்ணுதற் கடவுள்
புண்ணியப் பொதுவி லாடும் பூங்கழ லிறைஞ்சுதும்
விண்மிசைப் போகிய வீடுபெறற் பொருட்டே.

இது முதலடியும் ஈற்றடியும் அளவடியாகக் குறளடியும் சிந்தடியும் இடையிட்டுத் தொடுத்தமையால் இணைக்குறளாசிரியம். இவ்வகவலுள் புண்ணியப் பொதுவிலாடும் பூங்கழ லிறைஞ்சுதும் என நெடிலடியும் அருகி வந்தவாறு காண்க. குறளடிமுதல் நான்கும் இதனுள்ளேவந்தன. ஏனைக் கழி நெடிலடி ஆசிரிய விருத்தத்துட்காண்க.

(இ - ள்) விண்மிசை போகிய வீடுபெறல் பொருட்டு - தேவ லோகங்களுக்கு அப்பாற்பட்ட மோக்ஷவீட்டை அடைய வேண்டி, தண் என் கடுக்கை கள்நீர் கலுழ்தர - குளிர்ச்சிபொருந்திய கொன்றைமலர் தேனை ஒழுகவிட, வெண்மதி கண்ணி சூடும் - வெண்மையான பிறைமாலை யை அணிந்துள்ள, கண் நுதல் கடவுள் - நெற்றிக்கண்ணையுடைய சிவபிரா னது, புண்ணியம் பொதுவில் ஆடும் - புண்ணியத்தைத்தரவல்ல சபையி னிடத்து நடனம் செய்கின்ற, பூம் கழல் இறைஞ்சுதும் - அழகிய பாதங்களை வணங்குவோம்; (எ - று.)

வீடு பெறற்பொருட்டு இறைஞ்சுதும் என்க. மதிக்கண்ணியின் ஒளியைக்கண்டு அத்தன்மை பெறுதே கடுக்கை கண்ணீர் கலுழ்தரும் என்னும் தொனிப்பொருளும் நோக்குக. கலுழ்தர தரு துணைவினை. கள்நீர் இருபெயரொட்டு. இறைஞ்சுதும் தன்மைப்பன்மைவினைமுற்று. கடவுள் பூங்கழல் ஆறும் வேற்றுமைத்தொகை. (௬௩)

மாயிரு விசும்பிற் றூநிலாப் பரப்பிப்
பாயிருள் சீக்கும் பனிமதிக் கண்ணியு
மின்செய் கொண்மூ வெள்ளிவீழ் வீழ்ப்பப்
பொன்செய்மலர்ப் பூங்கொன்றையும்
புலியூர் மன்றி னொலிகழன் மிழற்றப்
பரம நாடக மிருவரைக் காட்டு
மெரிநிறத் தைம்முகத் தெண்டோண் முக்கட்
கருமிடற் றொருவநின் செஞ்சடைப் பொலிதலி
னுயு மருந்து மோர்வழிக் கிடைத்தென
வாருயிர் தரித்தன என்றே யதாஅன்று
தெள்ளமு தன்னவ ருள்ளுயிர் குடிக்குமித்
திங்க ளொன்றே திருமுடிக் கணியிற்
கங்கை யாளு முயிர்வா ழாளே.

இது முற்றும் நேரடியாய் வந்தமையின் நிலைமண்டிலவாசிரியம். இதனுள், பாயிருள் சீக்கும் பனிமதிக் கண்ணியும் என இயற்றளைவெள்ள டியும், பொன்செய்மலர்ப் பூங்கொன்றையும் என வஞ்சியடியும் மயங்கி வந்தவாறு காண்க. எரிநிறத் தைம்முகத் தெண்டோண் முக்கண் என முதற் சீரொழிந்து ஏனைமுச்சீரும் முரணத்தொடுத்தமையால் கடைக்கூழை முரண்.

(இ - ள்) புலியூர் மன்றில் ஒலிகழல் மிழற்ற - தில்லையின் கண் ணுள்ள பொற்சபையினிடத்து ஒலி மிகுந்த வீரக்கழல் சப்திக்க, பரம நாடகம் இருவரை காட்டும் - மேலான திருநடனத்தை (பதஞ்சலி வியாக்கிர பாதர் ஆகிய) இருவருக்கும் காண்பிக்கின்ற, எரி நிறத்து ஐ முகத்து எண் தோள் முக்கண் கருமிடற்று ஒருவ - நெருப்பின் நிறத்தையும் ஐந்து திருமுகங்களையும் எட்டுத்தோள்களையும் மூன்று கண்களையும் கரிய கண்டத் தினையுமுடைய ஒருவனே, மா இரு விசும்பில் தூ நிலா பரப்பி - மிகப்பெரிய ஆகாயத்தினிடத்துத் தூய்மையான நிலவினைப் பரவச்செய்து, பாய் இருள்

சீக்கும் பனிமதி கண்ணியும் - பரந்த இருளையோட்டும் குளிர்ந்த பிறைமாலையும், மின் செய் கொண்மூ வெள்ளி வீழ் வீழ்ப்ப - மின்னுதலைச்செய்கின்ற மேகமானது வெள்ளியைப்போல் விழுதுகளை விட, பொன் செய் மலர்பூங் கொன்றையும் - பொன்போன்ற மலர்களையுடைய அழகிய கொன்றையும், நின் செம் சடை பொலிதலின் - உன்னுடைய சிவந்த சடையினிடத்து விளங்குவதால், நோயும் மருந்தும் ஓர் வழி கிடைத்தென - வியாதியும் அதற்கு மருந்தும் ஒரே இடத்தில் கிடைத்தது என்று, ஆர் உயிர் தரித்தனள் - அரிய உயிர்தரித்திருக்கின்றாள், அதான்று - அவ்வாறன்றி, தெள் அமுது அன்னவர் உள் உயிர் குடிக்கும் - தெளிந்த அமுதத்தை ஒத்த மொழியினை யுடைய பெண்களது உடலுள்ளிருக்கும் உயிரினை அருந்துகின்ற, இ திங்கள் ஒன்றே - இச்சந்திரன் ஒன்றையே, திருமுடிக்கு அணியில் - சடையில் அணிந்திருந்தால், கங்கையாளும் உயிர் வாழாள் - கங்காதேவியும் உயிர் வாழ மாட்டாள்; (எ - று.)

ஒருவ மதிக்கண்ணியும் பூங்கொன்றையும் நின் செஞ்சடைப் பொலிதலின் கங்கையாள் உயிர்தரித்தனள் அதான்று திங்களொன்றே அணியில் உயிர்வாழாள் எனச்சொன்முடிபுகொள்க. ஏ பிரிநிலை. மாயிரு இடைச்சொல்லாதலின் யகர உடம்படுமெய் பெற்றது. திருமுடிக்கணியில், இருவரைக்காட்டும் வேற்றுமைமயக்கம். செய் உவமஉருபு. வீழ் முதனிலைத் தொழிற் பெயர்விழுதுக்கு ஆயிற்று. (௬௬)

தீர்த்த மென்பது சிவகங் கையே
யேத்த ருந்தல மெழிற்புலி யூரே
மூர்த்தி யம்பலக் கூத்தன துருவே.

இது முதலிடை கடையடிகளை மாறி மாறி யுரைப்பினும் பொருடிரியாமையின் அடிமறிமண்டிலவாசிரியம்.

(இ - ள்) தீர்த்தம் என்பது சிவகங்கையே - மேலானதீர்த்தம் என்று சொல்லப்படுவது சிவகங்கையே ஆகும், ஏத்த அரும் தலம் எழில் புலியூரே - யாவரும் துதித்தற்கரிய தலமானது அழகினையுடைய சிதம்பரமே யாகும், மூர்த்தி அம்பல கூத்தனது உருவே - மூர்த்தியானது பொற்சபையில் தாண்டவமாடுகின்றவரது உருவமேயாகும்; (எ - று.)

தில்லையிற் பத்துத் தீர்த்தங்கள் உள்ளன. அவை சிவகங்கை, குய்ய தீர்த்தம், புலிமடு, வியாக்கிரபாத தீர்த்தம், அனந்த தீர்த்தம், நாகசேரி, பிரம தீர்த்தம், சிவப்பிரியை, திருப்பாற்கடல், பரமானந்த கூபம் என்பன வாகும். இவற்றுட் சிவகங்கை சிறந்ததாதல்பற்றித் தீர்த்தமென்பது சிவ கங்கை என்றார். தீர்த்தமென்பது சிவகங்கை என்பதன் வரலாறு:—

பாச புண்ணியத்தைத் தரும் பிற தீர்த்தத்தினும் பசு புண்ணி யத்தைத் தரும் சிவ தீர்த்தம் சிறப்புடையது, அவற்றுள் பதி புண்ணியத் தைத்தரும் சிவகங்கை சிறப்பிற் சிறப்புடையது; நற்கதியைத்தரும் பிற தலத்தினும் சற்கதியைத்தரும் சிவதலம் மேன்மையுடையது, அவற்றுள் சிற்கதியைத்தரும் புலியூர் சிறப்பிற் சிறப்புடையது; போகத்தைத்தரும் பிறமூர்த்தத்தினும் யோகத்தைத்தரும் சிவமூர்த்தம் மேன்மையுடையது,

அவற்றுள் சிவபோகத்தைத்தரும் நடராஜமூர்த்தம் பிறமூர்த்தத்தினும் சிறப்பிற் சிறப்புடையது. இங்ஙனம் இவை சிறப்புடையன என்பதற்கு இவற்றின் பெயரைக் கூறு முகத்தானே இதிகாசமுங் காட்டுகின்றார். முன்னொருகாலத்தில் கௌடதேசத்துச் சிங்கவர்மன் என்பான் விகாரரூப முடையவன் ஆதல் பற்றித் தன் பிதாவின் அனுமதிபெற்றுத் தலயாத்திரை செய்யுங்கால் வேடன் ஒருவன் வழிகாட்டத் தில்லைவனத்திற் புகுந்து நீராட நீராடிய மாத்திரத்தில் அவனை இரண்யவர்மன் ஆக்கிய மகிமையும் இது போன்ற பிறமகிமையும் உடையது இச்சிவகங்கை. உமாபார்வதி சமேத ஸ்ரீமூலதேவரை வியாக்கிரபாதர் பூசித்துப் பேறு பெற்றுத் தம்பெயரால் ஓர் இலிங்கமும் தாபித்து ஓர் தைப்பூசம் பௌர்ணிமையும் குருவாரமுங் கூடிய சித்தயோகத்தில் திருநடங்கண்ட மகிமையும் பிறமகிமையும் உடையது இப்புலியூர். புண்டரீகம்—புலி, தாமரை; புலியூரெனினும் புண்டரீக புரம் எனினும் ஒக்கும். பெரும்பற்றையுடைய புலி பெரும் பற்றினாற் பூசித்துப் பெரும்பற்றைப் பெற்றுப் பெரும்பற்றாகக் கொண்டது பெரும்பற்றப் புலியூர். புண்டரீகம் தாமரை எனக்கொண்டு அதற்கேற்ப உலகமே திருவுருவாகவுடைய விராட்புருடனுக்குச் சிதம்பரம் அநாகதத்தானம் சுழுனைத் தானம் ஆதல் பற்றியும் இருதய புண்டரீக குகையுள் பெருமான் திருநடனம் செய்தல் பற்றியும் இதனைப் புண்டரீகபுரம் என்ப. இத்தலம் பூலோக கைலாசம் ஆகி ஆதிகயிலாயத்திற்குள்ள ஒரு கலையும் 999 கலையுள்ள இத் தலத்தில் அர்த்தயாமத்தில் ஒடுங்கும் மேன்மையுடையது. கூத்தனது என்ற இத்திருமேனி ஞான நடஞ்செய்து சூக்கும பஞ்சாக்கர வடிவாய் ஆன்மாக்களின் பாசத்தைக்கெடுத்துப் பாமுத்திப் பெரும்போகத்தை அளிக்கும் மகிமையும் பிறமகிமையும் உடையது, இவ்வாறே மூர்த்தி முதலிய விசேடங்களால் இத்தலமே சிறந்தது என்பர். புலியூரே ஏகாரம் தேற்றம். எத்த அரும் அகரம் தொகுத்தல். (௩௫)

ஆசிரியப்பா முற்றிற்று.

---

## ஆசிரியப்பா வினம்.

---

சத்தமு மாகியச் சத்தத் தாற்பெறு
மத்தமு மாகவி னனந்தன் கண்களே
யுத்தம னைந்தெழுத் துருவங் காண்பன.

இது மூன்றடியாய்த் தம்மிலொத்துவந்தமையால் ஆசிரியத் தாழிசை.

(இ - ள்) அனந்தன்கண்கள் - ஆதிசேடனதுகண்கள், சத்தமும் ஆகி - சப்தமும் ஆகி, அ சத்தத்தால் பெறும் - அவ்வோசையினால் பெறுகின்ற, அத்தமும் ஆகலின் - பொருளுமாக இருத்தலினால், உத்தமன்- மேலான சிவபெருமானது, ஐந்து எழுத்து உருவம் - பஞ்சாட்சர சொரூபத்தை, காண்பன - பார்ப்பனவாகும்; (எ. - று.)

ஐந்தெழுத்துக்கள் சொல்லும் பொருளுமாய் இருக்கின்றன. சொல்லைச் செவியாலும் பொருளைக் கண்ணாலும் அறியவேண்டுதலின் சொல்லும் பொருளுமாய் இருக்கின்ற ஐந்தெழுத்தை அறிவதற்குச் செவியுங் கண்ணும் ஓர் உறுப்பாகக்கொண்ட அனந்தனே தகுதியுடையான் என்றவாறு. உம்மை எண்ணும்மை. ஏ தேற்றம்.

ஐந்தெழுத்து ந - உயிர்களைப் போகத்திற் செலுத்தும் மறைப்புச் சத்தியையும், ம - மலத்தினையும், சி - சிவத்தையும், வ - அருட்சத்தியையும், ய - உயிர்களையும் அறிவிக்கும். ஐந்தெழுத்துரு வென்பதனை "ஆடும் படிகேணல் லம்பலத்தா னையனே, நாடுந் திருவடியி லேநகரங் - கூடு, மகர முதரம் வளர்தோள் சிகரம், பகருமுகம் வாமுடியப் பார். சேர்க்குந் துடிசிகரம் சிக்கனவா வீசுகர, மார்க்கும் யகர மபயகரம்—பார்க்கிலிறைக், கங்கி நகர மடிக்கீழ் முயலகனார், தங்கு மகரமது தான். ஓங்கார மேநற் றிருவாசி யுற்றதனி, னீங்கா வெழுத்தே நிறைசுடரா—மாங்கார, மற்றா ரறிவாணி யம்பலத்தா னாடலிது, பெற்றார் பிறப்பற்றார் பின்" என்னும் உண்மை விளக்கத்தான் அறிக. (௪௬)

சிற்றம் பலத்து நடிக்குஞ் சிவபெருமான்
கற்றைச் சடைக்கு முடிக்குஞ் சுடர்த்திங்கண்
மற்றப் புனன்மங்கை வாணுதலை யொக்குமால்.

பேரம் பலத்து நடிக்குஞ் சிவபெருமான்
வார்செஞ் சடைக்கு முடிக்குஞ் சுடர்த்திங்க
ணீர்மங்கை கொங்கைக்கு நித்திலக்கச் சொக்குமால்.

பொன்னம் பலத்து நடிக்குஞ் சிவபெருமான்
மின்னுஞ் சடைக்கு முடிக்குஞ் சுடர்த்திங்க
ளங்நங்கை செங்கைக் கணிவளையு மொக்குமால்.

இது ஒருபொருண்மேல் மூன்றடுக்கிவந்த ஆசிரியத்தாழிசை.

(இ - ள்) சிற்றம்பலத்து - ஞானசபையினிடத்து, நடிக்கும் - நடனம் செய்கின்ற, சிவபெருமான் - நடராஜப்பெருமானது, கற்றை - தொகுதியான, சடைக்கு முடிக்கும் சுடர் திங்கள் - சடையில் கட்டிய ஒளியுள்ள சந்திரன், அ புனல் மங்கை வாள் நுதலை ஒக்கும் - அந்தக் கங்காதேவியினது ஒளியுள்ள நெற்றியினை ஒத்திருக்கும்.

பேரம்பலத்து - பெரியசபையினிடத்து, நடிக்கும் - தாண்டவம் செய்கின்ற, சிவபெருமான் - கடவுளது, வார் செம் சடைக்கு முடிக்கும் சுடர் திங்கள் - நீண்ட சிவந்தசடையில் அணிந்துள்ள பிரகாசம் பொருந்திய சந்திரன், நீர் மங்கை கொங்கைக்கு நித்திலம் கச்சு ஒக்கும் - கங்காதேவியினது தனபாரங்களுக்கு அணிந்துகொள்ளும் முத்தினால் செய்யப்பட்ட கச்சினை ஒத்திருக்கும்.

பொன் அம்பலத்து - பொற்சபையினிடத்து, நடிக்கும் - நடனம் செய்கின்ற, சிவபெருமான் - சிவனது, மின்னும் சடைக்கு முடிக்கும் சுடர்

திங்கள் - ஒளி மின்னுகின்ற சடையில் சூடியுள்ள பிரகாசம் பொருந்திய சந்திரன், அ நங்கை செங்கைக்கு அணிவளையும் ஒக்கும் - அந்தக் கங்கா தேவியினது சிவந்த கைகளுக்கு அணியும் வளையலையும் ஒத்திருக்கும்; (எ - று)

எம்பிரான் சடையிலுள்ள திங்கள் - கங்காதேவியின் நுதல், முத்துக்கச்சு, வளையென்பவற்றை ஒக்கும் என்றவாறு. திருச்சிற்றம்பலம் தகரசபை, தகரவித்தை, சிதாகாசம், சிதம்பரம், ஞானாகாயம் முதலிய பல பெயர்களால் வழங்கப் பெறும்; கோயிற் புராணத்துள் இப் பலபெயர்களைப் பொருளோடு கூறியிருத்தல் காண்க. இதைப்பற்றி எசுர் முதலிய வேதங்களிலும், அஞ்சுமான் ஆகமத்திற் சிற்சபா பிரதிஷ்டா படலத்திலும், வாதுளோத்தரத்திலும், யோககுண்டிகையிலும், சாக்ந்தோக்யோபநிடதத்திலும், கைவல் யோபநிடதத்திலும், சூதசங்கிதையிலும், வேதாந்தப் பிரகரணத்திலும், பிரமகீதையிலும் விபரங் காணப்பெறும். கொங்கைக்கு செங்கைக்கு சடைக்கு என்பன வேற்றுமை மயக்கும். மற்று ஆல் அசைகள். சிற்றம்பலம் முதலியன சபைவிசேடத்தையுணர்த்திநிற்கும். ஒக்கும்-செய்யுமென் முற்று. ஒ பகுதி. வளை வளையலுக்குக் காரணக்குறி. (௭௭)

நாகம் பொதிசடைமே னாண்மதியும் வாண்மதிபோ னங்
கை கங்குன், மேகஞ்செய் கூந்தன் மிலைச்சுந் தலைக்கலனும் விள
ங்குந் தோற்ற, மாகம் பகுந்தளித்த வங்நாளி லம்பலத்தான்,
மாகம் பதியு மதியும் பகுந்தளித்த வண்ணம் போலும்.

இதுநான்கடியாய் ஈற்றயலடி குறைந்துவந்த ஆசிரியத்துறை.

(இ - ள்) நாகம் பொதி சடைமேல் - பாம்பு நிறைந்த சடைமீதுள்ள, நாள் மதியும் - பிறைச் சந்திரனும், வாள் மதிபோல் - ஒளிவிடுகின்ற சந்திரனைப் போன்ற, நங்கை-பார்வதிதேவி, கங்குல் மேகம் செய்த கூந்தல் மிலைச்சும் - இருண்ட மேகத்தைஒத்த கரிய கூந்தலில் அணியும், தலை கலனும் - தலையிலணியும் (சந்திரபிறை என்னும்)ஆபரணமும், விளங்கும் தோற்றம் - விளங்குகின்ற காட்சி, ஆகம் பகுந்து அளித்த - சரீரத்தைப் பகுத்துக் கொடுத்த, அ நாளில்-அக்காலத்தில், அம்பலத்தான் - சபாநாயகன், மாகம் பதியும் மதியும் பகுந்தளித்த வண்ணம் போலும் - ஆகாயத்தினிடத்துப் பதிந்துள்ள சந்திரனையும் பகுத்துக் கொடுத்த தன்மை போலும்; (எ - று.)

வாள்மதி தலைக்கலனுக்கு உவமை. செய்—உவமை உருபு. பெருமானின் அர்த்தநாரீசுவரராய் விளங்கும் தன்மை கூறப்பெற்றது. மா கம் பதியும் எனப்பிரித்துப் பெரிய தலையில் அணிந்த எனப் பொருள் கூறுவாரும் உளர். போலும் ஒப்பில் போலி. (௭௮)

மாயிரு ஞாலத்து மன்னுயிர்கள் கண்களிப்ப மன்று ளாடு
நாயகன் கண்டங் கறுத்தன்றே பொன்னுலகை நல்கிற் றம்மா
நாயகன் கண்டங் கறுநீதலங் நாட்டமரார் [சிவக்கும் போலும்.
சேயிழை மாதருக்குச் செங்கைகளுங் கொங்கைகளுஞ்

இது அவ்வாறே இடைமடக்காய் வந்த ஆசிரியத்துறை.

(இ - ள்) மா இரு ஞாலத்து மன் உயிர்கள் கண்களிப்ப - மிகப்பெரிய உலகத்திலுள்ள நிலைபெற்ற உயிர் வர்க்கங்களின் கண்கள் ஆனந்தத்தை அடைய, மன்றுள் ஆடும் நாயகன் - சபையில் நடனம் செய்கின்ற சிவபெருமானது, கண்டம் கறுத்து அன்றே பொன் உலகை நல்கிற்று - கண்டம் கறுத்ததனாலல்லவா தேவலோகத்தைத் தந்து பாதுகாத்தது, நாயகன் கண்டம் கருதேல் - அச்சிவபெருமானது கண்டம் கருநிறத்தை அடையாதிருக்குமாகில், அ நாட்டு அமரர் சேஇழை மாதருக்கு - அந்தப் பொன்னுலகிலுள்ள தேவர்களுடைய செவ்விய ஆபரணங்களை அணிந்துள்ள பெண்களுக்கு, செங்கைகளும் கொங்கைகளும் சிவக்கும் - அழகிய கரங்களும் தனங்களும் செந்நிறத்தை அடையும்; (எ - று)

அமரர் மரித்தலில்லாதவர். போலும் உரையசை. கறுத்து என்னும் வினையெச்சம் கறுத்ததனால் என்னும் பொருள்பட நின்றது. மாயிரு, இடைச்சொல்லாதலின் யகர உடம்படுமெய் பெற்றது. அம்மா வியப்பிடைச்சொல். சிவபெருமான் திருப்பாற்கடலில் தோன்றிய விடத்தை உண்டு தேவர்களைக் காத்த பெருமை கூறப்பெற்றது.

"மாலெங்கே வேதனுயர் வாழ்வெங்கே யிந்திரன்செங்
கோலெங்கே வானோர் குடியெங்கே—கோலஞ்சே
ரண்டமெங்கே யவ்வவ் வரும்பொருளெங் கேநினது
கண்டமங்கே நீலமுறாக் கால்"

என்ற அருட்பிரகாசவள்ளலார் திருவாக்கான் உணர்க. (௬௧)

உண்டாங் கெனினு மிலதென் றறிஞர்கள் பொய்யெனப் புகலவு மெய்யெனப் பெயர்பெற் றுன்னுமுன மின்னாமென வுள தாய் மாய்வது நிலையில் யாக்கை,—கண்டாங் கிகழுங் கிழமுதி ரமையத் தைவளி பித்தெனு மெய்தரும் வித்திற் கடலிற் றிரை யென வுடலிற் றிரையொடு கலியா நின்றன நலிவுசெய் நோய்கள்,—புண்டாங் கயின்முக் குடுமிப் படையொடு மெயிறலைத் தழல் விழித் துயிருணக் கனல்சேர் புகையாமெனத் நிழலாமெனத் திரியா நின்றது கொலைசெய் கூற்றம்,—விண்டாங் ககலுபு மெய்ப்பொரு டுணிவோர் மின்பொலி பொன்புனை மன்றிலெம் முயிராம் விமலன் குஞ்சித கமலங் கும்பிட வேண்டுவர் வேண்டார் விண்மிசை யுலகே.

இது முதலடியும் மூன்றுமடியும் பதினான்குசீராய் எனை இரண் டடியும் பதினாறுசீராய்வந்தமையின் இடையிடை குறைந்துவந்த ஆசிரி யத்துறை.

(இ - ள்) நிலை இல் யாக்கை - நிலையில்லாத இச்சரீரம், உண்டு எனினும் - இருக்கின்றது என்றாலும், இலது என்று - இல்லை யென்று சொல்லி, அறிஞர்கள் - பெரியோர்கள், பொய் என புகலவும் - பொய் என்று சொல்லவும், மெய் என பெயர் பெற்று - மெய் என்ற பெயரினைப் பெற்று, உன்னு முனம் - நினைத்தற்கு முன்பே, மின் ஆம் என - மின்னல் என்று சொல்லும்படியாக, உளது ஆய் மாய்வது - இருப்பது போன்று

இறப்பதாகும், நலிவுசெய் நோய்கள் - நலிதலைச்செய்கின்ற பிணிகள், கண்ட ஆங்கு இகழும் - கண்டவிடத்துயாவராலும் இகழப்படுகின்ற, கிழம் முதிர் அமையத்து - கிழப்பருவம் முற்றிய சமயத்தில், ஐ வளி பித்து எனும் - சிலேட்டுமம் வாதம் பித்தம் என்று சொல்லப்பட்ட, மெய்தரும் வித்தில் - உடலைத்தருகின்ற விதையிலிருந்து, கடலில் திரை என - கடலினிடத்துத் தோன்றுகின்ற அலை என்று சொல்லுமாறு, உடலில் திரையொடு - உடம்பினிடத்துதோல் சுருங்குதலோடு, கலியா நின்றன - பெருகுகின்றன, கொலைசெய் கூற்றம் - ஜீவராசிகளைக் கொல்லும் இயமன், புண் தாங்கு - மாமிசம் தங்கிய, அயில் முக்குடுமி படையொடும் - கூரிய மூன்று தலைகளையுடைய சூலப்படையோடும், எயிறு அலைத்து - பற்களைக்கடித்து, அழல் விழித்து - நெருப்புண்டாக விழித்து, உயிர் உண - உயிர்களை அருந்த, கனல்சேர் புகை ஆம் என - நெருப்பினைச்சேர்ந்திருக்கும் புகையைப் போலவும், நிழலாமென - சாயலைப்போலவும், திரியாநின்றது - திரிந்து கொண்டிருக்கின்றான், (ஆகையால்) ஆங்குவிண்டு அகலுபு - அவ்விடத்தினின்றும் பிரிந்து நீங்கி, மெய் பொருள் துணிவோர் - உண்மையான பொருளைத்துணிபவர், மின்பொலி - மின்னல் விளங்கும், பொன் புனை மன்றில் - பொன்னால் அலங்கரிக்கப்பெற்ற சபையில், எம் உயிராம் விமலன் குஞ்சித சரணம் கும்பிடவேண்டுவர் - எமது உயிராகிய நடராசப் பெருமானது வளைந்த திருவடியைத்தரிசிக்க விரும்புபவர், விண்மிசை உலகு - மேல் உலகப் பதவியை, வேண்டார் - விரும்பமாட்டார்; (திருவடியையே அடையக் கருதுவார்.) (எ - று.)

யாக்கை மாய்வது; நோய்கள் கலியாநின்றன; கூற்றம் திரியாநின்றது; ஆகையால் மெய்ப்பொருள் துணிவோர் கும்பிடவேண்டுவர் உலகு வேண்டார் என முடிக்க. யாக்கை நிலையாமையும் நோய்களின் கொடுமையும் கூற்றுவன் நிலைமையும் கூறப்பெற்றது. சரீரத்தை மெய்யென்பது உபசாரம். மின்னல்தோன்றி மறையும் தன்மையதாதலின் மெய்க்கு உவமையாயிற்று, விடாது தொடரும் தகைமைநோக்கி நிழலையும், சிறுபுழையினுஞ் செல்லும் தன்மை நோக்கி புகையையும் இயமனுக்கு உவமை கூறினர். அறிஞர்கள் ஞ் பெயரிடைநிலை. மாய்வது மாயுந்தன்மையது வகரம் தன்மைப்பொருளது. ஆங்கு உரையசை, காலம் இடம் இவற்றையுணர்த்தும் இடைச்சொல். கண்ட ஆங்கு அகரம் தொகுத்தல். திரை முன்னது அலை; பின்னது சுருக்கம், முதனிலைத்தொழிற்பெயர். அகலுபு செய்பு என்னும் வாய்பாடு. கூற்றம் சொல்லால் அஃறிணை பொருளால் உயர்திணை. திரியாநின்றது ஆனின்று நிகழ்கால இடைநிலை. விமலன்—மலரகிதன், வி நீக்கப் பொருட்டு. உலகு, ஈண்டு பதமுத்தி "கும்பிடவேண்டுவர் என்றதினால்" தரிசிக்க முத்திதரும் தலமென்பது பெறப்பட்டது. மெய்ப்பொருள் ஈண்டு முத்தியின் மேல் நின்றது. உடற்குமூலம் இம்மூன்று மாதலின் மெய்தரும் வித்தென்றார். குஞ்சிதசரணம் - ஆட எடுத்த வளைந்த திருவடி.

(௩௦)

திங்கட் சடைக்கற்றைப் புத்தே டிருமார்பிற்
பைங்கட் டலைகள் பலவு நகுவ போலுமால்

பைங்கட் டலைகள் பலவு நகுவகண்
டங்கட் கமலத் தயனு மாலு மழுவரால்.

இது முதலடியும் மூன்றாமடியும் நாற்சீராய் ஏனை இரண்டடியும் ஐஞ்சீராய் இடைமடக்காய் வருதலின் இடையிடை குறைந்து இடைமடக்காய் வந்த ஆசிரியத்துறை.

(இ - ள்) திங்கள் சடை கற்றை புத்தேள் திருமார்பில் - சந்திரனைத் தரித்த சடைத்தொகுதியையுடைய சிவபிரானது அழகிய மார்பினிடத்து அணிந்துள்ள, பைங்கண் தலைகள் பலவும் நகுவபோலும் - பசிய கண்களையுடைய தலைகள் யாவும் நகுவன போலும், நகுவ பைங்கண் தலைகள் பலவும் கண்டு - அவ்வாறு சிரிப்பனவாய பசிய கண்களையுடைய தலைகள் பலவற்றையும் பார்த்து, அம் கண் கமலத்து அயனும் மாலும் அழுவர் - அழகிய இடமகன்ற தாமரை மலரில் எழுந்தருளியுள்ள பிரமதேவனும் திருமாலும் அழுவார்கள்; (எ - று.)

கமலம்—நீரை அலங்கரிப்பது. தலை—பிரம விஷ்ணுக்களின் தலைகள். அம் கள் கமலம்—அழகிய தேனையுடைய தாமரை எனினும் ஆம். நகுவ வினையாலணையும் பெயர். ஆல் இரண்டும் அசைகள். தலைக்கலன் சிரித்தல் பிரம விஷ்ணுக்களுக்கு அழுகையாயிற்றென்பது ; அத் தலைக் கலன்களும் முன்னைப் பிரம விஷ்ணுக்களின் தலைகளே யாதலின் எண்ணில்லாத பிரம விஷ்ணுக்கள் இறந்துளார் என்பதை

"நூறுகோடி பிரமர்களொங்கினர்
ஆறுகோடி நாராயண ரங்கனே"

என்னும் அப்பர் திருவாக்கானுணர்க. (௫௧)

கனம ளித்தபைங் காவில்வெண் டரளமும் பவளமும் கமுகீனப், புனம ளித்தபூங் கொன்றைபொன் சொரிதரப் புண்ணிய மலர்தில்லை, வனம ளித்ததே யெனினுமோ ரானந்த மாக்கடற் றிளைத்தாடு, மனம ளித்தவேழ் பொழிற்குமோர் பலமென்ப தம்பொனம் பலந்தானே.

இது அறுசீர்க்கழி நெடிலடியால் வந்த ஆசிரிய விருத்தம்.

(இ - ள்) கனம் அளித்த பைங்காவில் - மேகத்தால் வளர்க்கப் பெற்ற பசிய சோலையிடத்து, கமுகு வெண் தாளமும் பவளமும் ஈன - பாக்கு மரம் வெண்மையான முத்துக்களையும் பவளத்தையும் தோற்றுவிக்க, புனம் அளித்த பூம் கொன்றை பொன் சொரிதர - புனம் தோற்றுவித்த அழகிய கொன்றைமரம் பொன் போன்ற பூக்களை உதிர்க்க, புண்ணியம் மலர் தில்லைவனம் அளித்ததே எனினும் - புண்ணியம் விரியும் தில்லைக் காடுபெற்றதே ஆயினும், ஓர் ஆனந்தம் மா கடல் திளைத்து ஆடும் - ஒப்பற்ற ஆனந்தமாகிய பெரிய சாகரத்தில் முழுகி விளையாடும், அனம் அளித்த எழ் பொழிற்கும் - உமையாகிய அன்னம் தோற்றுவித்த எழுலகங்களுக்கும், ஓர் பலம் என்பது - ஒப்பற்ற பழம் என்று சொல்லத்தகுந்தது, அம் பொன் அம்பலம் - அழகிய பொன்னம்பலமேயாகும் ; (எ - று)

பலம், பழம் பயன் எனச் சிலேடையாற் பொருள்கொள்க. தில்லை வனமளித்த ஓர்பலம் எழுலகத்திற்கும் உரித்து என்பது பெற்றும். கடல், அன்னம் உருவகம். அனம் இடைக்குறை. தான் ஏ அசைகள். மலர்தில்லை வினைத்தொகை. பசுமை—கா பைங்கா. ஈன சொரிதர மலர்தில்லை எனக் கூட்டுக. புண்ணியம் அலர் எனினும் ஆம். புனம் - காடு. தாளம் பாளையி லிருக்கும்போது உளதாம் நிறம். பவளம் பழுத்தபின்பு உளதாம் நிறம். "என்னுர் முத்த மீன்று மரகதம்போற்காய்த்துக் கண்ணுர் கமுகு பழுக்கும் கலிக்காழி" என்றூர் பிறரும் (தேவாரம்) பொன் சொரிதல் - பொன்போலும் நிறத்தைக் காலுதல். (௫௨)

கோமுனிவ ருக்குமரி தாய்முது மறைப்பனுவல் கூறியப ரப்பிரமமா, மோமெனுமெ ழுத்தின்வடி வாய்நட ந விற்றுபுலி யூரன்மகு டச்ச டிலமேன், மாமதியி னைத்தனது கோடெனவெ டுப்பமத மாமுகன்மு கக்கை தொடவத், தூமதிப ணிப்பகையெ னுவரந திப்புகவொர் தோணியென விட்ட கலுமே.

இது எழுசீர்க்கழிநெடிலடியால்வந்த ஆசிரியவிருத்தம்.

(இ - ள்) கோ முனிவருக்கும் - சிறந்த முனிவர்களுக்கும், அரிதாய் - அரியதாகி, முதுமறை பனுவல் கூறிய - பழமையாகிய வேதநூல்கள் சொல்லிய, பரப்பிரமம் ஆம் - மேலான கடவுளாய, ஓம் எனும் எழுத்தின் வடிவாய் - ஓம் என்ற எழுத்தின் உருவமாய், நடம் நவிற்று புலியூரன் மகுட சடிலமேல் - திருநடனம் செய்கின்ற நடராசப்பெருமானது கிரீடம் போன்று முடித்த சடாபாரத்தின்கண்ணுள்ள, மாமதியினை - பெரிய சந்திரனை, மதமாமுகன் - யானைமுகப்பெருமான், தனது கோடு என எடுப்ப முகக்கை தொட - தன்னுடைய கொம்பென்று நினைத்து எடுப்பதற்காகத் துதிக்கையால் தொடவும், அ தூ மதி - அந்தப் பரிசுத்தமான சந்திரன், பணி பகை எனு - பாம்பாகிய பகைவன் என்று கருதி, வரம் நதிபுக - மேலான கங்கா நதியில் புகுந்து ஓட, ஓர் தோணி என விட்டு அகலும் - ஒரு தோணியாகும் என எண்ணி விட்டகலுவார்; (எ - று.)

மாமுகன் எடுப்ப தொட மதிபுக விட்டகலும் என முடிக்க. முகக்கை முகத்தின்கண்ணுள்ள கை. புலியூரன் சடையையே மகுடமாகக் கொண்டுள்ளார். முனிவருக்கும் உம்மை சிறப்பின்கண் வந்தது. முகன் ஈற்றுப்போலி. எனு செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். அகலும் செய்யுமென்முற்று. இது திரிபதிசயவணி. (௫௩)

அருவருக்கு முலகவாழ் வடங்க நீத்தோர்க் கானந்தப் பெருவாழ்வா மாடல்காட்ட, மருவருக்கன் மதிவளிவான் யமானன் நீநீர் மண்ணெனுமெண் வகையுறுப்பின் வடிவு கொண்ட, வொரு வனுக்கு மொருத்திக்கு முருவொன் ருலவ் வுருவையிஃ தொருத் தனென்கோ வொருத்தி யென்கோ, விருவருக்கு முரித்தாக வொருவ ரென்றோ ரியற்சொலில தெனில் யான்மற் றென்சொல் கேனே.

இது எண்சீர்க்கழிநெடிலடியால்வந்த ஆசிரிய விருத்தம்.

(இ - ள்) அருவருக்கும் உலகவாழ்வு அடங்க நீத்தோர்க்கு - அருவருக்கத்தக்க உலகவாழ்க்கையை முழுவதும் விட்டவர்களுக்கு, ஆனந்த பெருவாழ்வாம் ஆடல் காட்ட - ஆனந்தத்தைத்தரும் உயர்ந்தவாழ்க்கை யாகிய திருநடனத்தைக் காண்பிக்க, மருவு அருக்கன் மதி வளி வான் இயமானன் தீ நீர் மண் எனும் எண்வகை உறுப்பின் வடிவு கொண்ட - பொருந்திய சூரியன் சந்திரன் காற்று ஆகாயம் யஜமானன் அக்கினி தண்ணீர் பூமி என்ற எட்டுவகை உறுப்புக்களின் உருவத்தைக் கொண்ட, ஒருவனுக்கும் ஒருத்திக்கும் உரு ஒன்று ஆல் - சிவனுக்கும் உமைக்கும் வடிவம் ஒன்ருகும் ஆகையால், அ உருவை இஃது ஒருத்தன் என்கோ ஒருத்தி என்கோ - அவ்வடிவமாகிய இதனை ஒருவன் என்று சொல்வேனே ஒருத்தி என்று சொல்வேனு, இருவருக்கும் உரித்தாக - இருவருக்கும் (அத்தகைய உருஅமைப்புள்ள இவ்வடிவத்தைப் பொருந்துமாறு ஒருவர் என்று ஓர் இயல்சொல் இலது எனில் - ஒருவர்என்று ஒரு இயற்சொல் இல்லையென்ருல், மற்று யான் என் சொல்கேன் - வேறு யான் எவ்வாறு சொல்லுவேன்; (எ - று.)

இது ஒருவரென்னும் சொல்லின் அமைப்பை அர்த்த நாரீச வடிவில் வைத்து வியந்தவாறு, ஒருவரென்னும் சொல் முதனிலையை நோக்க ஒருமையாயும் இறுதிநிலையை நோக்கப் பன்மையாயும் இருத்தல் அர்த்த நாரீசமாகிய ஓர் வடிவத்திற்கும் ஆண் பெண் என்னும் இருபாலுக்கும் ஏற்புடைத்தாயிற்று. எண் வகை உறுப்பு, சிவபெருமானின் அட்ட மூர்த்தங்களை உணர்த்திற்று. எட்டு மூர்த்தங்களாய் விளங்கியுள்ளா ரென்பதை "நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன் புலனாய மைந்தனோ டெண் வகையாய்ப் புணர்ந்து நின்ருன்" என்ற திருவர்சகத் தானுணர்க. இயமானன் - யாகத்துக்குத் தலைவர். நிரதிசயப்பேரின்ப வாழ்வை நோக்க இன்பதுன்பம் ஒருங்கனுபவிக்கக்கூடியதாதலின் இவ்வுலக வாழ்வை அருவருக்கும் உலகவாழ்வென்ருர். ஆடல்காட்ட வடிவுகொண்ட ஒருவன் என்றியைக்க. என்கோ, தன்மையொருமை எதிர்காலவினைமுற்று. ஓ ஐயம். மற்று பிறிதென்னும் பொருளில் வந்தது. நீத்தோர் நீபகுதி. உருவை ஐ உருபை இஃதென்பதனோடு கூட்டுக. (௩௪)

வளங்கு லாவரு மணங்க ணர்விழி
மயக்கி லேமுலை முயக்கி லேவிழு மாந்தர்காள்
களங்கு லாமுட லிறந்து போயிடு
காடு சேர்முனம் வீடு சேர்வகை கேண்மினோ
துளங்கு நீள்கழ றழங்க வாடல்செய்
சோதி யானணி பூதி யானுமை பாகியான்
விளங்கு சேவடி யுளங்கொ ளீர்யமன்
விடுத்த பாசமு மடுத்த பாசமும் விலக்குமே.

இது ஒன்பதின்சீர்க்கழிநெடிலடியால்வந்த ஆசிரியவிருத்தம்

(இ - ள்) வளம் குலாவரும் - வளப்பம் விளங்குகின்ற, அணங்கு அனோர் விழி மயக்கிலே முலை முயக்கிலே விழும் மாந்தர்காள் - தெய்வப் பெண்களை ஒத்த பெண்களினது விழிமயக்கிலும் தனங்களின் முயக்கத்திலும் ஆசையோடு வீழும் மனிதர்களே, களம் குலாவும் உடல் இறந்துபோய் இடுகாடு சேர்முனம் - வஞ்சனை நிறைந்த சரீரம் இறந்துபோய்ச் சுடுகாட்டை அடைவதற்குமுன்பே, வீடு சேர்வகை கேண்மின் - மோக்ஷவீட்டை அடைகின்ற விதத்தைக்கேளுங்கள், துளங்கு நீள் கழல் தழங்க ஆடல் செய் சோதியான் - அசைகின்ற நீண்ட வீரக்கழல் ஒலிக்கத் திருநடனம் செய்கின்ற சோதிவடிவாயுள்ளவரும், அணி பூதியான் - விபூதியை அணிந்துள்ளவரும், உமை பாதியான் - உமாதேவியைத் தன் பாதி வடிவத்திற்கொண்டுள்ளவரும் ஆகிய சிவபிரானாரது, விளங்கு சேவடி உளம் கொளீர் - விளங்கும் திருவடியை மனதிற்கொள்ளுங்கள், (கொண்டால் அச்சேவடி) இயமன் விடுத்த பாசமும் - இயமனால் விடப்பட்ட பாசகயிற்றையும், அடுத்த - தொடர்ந்து வரும், பாசமும் - பாசபந்தங்களையும், விலக்கும் - நீக்கும்; (எ-று.)

மாந்தர் வீடுசேருமுபாயம் கூறப்பெற்றது. பிறந்த நாள் தொடங்கித்தொடர்ந்து வருதலின் அடுத்த பாசமென்றார். பாசம் முன்னது கயிறும் பின்னது ஆணவமும் குறித்து நின்றது. களம் இடைக்குறை, களங்கு உலாம் எனப்பிரித்து அம்சாரியை குறைந்தது எனினும் ஆம், உலாம் செய்யுமென் வாய்பாட்டுப் பெயரெச்சம் உயிர்மெய்கெட்டது. இடுகாடு முக்கால வினைத்தொகை, அனோர் கொளீர் தொகுத்தல். விலக்கும் செய்யுமென்முற்று; முன்னிலைப்பன்மை வினை முற்றாக்கினும் அமையும். மயக்கிலே ஏகாரம் எண்ணுப்பொருளது. (௫௫)

கைத்த லத்த ழற்க ணிச்சி வைத்தி டப்பு றத்தொ ருத்தி
கட்க டைப்ப டைக்கி ளைத்த திறலோரா
முத்த லைப்ப டைக்க ரத்தெ மத்தர் சிற்ச பைக்கு ணிற்கு
முக்க ணக்க ருக்கொ ருத்தர் மொழியாரோ
நித்தி லத்தி னைப்ப தித்த கச்ச றுத்த டிக்க னத்து
நிற்கு மற்பு தத்த னத்தி னிடையேவே
ளத்தி ரத்தி னைத்தொ டுத்து விட்டு நெட்ட யிற்க ணித்தி
லத்தி னுற்றி டச்செய் விக்கு மதுதானே.

இது பதின்முச்சீர்க்கழிநெடிலடியால்வந்த ஆசிரியவிருத்தம்.

(இ - ள்) நித்திலத்தினை - முத்தை, பதித்த - வைத்து இழைத்த, கச்சு அறுத்து - கச்சினைக்கிழித்துக்கொண்டு, அடி கனத்து நிற்கும் - அடிப்பாகம் பருத்திருக்கின்ற, அற்புத தனத்தினிடை - அற்புதமான தனங்களுக்கு நடுவில், வேள் - மன்மதன், அத்திரத்தினை தொடுத்துவிட்டு - மலரம்பினை கருப்பு வில்லில் வைத்துத்தொடுத்து, நெடு அயில்கண் நித்திலத்தின் உற்றிடச்செய்விக்கும் அது - நீண்ட வேலாயுதம்போன்ற கூரிய கண்களினின்று முத்துப்போன்ற நீரைச்சொரியச்செய்யும் அச்செயலை, கை தலத்து அழல் கணிச்சி வைத்து - கையினிடத்து அக்கினியைக் கக்கும் மழுவாயுதத்தை வைத்து, இடப்புறத்து - இடது பாகத்தி

லுள்ள, ஒருத்தி கடைகண்படைக்கு - உமாதேவியினது கடைக்கண்ணுகிய ஆயுதத்திற்கு, இளைத்ததிறலோராம் - இளைத்த தன்மையுடையரான, முத்தலை படை காத்து எம் அத்தர் - மூன்று தலைகளையுடைய சூலப்படையைக் கையிலே கொண்டுள்ள எமது தலைவராகிய, சித்சபைக்குள் நிற்கும் முக்கண் நக்கருக்கு - ஞானசபையின்கண் வீற்றிருக்கும் மூன்று கண்களையுடைய சிவபெருமானுக்கு, ஒருத்தர் மொழியாரோ - ஒருவரும் சென்று சொல்ல மாட்டாரோ ; (எ - று.)

முன்னிலைப்புறமாகத் தலைவி தோழியை நோக்கிக்கூறியது. வேள் செய்விக்குமது நக்கருக்கு ஒருத்தர் மொழியாரோ என்றியைக்க. வேள் - விருப்பத்தைத்தருபவன். கட்படைக்கு ஒத்த இவர் வேறு கணிச்சிப்படை தாங்குதல் மிகை என்றவாறு. திறலோராம் அத்தர் என முடிக்க. நித்திலம் உவமையாகுபெயர். நித்திலத்தின் சாரியையுள்வழி ஐ யுருபு தொக்கது, நெடுமை அயில் பண்பு தன்னொற்றிரட்டியது. தான் ஏ அசைகள். ஓ கழிவுப்பொருளில் வந்தது. (நிகூ)

ஆசிரியப்பா வினம் முற்றிற்று.

---

## கலிப்பா.

---

கொன்செய்த கலையல்குற் கொலைசெய்த மதர்வேற்கண்
மின்செய்த சிறுமருங்குற் பெருந்தேவி விழிகுளிர்ப்பப்
பொன்செய்த மணிமன்றி னடஞ்செய்த புகழோய்கேள்.

இது மூவடித்தரவு.

முருகுயிர்க்கு நறுந்தெரியன் மொய்குழலின் மையுண்கட்
பொருகயற்குன் றிருமேனி புதுவெள்ளப் புணரியே.

தேன்மறிக்கும் வெறித்தொங்க லறற்கூந்தற் றிருந்திழை
மான்மறிக்குன் றிருமேனி மலர்முல்லைப் புறவமே. [கண்

பிறையளிக்குஞ் சிறுநுதலப் பெண்ணமுதின் பேரமர்க்கட்
சிறையளிக்குன் றிருமேனி தேனளிக்கும் பொதும்பரே.

இவைமூன்றும் ஈரடித்தாழிசை.

அதனல், இது தனிச்சொல்.

மதுவிரி கோதை மடவாற் கம்ம
புதுவிருந் துண்ண வுண்ண
வதிசயம் விளக்குநின் னற்புதக் கூத்தே.

இது மூவடி நேரிசையாசிரியச் சுரிதகம்.

இது தரவொன்றும் தாழிசைமூன்றும் தனிச்சொல்லும் சுரிதக முமாய் வருதலின் நேரிசையொத்தாழிசைக்கலிப்பா. இதனுட் பிறை யளிக்குஞ் சிறுநுதலப் பெண்ணமுதின் பேரமர்க்கண்ணென இரண்டாஞ் சீரும் ஈற்றுச்சீரும் முரணத்தொடுக்கப்பட்டுப் பின்முரண் வந்தவாறு காண்க. இதனானே தரவு மூன்றடிச்சிறுமையுடைத்தெனவும் தாழிசை இரண்டடிச்சிறுமையுடைத்தெனவுமுணர்க.

(இ - ள்) கொன்செய்த கலை அல்குல் - பெருமையாகச் செய்யப் பெற்ற மேகலையை அணிந்துள்ள அல்குலையும், கொலைசெய்த மதர் வேல் கண் - கொலைத்தொழிலைச்செய்யும் மதர்த்த வேல்போன்ற கண்களையும், மின்செய்த சிறு மருங்குல் - மின்னலை ஒத்த சின்னஞ்சிறு இடையினையு முடைய, பெரும் தேவி விழி குளிர்ப்ப - பெரிய உமாதேவியினது கண்கள் குளிரும்படியாக, பொன்செய்த மணிமன்றில் - பொன்னால் அமைந்த அழகிய சபையினிடத்து, நடம் செய்த - நடனம் செய்த, புகழோய் - கீர்த்தியை யுடையவரே, கேள் - கேளும்;

முருகு உயிர்க்கும் - வாசனைவீசும், நறும் தெரியல் - நல்ல மாலையை அணிந்த, மொய்குழலின் - நெருங்கிய கூந்தலையுடைய உமா தேவியினது, மை உண் கண் பொரு கயற்கு - அஞ்சனம் தீட்டப்பெற்ற கண்ணாகிய போர் செய்கின்ற கயல் மீனுக்கு, உன் திருமேனி - உமது சரீரம், புதுவெள்ளம் புணரி - புதிதாக வந்த நீர்ப்பெருக்கையுடைய கடல் ஆகும்;

தேன் மறிக்கும் வெறி தொங்கல் - தேன் வழிந்து ஒழுகும் நறு மணமுள்ள மாலையை அணிந்துள்ள, அறல் கூந்தல் திருந்து இழை - கரு மணலை ஒத்த கூந்தலையுடைய திருந்திய ஆபரணங்களை அணிந்துள்ள உமாதேவியினது, கண் மான்மறிக்கு- கண்ணாகிய மானுக்கு, உன் திருமேனி - உமது சரீரம், முல்லைமலர் புறவம் - முல்லைமலரையுடைய காடு ஆகும்;

பிறை அளிக்கும் சிறு நுதல் அ பெண் அமுதின் - பிறை போன்றுவிளங்கும் சிறிய நெற்றியையுடைய அந்தப் பெண்களுக்குள் அமுதம்போன்று விளங்கும் உமாதேவியினது, பேர் அமர்கண் சிறை அளிக்கு - பெரிய போர்விளைக்கும் கண்ணாகிய இறகுகளையுடைய வண்டிற்கு, உன் திருமேனி - உமது சரீரம், தேன் அளிக்கும் பொதும்பர் - தேனைக்கொடுக்கும் சோலையாகும்;

அதனால் — ஆகையால்,

மது விரி கோதை மடவரற்கு - தேன்விரியப்பெற்ற கூந்தலை யுடைய உமாதேவிக்கு, நின் அற்புதம் கூத்து - உமது ஆனந்தத் தாண்டவம், புதுவிருந்து உண்ண உண்ண - புதிய விருந்தினை அருந்த அருந்த, அதி சயம் விளைக்கும் - அதிசயத்தைக் கொடுக்கும்; (எ - று.)

புகழோய் மடவரற்கு நின்கூத்து அதிசயம் விளைக்கும் என்க. இறைவன் திருமேனி உமையம்மையின் கண்களுக்குப்புணரியாகவும், புறவ மாகவும், பொதும்பராகவும் இருந்ததென வியந்தவாறு. புது விருந்து திரு நடனம் தரிசிக்கும் காட்சி. தெரியல், தொங்கல், கோதை என்பன மாலை

விசேடம். பிறை எண்ணுட்டிங்களை உணர்த்திற்று. அம்ம இடைச்சொல். உண்ண உண்ண அடுக்குப்பயில்வுப் பொருள். வேற்கண் அறற்கூந்தல் உவமைத்தொகை. (ருள.)

பேதைமீர் பேதைமீர்!

பூமன்னு திசைமுகனும் புயல்வண்ணப் பண்ணவனுங்
காமன்னு புரந்தரனுங் கடவுளரும் புடைநெருங்க
விருகோட்டுக் கிடைந்தவிடு கிடையவர்பல் லாண்டிசைப்ப
வொருகோட்டு மழகளிறு மிளங்கோவு முடன்போத
வம்பொன்மணி மதிற்றில்லை நடராச னணிமறுகிற்
செம்பொன்மணிப் பொலந்திண்டேர்த் திருவுலாப் போதுங் [கால்.

இது ஆறடித்தரவு.

பாரித்த பேரண்டஞ் சிறுபண்டி கொளப்பெய்து
வாரித்தண் புனற்றுஞ்சு மாலுக்கு மால்செய்வீர்
வேரித்தண் குழலார்கை வளைகொள்ள விழைந்தேயோ
பூரித்து வீங்குவதும் புயமென்பார் சிலமாதர்.

சொன்மாலை தொடுத்தணிந்த தொண்டர்க்குத் துணைவராய்
நன்மாலைக் குழலியர்பா னள்ளிருளிற் செலவல்லீர்
பன்மாத ருயிர்கொள்ளல் பழியன்றே பகைகொள்ளும்
வின்மார னுயிர்கொண்ட விழிக்கென்பார் சிலமாதர்.

அங்கமலன் முடைத்தலையே பலிக்கலனு வையமிடு
மங்கையர்க ணலங்கவர்வான் பலிக்குழலு மாதவத்தீர்
தங்கலர்தங் கியமும்மைப் புரமன்றே தலையன்பி
னங்கையர்தம் புரமுமது நகைக்கென்பார் சிலமாதர்.

இவைமூன்றும் நான்கடித்தாழிசை.

அருங்கலை கவர்ந்துநீ ரளிக்கப் பெற்றநும்
மிருங்கலை யினிதெமக் கென்ப ரோர்சிலர்.

நன்னிறங் கவர்ந்துநீர் நல்கப் பெற்றநும்
பொன்னிற மினிதெனப் புகல்வ ரோர்சிலர்.

இவையிரண்டும் நாற்சீரடியம்போதரங்கம். பேரெண்.

தேரினை நோக்கியே திரிவர் சிற்சிலர்.
ஏரினை நோக்கியே யெழுவர் சிற்சிலர்.
தாரினை நோக்கியே தளர்வர் சிற்சிலர்.
மாரினை நோக்கியே மருள்வர் சிற்சிலர்.

இவை நான்கும் நாற்சீரோரடியம்போதரங்கம். அளவெண்.

நலனழிந்து நிற்பார்சிலர். நாண்டுறந்து நிற்பார்சிலர்.
கலனழிந்து நிற்பார் சிலர். கண்கலுழ்ந்து நிற்பார் சிலர்.

இவைநான்கும் முச்சீரோரடியம்போதரங்கம். இடையெண்.

பாடு வார்சிலர். ஆடு வார்சிலர்.
பரவு வார்சிலர். விரவு வார்சிலர்.
வாடு வார்சிலர். ஓடு வார்சிலர்.
மகிழு வார்சிலர். புகழு வார்சிலர்.

இவையெட்டும் இருசீரோரடியம்போதரங்கம். சிற்றெண்.

ஆங்கொருசார், இது தனிச்சொல்.

முதிரா விளமுலை மழலையந் தீஞ்சொல்
மங்கை மற்றிவ ணங்குலக் கொழுந்து
கணங்குழை யவரொடும் வணங்கின ணிற்பச்
சோர்ந்தது மேகலை நெகிழ்ந்தன தோள்வளை
சாந்தமுங் கரிந்தது தாளமுந் தீந்தன
விவ்வா றுயின ளிவளே செவ்விதி
னும்பற் பூவின் முல்லையு முகைத்தில
விளையோள் சாலவு மம்ம
முதியோள் போதுங் காம நோய்க்கே.

இது ஒன்பதடி நேரிசையாசிரியச்சுரிதகம்.

இது தாழிசைக்கும் தனிச்சொற்கும் இடையே நால்வகை யம்போதரங்கமும் பெற்று வருதலின் அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா. இதனது முதற்கண் பேதைமீர் பேதைமீர் என அடிகூறுய் வந்தவாறு காண்க.

"பேதைமீர்.....................போதுங்கால்."

(இ - ள்) பேதைமீர் பேதைமீர் - பேதைப்பருவமுடைய பெண்களே -, பூ மன்னு திசைமுகனும் - தாமரைப் புஷ்பத்தில் வீற்றிருக்கின்ற பிரமதேவனும், புயல் வண்ணப் பண்ணவனும் - மேகம் போன்ற நிறத்தையுடைய திருமாலும், கா மன்னு புரந்தரனும் - கற்பகச் சோலையினிடத்து வசிக்கின்ற இந்திரனும், கடவுளரும் - மற்றைத் தேவர்களும், புடை நெருங்க - பக்கத்தில் நெருங்கிவர, இரு கோட்டுக்கு இடைந்த - இரண்டு தனங்களுக்கு வருந்திய, இடுகு இடையவர் - மிகச் சுருங்கிய இடையினையுடைய பெண்கள், பல்லாண்டு இசைப்ப - பல்லாண்டு பாட, ஒரு கோட்டு மழகளிறும் - ஒரு கொம்பினையுடைய இளைய யானைமுகப்பெருமானும், இளங்கோவும் - இளம்பிள்ளையாகிய முருகப்பெருமானும், உடன்போத - தன்னுடன்வர, அம் பொன் மணி மதில் தில்லை நடராசன் - அழகிய பொன்னுற் செய்யப்பெற்ற சிறந்த மதில்சூழ்ந்துள்ள சிதம்பரத்தின்கண் எழுந்தருளியுள்ள நடராசப்பெருமான், அணி மறுகில் - அழகிய வீதியினிடத்து, செம்பொன் மணி பொலம் திண்தேர் - சிவந்த பொன்னுலும் மணியாலும் செய்யப்பெற்ற அழகிய வலிய இரதத்தின்மேல், திருவுலா போதுங்கால் - பவனி வருங்காலத்தில்;

தோழி இறைவன் பவனிகண்டு வருந்தல். பூ ஈண்டு தாமரையை யுணர்த்திற்று "பூவெனப்படுவது பொறிவாழ் பூவே" என்பதால் அறிக. மாதர் பல்லாண்டு பாடல் பண்டைய மரபு. கடவுளர் என்றது முப்பத்துமுக் கோடி தேவரையும். திசைமுகன் நான்கு திக்குகளையும் நோக்கிய நான்கு முகங்களையுடையவன். புரந்தரன் பகைவர் ஊர்களை அழிப்பவன். வாரி திருப்பாற்கடல். இருகோடு கோடு உவமையாகுபெயர். போதல் என்பது ஈண்டு வருகையை உணர்த்திற்று. பொன் என்பது பொலன் என்றாயிற்று "பொன்னென் கிளவி யீறுகெடமுறையின் முன்னர்த் தோன்றும் லகாரமகாரம்" (தொல் புள்ளிமயங்கியல்.)

"பாரித்த ......................சிலமாதர்."

பாரித்த பேர் அண்டம் சிறு பண்டி கொள பெய்து - பரவிய பெரிய அண்டத்தைச் சிறிய வயிற்றிற் கொள்ளுமாறு அடைத்து, வாரி தண் புனல் துஞ்சும் - சமுத்திரத்தினது குளிர்ந்த நீரில் தூங்கும், மாலுக்கும் மால் செய்வீர் - திருமாலுக்கும் மயக்கத்தைச் செய்பவரே, நும் புயம் - உமது புயம், வேரி தண் குழலார் கை வளை கொள்ள விழைந்தேயோ - தேனொழுகும் குளிர்ந்த கூந்தலையுடைய பெண்களினது வளையல்களை அபகரிக்க விரும்பியோ, பூரித்து வீங்குவ - பூரித்து வளர்கின்றன, என்பார் சில மாதர் - என்று சொல்வார் சில பெண்கள் ;

சொல்மாலை தொடுத்து அணிந்த - சொல்மாலையைக் கோத்துச் சாத்திய, தொண்டர்க்கு துணைவராய் - சுந்தரமூர்த்தி நாயனருக்குத் தோழராய் இருந்து, நல் மாலை குழலியர்பால் - சிறந்த மாலையை அணிந்துள்ள கூந்தலையுடைய நாச்சியார்களிடம், நள் இருளில் செலவல்லீர் - நடுயாமத்தில் போக வல்லவரே, பகை கொள்ளும் - விரோதங்கொண்டுள்ள, வில் மாரன் உயிர் கொண்ட விழிக்கு - கரும்பு வில்லைத் தாங்கிய மன்மதனது உயிரைக் குடித்த நெற்றிக்கண்ணுக்கு, பல் மாதர் உயிர் கொள்ளல் - பல பெண்களின் உயிரைக் கொள்ளை கொள்ளுவது, பழி அன்றே - பழி அல்லவா, என்பார் சிலமாதர் - என்று சொல்வார்கள் சில பெண்கள் ;

அம் கமலன் முடை தலையே - அழகிய தாமரை மலரில் வசிக்கின்ற பிரமதேவனது முடைநாற்றம் நாறும் மண்டையோட்டையே, பலி கலனா - பிச்சைப் பாத்திரமாகக்கொண்டு, ஐயம் இடும் - பிக்ஷை போடுகின்ற, மங்கையர்கள் நலம் கவர்வான் - பெண்களின் அழகைக் கவரும் பொருட்டு, பலிக்கு உழலும் மாதவத்தீர் - பிச்சைக்காகத் திரியும் மேலான தவத்தையுடைய கடவுளே, தலை அன்பின் நங்கையர்தம் புரம் - சிறந்த அன்பினையுடைய பெண்களது சரீரம், உமது நகைக்கு - உமது புன்முறுவலுக்கு, தங்கலர் தங்கிய - பகைவர்கள் தங்கியுள்ள, மும்மை புரம் அன்றே - திரிபுரம் ஆகும் அல்லவா, என்பார் சிலமாதர் - என்று சொல்லுவார்கள் சில மாதர் ;

மாலுக்கும் மால் செய்வீர் என்றார் திருமால் சத்தியாதல் பற்றியும் மோகினியாதல் பற்றியும் சொன்மாலை ஈண்டுத் தேவாரம். தங்கலர் அசுரர். விழைந்தேயோ ஓ ஐயம், காமமிக்க மகளிர்க்கு உடல் மெலிதலான் வளை

கழலுதல் இயல்பு. தலையன்பு - தலைவன்பெயரைக் கேட்ட மாத்திரத்தில் உண்டாகும் அன்பு. வீங்குவ அஃறிணைப்பலவின்பால் வினைமுற்று. புயம் பால்பகாஅஃறிணைப்பெயர். நள்ளிருள் நள்ளென்னும் ஒலிக்குறிப்பினை யுடைய நடுநிசி. மங்கையர் தாருகாவனத்து முனிவர் பன்னியர். கவர்வான் - வான் ஈற்று வினையெச்சம். கலன் உழலும் என்க.

"அருங்கலை...........புகழ்வார் சிலர்."

அரும் கலை கவர்ந்து - பெறுதற்கரிய எங்கள் ஆடையைக் கைக் கொண்டு, நீர் அளிக்கப்பெற்ற - உம்மால் கொடுக்கப்பட்ட, நும் இரும்கலை - உமது பெரிய திக்காகிய ஆடை, எமக்கு இனிது என்பர் - திகம்பரிகளாகி விட்ட எங்களுக்கு இனிதாகும் என்று சொல்வார், ஓர் சிலர் - ஒப்பற்ற சில மாதர்;

நல் நிறம் கவர்ந்து - எங்களுடைய நல்ல நிறத்தினைக் கவர்ந்து கொண்டு, நீர் நல்கப்பெற்ற - உம்மால் அளிக்கப்பெற்ற, நும் பொன்னிறம் - உமது பொன்னின் நிறம், இனிது என புகல்வர் - நல்லது என்று சொல்லு வார்கள், ஓர் சிலர் - ஒப்பற்ற சில பெண்கள்;

சிற்சிலர் - சிலமாதர், தேரினை நோக்கி திரிவர் - தேரைப் பார்த் துக்கொண்டு அலைவார், சிற்சிலர்—, எரினைநோக்கி எழுவர் - அழகினைப் பார்த்துக்கொண்டு புறப்படுவார், சிற்சிலர்—, தாரினை நோக்கி தளர்வர் - மாலையைப்பார்த்து வருந்துவார், சிற்சிலர்—, மாரினைநோக்கி மருள்வர் - மார்பினைப் பார்த்துக்கொண்டு மயங்குவார்;

சிலர் - சிலமாதர், நலன் அழிந்து நிற்பார் - கற்பழிந்து நிற்பார், சிலர்—, நாண் துறந்து நிற்பார் - வெட்கத்தைவிடுத்து நிற்பார், சிலர்—, கலன் அழிந்து நிற்பார் - ஆபரணமிழந்து நிற்பார், சிலர்—, கண் கலுழ்ந்து நிற்பார்—கண்களில் நீர் பெருகும்படி வருந்தி நிற்பார்; சிலர்—, பாடுவார்—பாடுவார், சிலர்—, ஆடுவார் - ஆடுவார், சிலர்—, பரவுவார் - துதிப்பார், சிலர்—, விரவுவார் - கலந்து நிற்பார், சிலர்—, வாடுவார் - வாட்ட மடைவார், சிலர்—, ஓடுவார் - ஓடுவார், சிலர்—, மகிழ்வார் - மகிழ்ச்சி யடைவார், சிலர்—, புகழுவார் - புகழுவார்;

பொன்னிறம் தேமல். ஓர்சிலர் ஒருசிலர் ஒருமை ஈண்டு எண் ணுப்பெயர் அன்று, குணப்பண்புப்பெயர். மார் மார்பு என்பதன் மரூஉ.

ஆங்கு ஒருசார் - அவ்விடத்து ஒருபக்கத்தில்,

முதிரா இளமுலை அம் தீம் மழலை சொல்மங்கை - முதிர்ச்சி பெறாத இளநகிலையும் அழகிய இனிய மழலைச்சொல்லையுமுடைய மங்கைப் பருவம் வாய்ந்தவளும், நம் குல கொழுந்து இவள் - நம் குலத்திற்குக் கொழுந்து போன்றவளும் ஆகிய இப்பெண், கணங்குழையவரொடும் - கூட்டமாகிய குழையை அணிந்த பெண்களோடும், வணங்கினள் நிற்ப - வணங்கினளாய் நிற்கும் போது, மேகலை சோர்ந்தது - இடையில் அணிந் துள்ள மேகலை நழுவியது, தோள்வளை நெகிழ்ந்தன - தோள்வளைகள் நழு

வின, சாந்தமும் பொரிந்தது - மார்பில் அணிந்துள்ள சந்தனமும் கரு நிறத்தை அடைந்தது, தாளமும் தீந்தன - முத்துமாலைகளும் தீய்ந்து போயின, இவ்வாறு ஆயினள் - இவ்விதமான மாறுபாட்டை அடைந்தாள்; (ஆதலால்) இவள் - இப்பெண், செவ்விதின் - செம்மையாக, ஆம்பல் பூவில் - அல்லி மலர் போன்ற வாயின்கண், முல்லையும் முகைத்தில - முல்லைப் பூப்போன்ற பற்களும் தோன்றவில்லை, சாலவும் இளையோள் - மிகவும் இளமைப்பருவம் வாய்ந்தவள், காமநோய்க்கு முதியோள் போலும் - காமப் பிணிக்கு முதியவளாய் இருக்கின்றாள் போலும்; (எ - று.)

"முதிரா..................நோய்க்கே."

இவள் இவ்வாறாயினள் ஆதலால் இவள் முதியோள் போலு மென்க. குலக்கொழுந்து ஏழாம்வேற்றுமைத் தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. வணங்கினள் முற்றெச்சம். வளை - கடகம். ஆம் பல், முல்லை உவமையாகுபெயர். அம்ம என்னும் இடைச்சொல் கேட்பித் தற் பொருளில் வந்தது. மற்று அசை. இது கடவுண்மாட்டு மானுடப்பெண் டிர்நயந்த பக்கம், பாடாண் கைக்கிளை. (ருஅ)

தொல்லுலகம் படுசுடிகைச் சுடருமணி விளக்கேந்தும்
பல்பொறிய படவரவு மடுபுலியும் பணிசெய்ய
வந்தாதுந் துபிமுழங்க வமரர்மலர் மழைசிந்த
விந்திரனு மலரவனுங் கரியவனு மேத்தெடுப்பச்
சூடகத் தளிர்ச்செங்கைத் துணைவிதுணைக் கண்களிப்ப
வாடகத் திருமன்றத் தனவரத நடஞ்செய்வோய்.

இது ஆறடித்தரவு.

முன்மலையுங் கொலைமடங்க லீருரியு மும்மதத்த
வன்மலையுங் கடமலையின் முடையுடலின் வன்றோலும்
பொன்மலையின் வெண்முகிலுங் கருமுகிலும் போர்த்தென்ன
வின்மலையும் புயமலையின் புறமலைய விசித்தனையே.

கடனாக மெட்டும்விடங் காணுக மோரெட்டுந்
தடனாக மவையெட்டுந் தரித்துளபூந் துகிலொன்று
முடனாக வடல்புரியுங் கொடுவரியி னுடுப்பொன்று
மடனாக வரவல்குற் கணிகலையா வசைத்தனையே.

வருநீலப் புயன்மலர மலரிதழிக் கண்ணியையு
மருநீல முயற்களங்க மகன்றமதிக் கண்ணியையுங்
கருநீலக் கண்ணியுமை செங்கைவரு கங்கையெனுந்
திருநீலக் கண்ணியையுஞ் செஞ்சடைமேற் செறித்தனையே.

இவைமூன்றும் நான்கடித்தாழிசை.

கறைவிட முகவெரி கனல்விழி யொடுமிளிர்
பிறையெயி றொடுமிடல் பெறுபக டொடுமட

லெறுழ்வலி யொடுமுரு மிடியென வருமொரு
மறலிய துயிர்கொள மலர்தரு கழலினை.

உலகமொ டுயிர்களு முலைதர வலம்வரு
மலர்மகள் கொழுநனு மகபதி முதலிய
புலவரு மடிகளொர் புகலென முறையிட
வலைகடல் விடமுன மமுதுசெய் தருளினை.

விசையிலெம் மிறைவியும் வெருவர விரசத
வசலம தசைதர வடல்புரி தசமுக
நிசிசரன் மணிமுடி நெறுநெறு நெறுவென
வசையில்பொன் மலரடி மணிவிர னிறுவினை.

இலவிதழ் மதிநுத லிரதியொ டிரதம
துலைவற நடவிடு மொருவனும் வெருவர
வலைகட னெடுமுர சதிர்தர வெதிர்தரு
சிலைமத னணையடல் செயுநுதல் விழியினை.

இவைநான்கும் நான்கடியராகம்.

அருவமு முருவமு மாகி நின்றுமவ்
வருவமு முருவமு மகன்று நின்றனை.

சொல்லொடு பொருளுமாய்த் தோன்றி நின்றுமச்
சொல்லையும் பொருளையுந் துறந்து நின்றனை.

இவையிரண்டும் நாற்சீரடியம்போதரங்கம். பேரெண்.

அங்நலம் விழைந்தவர்க் கறமு மாயினை.
பொன்னலம் விழைந்தவர் பொருளு மாயினை.
இன்னலம் விழைந்தவர்க் கின்பு மாயினை.
மெய்ந்நலம் விழைந்தவர் வீடு மாயினை.

இவைநான்கும் நாற்சீரோரடியம்போதரங்கம் அளவெண்.

முத்தொழிலின் வினைமுத னீ. மூவர்க்கு முழுமுத னீ.
எத்தொழிலு மிறந்தோய் நீ. இறவாத தொழிலினை நீ.
இருவிசும்பின் மேயோய் நீ. எழின்மலரின் மிசையோய் நீ.
அரவணையிற் றுயின்றோய் நீ. ஆலின்கீ ழமர்ந்தோய் நீ.

இவையெட்டும் முச்சீரோரடியம்போதரங்கம். இடையெண்.

பெரியை நீ, சிறியை நீ. பெண்ணு நீ. ஆணு நீ.
அரியை நீ, எளியை நீ. அறமு நீ, மறமு நீ.

விண்ணு நீ, மண்ணு நீ, வித்து நீ, விளைவு நீ,
பண்ணு நீ, பயனு நீ, பகையு நீ, உறவு நீ.

இவைபதினாறும் இருசீரோரடியம்போதரங்கம், சிற்றெண்.

எனவாங்கு, இது தனிச்சொல்.

கற்பனை கழன்றநின் பொற்கழ லிறைஞ்சுதும்
வெண்மதிக் கடவுண் மீமிசைத் தவழ்தரத்
தண்முகிற் குலங்க டாழ்வுறப் படிதவிற்
செங்கா லன்னமும் வெண்மருப் பேனமுங்
கீழ்மே றுருவ வாரழற் பிழம்பாய்
நின்றநின் றன்மையை யுணர்த்தும்
பொன்றிகழ் புலியூர் மன்றுகிழ வோனே.

இது எழடி நேரிசையாசிரியச்சுரிதகம்.

இது தாழிசைக்கும் அம்போதரங்கத்திற்கும் இடையே அராக வுறுப்புப்பெற்றுக் கலியுறுப்பாறுங் குறைவின்றிவந்தமையால் வண்ணக வொத்தாழிசைக்கலிப்பா. இவ்வண்ணக வொத்தாழிசைக்கலிப்பாவிற்கும், அம்போதரங்கவொத்தாழிசைக் கலிப்பாவிற்கும், சிறுமைபெருமையின்றி ஆறடித்தரவே வந்தவாறுகாண்க.

"தொல்லுலகம்..................நடஞ்செய்வோய்."

(இ - ள்) தொல் உலகம் படு - பழைமையாகிய இப்பூவுலகம் தங்காநின்ற, சுடரும் மணி விளக்கு சுடிகை ஏந்தும் - பிரகாசிக்கின்ற இரத்தினமாகிய விளக்கை உச்சியில் தாங்கியுள்ள, பல் பொறிய பட அரவும் - பலவாகிய புள்ளிகள் நிறைந்த படத்தினையுடைய (பதஞ்சலியாகிய) பாம்பும், அடு புலியும் - கொல்லும் (வியாக்கிரபாதராகிய) புலியும், பணிசெய்ய - வணங்க, அந்தர துந்துபி முழங்க - ஆகாய தேவதுந்துபி ஒலிக்க, அமரர் மலர்மழை சிந்த - தேவர்கள் புஷ்பமாரி பொழிய, இந்திரனும் மலரவனும் கரியவனும் ஏத்தெடுப்ப - அமரர்கோனும் அயனும் அரியும் துதிக்க, சூடகம் தளிர் செங்கை துணைவி துணைகண் களிப்ப - வளையலை அணிந்த துளிர்போன்ற சிவந்தகரங்களையுடைய உமாதேவியினது இரண்டு கண்களும் ஆனந்தமடைய, ஆடகம் திரு மன்றத்து - பொன்னனைமைந்த அழகிய சபையின்கண், அனவரதம் நடம் செய்வோய் - சதாகாலமும் திருநடனம் செய்கின்றவனே;

பணிசெய்ய சிந்த ஏத்தெடுப்ப களிப்ப நடஞ்செய்வோய் என்றியைக்க. படு ஏந்தும் பொறிய படம் என்க. தளிர் மென்மைத் தன்மையால் செங்கைக்கு உவமையாயிற்று, வண்ணவுவமை. துணை ஈண்டு இரண்டென்னும் பொருளில் நின்றது. அந்தர துந்துபி வாத்திய விசேடம். பொறி என்பதனைப் புலிக்குங் கூட்டுக. அடுபுலி ஜாதியடை. பொறிய குறிப்புப் பெயரெச்சம். பணி ஏத்து முதனிலைத் தொழிற்பெயர்.

"முன்மலை..................செறித்தனை."

முன் மலையும் கொலை மடங்கல் ஈர் உரியும் - எதிர்நின்று போர் புரியும் கொல்லும் தன்மைவாய்ந்த புலியின் கிழித்த தோலையும், மும்மதத்த வல்மலையும் கடம் மலையின் முடை உடலின் வன்தோலும் - மூன்று மதத்தையுடைய இருளை ஒக்கும் மதயானையினது முடைநாற்றம் வீசும் உடலின் வலிய தோலையும், பொன்மலையில் வெண்முகிலும் கருமுகிலும் போர்த்தென்ன - மகாமேருமலையில் வெள்ளிய மேகமும் கரிய மேகமும் போர்த்திச் சுமந்ததுபோல், வில்மலையும் புயமலையின்புறம் - வில்லோடு பொருந்திய புயமாகிய மலையின் பின்புறம், அலைய விசித்தனை - அசையுமாறு கட்டினாய்;

கடம் நாகம் எட்டும் - மதநீரையுடைய திக்குயானைகள் எட்டும், விடம் கால் நாகம் ஓர் எட்டும் - விடத்தைக் கக்கும் பாம்பு ஓர் எட்டும், தடம் நாகம் அவை எட்டும் - விசாலமாகிய மலைகளெட்டும், தரித்து உள பூம் துகில் ஒன்றும் - அணிந்துள்ள அழகிய (திக்காகிய) ஆடை ஒன்றும், அடல்புரியும் - ஒன்றுகக் கொலைசெய்கின்ற, கொடு வரியின் உடுப்பு ஒன்றும் - புலியின் உடைஒன்றும், அடல் நாகம் அரவு அல்குற்கு - வலிய நாகப்பாம்பையுடைய இடைக்கு, அணி கலையா உடனுக அசைத்தனை - அழகிய வஸ்திரமாக ஒருசேர அணிந்தாய்;

வரு நீல புயல் மலர மலர் இதழி கண்ணியையும் - ஆகாயத்தில் வருகின்ற நீலநிறமான மேகம்பரவ மலர்கின்ற கொன்றை மாலையையும், மரு நீல முயல் களங்கம் அகன்ற மதி கண்ணியையும் - பொருந்திய நீல நிறமுள்ள முயல்களங்கம் நீங்கிய பிறைக்கண்ணியையும், கரு நீல கண்ணி - கரிய நீலக்கண்ணியாகிய, உமை செங்கை வரு கங்கை எனும் - உமாதேவியினது சிவந்த கரத்தினின்று வருகின்ற கங்கை என்று சொல்லும், திரு நீல கண்ணியையும் - அழகிய நீலோற்பலம் போன்ற கண்ணையுடைய வளையும், செஞ்சடைமேல் செறித்தனை - செம்மைநிறம் வாய்ந்த சடாபாரத்தின்மேல் அணிந்தாய்;

கடமலை - மதத்தையுடைய மலை; யானை யென்னும் பொருளளவாய் நின்றது. மும்மதங்களாவன கன்னமதம், கபோலமதம், பீஜமதம் என்பன. மதத்த குறிப்புவினைப் பெயரெச்சம். உரி தொழிலாகுபெயர். வில் ஒளிஎனவும் கொள்க. வில் மலையும் என்பதற்கு வில்லால் பொருகின்ற எனக் கொள்ளினும் அமையும். நாகவரவு - நாகப்பாம்புமாம். பொன்மலையின் ஏழாம் வேற்றுமைக்கண் இன்னுருபு நிலையாது வந்தது அல்குல் ஈண்டு இடை. வில்மலையும்புயம்எனறது நாணேற்றுதலையுணர்த்திற்று. புறம் - முதுகு. (கருமுகில் - உலகிலுள்ள சராசரமனைத்தும் கருவுயிர்க்கக் காரணமாயுள்ள முகிலெனினுமாம்.) அவை பகுதிப் பொருள் விகுதி. கொடுவரி காரணப்பெயர். நீலக்கண்ணி நீலாயதாக்ஷி என்னும் இறைவியின் ஓர் திருநாமம். கார்காலத்திற் கொன்றை மலர்தலின் புயல் மலர மலரிதழி என்றார்.

"கறைவிடம்................விழியினை."

கறை விடம் உக - குற்றம் பொருந்திய விஷம் சிந்த, எரி கனல் விழியொடும் - எரியும் நெருப்பைக் காலுகின்ற கண்களோடும், மிளிர் பிறை எயிருெடும் - விளங்குகின்ற பிறைச்சந்திரனை ஒத்த பற்களோடும், மிடல் பெறு பகடொடும் - வலிமை பெற்றுள்ள எருமைக்கடாவோடும், அடல் எறுழ் வலியொடும் - கொல்லத்தக்க மிகுந்த வலிமையோடும், உரும் இடி என - ஆண் இடி என்று சொல்லுமாறு, வரும் - வருகின்ற, ஒரு மறலியது உயிர்கொள - ஒரு இயமனது உயிரைக்கொள்ள, மலர்தரு கழலினை - விளங்குகின்ற திருவடியினையுடையாய் ;

உலகமொடு உயிர்களும் உலைதர - உலகமும் அதன்கண்ணுள்ள ஜீவராசிகளும் வருந்த, அலம்வரு - வருத்தமுற்ற, மலர்மகள் கொழுநனும் - இலக்குமி நாயகனும், மகபதி முதலிய புலவரும் - இந்திரன் முதலான தேவரும், அடிகள் - கடவுளே, ஓர் புகல் என - எங்களுக்கு ஒப்பற்ற புகலிடம் ஆவீர் என்று, முறையிட - முறையிட்டுக்கொள்ள, அலைகடல்விடம் - அலைகளையுடைய கடல் விடத்தை, முனம் - முன்பு, அமுது செய்துஅருளினை - உண்டருளினுய் ;

எம் இறைவியும் - எமது உமாபிராட்டியாரும், வெருவா - அஞ்ச, இரசத அசலமது அசைதர - வெள்ளிமலைஅசைய, அடல்புரி தசமுக நிசிசரன் மணிமுடி நெறு நெறு நெறு வென - போர்செய்யும் பத்துமுகங்களையுடைய அரக்கனுகிய இராவணனது அழகிய கிரீடம் நெறுநெறு வென்று நொருங்க, வசை இல் பொன் மலர் அடி - குற்றமில்லாத பொற்றாமரை மலர்போன்ற பாதத்திலுள்ள, மணிவிரல் விசையில் நிறுவினை - அழகிய விரலினை வேகமாக ஊன்றினுய் ;

இலவு இதழ் மதி நுதல் இரதியொடு - முருக்கம் பூப்போன்ற உதட்டினையும் சந்திரன் போன்ற நெற்றியினையுமுடைய இரதிதேவியும், இரதமது உலவு அற நடவிடும் ஒருவனும் - தேரினை வருத்தமில்லாமற் செலுத்தும் வசந்தனும், வெருவா - அஞ்ச, அலைகடல் நெடுமுரசு அதிர்தா - அலைகடலாகிய நீண்ட முரசவாத்தியம் ஒலிக்க, எதிர்தரு சிலை மதனனை - எதிர்த்துவந்த கரும்பு வில்லையுடைய மன்மதனை, அடல் செயும் நுதல் விழியினை - கொல்லும் நெற்றிக்கண்ணையுடையாய்;

விழியொடும் எயிருெடும் பகடொடும் வலியொடும் வரும் மறலி என்க. கறை - கறுப்பு எனினுமாம். உருமிடி எறுழ்வலி ஒருபொருட்பன்மொழி. மறலியது அது பகுதிப்பொருள்விகுதி. பகடொடு சந்த இன்பம் நோக்கி இரட்டாமல் நின்றது. மகபதி - யாகங்களுக்குத் தலைவன். புலவர் தேவர். நிசிசரன் இரவில் சஞ்சரிப்பவன். அடிகள் அண்மை விளி. நெறுநெறு ஒலிக்குறிப்பு. வசையில்பொன்மலரடிஎன்றுர் தசமுகனை வெருட்டிப் பின் ஆட்கொள்ளும் தகைமைநோக்கி. இரதியொடு ஒடு எண்ணும்மை. இரதம் - தென்றலாகிய தேர்.

"அருவமும்.................உறவுநீ."

அருவமும் உருவமும் ஆகி நின்றும் - வடிவமின்மையும் வடிவமுண்மையுமாக இருந்தும், அ அருவமும் உருவமும் அகன்று நின்றனை - அந்த வடிவின்மையையும் வடிவுண்மையையும் விட்டு நின்றுய்;

சொல்லொடு பொருளுமாய்த் தோன்றி நின்றும் - சொல்லாகவும் சொற்பொருளாகவும் விளங்கியிருந்தும், அ சொல்லையும் பொருளையும் துறந்து நின்றனை - அச்சொல்லையும் சொற்பொருளையும் கடந்து நின்றாய்.

அ நலம் விழைந்தவர்க்கு அறமும் ஆயினை - அந்த மேலான நன்மையை விரும்பியவர்களுக்குத் தருமமும் ஆயினாய், பொன் நலம் விழைந்தவர் பொருளும் ஆயினை - பொன்னின் நன்மையை விரும்பியவர்களுக்குப் பொருளும் ஆயினாய், இல் நலம் விழைந்தவர்க்கு இன்பும் ஆயினை - இனிய சுகத்தை விரும்பியவர்களுக்குக் காமமும் ஆயினாய், மெய் நலம் விழைந்தவர் வீடும் ஆயினை - உண்மையான மார்க்கத்தை விரும்பியவர்களுக்கு மோக்ஷமும் ஆயினாய்;

முத்தொழிலின் வினைமுதல் நீ - மூன்று தொழில்களின் கர்த்தாவும் நீ, மூவர்க்கும் முழுமுதல் நீ - மூவர்க்கும் முழுமுதற்கடவுள் நீ, எத்தொழிலும் இறந்தோய் நீ - எல்லாத் தொழில்களையும் கடந்து நிற்பவனும் நீ, இறவாத தொழிலினை நீ - இறவாத தொழிலினை உடையவனும் நீ, இரு விசும்பின் மேயோய் நீ - பெரிய விண்ணுலகத்திலுள்ள இந்திரனும் நீ, எழில் மலரின் மிசையோய் நீ - அழகிய தாமரை மலரின்கண் வீற்றிருக்கும் பிரமாவும் நீ, அரவு அணையில் துயின்றோய் நீ - சேஷசயனத்தில் அரிதுயில் கொள்ளும் திருமாலும் நீ, ஆலின்கீழ் அமர்ந்தோய் நீ - கல்லால விருக்ஷத்தின்கீழ்த் தங்கியுள்ள பரமாசாரியனும் நீ;

பெரியை நீ - மகத்துக்கும் மகத்தானவன் நீ, சிறியை நீ - அணுவுக்கும் அணுவானவன் நீ, பெண்ணும் நீ ஆணும் நீ - பெண்ணாகவும் ஆணாகவும் இருப்பவனும் நீ, அரியை நீ எளியை நீ - ஒருவராலும் காண்டற்கரியவனும் காண்டற்கெளியவனும் நீ, அறமும் நீ மறமும் நீ - புண்ணியமும் பாவமும் நீ, விண்ணும் நீ மண்ணும் நீ - ஆகாயமும் பூமியும் நீ, வித்தும் நீ விளைவும் நீ - விதையும் விளையும் பொருளும் நீ, பண்ணும் நீ பயனும் நீ - இசையும் இசையின் பயனும் நீ, பகையும் நீ உறவும் நீ - விரோதமும் அவிரோதமும் நீ;

இல் நலம் - இல்லறத்தின் இன்பம். முத்தொழில் - படைத்தல் காத்தல் அழித்தல். மூவர் - பிரம விஷ்ணு ருத்திரர். ஆலின்கீழ் அமர்ந்தோய் என்பது சனகாதியர்க்கருள்புரிந்த தக்ஷிணாமூர்த்தியை; முன் திங்கட்சடையீரென்றதுபோல உருத்திரமூர்த்தியைக் குறிப்பதுமாம். விண் தேவலோகமுமாம். மேயோய் வி தொகுத்தல்.

"கற்பனை..................கிழவோனே."

வெண் மதி கடவுள் மீமிசை தவழ்தா - வெண்மைநிறமான சந்திரன் மேலிடத்தில் தவழ, தண் முகில் குலங்கள் தாழ்வுற படிதலில் - குளிர்ந்த மேகக் கூட்டங்கள் தாழ்ந்து படிந்திருப்பதால், செங்கால் அன்னமும் - செந்நிறமான கால்களையுடைய அன்னப்பறவையும், வெண் மருப்பு ஏனமும் - வெள்ளிய கொம்புகளையுடைய பன்றியும், கீழ் மேல் துருவ - கீழும் மேலும் தேட, ஆர் அழல் பிழம்பாய் நின்ற - நிறைந்த அக்கினிப் பிழம்பாய் விளங்கிய, நின் தன்மையை உணர்த்தும் - உம்முடைய சொரூ

பத்தன்மையைக் காட்டுகின்ற, பொன் திகழ் புலியூர் மன்று கிழவோனே - பொன்னாற் செய்து விளங்கும் தில்லையம்பலத்திற்குரிய கடவுளே, கற்பனை கழன்ற நின் பொன் கழல் இறைஞ்சுதும் - புனைந்துரைக்கு அப்பாற்பட்ட உனது சிறந்த பாதங்களை வணங்குவாம்; (எ - று.)

சந்திரன் அட்டமூர்த்தங்களில் ஒன்றாதல் கருதி மதிக்கடவுள் என்றார். கீழ்மேல் என்பதனை நிரனிறையாக்கிப் பொருள் கொள்க. கிழமை - உரிமை. கிழவோனே "பெயர்வினையிடத்து" என்ற நன்னூல் சூத்திரத்தின் இலேசால் அகரம் ஒகாரமாயிற்று. மீமிசை - ஒருபொருட் பன்மொழி. அன்னம் ஏனம் முறையே பிரமனையும் விட்டுணுவையும் குறித்தன. (ருசு)

## வெண்கலி.

சேல்செய்த மதர்வேற்கட் சிலைசெய்த சுடிகைநுதன்
மால்செய்த குழற்கோதை மகிழ்செய்ய நடஞ்செய்யுந்
தருணவிளம் பிறைக்கண்ணித் தாழ்சடையெம் பெருமானின்
கருணைபொழி திருநோக்கிற் கனியாத கன்னெஞ்சம்
வாமஞ்சான் மணிக்கொங்கைக் கொசிந்தொல்கு மருங்குலவர்
காமஞ்சால் கடைநோக்கிற் கரைந்துருகா நிற்குமா
லவ்வண்ண மாறிநிற்ப தகமென்றா லகமகம்விட்
டெவ்வண்ண மாறிநிற்ப தின்று.

இது கலித்தளைதட்டுத் துள்ளலோசைத்தாய் வெண்பாவே போல் முடிந்தமையால் வெண்கலிப்பா.

(இ - ள்) சேல் செய்த மதர் வேல்கண் - சேல்மீனை ஒத்த மதர்த்த வேல் போன்ற கண்களையும், சிலை செய்த சுடிகை நுதல்-வில்லை ஒத்த சுட்டி யணிந்த நெற்றியையும், மால் செய்த குழல் கோதை - மேகத்தை ஒத்த கூந்தலையுமுடைய பார்வதிதேவியார், மகிழ் செய்ய - சந்தோஷத்தை யடைய, நடம் செய்யும் - நடனம் செய்கின்ற, தருண இளம் பிறை கண்ணி - புதிய இளைய பிறைமாலையை அணிந்துள்ள, தாழ் சடை எம்பெருமானின் - தாழ்ந்த சடையினையுடைய எமது கடவுளது, கருணை பொழி திருநோக்கில் - கிருபையைப் பொழிகின்ற அழகிய பார்வைக்கு, கனியாத கல் நெஞ்சம்-இளகாத கல்போன்ற வலிய மனம், வாமம்சால் மணி கொங்கைக்கு - அழகுமிக்கஆபரணங்களை அணிந்த தனங்களுக்கு, ஒசிந்து ஒல்கும் - தளர்ந்து வருந்தும், மருங்குலவர் - இடையினையுடைய பெண்களது, காமம் சால் கடை நோக்கில் கரைந்து உருகாநிற்கும் - காமம் நிறைந்த கடைக் கண் பார்வையைக்கண்டு கசிந்து உருகும், அவ்வண்ணம் மாறி நிற்பது அகம் என்றால் - அவ்வாறு மாறி நிற்குந்தன்மையது மனம் என்று சொன்னால், அகம் அகம்விட்டு - மனமானது அகந்தையை விட்டுவிட்டு, இன்று ஆறிநிற்பது எவ்வண்ணம் - இன்று ஆறுதலடைந்திருப்பதென்பது எவ்வாறு ;(எ - று.)

நெஞ்சம் உருகாநிற்கும் என்க. மால் - மேகம். செய்த மூன்றும் உவமஉருபுகள். மாறிநிற்பது - கனிய வேண்டுமிடத்துக்கனியாது கரைந்து உருகவேண்டாவிடத்துக்கரைந்துருகி நிற்றல். ஆறிநிற்பது - சலனமின்றி மனதைத் தன்வயப்படுத்தல். மகிழ் முதனிலைத்தொழிற்பெயர். நோக்கின் நான்காம் வேற்றுமையுருபு வரும்வழி இன்சாரியை நிலையாமை வந்தது. சேல் வடிவுபற்றியும் தொழில்பற்றியும் கண்ணிற்குவமையாயிற்று. சேல் செய்தகண் எனக்கூட்டுக. உருகாநிற்கும் உருகிநிற்குமென இருசொல் லாக்கிப் பொருள் உரைக்கினும் அமையும். எம்பெருமான் நின் - எம்பெரு மானே உமது எனப்பிரித்துப் பொருள்கொள்ளினுமாம். (௯௰)

அற்புத மணிமன்றி லடிகணின் னடியுன்னார்
மைக்கடல் விடமென்னும் வடவைத்தீ யெழவஞ்சி
நொஎன வடிவீழ்ந்தார்க் குதவிலர் நாணார்கொல்
கைத்தல வபயத்தர் வரதத்தர் கைசெய்யாச்
சித்திர மன்ன சிலர்.

இது பிறதளை விரவி வந்த வெண்கலிப்பா. இதனுள் நொ எனக் குற்றெழுத்து விட்டிசைத்தவழித் தனியேநின்று முதற்கண் நேரசை யாயிற்று. அவ்விட்டிசை வல்லொற்றோ டொத்து எதுகையாய் நடத்தலின் இது விட்டிசை வல்லொற்றெதுகை.

(இ - ள்) கை தல அபயத்தர் வரதத்தர் - கையை அபயங்கொடுக் குந் தன்மையிலும் வரங்கொடுக்குந் தன்மையிலும் வைத்துள்ளவராகிய, கை செய்யா சித்திரம் அன்ன சிலர் - கையினாற்செய்து அலங்கரிக்கப்படாத ஓவியத்தை ஒத்த சிலர், அற்புத மணி மன்றில் - கண்டார் அதிசயிக்கும் அழகிய பொற்சபையிற்றாண்டவமாடுகின்ற, அடிகள் - கடவுளே, நின் அடி உன்னார் - உமதுதிருவடியைக் கருதாதவர்களாய், மை கடல் விடம் என்னும் - கரிய சமுத்திரத்துட்டோன்றிய விஷம் என்று சொல்லத்தகுந்த, வடவை தீ எழ அஞ்சி - வடவாமுகாக்கினியானது தோன்ற நடுநடுங்கி, நொ என அடி வீழ்ந்தார்க்கு - துன்பம் வந்ததென்று பாததாமரைகளில் விழுந்து பணிந்தவர்களுக்கு, உதவிலர் - அருள்செய்யாதவராய், நாணார் கொல் - வெட்கமடையாரோ; (எ - று.)

சிலர் அடிவீழ்ந்தாருக்கு உதவிலர் நாணார் என்றியைக்க. வட வைத்தீ - குதிரைமுகம்போன்றுள்ள அக்கினிப்பிழம்பு. சிலர் - திருமால் முதலிய தேவர்கள். இவர்கள் சிவபிரானைப்போல அபய வரத முத்திரை களைத் தாங்குதல் சித்திரம் போலப் பொலிவதன்றிப் பயப்பாடுடையதன் றென்பது ஆலகாலவிடம் எழுந்தகாலத்தின் நிகழ்ச்சிபற்றி யறியப்படும். உன்னார், உதவிலர் எதிர்மறை வினையெச்சம். உன்னார் வீழ்ந்தார் என்க. கைசெய்தல் புனைதல். கொல் வினைப்பொருட்டு. (௯௰௧)

தொடலைக் குறுந்தொடித் தோகாய்நம் பாவை
படலைச் சிறுமுச்சி யுச்சிப் பசுங்கிள்ளை
பேதைக் குழாத்தொடு நென்னற் பொழுதின்கண்
வீதிக்கே நின்று விளையாட் டயருங்கா
லஞ்சனக் கண்ணுளந் தாழ மணிதில்லைச்

செஞ்சடைக் கூத்தனுர் வெள்விடைமேற் சேறலு
முண்ணெக் குருக வெதிர்ப்பட் டுடையானைக்
கண்ணிற் பிணித்து மனத்திற் கொடுபுக்
கிறைவளை சிந்த வணிதுகில் சோரப்
பிறரறியா வண்ணம் புணர்ந்தும் புணராள்போன்
மையுண்கண் ணீர்சோரச் சோர்தலும் வார்குழலார்
கைகோத் தெடுத்துக் கடிமனை கொண்டுய்ப்பப்
பைந்தண் குளிரி படுத்துக் கிடத்தலுஞ்
செந்தீப் பிழம்பிற் கிடத்திச் செருச்செய்வ
தந்தோ கொடிதுகொடி தென்செய்தீ ரன்னைமீர்
பொன்னஞ் சிலையே சிலையாப் புரமெய்தான்
றண்ணென் கடுக்கை கொணர்ந்தாரோ தம்மினென
மின்றந்த நுண்ணிடையா யெங்கோன் விரைத்தொங்க
றன்றந்தை தாளெறிந்தார்க் கன்றித் தராரென்றேற்
கன்றே பகைநோக் களித்தாண்மற் றம்ம
சிறியாள் பெரும்பித் தறிந்திருந்துஞ் செவ்வி
யறியா துரைத்தே னது.

இது செப்பலோசைத்தாய் ஒருபொருணுதலி அவ்வாறு வந்தமையால் கலிவெண்பா.

(இ - ள்) தொடலை குறும் தொடி தோகாய் - தழைமாலையையும் சிறிய வளையையும் அணிந்துள்ள மயில்போலும் சாயலையுடையாளே, நம் பாவை - நமதுபாவைபோல்வாளாகிய, படலை சிறுமுச்சி உச்சி பசும் கிள்ளை - தழைமாலையோடுகூடிய சிறியமயிர்முடியை அணிந்துள்ள உச்சியையுடைய பசிய கிளி போலும் மொழியையுடைய தலைவி, நென்னல் பொழுதின் கண் - நேற்றைய அந்திக்காலத்தில், பேதை குழாத்தொடும் - பேதைப் பருவம் வாய்ந்த சிறுமியர் கூட்டத்தோடும், வீதிக்கே நின்று விளையாட்டு அயரும்கால் - மறுகினிடத்தில் நின்று விளையாடலைச் செய்யும் சமயத்தில், அணி தில்லை செம் சடை கூத்தனுர் - அழகிய சிதம்பரத்தின்கண் உள்ள சிவந்த சடையையுடைய கூத்தப்பிரான், அஞ்சனம் கண்ணுளும் தாமும் - மைபூசப்பெற்ற கண்களையுடைய பார்வதிதேவியாரும் தாமும், வெள்விடை மேல் சேறலும் - வெண்மையான இடபத்தின்மேல் அமர்ந்து உலாவரும் போது, உள்நெக்குஉருக - மனநெகிழ்ந்துருக, எதிர்ப்பட்டு - எதிரில் வந்து, உடையானை - ஆளுடைய நாயகரை, கண்ணில் பிணித்து - கண்களாகிய பாசத்தாற்கட்டி, மனதில் கொடு புக்கு - மனதிற்கொண்டு இல்லத்திற் புகுந்து, இறை வளை சிந்த - முன்கையிற்றங்கியுள்ள வளையல்கள் நழுவ, அணி துகில் சோர - இடையில் அணிந்துள்ளமேகலைகள் கட்டவிழ்ந்து விழ, பிறர் அறியாவண்ணம் புணர்ந்தும் - அயலார் அறிந்துகொள்ளாதவாறு மனத்தாற் கூடியும், புணராள்போல் - கூடாதவளைப்போல், மை உண் கண் நீர் சோர - மைதீட்டியகண்கள் நீரைச்சொரிய, சோர்தலும் - வாட்டம் அடைதலும், வார்குழலார் கை கோத்து எடுத்து கடி மனை கொண்டு உய்ப்ப-

நீண்ட கூந்தலையுடைய பெண்கள் ஒருவரோ டொருவர் தங்கள் கைகளைக் கோத்துத் தூக்கிக்கொண்டு காவலுள்ள இல்லத்திற் கொண்டு சேர்க்க, பைந்தண் குளிரி படுத்து கிடத்தலும் - ஆங்குச்சிலர் பசிய குளிர்ந்த அணையிற் கிடத்திப்படுக்கச்செய்ததும், அன்னைமீர் - தாய்மார்களே, செந்தீ பிழம்பில் கிடத்தி செரு செய்வது அந்தோ கொடிது கொடிது என்செய்தீர்- செந்நிறமான நெருப்பிற் கிடக்கும்படிசெய்து என்னோடு சண்டையிடுவது ஐயோ மிகவும் கொடுமையானதாகும் என்னகாரியம் செய்தீர்கள், பொன் அம் சிலையே சிலையா புரம் எய்தான் தண் என் கடுக்கை கொணர்ந்து ஆரோ தம்மின் என - மேருமலையையே வில்லாகக்கொண்டு திரிபுரத்தை எய்த சிவபிரானணிந்துள்ள குளிர்ந்த கொன்றை மாலையைக் கொண்டுவந்து உங்களில் யாராவது தாருங்கள் என்று சொல்ல, மின் தந்த நுண் இடையாய்- மின்னலைப்போன்ற நுட்பமான இடையையுடைய பெண்ணே, எம் கோன் - எமது தலைவனுகிய சிவபெருமான், விரை தொங்கல் - வாசனையுள்ள மாலையை, தன் தந்தை தாள் எறிந்தார்க்கு அன்றி தாரார் - தம்முடைய பிதாவின் பாதத்தைத் தடிந்தவருக்கன்றி வேறொருவருக்குந்தரமாட்டார், என்றேற்கு - என்று கூறிய எனக்கு, அன்றே பகை நோக்கு அளித்தாள் - அப்பொழுதே விரோதபார்வையைக்கொடுத்தாள், சிறியாள் பெரும் பித்து அறிந்திருந்தும் - சிறியாளது பெரிய மயக்கத்தைத் தெரிந்திருந்தும், அது -அவ்வார்த்தையை, செவ்வி அறியாது உரைத்தேன் - சமயம் தெரியாமற் சொல்லிவிட்டேன்; (எ - று.)

தோகாய் நம்பாவை விளையாட்டயருங்கால் கூத்தனர் சேறலும் உடையானை மனத்திற்கொடுபுக்குச் சோர்தலும் வார்குழலார் கொண்டு உய்ப்பக்கிடத்தலும் அவள் என்செய்தீர் தம்மின் என தாரார் என்றேற்கு நோக்கு அளித்தாள் அது அறியாது உரைத்தேன் எனச் சொன் முடிபு கொள்க.

இறைவன் பவனிவருதலைக்கண்ட தலைவியின் ஆற்ருமை கருதித்தோழி இரங்கியது. இதுவும் இதன் பின்னர்ச்சிலகவிகளும் பாடாண் டிணையில் கடவுண்மாட்டு மானுடப்பெண்டிர் நயந்த பக்கம்; உலாவருங் கால் கூறிய கவி பாடாண்டிணைக் கைக்கிளையைச் சார்ந்தது. தொடலை - விளையாட்டெனினுமாம். தாளெறிந்தார் சண்டேசுரநாயனர். குளிரி - பூ தளிர் இவற்றுள் ஒன்ருற்செய்யும் குளிர்ந்த அணை. உள்ளப்புணர்ச்சி நிகழ்ந்து மெய்யுறு புணர்ச்சி நிகழாமலிருத்தலின் "புணர்ந்தும் புணராள் போல்" என்ருர். வார்குழலார் தோழியர். அம்ம உரையசை. மற்று அசை. தோகை பாவை உவமையாகுபெயர். தோகை என்றசொல் விளியின்கண் தோகாய் எனவந்தது. வீதிக்கேநின்று வேற்றுமை மயக்கம். தந்த உவம வுருபு. ஆரோ - ஓ இரக்கம். (கூஉ.)

## வெண்கலிமுற்றிற்று.

## கொச்சகக்கலி.

அடிகொண்ட குனிப்பன்றே யரிபிரமர் முதலானோர்
முடிகொண்ட தலைவணக்கின் குனிப்பெல்லா முறைமுறை
கடிகொண்ட பொழிற்றில்லை நடராசன் கழற்காலிற் [போய்க்
குடிகொண்ட படிபோலு மிடத்தாளிற் குஞ்சிதமே.

இது கலித்தளைதட்டுத் தனிச்சொல்லும் சுரிதகமும் பெருது தனியே வந்த தரவுகொச்சகம்.

(இ - ள்) இடத் தாளில் குஞ்சிதம் - இடது பாதத்திலுள்ள வளைவானது, அடி கொண்ட குனிப்பு அன்று - இயற்கையாகப் பாதத்தி லேயே பொருந்தியுள்ள வளைவு அல்ல, (மற்று யாது எனின்) அரி பிரமர் முதலானோர் முடி கொண்ட தலைவணக்கின் குனிப்பு எல்லாம் - திருமால் பிரமர் முதலான தேவர்களது கிரீடங்களையணிந்த தலைவணக்கத்தினு லேற்படும் வளைவுகளெல்லாம், முறை முறை போய் - கிரமமாகச் சென்று, கடி கொண்ட பொழில் தில்லை நடராசன் கழல் காலில் - மணம்வீசும் சோலைகள்சூழ்ந்த சிதம்பரத்தின்கண் வீற்றிருக்கும் நடராசப்பெருமானது வீரக்கழலை அணிந்துள்ள இடதுகாலில், குடி கொண்ட படி போலும் - குடியாகப் பொருந்தின விதம் போலும் ; (எ - று.)

குஞ்சிதம் அன்றுபோலும் என்க. வணக்கு முதனிலைத் தொழிற் பெயர். கடி காவலெனினுமாம். படி தன்மையென்னும் பொருளது. போலும் ஒப்பில்போலி. இது தற்குறிப்பேற்றவணி. (சுரு)

மல்லாண்ட திரடிண்டோட் டுழாய்முதலு மணிநாவிற்
சொல்லாண்ட மறைமுதலும் பலராங்குத் தொலைவெய்தப்
பல்லாண்டு செலச்செல்லா விளையோரும் பனிப்பெய்த
வல்லாண்ட நள்ளிருளி லழலாடுந் தொழிலினையே.

இது நாலடித்தரவு.

அதனல், இது தனிச்சொல்.

பல்பே ரூழி செல்லினு மடிகட்
கொல்லையுஞ் செல்லா தாகு மாகலி
னளவில் கால மலக்கணுற் றுழலுமென்
றளர்வு நோக்காய் போலு நோக்கிற்
கருணைசெய் தருளா யல்லை
யருணலம் பழுத்த வாடல்வல் லோயே.

இது ஆறடி நேரிசையாசிரியச் சுரிதகம்.

இது தனிச்சொல்லும் சுரிதகமும் பெற்றுவந்த தரவு கொச்சகம்.

(இ - ள்) மல் ஆண்ட திரள் திண் தோள் துழாய் முதலும் - மல்யுத்தம் புரிந்த திரண்ட திண்ணிய தோள்களையுடைய துளசிமாலையைத் தரித்துள்ள திருமாலும், அணி நாவின் சொல் ஆண்ட மறைமுதலும் - அழகிய நாவினால் தோத்தரித்த வேதமுணர்ந்த பிரமதேவனும், பலர் ஆங்கு தொலைவு எய்த - இந்திரன் முதலிய பலரும் தம் நிலை கெடவும், பல ஆண்டு செல - பல வருடங்கள் செல்லவும், செல்லா இளையோரும் - மாறாத இளமை யுடையவர்களும், பனிப்பு எய்த - நடுக்கமடையவும், அல் ஆண்ட நள் இருளில் அழல் ஆடும் தொழிலினை - கருமை மிகுந்த நடு யாமத்தில் சுடலைத்தீயில் தாண்டவமாடும் செய்கையை உடையீர்;

அதனால் - ஆகையால்,

அருள் நலம் பழுத்த ஆடல் வல்லோய் - கிருபையின் பயன் முற்றிய நடனமாடுவதிற் சிறந்த கடவுளே, பல் பேர் ஊழி செல்லினும் - பலவாகிய பெரிய ஊழிக்காலங்கள் சென்றாலும், அடிகட்கு ஒல்லையும் செல்லாது ஆதும் - தங்களுக்கு ஒரு சிறிய பொழுதும் கழியாதாகும்; ஆகலின் - ஆதலால், அளவு இல் காலம் அலக்கண் உற்று உழலும் என் தளர்வு நோக்காய் போலும் - எல்லையில்லாத காலம் துன்பமடைந்து வருந்துகின்ற எனது வருத்தத்தைப் பார்க்கவில்லை போலும், நோக்கில் - பார்த்தால், கருணை செய்து அருளாய் அல்லை - கிருபைகொண்டு அருளைச் செய்யாமற் போகீர்; (செய்தேயிருப்பீர்;) (எ - று.)

பலரும் - திருமால் பலரும் பிரமன் பலரும் என்பாருமுளர். இதன் கருத்தை "நூறுகோடிபிரமர்கள் நுங்கினார்" என்ற செய்யுளாலறியலாம். இப்பாடலால் சிவபெருமான் மூவர்க்கும் முதல்வரென்பது பெறப்படும். இளையோர் சிவபெமானுக்குரிய கணாதிபர்கள். பலராங்கு ஆங்கு அசை. அருளாயல்லை இரண்டு எதிர்மறை ஓர் உடன்பாட்டில் வந்தது. (கூஉ)

குழைதூங்கு கழைமென்றோட் கோமாரி கொலைக்கண்க
ளிழைதூங்கு முலைக்கண்வைத் தேயெய்தா நாணெய்த
வுழைதூங்கு குயினேங்க வுருமுத்தீ யுகநக்கு
மழைதூங்கு பொழிற்றில்லை மணிமன்று ணடஞ்செய்வோய்.

மீனேற்றின் றுவசத்தான் றனிதுஞ்ச விழித்தோய்நின்
ஞானேற்றின் றுவசமோ வடலேற்றி னூர்தியோ
கானேற்ற பைங்கூழின் கவளமாக் கணத்தின்கண்
வானேற்ற பகிரண்டம் வாய்மடுக்க வல்லதே.

இவை யிரண்டும் நாலடித்தரவு.

எனவாங்கு, இது தனிச் சொல்.

பைந்துழாய் மவுலிப் பண்ணவ னுவப்ப
வந்தணர் பழிச்சவு மறத்தின் புங்கவன்

முனியான் முனிவன் போலு
மனைய தன்றே யான்றோர் கடனே.

இது நாலடி நேரிசையாசிரியச்சுரிதகம்.
இது தரவிணைக்கொச்சகம்.

(இ - ள்) குழை தூங்கு கழை மென் தோள் கோமாரி - குண்டலங்கள் தொங்கும் மூங்கிலை ஒத்த பசிய மிருதுவான தோள்களையுடைய சக்திதேவி, கொலை கண்கள் - கொல்லுந் தொழிலையுடைய தனது கண்களை, இழை தூங்கு முலை கண் வைத்து - ஆபரணங்கள் அசையும் தனத்திற் செலுத்தி, எய்தா நாண் எய்த - ஒருபோதும் அடைந்திராத வெட்கத்தை அடைய, உழை தூங்கு குயின் ஏங்க - மரக்கிளையில் துயிலும் மேகங்கள் யாவும் வருந்த, உருமு தீ உக நக்கு - ஆண் இடியும் ஊழித்தீயும் சிந்த விளங்கி, மழை தூங்கு பொழில் தில்லை மணி மன்றுள் - மழை இடையறாது பெய்கின்ற சோலைகள் சூழ்ந்த சிதம்பரத்தின்கண் அழகிய பொற்சபையில், நடம் செய்வோய் - திருநடனம் செய்கின்ற பெரியீர் ;

மீன் ஏற்றின் துவசத்தான் தனி துஞ்ச விழித்தோய் - மீனக்கொடியையுடைய மன்மதன் தனியாக இறக்கும்படி நெற்றிக்கண்ணைத் திறந்தவரே, கணத்தின்கண் - கணப்போதில், வான் ஏற்ற பகிரண்டம் - ஆகாயமளவும் உள்ள பெரிய அண்டங்களை, கான் ஏற்ற பைங்கூழின் கவளமா - மணமுள்ள பசியஉணவின்உண்டையாக, வாய் மடுக்க வல்லது - வாயிற் போட்டு விழுங்கவல்லது, நின் ஆன் ஏற்றின் துவசமோ - உமது கொடியின்கண் உள்ள இடபமா?, (அல்லது) அடல் ஏற்றின் ஊர்தியோ - வலிய வாகனமாயுள்ள இடபமா ? ;

எனவாங்கு - என்று,

பைந்துழாய் மவுலி பண்ணவன் உவப்ப - பசிய துளசி மாலையை அணிந்த கிரீடங்களையுடைய திருமால் சந்தோஷங்கொள்ள, அந்தணர் பழிச்சவும் - பிராமணர்கள் துதிக்கவும், அறத்தின் புங்கவன் - தருமதேவதையாகிய பரிசுத்தர், முனிவன் - மனனசீலராயிருப்பதால், முனியான் போலும் - கோபியார்போலும், அனையது அன்றே - அங்ஙனம் கோபியாதிருப்பது அல்லவா, ஆன்றோர் கடன் - சிறந்த பெரியோர்களது கடமையாகும் ;

உவப்ப பழிச்ச என்க. கண்களை முலைக்கண்வைத்தல் தலை கவிழ்தல். எய்த நடஞ்செய்வோய் என்க. தன் சக்திகளுள் ஒன்றான துர்க்கா தேவி சிவபெருமானோடு நடஞ்செய்து தோல்வியடைதலின் கோமாரி நாணெய்த என்றார். அறக்கடவுள் - தருமக்கடவுளாகிய நந்தியம்பிரான். முனியான் முனிவன் என்பதற்கு கோபியாமற்கோபிப்பான் என்ற பொருளுங் காண்க. கவளம் - ஒரேவாயில் உட்கொள்ளும் உணவுப்பிண்டம். ஆனேற்றின் துவசம் தருமதேவதையாகிய இடபம். அடல் ஏற்றின் ஊர்தி திருமாலாகிய இடபம். ஆங்கு அசை. (கூரு)

மறைதங்கு திருமன்றி னடங்கண்டு மகிழ்பூத்துக்
கறைதங்கு படவரவ மிமையாது கண்விழிப்பக்
குறைதங்கு கலைநிறையிற் கோளிழைக்குங் கொல்லென்று
நிறைதங்கு தலையுவவு நிரம்பாது நிரப்பெய்தும்
பிறைதங்கு சடைக்கற்றைப் பெரும்பற்றப் புலியூரோய்.

இது ஐந்தடித்தரவு.

எனவாங்கு, இது தனிச்சொல்.

வெள்ளெருக்குங் கரும்பாம்பும் பொன்மத்து மிலைச்சியெம
துள்ளிருக்கும் பெருமானின் றிருமார்பி னுறவழுத்துங்
கள்ளிருக்குங் குழலுமையாண் முலைச்சுவட்டைக் கடுவொடு
முள்ளெயிற்ற கறையரவ முழையென்று நுழையுமால். [ங்கு

அதாஅன்று, இது தனிச்சொல்.

சிலைக்கோடு பொருமருப்பிற் புகர்முகனின் றிருமார்பின்
முலைக்கோடு பொருசுவட்டைக் கண்டுநின் முழவுத்தோண்
மலைக்கோடு விளையாடும் பருவத்து மற்றுத்தன்
கொலைக்கோடு பட்டவெனக் குலைந்துமனங் கலங்குமால்.

அதாஅன்று, இது தனிச்சொல்.

விடமார்ந்த சுடரிலைவேல் விடலைநின் மணிமார்பில்
வடமார்ந்த முலைச்சுவட்டைக் கண்டுதன் மருப்பெந்தை
தடமார்பம் விடர்செய்யச் சமர்செய்தான் கொல்லென்று
கடமார்வெங் கவுட்சிறுகட் கயாசுரனை வியக்குமால்.

இவைமூன்றும் நான்கடித்தாழிசை.

அதனால், இது தனிச்சொல்.

சிலைமுகங் கோட்டுமச் சில்லரித் தடங்கண்
முலைமுகங் கோட்டின ணகுமான்
மலைமுகங் கோட்டுநின் மற்புய மறைந்தே.

இது மூவடி நேரிசையாசிரியச்சுரிதகம்.

இது தரவு ஒன்றுந் தாழிசைமூன்றும் இடையிடை தனிச்சொல்லும் பெற்றுச் சுரிதகத்தா விறுதலின் சிஃறாழிசைக் கொச்சகம்.

(இ - ள்) கறை தங்கு பட அரவம் - விஷம் பொருந்திய படத்தையுடைய பாம்பானது, மறை தங்கு திரு மன்றில் நடம் கண்டு - வேதங்கள் தங்கப்பெற்ற அழகிய பொற்சபையில் ஆடும் நடனத்தைக்கண்டு, மகிழ் பூத்து - ஆனந்தங்கொண்டு, இமையாது கண்விழிப்ப - கண் இமைக்காமல் விழித்துக்கொண்டிருக்க, குறை தங்கு கலை நிறையில் - மூன்றும் பிறையாகி

யிருக்கின்ற தன்னுடைய கலையானது நிரம்பி வளருமானல், கோள் இழைக்கும் கொல் என்று - துன்பஞ்செய்யுமோ என்று, நிறை தங்கு தலையுவவு - கலைகள் நிரம்பியுள்ள பூரணைநாளில், நிரம்பாது - பூரணசந்திரனக நிறையாமல், நிரப்பு எய்தும் - குறைபாடுள்ளதாகவே யிருக்கின்ற, பிறை தங்கு சடை கற்றை பெரும்பற்றப் புலியூரோய் - பிறைச்சந்திரன் தங்கியுள்ள சடைத்தொகுதியையுடைய தில்லையிலுள்ள கடவுளே ;

என்வாங்கு - என்றுகூற,

வெள் எருக்கும் கரும் பாம்பும் பொன் மத்தும் மிலைச்சி - வெள்ளெருக்கம்பூவையும் கரிய பாம்பையும் அழகிய ஊமத்தம்பூவையும் சூடி, எமது உள் இருக்கும் பெருமான் - எங்கள் மனத்துள் குடிகொண்டிருக்கும் பெருமானே, நின் திரு மார்பின் உற அழுத்தும் - உமது அழகிய மார்பினிடத்துப் பொருந்த அழுத்திய, கள் இருக்கும் குழல் உமையாள் - தேன் தங்கிய கூந்தலையுடைய உமாதேவியின், முலை சுவட்டை - தனங்கள் பதிந்த தழும்பை, கடு ஒடுங்கும் முள் எயிற்ற கறை அரவம் முழை என்று நுழையும் - விடந்தங்கிய முள்போன்ற பற்களையுடைய பாம்பானது தான் வசிக்கும் வளை என்று நினைத்து அதனுள் நுழையும்;

அதாஅன்று - அதுவுமல்லாமல்,

சிலை கோடு பொரும் மருப்பில் புகர் முகன் - வில்வளைவுபோன்ற போர்செய்கின்ற கொம்புகளையும் புள்ளிகளையுமுடைய யானைமுகத்தையுடைய விநாயகர், நின் திரு மார்பின் முலை கோடு பொரு சுவட்டை கண்டு - உனது அழகிய மார்பினிடத்து பார்வதிதேவியின் முலையாகிய கொம்புகள் போர்செய்ததாலுண்டாகிய தழும்பைப்பார்த்து, நின் முழவு தோள் மலை கோடு விளையாடும் பருவத்து - உமது மத்தளத்தையொத்த தோள்களாகிய மலைச்சிகரத்தின்மேல் ஏறித் தான் விளையாடின குழந்தைப்பருவத்தில், தன் கொலை கோடு பட்ட என குலைந்து மனம் கலங்கும் - தனது கொல்லுந் தொழிலையுடைய கூரிய தந்தங்கள் பட்டுத்தான் இவ்வாறு ஆயிற்றே என்று கருதி நடுநடுங்கி வருந்துவார்;

அதாஅன்று - அதுவுமன்றி,

விடம் ஆர்ந்த சுடர் இலை வேல் விடலை - விஷம் நிறைந்த பிரகாசம் பொருந்திய தகட்டு வடிவமாயுள்ள வேலாயுதத்தைத் தாங்கிய ஆண்மகனிற் சிறந்த முருகப்பெருமான், நின் மணி மார்பில் - உமது மணிகள் தரித்த மார்பினிடத்து, வடம் ஆர்ந்த முலை சுவட்டை கண்டு - முத்துமாலைகள் நிறைந்துள்ள உமையின் முலைத்தழும்பைப்பார்த்து, தன் மருப்பு - தனது கொம்பினல், எந்தை தடம் மார்பம் விடர் செய்ய சமர் செய்தான் என்று - எமது தந்தையின் விசாலமான மார்பு துவாரமாகும்படி சண்டை செய்தான் எனக்கருதி, கடம் ஆர் வெம் கவுள் சிறு கண் கயாசுரனை வியக்கும் - மதஜலம் நிறைந்த கொடிய கன்னங்களையும் சிறிய கண்களையும் உடைய கஜமுகாசுரனை வியந்து பேசுவார் ;

அதனல் - ஆனகயால்,

சிலை முகம் கோட்டும் அ சில் அரி தடம் கண் - வில்லையொத்த புருவங்களை வளைத்துக்கொண்டு அந்த சிலவாகிய செவ்வரி கருவரி பரந்த விசாலமான கண்களையுடைய உமை, மலை முகம் கோட்டும் நின் மல் புயம் மறைந்து - மலையின் சிகரங்களையும் நாணடையச்செய்யும் உமது சிறந்த புயங்களிடை மறைந்துகொண்டுநின்று, முலை முகம் கோட்டினள் நகும் - முலைமுகத்தைப் பார்த்துக்கொண்டே நகைப்பாள் ; (எ - று.)

அரவம் விழிப்ப நிரப்பெய்தும் பிறை என்க. மறைதங்குதிரு மன்று என்றது தமிழ்வேதமாகிய தேவாரம் வெளிப்பட்ட இடம் என்பதையும் குறிக்கும். அரவம் என்பது ஈண்டுப்பதஞ்சலியை. தலையுவவு பூர்வபக்கப் பௌர்ணிமை. அரவம்கோளிழைத்தல் - குறித்தநேரமளவும் சந்திரனை விழுங்கி வெளிவிடுதல்; இதனைக் கிரகணபுண்ணியகாலமென்பர். நிரப்பு வறுமை. இழைக்குங்கொல் கொல் ஐயம். மகிழ் முதனிலைத்தொழிற்பெயர். கறையரவம் பாம்பு என்னும் பொருளளவாய் நின்றது. நுழையும் கலங்கும், வியக்கும்நகும் என்பன செய்யுமென்முற்று. ஆல் நான்கும் அசைகள். விடலை ஆண்பாற்பெயர். முழவுத்தோள் உவமைத்தொகை. தோள்மலை இருபெயரொட்டுப் பண்புத்தொகை. மலை உருவகம். எயிற்ற குறிப்புப் பெயரெச்சம். விடர் பிளவு. சிலைமுகம் வில். கோட்டினள் முற்றெச்சம்.

திருப்பாற்கடல் கடைந்து அமுதம் பரிமாறியகாலத்தில் இராகு கேதுக்கள் இருவரும் மாற்றுருக்கொண்டு தேவர்களின் மத்தியில் இருந்த அமையம் அவர்கள் இன்னார் என்பதைச் சூரியசந்திரர்கள் திருமாலுக்குக் குறிப்பிக்க அதனை உணர்ந்த இராகுகேதுக்கள் அவ்விருசுடர்களின்மேல் பகைகொண்டு தலையுவாநாளில் அவர்களைக் கிரகணமாகப் பீடித்துவருதல் வழக்கம். இக்கவியில் இறைவனுடைய சடையின்கண்ணுள்ள பிறைச்சந்திரன் தான் நிரம்பின் அப்பாம்புகள் தன்னைவருத்தும் என்பது கருதி வளரா திருக்கிறதென்று ஒருகாரணத்தைக் கற்பிக்கின்றார். (கூகூ)

ஒருநோக்கம் பகல்செய்ய வொருநோக்க மிருள்செய்ய
விருநோக்கிற் றொழில்செய்துந் துயில்செய்து மிளைத்துயிர்கள்
கருநோக்கா வகைகருணைக் கண்ணேக்கஞ் செய்ஞ்ஞானத்
திருநோக்க வருநோக்க மிருநோக்குஞ் செயச்செய்து
மருநோக்கும் பொழிற்றில்லை மணிமன்று ணடஞ்செய்வோய்.

இது ஐந்தடித்தரவு.

கடிக்கமலப் பார்வை வைத்துங் கண்ணனர் காணுகின்
அடிக்கமல முடிக்கமல மறியாதே மறிதுமே.

முத்தொழிலின் முதற்றொழிலோன் முடியிழந்தான் றலையிழந்த
வத்தொழிலிற் கெனிற்றமியே மறிதொழிற்கும் வல்லமே.

இருக்கோல மிட்டுமின்னு முணராதா லெந்தைநின்
றிருக் கோல மியாமுணர்ந்து சிந்திக்கக் கடவமே.

நான்மறைக்குந் துறைகண்டார் தோளிழந்தார் நாவிழந்திங்
கூன்மறைக்க மறைப்புண்டே முய்த்துணர்வு பெரியமே.

தாமடிகண் மறந்துமறித் தலைகொண்டார் கலைவல்ல
மாமடிகள் யாமடிகண் மறவாமை யுடையமே.

பலகலையுங் குலமறையும் பயின்றுணர்ந்தும் பயன்கொள்ளா
துலகலையுஞ் சிலகலையு முணராதே முணர்துமே.

இவையாறும் ஈரடித்தாழிசை. அதனால், இது தனிச்சொல்.

அம்மநின் றன்மை யெம்மனோ ருணர்தற்
கரிதே யெளிதே யாதல்
பெரிதே கருணை சிறியே மாட்டே.

இது மூவடி நேரிசையாசிரியச் சுரிதகம்.

இது பஃறாழிசைச்கொச்சகம்.

(இ - ள்) ஒரு நோக்கம் பகல் செய்ய - ஒருநோக்கம் பகலைச் செய்ய, ஒரு நோக்கம் இருள் செய்ய - ஒருநோக்கம் இருளைச்செய்ய, இரு நோக்கில் - இவ்விரு நோக்கங்களாலும், தொழில் செய்தும் - காரியங்களைச் செய்தும், துயில் செய்தும் - தூங்கியும், இளைத்து - வாட்டமடைந்து, உயிர்கள் - ஜீவன்கள், கருநோக்காவகை - கருவடையாதவாறு, கருணை கண் நோக்கம் - கிருபாபொதுநோக்கத்தையும், ஞானம் திருநோக்க வருநோக்கம் - ஞான ஐசுவரியம் உண்டாவதற்கேதுவாகும் சிறப்புநோக்கத்தையும், செய் இரு நோக்கும் செய செய்து - செய்கின்ற இவ்விரு நோக்கமும் செய்யும்படிசெய்து, மரு நோக்கும் பொழில் தில்லை மணி மன்றுள் - மணம்வீசும் சோலைகள்சூழ்ந்த சிதம்பரத்தின்கண்ணுள்ள அழகிய சபையில், நடம் செய்வோய் - திருநடனம் செய்கின்றவரே;

கடி கமலம் பார்வை வைத்தும் - வாசனை பொருந்தியுள்ள தம்முடைய தாமரைக்கண்களை எடுத்துச் சாத்தியும், கண்ணனுர் காணு - திருமாலினாலும் அறியப்படாத,நின் அடி கமலம் - உமது அடித்தாமரையை, மலம் முடிக்க அறியாதேம் - மும்மலங்களையும் போக்கிக்கொள்ள அறியாத நாங்கள், அறிதுமே - அறிவோமே ;

முத்தொழிலின் முதல் தொழிலோன் - மூன்று தொழில்களிலும் முதற்றொழிலாகிய படைத்தற்றொழிலைச் செய்கின்ற பிரமதேவன், தலை இழந்த அ தொழிற்கு - திருமுடியைக்காணுதொழிந்த அச்செயலின்கண், முடி இழந்தான் எனில் - தலையை இழந்தான் என்றால், தமியேம் அறி தொழிற்கும் வல்லமே - தமியேமாகிய யாங்கள் உம்மைத்தெரிந்துகொள்கின்ற தொழிலுக்கும் வன்மையுடையேம் ஆவேமா ;

எந்தை நின் திருக்கோலம் - எமது பெருமானே உம்முடைய அழகியவடிவத்தை, இருக்கு ஒலம் இட்டு இன்னும் உணராது - வேதம்

கூக்குரலிட்டும் இன்னும் தெரிந்துகொள்ளவில்லை, (ஆகையால்) யாம் உணர்ந்து சிந்திக்கக் கடவமே - யாங்கள் அறிந்து நினைத்தற்கும் தகுதி யுடையேமா ;

நால் மறைக்கும் துறை கண்டார் - நான்குவேதங்களையும் முறைப்படுத்திய வியாதமுனிவர், நா இழந்து - நாக்கை இழந்து, தோள் இழந்தார் - கரத்தையும் இழந்தார், இங்கு ஊன் மறைக்க மறைப்புண்டேம் - இவ்வுலகத்தில் மாமிசத்தினால் மூடப்பட்ட மயக்கத்தையுடைய யாங்கள், உய்த்துணர்வு பெரியமே - உம்மை உய்த்துணர்ந்துகொள்வதிற் சிறந்தவ ராவேமா ;

கலைவல்ல மாமடிகள் தாம் - கலைகளில்வல்ல பெருமையுள்ள உமது மாமனாகிய தக்கன், அடிகள் மறந்து மறிதலை கொண்டார் - உம் முடைய பாதங்களை மறந்ததனால் ஆட்டுத்தலையை அடைந்தார், (ஆதலால்) யாம் அடிகள் மறவாமை உடையமே - யாங்கள் உமது திருவடிகளை மறவாமலிருக்கும் தன்மையை அடைவேமா ;

பலகலையும் - பலசாத்திரங்களையும், குல மறையும் - கூட்ட மாகிய வேதங்களையும், பயின்று உணர்ந்தும் - படித்து அறிந்தும், பயன் கொள்ளாது - பிரயோசனத்தைப்பெறாமல், உலகு அலையும் - பெரியோர் கள் அலைவார்கள், சில கலையும் உணராதேம் - சிலவாகிய கலைகளையும் படித் தறியாத யாங்கள், உணர்துமே - தெரிந்துகொள்வேமா ;

அதனால் - ஆகையால்,

நின் தன்மை எம்மனோர் உணர்தற்கு அரிது - உமது தன்மை எம்போன்றவர்களால் அறிதற்கு அரிதாகும், சிறியேம் மாட்டு - சிறியோ மாகிய எம்மிடத்து, (நின்) கருணை - உம்முடைய கிருபையானது, எளிதே யாதல் - சுலபமாகக் கிடைப்பதென்பது, பெரிதே - பெரியதே, அம்ம இஃது என்ன வியப்பு ; (எ - று.)

செய் ஏற்ற இடத்து அமைக்கப்பட்டது. மறியாதேம் எனப் பிரித்துப் பொருள்கோடலும் ஒன்று. தலையிழத்தல் - பிரமன் ஐந்து முகங்களுள் ஒன்றைச் சிவபிரான் கிள்ளுதல். முடியிழத்தல் - பிரமன் தன் சிரசைச் சிவபெருமான் கொய்தற்குமுன் தானே இறைமையுடையவன் என்று எண்ணியிருந்த செருக்கு தலைகொய்யப்பட்டபின் நீங்குதல். (கூஎ)

சூன்முகத்த சுரிமுகங்க ணிரைத்தார்ப்பத் தொடுகடல்வாய்
வான்முகத்த மழைக்குலங்கண் மறிபுனல்வாய் மடுத்தென்னக்
கான்முகத்த மதுகரத்தின் குலமீண்டிக் கடிமலர்வாய்த்
தேன்முகக்கும் பொழிற்றில்லைத் திருச்சிற்றம் பலத்துறை
[வோய்,

புற்புதமுந் தொலைவெய்து நிலையெய்தாப் புலையுடம்பி
னிற்புகவு துறந்திறவா வின்பவீ டெய்தவொரு

நற்புதவு திறந்தன்ன நறும்பொதுவி னங்கையுட
னற்புதவு மானந்த நடம்பயிலு மறவோய் கேள்.

இவை யிரண்டும் நாலடித்தரவு.

எவ்விடத்தி லெப்பொருளு மொருங்குண்ண விருக்குநீ
வெவ்விடத்தை யெடுத்தமுது செய்ததுமோர் வியப்பாமே.

எண்பயிலா வுலகடங்க வொருநொடியி லெரித்திடுநீ
விண்பயிலு மெயின்மூன்று மெரித்ததுமோர் வீறுமே.

பெருவெள்ளப் பகிரண்டந் தரித்திடுநீ பெயர்த்துமலை
பொருவெள்ளப் புனற்கங்கை தரித்ததுமோர் புகழாமே.

மாயையினு லனைத்துலகு மயக்குநீ மாமுனிவர்
சேயிழையார் சிலர்தம்மை மயக்கியதோர் சிறப்பாமே.

மேதக்க புவனங்க டொலைத்திடுநீ வெகுண்டாய்போன்
மாதக்கன் பெருவேள்வி தொலைத்ததுமோர் வன்மையே.

ஒருருவாய் நிறைந்தநீ யிருவர்க்கன் றுணர்வரிய
பேருருவொன் றுடையையாய் நின்றதுமோர் பெருமையே.

இவையாறும் ஈரடித்தாழிசை.

அறிவினி லறிபவ ரறிவதை யலதொரு
குறியினி லறிவுறு குறியினை யலை.

உளவையி னுளவள வுணர்வதை யலதுரை
யளவையி னளவிடு மளவினை யலை.

அருவெனி னுருவமு முளையுரு வெனிலரு
வுருவமு முளையவை யுபயமு மலை.

இலதெனி னுளதுள தெனிலில திலதுள
தலதெனி னினதுரு வறிபவ ரெவர்.

இவை நான்கும் ஈரடி யராகம்.

எத்தொழிலுங் காணங்க ளிறந்தநினக் கிலையைந்து
மெய்த்தொழில்செய் வதுமடிகேள் விளையாட்டு நிமித்தமே.

சீராட்டு நினக்கிலையச் சீராட்டுஞ் சிறுமருங்குற்
பேராட்டி விளையாட்டுன் பெயர்த்தாகி நடந்ததே.

மெய்த்துயர முயிர்க்கெய்தும் விளையாட்டு முலகீன்ற
வத்திருவுக் கிலையதுவு மவர்பொருட்டே யாமன்றே.

இன்னருளே மன்னுயிர்கட் கெத்தொழிலு மீன்றெடுத்த
வன்னைமுனி வதுந்தனயர்க் கருள்புரிதற் கேயன்றே.

எவ்வுருவு நின்னுருவு மவளுருவு மென்றன்றே
யவ்வுருவும் பெண்ணுருவு மாணுருவு மாயவே.

நின்னலா தவளில்லை யவளலா னீயில்லை
யென்னினீ யேயவனு மவளுமா யிருத்தியால்.

இவை யாறும் ஈரடித்தாழிசை.

அதனால், இது தனிச்சொல்.

தந்தை நீ. தாயு நீ. தமரு நீ. பிறரு நீ.
சிந்தை நீ. யுணர்வு நீ. சீவ னீ. யாவு நீ.

இவையெட்டும் இருசீரோரடி யம்போதரங்கம்.

எனவாங்கு, இது தனிச்சொல்.

நெஞ்சகங் குழைந்து நெக்குநெக் குருகநின்
குஞ்சித சரண மஞ்சலித் திறைஞ்சுது
மும்மலம் பொதிந்த முழுமலக் குரம்பையிற்
செம்மாந் திருப்பது தீர்ந்து
மெய்ம்மையிற் பொலிந்த வீடுபெறற் பொருட்டே.

இது ஐந்தடி நேரிசையாசிரியச் சுரிதகம்.

இது மயங்கிசைக் கொச்சகம்.

(இ - ள்) சூல் முகத்த சுரிமுகங்கள் நிரைத்து ஆர்ப்ப - கருக்கொண்ட சுரிமுகச் சங்கங்கள் கூடி ஆரவாரிக்க, தொடு கடல்வாய் - தோண்டப்பட்ட கடலினிடத்து, வான் முகத்த மழை குலங்கள் - சிறந்த முகத்தினையுடைய மேகக்கூட்டங்கள், மறி புனல் வாய் மடுத்த என்ன - மடங்கி வீசும் அலைகளையுடைய நீரைக்குடித்தன என்று சொல்லும்படியாக, கான் முகத்த மதுகரத்தின் குலம் ஈண்டி - வாசனையை முகரும் வண்டுக்கூட்டங்கள் நிறைந்து, கடி மலர்வாய் தேன் முகக்கும் - மணம் நிறைந்த பூவினிடத்துள்ள தேனை விரும்பும், பொழில் தில்லை திருச்சிற்றம்பலத்து உறைவோய் - சோலைகளோடு கூடிய சிதம்பரத்தின்கண்ணுள்ள அழகிய சிற்சபையில் வசித்திருப்பவரே ;

புற்புதமும் தொலைவு எய்தும் நிலைஎய்தா - நீரில் குமிழி தோன்றி அழியும் கால அளவுங்கூட நிலைபெற்றிராத, புலை உடம்பினில் - மாமிசம் பொதிந்த சரீரத்திலுள்ள, புதவு துறந்து - கதவை நீக்கி, இறவா இன்ப வீடு எய்த - கெடாத மோக்ஷவீட்டை அடைய, ஒரு நல் புதவு திறந்தன்ன - ஒரு நல்ல கதவைத் திறந்தாலொத்த, நறும் பொதுவில் -

நல்ல பொற்சபையில், நங்கையுடன் - உமாதேவியுடன், அற்பு உதவும் ஆனந்த நடம் பயிலும் அறவோய் கேள் - அன்பைத் தருகின்ற ஆனந்தத் தாண்டவத்தைச் செய்யும் தருமவடிவுடையவரே கேட்பீர்;

எவ்விடத்தில் எப்பொருளும் ஒருங்கு உண்ண இருக்கும் நீ - எந்த இடத்திலும் எப்பொருளாக இருந்தாலும் அவைகளையெல்லாம் ஒரு சேர அருந்தும்படியான தகுதியையுடைய நீர், வெவ் விடத்தை எடுத்து அமுது செய்ததும் ஓர் வியப்பு ஆமே - கொடிய விஷத்தை அள்ளி உண்டதும் ஓர் ஆச்சரியப்படத்தக்க செய்கை ஆகுமோ;

எண் பயிலா உலகு அடங்க ஒரு நொடியில் எரித்திடும் நீ - எண்ணிற்கடங்காத உலகங்கள் யாவற்றையும் ஒரு நொடிப் பொழுதில் தகிக்கச்செய்யும் நீர், விண் பயிலும் எயில் மூன்றும் எரித்ததும் ஓர் வீறு ஆமே - ஆகாய மளவும் உயர்ந்துள்ள திரிபுரங்களை எரியும்படி செய்ததும் ஓர் பெருமை ஆகுமோ ;

பெரு வெள்ள பகிரண்டம் தரித்திடும் நீ - அதிகமான நீரால் சூழப்பெற்ற பகிரண்டங்களிலும் தங்கியுள்ள (பகிரண்டங்களையும் தாங்கியுள்ள) நீர், பெயர்த்தும் - மறுபடியும், அலைபொரு வெள்ளப் புனல் கங்கை தரித்ததும் ஓர் புகழ் ஆமே - அலையொடு போர்செய்கின்ற மிகுந்த நீரையுடைய கங்காநதியைச் சூடியதும், ஓர் புகழ் ஆமே - ஒப்பற்ற புகழ் ஆகுமோ ;

அனைத்துலகும் மாயையினால் மயக்கும் நீ - எல்லாஉலகங்களையும் மாயையினால் மயங்கும்படி செய்கின்ற நீர், மா முனிவர் சேயிழையார் சிலர் தம்மை மயக்கியது - பெருமை பொருந்திய முனிபுங்கவர்களது செந்நிறமுள்ள ஆபரணங்களையணிந்த சிலபெண்களை மயங்கச்செய்ததும், ஓர் சிறப்பு ஆமே - ஒப்பற்ற சிறப்பு ஆகுமோ ;

மேதக்க புவனங்கள் தொலைத்திடும் நீ - மேன்மையான இவ்வுலகங்களை அழித்திடும் நீர், வெகுண்டாய்போல் - கோபித்தவரைப் போல், மா தக்கன் பெரு வேள்வி தொலைத்ததும் - பெரிய தக்ஷனது யாகத்தைக் கெடுத்ததும், ஓர் வன்மையே - ஒப்பற்ற வலிமை ஆகுமோ ;

ஓர் உருவாய் நிறைந்த நீ - ஒரே வடிவமாய்ப் பொருந்திய நீர், அன்று இருவர்க்கு உணர்வரிய பேர் உரு ஒன்று உடையையாய் நின்றதும் - அக்காலத்து அரி அயன் இருவர்க்கும் தெரியாதவாறு பெரிய வடிவத்தைக் கொண்டவராய் இருந்ததும், ஓர் பெருமையே - ஒரு பெருமையாகுமோ ;

அறிவினில் அறிபவர் அறிவதை அலது - அறிவினால் அறிந்து கொள்பவர்கள் அறிந்துகொள்வதை அல்லாமல், ஒரு குறியினில் - ஒரு அடையாளத்தினால், அறிவுறு - அறிந்துகொள்கின்ற, குறியினை அலை - அடையாளத்தை உடையவர் அல்லீர் ;

உளவயின் உள அளவு உணர்வதை அலது - உள்ளத்தினிடத்துள்ள (ஆத்மாவிடம் வியாபித்தல்) அளவினைத்தெரிந்து கொள்வதை அல்லது, உரை அளவையின் - வார்த்தையளவினால், அளவு இடும் அளவினை அலை - அளந்தறிகின்ற அளவினை உடையவர் அல்லீர் ;

அரு எனில் உருவமும் உளை - அருவமாய் இருக்கின்றீர் என்று சொல்லலாமென்ருல் உருவமாகவும் இருக்கின்றீர், உரு எனில் - உருவமாக இருக்கின்றீர் என்று சொல்லலாமெனில், அரு உருவமும் உளை - ரூபாரூபமாகவும் இருக்கின்றீர், அவை உபயமும் அலை - அவை இரண்டுமில்லாமல் அரூபியாயும் இருக்கின்றீர் ;

இலது எனில் உளது - இல்லாதது என்று சொன்னுல் உள்ளதாயிருக்கின்றது, உளது எனில் இலது - இருக்கின்றது என்று சொன்னுல் இல்லாததாக இருக்கின்றது, இலது உளது அலது எனில் - இல்லாதது இருக்கின்றது என்ற இரண்டும் இல்லையென்ருல், நினது உரு அறிபவர் எவர் - உமது வடிவத்தைத் தெரிந்துகொள்பவர் யார் ;

ஐந்து மெய் தொழில் செய்வதும் - உண்மையான பஞ்ச கிருத்தியங்களைச் செய்வதும், எத்தொழிலும் கரணங்கள் இறந்த நினக்கு இலை - எந்தத்தொழில்களினது செய்கைகளையுந் தாண்டிநின்ற உமக்கு இல்லை, (அப்படிசெய்வது) அடிகேள் விளையாட்டு நிமித்தம் - அடிகளே உமது விளையாட்டின் நிமித்தமேயாகும் ;

சீராட்டு நினக்கு இலை - சீராட்டுவது உமக்குக் கிடையாது, அ சீராட்டும் சிறு மருங்குல் பேராட்டி விளையாட்டு - அந்தச்சீராட்டும் சின்ன இடையினையுடைய பார்வதிதேவியினது விளையாட்டு, உன் பெயர்த்தாகி நடந்தது - உம்முடையபெயரினுல் நடந்துவருவதாயிற்று ;

உயிர்க்கு மெய் துயாம் எய்தும் விளையாட்டும் - ஜீவன்களுக்கு உடற்றுன்பம் பொருந்தும் விளையாடலும், உலகு ஈன்ற அ திருவுக்கு இலை - உலகிலுள்ள ஜீவன்களைப் பெற்றெடுத்த அந்தப்பார்வதிக்கில்லை, அதுவும்—, அவர் பொருட்டே ஆம் அன்றே - அவ்வான்மாக்களின் பொருட்டேயாகும் அல்லவா ;

இன் அருளே மன்னுயிர்கட்கு எத்தொழிலும் - உலகத்தில் நிலைபெற்ற உயிர்கட்குச் செய்யும் இனிய அருளேயாம் எல்லாத்தொழில்களும், ஈன்று எடுத்த அன்னை முனிவதும் - பெற்றெடுத்த தாயானவள் கோபித்துக்கொள்வதும், தனயர்க்கு அருள் புரிதற்கே அன்றே - தன் குழந்தைகளுக்கு அருளைச்செய்வதற்கேயாகும் அல்லவா ;

எ உருவும் - எந்த வடிவமும், நின் உருவும் அவள் உருவும் என்று அன்றே - உம்முடைய வடிவமும் அவளுடைய வடிவமும் என்று அல்லவா, அ உருவும் பெண் உருவும் ஆண் உருவும் ஆய - அந்த உருவங்களெல்லாம் பெண் வடிவமாகவும் ஆண்வடிவமாகவும் ஆயின ;

நின் அலாது அவள் இல்லை - உம்மையல்லாமல் அவள் இராள், அவள் அலால் நீ இல்லை - அவளையல்லாமல் நீர் இல்லை, என்னில் - என்று கூறுவதால், நீயே அவனும் அவளுமாய் இருத்தி - நீர் ஒருவரே அவனும் அவளுமாக விளங்குகின்றீர் ;

அதனுல் - ஆகையால்,

தந்தை நீ தாயும் நீ - பிதாவும் நீர் தாயும் நீர், தமரும் நீ பிறரும் நீ - பந்துக்களும் நீர் அயலாரும் நீர், சிந்தை நீ உணர்வும் நீ - மனமும் நீர் அறிவும் நீர், சிவன் நீ யாவும் நீ - ஜீவனும் நீர் எல்லாப் பொருள்களும் நீர் ;

என ஆங்கு - என்று,

மும்மலம் பொதிந்த - மூன்று மலங்களும் நிறைந்த, முழு மல குரம்பையில் - நிறைந்த மலம் மிகுந்த சரீரத்தோடு, செம்மாந்து இருப்பது தீர்ந்து - பெருமிதத்தோடு இருப்பதை விட்டொழிந்து, மெய்ம்மையில் பொலிந்த - உண்மையோடு விளங்கிய, (விளங்கும்) வீடு பெறல் பொருட்டு - மோக்ஷ வீட்டை அடையும்பொருட்டு, நெஞ்சு அகம் குழைந்து - மனம் இளகி, நெக்கு நெக்கு உருக - உருகுதலைச் செய்ய, நின் - உமது, குஞ்சித சரணம் அஞ்சலித்து இறைஞ்சுதும் - வளைந்த பாதத்தைக் கும்பிட்டு வணங்குவோம் ; (எ - று.)

இல்புதவு - சுருங்கைவழி. தொலைவெய்தவென்பதும் பாடம். நிலையு மென உம்மை பிரித்துக்கூட்டுக. "உளவயின்" கடவுள் அனுபவ ஞானத்தாலன்றி ஆராய்ச்சிஞானத்தால் அறியப்படுபவரல்லர். "அருவெனில்" சகளம், நிஷ்களம். பஞ்சகிருத்தியம் - படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல். "சீராட்டு" இறைவன் எத்தொழிலையும் காணத்தாலன்றித் தன் சத்தி சங்கற்பத்தால் இயற்றுகின்றார் என்றபடி. மும்மலம் - ஆணவம், கன்மம், மாயை என்பன. (சுஅ)

கோச்சகக்கலி முற்றிற்று.

கலிப்பா முற்றுப் பெற்றது.

---

## கலியினம்.

---

செல்லார் பொழிற்றில்லைச் சிற்றம் பலத்தெங்கள்
பொல்லா மணியைப் புகழ்மினோ வம்மின் புலவீர்காள்.

முத்தேவர் தேவை முகிலூர்தி முன்னனை
புத்தேளிர் போலப் புகழ்மினோ வம்மின் புலவீர்காள்.

ஆங்கற் பகக்கன் றளித்தருளுந் தில்லைவனப்
பூங்கற் பகத்தைப் புகழ்மினோ வம்மின் புலவீர்காள்.

இது இரண்டடியாய் ஒருபொருண்மேல் மூன்றடுக்கி ஈற்றடி மிக்குவந்த கலித்தாழிசை.

(இ - ள்) புலவீர்காள்—, செல் ஆர் பொழில் தில்லை சிற்றம்பலத்து எங்கள் பொல்லா மணியை - மேகங்கள் நிறைந்துள்ள சோலைகளாற் சூழப் பெற்ற தில்லையிலுள்ள ஞானசபையின்கண் விளங்கும் எங்களது துவாரமிடாத இரத்தினத்தையொத்த நடராசப்பெருமானை, புகழ்மின் - புகழ்ந்து பாடுங்கள், வம்மின் - வாருங்கள் ;

புலவீர்காள்—, முத்தேவர் தேவை - மூன்றுதேவர்களுக்கும் தலைவனை, முகில் ஊர்தி முன் ஆன - மேகவாகனனாகிய இந்திரன் முதலான, புத்தேளிர்போல - தேவர்களைப்போல, புகழ்மின் - புகழ்ந்து பாடுங்கள், வம்மின் - வாருங்கள் ;

புலவீர்காள்—, ஆம் கற்பக கன்று அளித்தருளும் தில்லைவன பூம் கற்பகத்தை - அழகிய யானைமுகக்கடவுளைத்தோற்றுவித்த தில்லைவனத்தின்கண் எழுந்தருளியுள்ள அழகிய கற்பகவிருட்சம்போன்ற நடராசனை, புகழ்மின் - புகழ்ந்து பாடுங்கள், வம்மின் - வாருங்கள் ; (எ - று.)

முத்தேவர் - பிர்மன் விஷ்ணு ருத்திரன். பொல்லாமணி - இயற்கையின் அமைந்த இரத்தினம். புலவீர்காள் - புலமையின்மிக்க பெரியோர்களே. கற்பகக்கன்று - மேலைக்கோபுரவாயிலில் அமர்ந்தருளும் கற்பக விநாயகர். (சூகூ

இருகூற் றுருவத் திருந்தண் பொழிற்றில்லை
யொருகூற்றின் கூத்தை யுணராய் மடநெஞ்சே
யொருகூற்றின் கூத்தை யுணரா யெனின்மற்றப்
பொருகூற்றந் தோற்றப் புலம்பேல் வாழி மடநெஞ்சே.

இது இடைமடக்காய் ஈற்றடி மிக்க நான்கடிக்கலித்தாழிசை.

(இ - ள்) மடம் நெஞ்சே - அறியாமையுள்ள மனமே, இரு கூற்று உருவத்து இரும் தண் பொழில் தில்லை ஒரு கூற்றின் கூத்தை - இரண்டு பகுதியானவடிவத்தின் பெரிய குளிர்ந்த சோலைகள் விளங்கும் சிதம்பரத்தின்கண்வாழும் ஒரு பகுதியின் நடனத்தை, உணராய் - அறியாதாய், மடம் நெஞ்சே - அறியாமையுள்ள மனமே, ஒரு கூற்றின் கூத்தை உணராய் எனின் - ஒரு பகுதியின் நடனத்தைத் தெரிந்துகொள்ளவில்லையென்றால், அ பொரு கூற்றம் தோற்ற புலம்பேல் - அந்த போர்செய்கின்ற இயமன் உனக்குமுன் தோன்றும்போது புலம்பாதே; (எ - று.)

இருகூற்றுருவம் சத்தியுஞ் சிவமுமாகிய இருதிறவடிவம். அதிலொருகூறு சிவவடிவம். உருவத்து ஒருகூறு என்க. தோற்ற வலித்தல் விகாரம். புலம்பேல் முன்னிலை ஏவல் எதிர்மறை வினைமுற்று. மற்று வாழி அசை. (எ0)

காளி யாடக் கனலுமிழ் கண்ணுதன்
மீளி யாடுதல் பாருமே

மீளி யாடல் வியந்தவ டோற்றெனக்
கூளி பாடிக் குனிப்பதும் பாருமே பாருமே.

இது இரண்டாமடி குறைந்து இடைமடக்காய் ஈற்றடிமிக்கு வந்த நான்கடிக்கலித்தாழிசை.

(இ - ள்) காளி ஆட கனல் உமிழ் கண்ணுதல் மீளி ஆடுதல் பாரும் - காளிதேவி ஆட அதற்குமுன் அக்கினியைக்கக்கும் கண்ணுதற் பெருமான் ஆடுதலைப்பாருங்கள், மீளி ஆடல் வியந்து - அந் நடராசன் ஆடலைப்போற்றி, அவள் தோற்றென - காளி தோற்றமைகுறித்து, கூளி பாடி குனிப்பதும் பாரும் பாரும் - பேய்கள் பாடிக்கொண்டு ஆடுவதையும் பாருங்கள் பாருங்கள் ; (எ - று.)

மீளி - சிறந்தஆண்மகன். தோற்று - முதனிலைத் தொழிற்பெயர். (கூளி குனித்தல்) பொற்சபையில் இறைவன் நிகழ்த்துவது ஆனந்தத்தாண்டவம். நிருத்த சபையில் நிகழ்த்துவது ஊர்த்த தாண்டவம். அஃதாமாறு, உக்கிரம்பொருந்தியகாளி உலகங்களையெல்லாம் உண்பேனென்று செருக்குற்றுத்தனக்கு நிகரில்லையென்றிருக்கும்போது பிரமாதிதேவர்கள் அடைக்கலம்புகச் சிவபிரான் ஊர்த்த திருநடனத்தினால் அக்காளியை வெல்ல அவள் நாணங்கொண்டு தோத்திரஞ்செய்தாள் என்பதாம். (எக)

பானற் கருங்கட் பசுந்தோகை யேமெய்ப் பயன்றுய்ப்பவத்
தேனக் கலர்கொன்றை சாரூப்பி யந்தந்த செயலோர்கிலா
ரூனக்க ணிதுபீளை யொழுகும் புறக்கண் ணுளக்கண்ணதா
ஞானக் கணேயாத னல்கும் பிரான்றில்லை நடராசரே.

இது நெடிலடிநான்காய்வந்தமையால் கலித்துறை.

(இ - ள்) பானல் கரும் கண் பசும் தோகை மெய் பயன் துய்ப்ப - நீலோற்பல மலர்போன்ற கரிய கண்களையும் பசிய மயில்போன்ற சாயலையுமுடைய உமாதேவியார் உண்மையான பயனை அனுபவிக்க, அ தேன் நக்கு அலர் கொன்றை - அந்தத்தேன் விளங்கி மலர்ந்த கொன்றைமாலையானது, சாரூப்பியம் தந்த செயல் - சாரூப்ய பதவியை அளித்த தன்மையை, ஓர்கிலார் - உணரமாட்டார், பீளை ஒழுகும் புறக்கண் - பீளைசோரும் புறக்கண்ணாகிய, ஊனம் கண் இது - குற்றம்பொருந்திய கண் இதனையே, உள கண்ணது ஆம் ஞானக்கண் ஆதல் நல்கும் பிரான் - அகக்கண்ணாகிய ஞானக்கண் ஆகும்படி செய்கின்ற பெருமான், தில்லை நடராசர் - சிதம்பரத்தின்கண்ணுள்ள நடராசப்பெருமானனவர் ; (எ - று.)

நடராசர் ஓர்கிலர் என முடிக்க, இது தலைவிகூற்று. துய்ப்ப தந்த செயல் என்க. செயல் பொன்போலும் பசலைபூத்தல். தோகை - உவமையாகுபெயர். நக்கு அலர்கொன்றை என்க. ஊனக்கண்ணை ஞானக்கண்ணாகச் செய்யும் பிரானுக்குக் கொன்றைதந்த சாரூப்யச்செயல் தெரியவில்லை என வியந்தவாறு. சிவபெருமான் தன் ஒருபாதியிலிருந்து ஒருமாது முழுப்பயனையும் அனுபவிக்கும்போது தன்னைக்குறித்து வருந்தும் பிறமாதின்செயலை உணராததியற்கை என்பதைத் தெரிவிக்க தோகை மெய்ப்பயன் துய்ப்ப என்றார். (எஉ)

செவ்வாய்க் கருங்கட்பைந் தோகைக்கும் வெண்மதிச் சென்னியற்கு, மொவ்வாத் திருவுரு வொன்றே யுளதவ் வுருவினைமற், றெவ்வாச்சியமென் றெடுத்திசைப் பேமின் னருட்புலியூர்ப், பைவ்வாய்ப் பொறியர வல்குலெந் தாயென்று பாடுதுமே.

இது நேரசைமுதலாகிய கட்டளைக்கலித்துறை. இதன் முதலடி முரணடுக்கி வந்தமையால் வழிமுரண்.

(இ - ள்) செவ்வாய் கரும் கண் பைந்தோகைக்கும் - சிவந்த வாயினையும் கரிய கண்ணினையும் உடைய பசிய மயில் போன்ற சாயலையுடைய பார்வதிதேவிக்கும், வெண் மதி சென்னியற்கும் - வெண்மை நிறம் பொருந்திய மதியையணிந்த சிரசையுடைய சிவபெருமானுக்கும், ஒவ்வாத் திரு உரு ஒன்றே உளது - ஒவ்வாத அழகியவடிவம் ஒன்றே இருக்கின்றது- அ உருவினை - அவ்வடிவத்தை, எ வாச்சியம் என்று எடுத்து இசைப்பேம் - எந்த வாசகப்பொருளால் எடுத்துச்சொல்லுவோம், இன் அருள் புலியூர் - இனிய அருளையுடைய சிதம்பரத்தின்கண்ணுள்ள, பை வாய் பொறி அரவு அல்குல் எந்தாய் என்று - படத்தினிடத்துப் புள்ளிகளையுடைய இடையினையுடைய எந்தாய் என்று, பாடுதும் - பாடுவோம் ; (எ - று.)

எந்தாய் என்பதைச் சிவனை நோக்க ஒருசொல்லாகக் கொண்டு சேய்மை விளியாகவும், உவமையைநோக்க இருசொல்லாகக்கொண்டு அண்மைவிளியாகவும் கொள்க. பெண்ணும் ஆணுமாக இருத்தலின் ஒவ்வாத் திருவுரு வென்றார். அரவல்குல் உவமைத்தொகையாகவும் இரண்டாம் வேற்றுமை உருபும்பயனும் உடன் தொக்க தொகையாகவும் கொள்க. அல்குல் இடைக்கு ஆகுபெயர். பாடுதும் தன்மைப்பன்மை வினைமுற்று. முன்னம் ஒருவர் என்னும் சொல்லைப்படர்க்கையில் வியந்தாற்போல இங்கே எந்தாய் என்னும் சொல்லை விளியில் வியந்தவாறு. (எஉ)

கரும்புஞ் சுரும்பு மரும்பும் பொரும்படைக் காமர்வில்வே
ளிரும்புங் கரைந்துரு கச்செய்யு மாலிறும் பூதிதன்றே
விரும்பும் பெரும்புலி யூரெம்பி ரானருண் மேவிலொரு
துரும்பும் படைத்தழிக் கும்மகி லாண்டத் தொகுதியையே.

இது நிரையசைமுதலாகிய கட்டளைக்கலித்துறை. இதன் முதலடி வழியெதுகை.

(இ - ள்) கரும்பும் சுரும்பும் அரும்பும் பொரும் படை - கரும்பையும் வண்டையும் அரும்பையும் போர்செய்யும் ஆயுதமாகக் கொண்டுள்ள, காமர் வில் வேள் - அழகிய வில்லையுடைய மன்மதன், இரும்பும் கரைந்து உருக செய்யும் இது - இரும்பைப்போன்ற வலிய மனம் கரைந்து உருகும்படி செய்யாநின்ற இச்செயல், இறும்பூது அன்று - ஓர் ஆச்சரியமாகாது, விரும்பும் பெரும் புலியூர் எம்பிரான் அருள் மேவில் - யாவராலும் விரும்பப்படுகின்ற உயர்ந்த புலியூரின்கண்ணுள்ள எம்பிரானாகிய நடராசப்பெருமானது அருளைப்பெறுமானால், ஒரு துரும்பும் - ஒரு சின்ன துரும்புங்கூட, அகிலாண்டத்தொகுதியை - எல்லா அண்டங்களின் கூட்டத்தை, படைத்து அழிக்கும் - படைத்துப் பின் தொலைத்துவிடும் ; (எ - று.)

கரும்பு சுரும்பு அரும்பு என்பன முறையே வில்லையும், வில்லின் நாணையும், அம்பையும் உணர்த்தின. வில்நாணுய்உதவுதலின் சுரும்பினையும் படையென்ருர். இரும்பு உவமையாகுபெயர். இது காமுற்ருன் ஒருவனது கூற்று. இறைவன் அருள்பெற்ற ஒருவர் எந்தக்காரியத்தையும் செய்ய வல்லார் என்பது பெற்ரும். செய்யும் பொரும் பெயரெச்சம். அழிக்கும் செய்யுமென்முற்று. அகிலாண்டம் தீர்க்கசந்தி. (எசு)

கூகா வென்று குரைப்பதல் லாற்சமன்
வாவா வென்னில் வரேமென வல்லிரே
தேவே சன்பயி றில்லையி னெல்லையிற்
சேர்வீ ரேலது செய்யவும் வல்லிரே.

இது அளவடி நான்காய் வந்தமையால் கலிவிருத்தம். இது அடிதோறும் இரண்டாமெழுத்து நெட்டெழுத்துவரத் தொடுத்தமையால் நெடிலெதுகை. முதலெழுத்து நெட்டெழுத்தேவரத் தொடுத்தமையால் நெடின் மோனையுமாம். மூன்ருமடியும் நான்காமடியும் முதலெழுத்து அனுவெழுத்தாய் வந்தமையின் அனுமோனை.

(இ - ள்) கூகா என்று குரைப்பது அல்லால் - கூகா என்று சொல்லிக் கத்துவதல்லாமல், சமன் வா வா என்னில் வரேம் என வல்லிரே - இயமனுனவன் வாவா என்று கூப்பிட்டால் வரமாட்டோம் என்று சொல்ல வல்லமை யுடையவராவீரே, தேவ ஈசன் பயில் தில்லையின் எல்லையில் சேர்வீரேல் - தேவர்கட்கெல்லாம் தேவராகிய நடராஜன் விளங்குகின்ற சிதம்பரத்தின் எல்லையில் நீங்கள் சேர்வீர்களேயானல், அது செய்யவும் வல்லிர் - அவ்வார்த்தையை எடுத்துச்சொல்லவும் வல்லவர் ஆவீர்; (எ - று.)

கூகா - அழுகையின்கண் உண்டாம் ஒலிக்குறிப்பு. தில்லையின் எல்லையையடைந்தவர்கட்குங் கூட இயமவாதை யில்லை என்பது பெற்ரும். அது - வரேம் என்னும் சொல்; செய்தல் என்னும் பொதுவாய்பாடுகருதிச் சொல்லுதலின்மேற்று. வரேம் - எதிர்மறை ஆகாரம் உயிர்வந்தவழிக் கெட்டது. தேவேசன் குணசந்தி. (எரு)

கலிப்பாவினம் முற்றிற்று.

---

## வஞ்சிப்பா.

---

வையமீன்ற மறைக்கிழவனுங்
கொய்துழாய்மௌலிக் குணக்கொண்டலுந்
தருவார்நீழற் ருர்வேந்தனும்
வரன்முறைதாழ்ந்து வாழ்த்திசைப்ப
மைதீருணர்வின் மழமுனிவனும்
பையரவரசும் பணிந்திறைஞ்ச

இமையம்பயந்த விளங்கொடியொடுந்
தபனியப்பொதுவிற் றாண்டவம்புரி
தில்லைவாணநின் றிருவடிக்கீழ்ச்
சொல்லுவதொன் றிது சொலக்கேண்மதி
கமலலோசனன் கண்படுக்கு
மமளியைநின்மருங் காதரித்தனை
செங்கேழ்நறுனுதற் றிருமகளொடு
மங்கவனுறைதரு மாழிச் சேக்கையைப்
புலிக்கான்முனிவரன் புதல்வனுக்கு
நலத்தகுகருணையி னயந்தளித்தனை

அவன் அதனுல்

பாயலு மமளியு மின்றி மன்றநின்
வாயிலி னெடுநாள் வைகின னனையொடு
மத்திரு மனையவற் களித்திநின்
மெய்த்தொழி லன்றே வீடுநல் குவதே.

இது குறளடி வஞ்சிப்பா. இதனடிதோறும் முதற்கண்ணே பொதுச்சீர் பதினுறும் வந்தன. தார் வேந்தனும் (எ - ம்) குணக்கொண்டலும் (எ - ம்)மறைக்கிழவனும் (எ - ம்)தாண்டவம்புரி (எ-ம்) வஞ்சிச்சீர் நான்கும் வந்தன. இதனுள்ளே அங்கவனுறைதரு மாழிச் சேக்கையை என ஆசிரிய வடி அருகிவந்தது. அவன் என வஞ்சியீற்றின்கண் அசை கூனய் வந்தது.

(இ - ள்) வையம் ஈன்ற மறை கிழவனும் - உலகத்தைப் படைத்த வேதத்திற்குரியவனுகிய பிரமதேவனும், கொய் துழாய் மௌலி குண கொண்டலும் - கிள்ளப்பெற்ற துளசிமாலையைத் தரித்த முடியை யணிந்துள்ள கீழ்த்திசையினின்றுவருகின்ற மேகம்போன்ற நிறத்தை யுடைய திருமாலும், தரு வார் நீழல் தார் வேந்தனும் - கற்பகவிருக்ஷத் தினது நீண்ட நிழலின்கண் வசிக்கும் மாலையையணிந்துள்ள இந்திர னும், வரன் முறை தாழ்ந்து - ஆகம விதிப்படி வணங்கி, வாழ்த்து இசைப்ப - வாழ்த்துப்பாடல்களைப்பாட, மை தீர் உணர்வின் மழ முனி வனும் - குற்றம் நீங்கிய அறிவினையுடைய இளமையான வியாக்கிரபாத முனிவரும், பை அரவு அரசும் - படத்தையுடைய பாம்பிற்காசனுகிய (ஆதிசேடனுகிய) பதஞ்சலிமுனிவரும், பணிந்து இறைஞ்ச - வணங்கித் துதிக்க, இமையம் பயந்த இளம் கொடியொடும் - இமையமலை தோற்றுவித்த இளைய கொடிபோன்ற இடையினையுடைய உமாதேவியாரோடும், தபனிய பொதுவில் தாண்டவம் புரி - பொன்னம்பலத்திற்கூத்தாடுகின்ற, தில்லை வாண - சிதம்பரத்தில் வாழும் பெருமானே, நின் திருவடிக்கீழ்ச்சொல்லுவது ஒன்று - உமது பாதங்களினிடத்து அன்புகொண்டு யான் சொல்லவேண்டிய விஷயம் ஒன்று உளது, இது சொல்ல கேள் - இவ்வார்த்தையைச் சொல்லக் கேட்பீர், கமலலோசனன் கண்படுக்கும் அமளியை - தாமரைக்கண்ணன் படுத்துத்துயிலும் படுக்கையை, நின் மருங்கு ஆதரித்தனை - உமது

பக்கத்திலேயே வைத்துக்கொண்டு ஆதரித்தாய், செம் கேழ் நறு நுதல் திருமகளொடும் - செம்மை நிறத்தையும் நல்ல நெற்றியையுமுடைய இலக்குமிதேவியோடும், அங்கு அவன் உறைதரும் ஆழி சேக்கையை - அவ்விடத்து அத்திருமால் தங்கியிருக்கின்ற படுக்கையிடத்தை, புலிக்கால் முனிவரன் புதல்வனுக்கு - புலியின் பாதம்போன்ற பாதங்களையுடைய வியாக்கிரபாதமுனிவரது பிள்ளையாகிய உபமன்யுமுனிவருக்கு, நலத்தகு கருணையின் நயந்து அளித்தனை - நன்மைமிக்க கிருபையினால் விரும்பிக் கொடுத்தாய்;

அவன் அதனால் - அத்திருமால் அதனால்,

பாயலும் அமளியும் இன்றி - பாயும் படுக்கையும் இல்லாமல், மன்ற நின் வாயிலில் நெடுநாள் வைகினன் - நிச்சயமாக உமது வாயிற்படியில் வெகுநாள் தங்கினார், அணையொடும் அ திருமனை அவற்கு அளித்தி - படுக்கையையும் பாயலையும் அவர்க்குக் கொடுத்திடுவாய், நின் மெய் தொழில் வீடு நல்குவது அன்றே - உமது உண்மையான தொழில் மோக்ஷ வீட்டை அளிப்பது அல்லவா; (எ - று.)

கீழ்த்திசை மேகம் மிகவும் கறுப்பாயிருத்தல் நோக்கி அதனைத் திருமாலுக்கு உவமை யாக்கினார். கமலலோசனன் புண்டரீகாக்ஷன் என்னும் திருமாலின் ஓர் திருநாமம். சேக்கை படுக்கும் இடம். அமளி அதன்கண் விரிக்கும் படுக்கை. சேக்கை, அமளி, பாயல், அணை என்பன சிற்சில பேதமுடைய ஒருபொருட் பன்மொழிகள். அணை திருமனை இவை முறையே ஆதிசேடனையும் ஆழியையும் உணர்த்தின. வீடுநல்குதல் விடுதலைதருவது என்னுஞ் சிலேடைப்பொருளும் காண்க. கண்படுத்தல் - நித்திரைகொள்ளுதல். வாழ்நன் வாணன் புணர்ச்சிவிதி கூறுவர் நேமிநாத ஆசிரியர். கெழு - நிறம். மழ - இளமை. கீழ் - ஏழாம்வேற்றுமையுருபு. மதி - முன்னிலையசை. கொடி உவமையாகுபெயர்.

தரிசித்தோர்க்கு வீடுநல்குவதே நின் மெய்த்தொழிலா யிருக்கத் திருமால் விஷயத்தில் அங்ஙனம் இல்லாமை என் என வியந்தவாறு. சிதம்பரமும்மணிக்கோவை கரு-ம் செய்யுளையும் ஒப்புநோக்குக. சந்நிதி புக்கு திருமுன் வந்து. (எகூ)

கடித்தாமரைக் கண்ணன்விழிக் கமலந்தர
வடித்தாமரைச் சுடர்ப்பரிதியை யளித்தருளினை—அதனால்
புதுமலர்ப் பொழிற்றில்லை வாண
வுதவியின் வரைத்தோ வடிகள்கைம் மாறே.

இது சிந்தடி வஞ்சிப்பா.

(இ - ள்) கடி தாமரை கண்ணன் விழி கமலம் தா - நறுமணமுள்ள தாமரைமலர்போன்ற கண்களையுடைய திருமால் தனது விழியாகிய தாமரைமலரைச் சாத்தியருள, அடி தாமரை சுடர் பரிதியை அளித்து அருளினை - அடித்தாமரைப் பெருவிரலால் நிலத்தைக் கீறி உண்டாக்கிய ஒளிபொருந்திய சக்கரத்தைக் கொடுத்தருளினீர்; அதனால் - ஆகையால்,

புது மலர் பொழில் தில்லைவாண - அன்றலர்ந்த பூக்களையுடைய சோலைகள் சூழ்ந்த சிதம்பரத்தில் வசிக்கும் தேவா, அடிகள் கைம்மாறு - உதவியின் வரைத்தோ - தேவரீரது உபகாரம் உதவியின் அளவினதா; (அன்று) (எ-று.)

கைம்மாறு பிரதியுதவி. பொருளை வைத்திருப்பவர் அப்பொருளை ஈதல் உலக இயற்கையாதலின் தாமரைக்கண்ணன் விழிக்க மலைந்தார என்றார். அடிகள் படர்க்கைமுன்னிலை. (எஎ)

வஞ்சிப்பா முற்றிற்று.

---

## வஞ்சியினம்.

---

பிணியென்று பெயராமே, துணிநின்று தவஞ்செய்வீ,
ரணிமன்ற லுமைபாகன், மணிமன்று பணியீரே.

என்னென்று பெயராமே, கன்னின்று தவஞ்செய்வீர்,
நன்மன்ற லுமைபாகன், பொன்மன்று பணியீரே.

அரிதென்று பெயராமே, வரைநின்று தவஞ்செய்வீ,
ருருமன்ற லுமைபாகன், றிருமன்று பணியீரே.

இது குறளடி நான்காய் ஒருபொருண்மேல் மூன்றடுக்கி வந்தமையால் வஞ்சித்தாழிசை.

(இ-ள்) பிணி என்று பெயராமே - நோய் உண்டாகும் என்று நீங்கிவிடாமல், துணி நின்று தவம் செய்வீர் - துணிவாக இருந்து தவம் செய்பவர்களே, அணி மன்றல் உமை பாகன் - அழகிய மணமாலையை அணிந்த உமாதேவியை ஒருபாகத்தில் உடையவன், (அவனது) மணி மன்று பணியீர் - அழகிய பொற்சபையை வணங்குங்கள்;

என் என்று பெயராமே - இது என்ன என்று சொல்லிப் போய் விடாமல், கல் நின்று தவம் செய்வீர் - கல்லைப்போல அசையாமல் நின்று தவத்தைச் செய்பவர்களே, நல் மன்றல் உமை பாகன் - நல்ல மணமாலையை அணிந்த உமாதேவியை ஒரு பாகத்திற் கொண்டுள்ளவனது, பொன் மன்று பணியீர் - பொற்சபையை வணங்குங்கள்;

அரிது என்று பெயராமே - செய்தற்கருமையாகும் என்று விட்டு விலகாமல், வரை நின்று தவம் செய்வீர் - மலையின்மேலிருந்து தவத்தைச் செய்பவர்களே, உரு மன்றல் உமை பாகன் - நிறம் பொருந்திய மணமாலையை அணிந்த உமாதேவியை ஒரு பாகத்திற் கொண்டுள்ளவனது, திரு மன்று பணியீர் - அழகிய பொற்சபையை வணங்குங்கள்; (எ-று.)

பெயராமே—எதிர்மறை வினையெச்சம். துணி நின்று துணிந்து நின்று. மன்றல் மாலைக்கு ஆகுபெயர். பணியீர் ஏவற்பன்மை வினைமுற்று. கன்னின்று சுடுபாறையில் நின்று எனினுமாம். (எஅ)

பொன்செய் மன்றில்வாழ், கொன்செய் கோலத்தான்
மின்செய் தாடொழா, ரென்செய்கிற்பரே.

இது குறளடி நான்காய் வந்தமையால் வஞ்சித்துறை.

(இ - ள்) பொன் செய் மன்றில் வாழ் - பொன்னாற்செய்யப்பெற்ற சபையில் வாழ்கின்ற, கொன் செய் கோலத்தான் - அழகைத் தருகின்ற வடிவத்தை உடையவனது, மின் செய் தாள் தொழார் - ஒளியைத் தரும் திருவடியை வணங்காதவர்கள், என் செய்கிற்பர் - என்னசெய்வார்கள். (எ - று.)

ஏ - அசை. கிற்பர் கில் ஆற்றலை உணர்த்தும் இடைநிலை. தொழார் எதிர்மறை வினையாலணையும் பெயர். (௭௧)

ஒன்றி னம்பர லோகமே, யொன்றி னம்பர லோகமே,
சென்று மேவருந் தில்லையே, சென்று மேவருந்தில்லையே.

இது சிந்தடி நான்காய் வந்தமையால் வஞ்சி விருத்தம்.

(இ - ள்) மேவரும் தில்லை சென்றும் - அடைதற்கரிய தில்லையை அடைந்தோம், பரலோகமே ஒன்றினம் - (ஆதலால்) சிவலோகத்திலேயே ஒன்றுதலை அடைந்தோமாயினம், ஒன்றின் அம் பரலோகம் சென்றுமே வருந்து இல்லை - அதில் ஒன்றுதலை அடைந்தால் விண்ணுலகங்களிற் சென்று வருந்துதலுமே இல்லை; (எ - று.)

சென்ற பிறவிகளிலே செய்த சிவபுண்ணிய மேலீட்டால் தில்லையைத் தரிசிக்கப் பெற்றோர் அப்பிறவியிற்றானே சிவகதி பெறுவது திண்ணமாகலின் அத்துணிவுபற்றி ஒன்றினமென இறந்தகாலத்தாற் கூறினார். பரலோகமே என்பதிலுள்ள ஏகாரம் தேற்றம். சென்றும் முன்னையது தன்மைப்பன்மை வினைமுற்று. சென்றுமென்னும் உம்மை உயர்வு சிறப்பு. ஏகாரம் பிரிநிலை. வருந்து முதனிலைத் தொழிற் பெயர். சென்று வருந்துதலுமே யில்லையென உம்மை பிரித்துக் கூட்டுக. அம்பரலோகங்களினும் அசுரர்பகைமை நோயுடைமை முதலிய துன்ப முண்டாகலின் அவற்றிற் சென்று வருந்துதலுமில்லையென்றார். எனவே, அவற்றிற் றாழ்ந்தனவாய் இன்பமின்றித் துன்பமே மிக்குள்ள ஏனையுல கங்களிற் சென்று வருந்துதலில்லையென்பது வகுக்கவேண்டாவாயிற்று. இதுபற்றியே கோயிற் புராணத்திலும் "மண்ணிலிரு வினைக்குடலாய் வானிரயத்துயர்க்கடலா, யெண்ணிலுட லொழியமுய லிருந்தவத்தா லெழிற் றில்லைப் புண்ணியமன் றினிலாடும் போதுசெய்யா நடங்காண, நண்ணுமுட லிது வன்றோ நமக்குடலாய் நயந்தவுடல்" எனவிளக்கியிருப்பதோர்க. ஏனை ஏகாரம் மூன்றும் ஈற்றசை. இவ்வாறன்றி, மேவுதற்கரிய தில்லையிற் சென்று பரபோக வின்பத்தையே அடைந்தோ மாயினம், அதை அடைந்தோ மாதலால் (இனி) விண்ணுலகங்களிற் சென்று அநுபவிக்கும் போகாதிகள் நமக்கில்லை யெனினும் அமையும். இப்பொருட்கண் ஒன்றி னென்பது ஒன்றுதலாலென்னும் வினையெச்சத்திரிபு. மேவு - வினைத்

தொகை. அருந்து முதனிலைத் தொழிற்பெயர். அது அருந்தப்படும் போகாதிகண் மேற்று. சிவபோகம்நுகரப்பெற்றோர் விண்ணுலக போகம் விரும்பாரென்பது குறிப்பித்தது. (௨0)

வஞ்சிப்பாவினம் முற்றிற்று.

## மருட்பா

அரசியல் கோடா தரனடியார்ப் பேணு
முரசிய றானைவேன் மன்னர் — பரசோன்
கழலிணை பொதுவில்காப் பாக
வழிவழி சிறந்து வாழியர் பெரிதே.

இது முன்னர் வெண்பாவும் பின்னர் அகவலும் புறநிலை வாழ்த்தாய் வருதலின் புறநிலைவாழ்த்து மருட்பா. வெள்ளடியும் ஆசிரிய வடியுஞ் சமமாகலின் இது சமனிலை.

(இ - ள்) அரசு இயல் கோடாது அரன் அடியார் பேணும் - அரசாட்சி செய்யும் தன்மையில் சிறிதும் மாறுபடாமல் சிவபெருமானது அடியார்களைப் பாதுகாக்கின்ற, முரசு இயல் தானை வேல் மன்னர் - முரச வாத்தியம் ஒலிக்கின்ற சேனையையும் வேலாயுதத்தையும் உடைய அரசர்கள், பொதுவில் - சபையினிடத்துள்ள, பரசோன் கழல் இணை காப்பு ஆக - மழுவாயுதத்தைத் தாங்கிய சிவபெருமானது வீரக்கழலை அணிந்துள்ள இரண்டு பாதங்களும் காவலாக, வழி வழி சிறந்து வாழியர் பெரிதே - பரம்பரையாகச் சிறப்படைந்து நீடூழி காலம் வாழ்க; (எ - று.)

பொதுவில் பரசோன் கழலிணை காப்பாக மன்னர் வாழியர் எனச் சொல்முடிபு கொள்க. பேணும் மன்னர் என்க. இது புறநிலை வாழ்த்து; "வழிபடு தெய்வ நிற்புறங் காப்ப வழிவழி சிறக்கென வாய்மொழிந்தன்று" என்பது அதன் இலக்கணம். (௨௧)

பருந்தளிக்கு முத்தலைவேற் பண்ணவற்கே யன்றி
விருந்தளிக்கும் விண்ணோர் பிறர்க்குந் — திருந்த
வலனுயர் சிறப்பின் மன்ற வாணனக்
குலமுனி புதல்வனுக் கீந்த
வலைகட லாகுமிவ் வாயிழை நோக்கே.

இதுவும் அவ்வாறே கைக்கிளைப் பொருண்மேல் வருதலின் கைக்கிளை மருட்பா. வெள்ளடி குறைந்து ஆசிரியவடி மிகுதலின் இது வியனிலை.

(இ - ள்) இவ் ஆயிழை நோக்கு - இந்த ஆராயப்பெற்ற ஆபரணங்களை அணிந்துள்ள தலைவியின் பார்வையானது, பருந்து அளிக்கும்

மூன்று தலை பண்ணவர்க்கே அன்றி - பருந்திற்கு விருந்தளிக்கும் மூன்று கூறினையுடைய சூலாயுதத்தைத் தாங்கிய சிவபெருமானுக்கேயல்லாமல், விண்ணோர் பிறர்க்கும் விருந்து அளிக்கும் - தேவர்கள் பிறர்க்கும் விருந்து அளிக்கும், (அதனால்) திருந்த - திருத்தமாக, வலன் உயர் சிறப்பின் மன்றவாணன் - வல்லமையோடு உயர்ந்த சிறப்பினையுடைய சபையில் வசிப்பவன், அ குல முனி புதல்வனுக்கு ஈந்த - அந்தச் சிறந்த வியாக்கிர பாதரின் பிள்ளையான உபமன்யு முனிவருக்குக் கொடுத்த, அலை கடல் ஆகும் - திரைகளையுடைய திருப்பாற்கடலை ஒக்கும்; (எ - று.)

ஆயிழை நோக்கு அலைகடலாகும் என்று முடிக்க. துறை ஆண் பாற்கைக்கிளைத்துணிவு. துணிவு; "மாநிலத்தியலும் மாதராமெனத் தூமலர்க் கோதையைத் துணிந்துரைத்தன்று" என்பது அதன் இலக்கணம். விருந்தளித்தல் - கடல் பண்ணவர்க்கு நஞ்சை அமுதமாக்கிக்கொள்ளவும் விண்ணவர்க்கு அமுதைஅமுதாகக்கொள்ளவும் கொடுத்தல். பொது நோக்கு பிணியாதலையும் சிறப்புநோக்கு அதற்கு மருந்தாதலையும் குறிக்கின்றார். "அணியும்" என்று தொடங்கும் கோவைத்திருவாசகத்திலும், "இருநோக்கு" என்று தொடங்கும் திருக்குறளிலும், இவற்றின் உரைகளிலும் இக்கருத்து வருதல் நோக்கற் பாலது. ஆயிழை - உமாதேவி; வினைத்தொகை அன்மொழி. (அஉ)

வம்மி னமரங்காண் மன்றுடையான் வார்கழல்கண்
டுய்ம்மி னுறுதி பிறிதில்லை — மெய்ம்மொழிமற்
றென்மொழி பிழையா தாகும்
பின்வழி நுமக்குப் பெரும்பயன் றருமே.

இது வாயுறை வாழ்த்து மருட்பா.

(இ - ள்) நமரங்காள் நம்மவர்களே, வம்மின் - வாருங்கள், மன்று உடையான் வார் கழல் கண்டு உய்ம்மின் - சபையினிடத்துள்ள நடராசப் பெருமானது கட்டப்பெற்ற நீண்ட திருவடிகளைக் கண்டு பிழையுங்கள், உறுதி பிறிது இல்லை - இதைவிட ஆன்மலாபம் வேறு இல்லை, என் மொழி மெய்ம்மொழி - என்னுடைய வார்த்தை உண்மையான வார்த்தையாகும், பிழையாதாகும் - அது தவறாது, நுமக்கு - உமக்கு, பின்வழி - பிற்காலத்தில், பெரும் பயன் தரும் - சிறந்த பயனையும் அளிக்கும்; (எ - று.)

இது வாயுறைவாழ்த்து; "பிற்பயக்கு மெஞ்சொல்லென முற்படர்ந்த மொழிமிகுத்தன்று"; என்பது அதன் இலக்கணம். பெரும் பயன் - வீடுபேறு. (அங)

வாழ்த்துமின் றில்லை நினைமின் மணிமன்றந்
தாழ்த்துமின் சென்னி தலைவற்கு — வீழ்த்த
புறநெறி யாற்று தறநெறி போற்றி
நெறிநின் றொழுகுதிர் மன்ற
துறையறி மாந்தர்க்குச் சூழ்கட னிதுவே.

இது செவியறிவுறூஉ மருட்பா.

(இ - ள்) தில்லை வாழ்த்துமின் - சிதம்பரத்தை வாழ்த்துங்கள், மணி மன்றம் நினைமின் - அழகிய பொற்சபையை மனத்தில் நினையுங்கள், தலைவற்கு சென்னி தாழ்த்துமின் - தலைவராகிய நடராஜரைத் தலையால் வணங்குங்கள், வீழ்த்த - யாவராலும் இழித்துக் கூறப்பெற்ற, புறம் நெறி ஆற்ருது - அறத்திற்குப் புறம்பான காரியங்களைச் செய்யாமல், அறம் நெறி போற்றி - தருமவழியை ஆதரித்து, நெறி நின்று ஒழுகுதிர் - சன்மார்க்கத்தில் நின்று நடவுங்கள், மன்ற - நிச்சயமாக, துறை அறி மாந்தர்க்கு சூழ் கடன் இதுவே - நல்ல வழிகளை அறிந்த மனிதர்களுக்கு எண்ணிச் செய்கின்ற கடமை இதுவேயாகும்; (எ - று.)

இது செவியறிவுறூஉ மருட்பா; "மறந்திரிவில்லா மன்பெருஞ் சூழ்ச்சி அறந்தெரிகோலாற் கறியவுரைத்தன்று" என்பது அதன் இலக்கணம். மன்ற - நிச்சயப்பொருளில் வரும் இடைச்சொல். தலைவற்கு உருபுமயக்கம். "நினைமின் மணிமன்றம்" என்று கூறியதால் தில்லையைத் தரிசித்தல் மாத்திரமேயன்றி நினைத்தன்மாத்திரத்தாலும் பயன் எய்தும் என்பது போதரும். துறையறி மாந்தர் என்பது சத்திநிபாதம் எய்திய உத்தம பக்குவரை. இவ்வாற்ருன் பேறுபெறுதலே சிவநேயர்களுக்குக் கடமையாதலின் சூழ்கடன்இதுவே எனத் தேற்றேகாரங் கொடுத்தார். "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற அப்பர் சுவாமிகளின் திருவாக்கும் நோக்கத்தக்கது.

முதற்செய்யுளில் "பொன்மன்று இறைஞ்சிடுக" எனக்கூறி, அதன்கண் அமர்ந்திருக்கும்சிவபெருமானைப் "பூங்கொன்றைக்கண்ணியான்" என அடையாளத்தால் வரையறுத்துக்காட்டி அப்பெருமானைக் கருதுபவர் 'ஒன்றை' அதாவது வீடுபேற்றைப் பெறுவார் என விளக்கினுர். இவ்விறுதிச் செய்யுளில் சிவபக்தரை நோக்கி அவ்வொன்றைப்பெறுதற்கு அன்னுர் செய்யவேண்டிய கடன் இவை யிவை என்கிருர். பொன்மன்று என முதற்கண் பொதுவாகக்கூறியவர் ஈண்டுத "தில்லை மணிமன்றம்" என, மன்றத்தை விசேடித்துக் கூறுகின்ருர். தில்லையை வாழ்த்துமின், மன்றை நினைமின், தலைவற்குச் சென்னி தாழ்த்துமின் என்று "வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச்சென்னியும் தந்த தலைவனை" வாக்கு மனம் காயம் என்னும் திரிகரணங்களாலும் வணங்கவேண்டுவது அடியார் இறைபணி நிற்றற்கு ஆவசியகம் என வற்புறுத்துகின்ருர். ஒன்று எனக் கூறியது அபர முத்திப் போகத்தை அன்று; அது, புறத்துறைகளில் நிற்பார்க்குச் சித்திப்ப தொன்ரும். ஈண்டு அடியார் பெறுமாறு கூறுவது பரபோகமாகிய சிவப்பேற்றை ஆதலின் புறநெறி ஆற்ருது, சன்மார்க்கமாகிய அறநெறியைப் பற்றிப் பேரின்பப்பயனை அடையும் சாதனங்களை விளக்கியருளியிருக்கின்ருர். (அச)

மருட்பா முற்றிற்று.

---

சிதம்பரச் செய்யுட் கோவை
முற்றுப் பெற்றது.

---

திருச்சிற்றம்பலம்.

௨

கணபதி துணை.

# சிதம்பரச் செய்யுட் கோவையிற்கண்ட

# புராண வரலாறு.

**அடிமுடி தேடியது:—** முன்னொருகாலத்தில் அயனும் அரியும் தாம் தாம் முதல்வரெனத் தெரித்துத் தம்முள் மாறுபட்டுக் கலாங் கொண்டனர். பின் ஒருவாறு தேறி முக்கண் மூர்த்தியிடம் சென்று முறையிட்டனர். அவர் இவர்களைநோக்கி எனது அடியையாவது முடியை யாவது எவர் அறிகின்றாரோ அவரே முதல்வராவர் எனக் கூறினர். அப்போது அயன் அன்ன வடிவமும் திருமால் வராக வடிவமும் பெற்று முறையே முடியையும் அடியையும் தேடிச்சென்றும் காணுதவராய்ச் சிவ பெருமானைத் தோத்தரிக்க அவர் அவர்களுக்குப் பிரசன்னமாகி வரங் கொடுத்தார்.

**அர்த்தநாரீசரானது:—** பிருங்கியென்னும் முனிவர் சிவபெருமானையன்றி வேறு எவரையும் பூசனை புரியேன் என்ற மனே திடத்தைக்கொண்டு ஈசனையே பூசைபுரிந்துவந்தார். ஓர் நாள் உமை யம்மை இவரது உட்கிடையை உணர்ந்து, உலகிலுள்ள ஜீவராசிகட் கெல்லாம் சத்தியே பிரதானமாகும் சத்தியாகிய நாமின்றிச் சிவபெரு மானுக்கும் இயங்குதல் இயலாது. அப்படியிருக்க இம் முனியின் உள்ளம் இதையேன் உணரவில்லை என்று கருதினள். பின்னர் இம்முனியினது உடலிலும் சக்தியாகிய நாம்(மாமிசங்கள்) இல்லாவிடின் இவர் எவ்வாறுபூசிப் பார் இதை அவரேயறியுமாறு செய்வோம் என்று சிவபெருமானைக்குறித்துத் தவமியற்றிச் சிவன் வடிவத்திலேயே சேர்ந்தனள். (பாதிவடிவம் சிவனதும் பாதிவடிவம் தன்னதுமாக ஆயினள்) வழக்கம்போல் பிருங்கி முனிவர் பூசைக்கு வந்தபோது இக்கோலத்தைக்கண்டு ஓர் வண்டின் உரு வெடுத்துத் துளைத்துக்கொண்டு சிவனை மட்டும் வலம்வந்து வணங்கினர். இதனுல் சக்தி கோபமுற்று பிருங்கிமுனிவர் இன்னும் நம்முடையசிறப்பை உணரவில்லை என்று அவருடலில் உள்ள சக்தி பாகத்தை (மாமிசத்தை) வாங்கி விட்டார். உடனே பிருங்கிக்கு உடல் எலும்புக்கூடாக ஆகிவிட்டது. நிற்கவும் சக்தியில்லை. இதையறிந்த திங்களணிசெஞ்சடைக்கடவுள் இன்னும் ஓர் காலைக்கொடுத்தார். பின்னர் பிருங்கிமுனிவர் எப்போதும் போலக்கடவுளை வணங்கிவந்தார். இப்பிருங்கி முனிவரின் காரணத்தால் தான் அர்த்தநாரீசத்திருவுருவத்தைக் கடவுள் பெற்றுர். இக்கருத்தினை,

“ஊன்று ஞானமோ டுயர்வயி ராகநல் லொழுக்க
மூன்று காலெனக் கொண்டரன் முகத்திள முறுவல்
தோன்று மாறுநின் ருடினன் சுடரவ னிருளைப்
போன்று மாயையைத் தொலைத்திடு பிருங்கியென் புனிதன்”

என்னும் பிரபுலிங்கலீலைச்செய்யுளானுணர்க.

**ஆதிசேடன் பதஞ்சலியானது:—** ஓர் காலத்தில் விஷ்ணுவானவர் சேடசயனத்தில் அறிதுயில் நீங்கிச் சிரசின்மேல் கை கூப்பி ஆனந்த பரவசராய் இருக்கக்கண்டு ஆதிசேடன் வணங்கி இவ்வாறு இருந்தமை என்னென்று வினவ, நேற்றுச் சிவபிரான் தேவதாரு வனத்தில் திருநடனம் புரிந்தருளியதைத்தரிசித்த ஆனந்தத்தினல் விழித்தேனென்று கூற அதுகேட்டுத்தாமும் தரிசிக்கவிரும்பி விடைபெற்றுத் திருக்கைலையை யடைந்து தவஞ்செய்யச் சிவபிரான் தோன்றி இவ்வடிவத்தோடு பூலோகத் திற்குச் சென்றால் உலகத்தார் அஞ்சுவர் ஆதலால், அத்திரி முனிவனும் அனுசூயையும் செய்த தவத்தால் அவ்வனுசூயை இருதுமதியாய் நீராடி அஞ்சலிசெய்கையில் நீ ஐந்துதலைச் சிறுபாம்பாய் அவர் பதத்தினில் விழுதலால் பதஞ்சலி என்னப்பெற்றபேரோடு நாகலோகத்திற்குச்செல்வாய் அங்கேயொரு பருவதமும் அதற்கருகே ஒரு பிலத்துவாரமுமுண்டு. அப் பிலத்துவாரத்தின் முடிவே தில்லைவனம். ஆதலால், அப்பிலத்துவார வழியே சென்று தில்லையையடைவா யென்றுரைக்க அவ்வாறே வந்து பொய்கையி னின்று எழுந்து நடராசப்பெருமானின் திருநடனத்தைக்கண்டு பேறு பெற்றார்.

**ஆமையோடு அணிந்தது:—** திருமாலின் மச்சம் முதலிய அவதாரங்களில் அவரது கண் முதலியவற்றைச் சிவபெருமான் கையில் மோதிரம், தண்டம், மார்பில் ஓடு, கொம்பு, மெய்யில்தோற்போர்வை முதலியவாகக்கொண்டனர்.

**இயமனை உதைத்தது:—** பூர்வம் மிருகண்டு என்னும் முனிபுங்கவர் புத்திரப்பேறின்றி வருந்தித் திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளைக் குறித்துத் தவங்கிடந்தனர். அவர்இயற்றிய தவப்பலனல் அம் மூர்த்தி தரிசனந்தந்து உம் உள்ளக்கருத்தினை உரைப்பீர் என்றார். மிருகண்டுமுனிவர் புத்திரன் இல்லாததால் வீட்டின்பத்தை அடைய இயலவில்லை. ஆதலால் புத்திரப்பேற்றை அளித்தருளல்வேண்டும் எனப் பிரார்த்தித்தார். கண்ணுதற்கடவுள் அறிவற்ற நூறுவயதுள்ள குழந்தை வேண்டுமா அல்லது அறிவுள்ள பதினறு வயதுள்ள பாலன் வேண்டுமா என்று கேட்க முனிவர் அறிவுள்ள பாலன்தான் வேண்டும் என்று தெரி வித்தார். அவ்வாறே அருள்பாலித்தார். பின்னர் பாலனுக்கு மார்க்கண்டன் என்ற பெயரிட்டு வளர்த்து வந்தனர். பதினறுவது பிராயம் வந்தவுடன் இனி நாம் இவனை இழந்துவிடுவோமே என்று பெற்றோர் வருத்தமுற் றிருக்குங்கால் பாலன் அறிந்து தந்தையின் பாதத்தில் வீழ்ந்து வணங்கி வருத்தமுறக் காரணம் யாது? என்று வினவினன். அம்முனிவர் அவன் பிறந்த வரலாற்றைத் தெரிவித்தார். உடனே அப்பாலன் தாங்கள்வருந்த வேண்டாம் என்னையளித்த உமையொருபாகனிடமே சென்று பூசித்து தீர்க்காயுளைப்பெற்று வருகின்றேன் என்று கூறிப் பல தலங்களிற்சென்று பூசனைபுரிந்து பின் திருக்கடவூர் என்னும் திவ்வியதலத்தை அடையுங்கால் பதினறுவது பிராயம் நிரம்பியது. இயமதூதர்கள் கிட்டிவர இயலாது காலனிடம் சென்று தெரிவித்தார்கள். உடனே காலன் கண்களிற் கனற் பொறி சிந்த காலபாசத்தோடு கடையூரில் கடவுள்பூசை செய்துகொண்

டிருக்கும் மார்க்கண்டனிடம் அணுக அவன் பயந்து இலிங்கத்தைக்கட்டி அணைத்துக்கொண்டான். இயமன் ஈசனைக் கட்டிக்கொண்டால் உன்னை இழுக்காமற் போவேனு என்று கடவுளையும் சேர்த்துப் பாசத்தை வீசினான். அவ்வமயம் இலிங்க வடிவினின்றும் ஈசன் தோன்றிக் காலனை உதைத்துக் கொன்று பாலனுக் கருள்செய்தார்.

**இராவணனை நெரித்தது:—** இராவணன் என்னும் அரக்கன் ஓர்நாள் தன் இரதத்தின்மேல் ஆகாயவீதியின் வழியாய்ப் போய்க்கொண்டிருக்கும்போது இரதம் கைலை மலைக்குமேல் வரும்போது அசையாமல் நின்றுவிட்டது. குதிரைகளும் அடியெடுத்துவைத்துச் செல்லவில்லை. உடனே இராவணன் இரதத்தினின்றும் கீழிறங்கி இரதம் தடைப்பட்ட காரணத்தை அறிந்தனன். பின் இம்மலையை இமைப் பொழுதில் இவ்விடத்தைவிட்டு எடுத்தெறியவேண்டும் என்ற எண்ணத் துடன் சென்று அம் மலையைப்பெயர்க்குங்கால் சிவபெருமான் அறிந்து தன் ஒரு காற்பெருவிரலால் ஊன்றினார். உடனே இராவணன் மலையின் அடியில் அகப்பட்டுக்கொண்டு தோள், கரம் முதலியவை நசுங்கப்பட்டான். இக்கருத்தினை,

"கைத் தலங்க ளிருபதுடை யரக்கர் கோமான்
    கைலைமலை யதுதன்னைக் கருதா தோடி
முத்திலங்கு முடிதுளங்க வளைக ளொற்றி
    முடுகுதலுந் திருவிரலொன் றவன்மேல் வைப்பப்
பத்திலங்கு வாயாலும் பாடல் கேட்டுப்
    பரிந்தவனுக் கிராவணனென் றீந்த நாம
தத்துவனைத் தலையாலங் காடன் றன்னைச்
    சாராதே சாலநாள் போக்கி னேனே"

என்னும் அப்பர்சுவாமிகளின் திருவாக்கானுணரலாகும்.

**உபமன்னியருக்குப் பாற்கடலளித்தது:—** வியாக் கிரபாதமுனிவர் தமது புத்திரராகிய உபமன்யரை மாமனாகிய வசிட்டரும் அருந்ததியாருங் கொண்டுபோய்க் காமதேனுவின் பாலூட்டி வளர்த்தனர். ஒரு நாள் வியாக்கிரபாத முனிவர் தமது பன்னசாலைக்குக்கொண்டுவந்து குழந்தையார்க்கு மாவைக் கரைத்து ஊட்ட அதனைக் குடியாமல் காம தேனுவின் பாலை நினைத்துக் குழந்தையார் வருத்தமுற்றுத் திருமூலநாதர் திருவருளால் திருப்பாற்கடல் பெற்றுண்டு வளர்ந்து வந்தனர்.

**உமைகையினின்றும் கங்கை பிறந்தது:—** உமா தேவியார் காஞ்சீபுரத்திற்கு வருமுன்னர் ஸ்ரீ கைலாசபதியின் நேத்திரங் களை உலகத்திற்குச்சுடராதலைக்காட்டும் வண்ணம் தமது திருக்கரத்தால் மூடினர். அக்காலத்துச் சிவபெருமானது விழிகளின்றும் சொரிந்த பாஷ்பம் உமையம்மையின் திருக்கரத்தின் வழியாய்க் கங்கையாகப் பிரவகித்தது. சிவபெருமானுடைய விழிகள் மூடப்பட்டவுடன் உலக மெங்கும் இருள் பரவிற்று. பொத்திய காத்தை உமாதேவியார் எடுத்த வுடன் உலகெங்கும் சுடர்கள் பிரகாசித்தன.

**கங்கையைத்தரித்தது:—** சகரர் மரபிற் ரேன்றிய பகீரதன் என்பான் கபிலமுனிவரின் சாபத்தாற் சாம்பரான தமது முன்னோர்களை மோட்சத்திற்சேர்க்க வழி யாது எனத் தன் குருவைக் கேட்டான். அவர் ஆகாயகங்கையைக் கொண்டுவந்து அச்சாம்பரின் மேல் ஊற்றினல் மோக்ஷமடைவார்கள் என்று தெரிவித்தார். பகீரதன் எவ்வாறு கங்கையைப் பெறலாம் என்று தனது குருவிடமே கேட்டுக் கொண்டு, கங்கையைக்குறித்துத் தவமியற்றினன். பதினாயிரம் வருடங் கழிந்தபின்னர் கங்கை பிரசன்னமாகி யான் பூமியில் வந்தால் என்னைத் தாங்குவது சிவனையன்றி வேறு யாவர்க்கும் இயலாது; ஆதலால், சிவனைக் குறித்துத் தவமியற்றித் தெரிந்துகொண்டுவா என்ருள். அவ்வாறே சிவனைக் குறித்தும் பதினாயிரம் வருடந் தவமியற்றிப் பின் கங்கையிடம் தெரிவித்தான். கங்கை ஆகாயத்தினின்றும் வெகு ஆரவாரத்தோடு பூமி நடுங்கு மாறு வந்தாள். உடனே சிவபெருமான் அவளது செருக்கை அடக்க வேண்டுமென்று திருவுளங்கொண்டு கங்கை வருகின்ற இடத்தில் வந்து நின்று தன் சடைகளில் ஒன்றை நீட்டி அதனுள் அடங்கச்செய்து அவளது கர்வத்தை அடக்கினர்.

**கங்கைக்குக் கேள்வனுனது:—** கங்கை இறைவனுக் கோர் சக்தியாகி அவ்விறைவன் அக்கங்கைக்குக்கேள்வனுய் இராச சபையில் தாம் திருநடனஞ் செய்கின்ற காலத்து அவ்விறைவியைப் பார்த்து அந் நோக்கத்தாலே சர்வான்மாக்களையும் புரந்து வருகின்ருர்.

**கண்ணன் மல்லர்களை வீட்டியது:—** திருமால் கிருஷ்ணவதாரத்தில் கம்சனல் ஏவப்பெற்ற சாணூரன் முஷ்டிகன் என்னும் இருமல்லர்களையும் மல்யுத்தத்தில் வதைத்தார்.

**காளிங்கநடனஞ் செய்தது:—** திருமால் வசுதேவர்க்கு மகனுய்த்தோன்றி ஆயர்பாடியில் நந்தகோபன் வீட்டில் வளர்ந்து வருங்கால் ஓர்நாள் இடைப்பிள்ளைகளோடு பிருந்தாவனத்தில் ஆனிரைகளை மேய்த்து விட்டுக், கட்டமுதருந்த யமுனைநதிக்கு வந்தனர். வந்த அமயம் ஆங்குள்ளோர் இந் நதியிற் காளிங்கன் என்ருெரு பாம்பு இம்மடுவில் இருந்து கொண்டு வருபவவையெல்லாம் விழுங்குகின்றது ஆதலால் இப்பாம்பை இவ்விடத்தைவிட்டு அகற்றவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். உடனே கண்ணபிரான் நதியோரத்திலுள்ள மாக்கிளையின்மேல் ஏறி மடுவிலுள்ள காளிங்கனின் தலையிற்குதித்து இடதுகாலை ஊன்றிக் கையால் வாலைப் பிடித்துக்கொண்டு நடனமாடினர்.

**சந்திரனைத் தரித்தது:—** சந்திரன் அச்சுவினி முதலிய தன் பத்தினிகள் பலருள்ளும் உரோகிணியின்பால் அதிமோகங்கொண்டு ஏனையோரைப் புறக்கணித்தபோது அம் மங்கையர் தம் பிதாவாகிய தக்கனிடம் முறையிடத் தக்கன் சபித்தபடி சந்திரன் தன் பதினறு கலைகளுங் குறைந்து வருதலைக்கண்டு சிவபெருமானைப்பூசிக்க அவர் மூன்ரும்பிறையாக இருந்த சந்திரனைத் தமது ஜடையில் தரித்து அச் சாபவிமோசனஞ்செய்து இரட்சித்தார்.

**சுடலையில் ஆடியது:—** சிவபெருமான் மகாசங்கார காலத்து எல்லா அண்டங்களையும் அவற்றின்கண்ணுள்ள சராசரங்கள் அனைத்தையும் பிரம விஷ்ணுக்கள் பலரையும் சுட்டெரித்து மீண்டும் புனருற்பவம் செய்தற்கு அன்னார் தலைமாலைகளைத் தமது மார்பிலும் சிரசிலும் அணிந்துகொண்டு அவ்வாறு சங்கரித்த இடத்தில் நின்று உமையம்மையோடு மகாசங்கார நிருத்தம் செய்தருளுவர். நிருத்த பேதங்கள் பதினொன்றில் சிவபெருமான் நடிக்கின்றகூத்து காபாலம், பாண்டரங்கம், கொடுகொட்டி என்பன. அவை,

"கடையமயி ராணிமரக் கால்விந்தை கந்தன்
குடைதுடிமா லல்லியமல் கும்பஞ்—சுடர்விழியாற்
பட்டமதன் பேடுதிருப் பாவையரன் பாண்டரங்கம்
கொட்டியிவை காண்பதினோர் கூத்து."

என்ற சிலப்பதிகார உரைமேற்கோட் செய்யுளானுணர்க.

**சுந்தரற்குத் தூது போனது:—** சைவ சமயத்தை நிலைநாட்டிய மூவர்முதலிகளில் ஒருவராகிய சுந்தரமூர்த்தி நாயனார் என்பவருக்கும் பரவைநாச்சியாருக்கும் சங்கிலியாரின் தொடர்பால் ஊடலுண்டாயிற்று. அவ்வூடலை நீக்கும்பொருட்டு சுந்தரர் சிவபெருமானை வேண்டிக்கொண்டார். சிவபெருமான் தான் அடியார்க்கெளியன் என்பதை உலகத்தார்க்கு அறிவிக்கும் பொருட்டு நள்ளிரவில் பரவை நாச்சியாரின் வீட்டிற்குச்சென்று அவர்க்கும் சுந்தரர்க்குமுள்ள ஊடலை நீக்கியருளினர். இக்கருத்தை, "கழுதுகண் படுக்கும் பானாட் கங்குலிற் றூதுசென்றோன்" என்னுஞ் செய்யுளானறியப்படும்.

**சூரியசந்திரர்களைப் பாம்பு தீண்டுவது:—** தேவர்களும் அசுரர்களும் திருப்பாற்கடல் கடைந்து அதினின்றும் தோன்றிய அமுதத்தை அருந்துவதற்குச் சண்டையிட்டுக்கொண்டிருந்தனர். அவ்வமயம் திருமால் மோகினி யுருவெடுத்துவந்து யான் உங்கள் இருவர்க்கும் பரிமாறுகின்றேன், சண்டையைவிடுங்கள் என்று கூறித் தேவர்களையும் அசுரர்களையும் இரு பிரிவாக நிற்கச்செய்து முதலில் தேவர்கட்கு அமுதளித்துவந்தார். இதையறிந்த ஓர் அசுரன் அமுதம் ஆகிவிடும் என வெண்ணித் தேவவடிவெடுத்து தேவர் கூட்டத்துச்சென்று கையை நீட்டினன். உடனே சூரியசந்திரர்களின்குறிப்பால் திருமால் அசுரனென வுணர்ந்து தன்கையிலுள்ள ஆயுதத்தால் மண்டையில் அடித்தார். அவ்வசுரன் சூரிய சந்திரர்களால்தான் நமக்கு இத்தீங்கு நேர்ந்ததெனக்கருதி ஏற்ற உவாக் காலங்களில் சூரியசந்திரர்களைப் பீடித்துவருகின்றான். இக்காலங்களை நாம் கிரகண புண்ணியகாலம் என்று வழங்கி வருகின்றோம்.

**தக்கன்மறித்தலைபெற்றது:—** தக்ஷப்பிரஜாபதி சிவபெருமானை முழுமுதற்கடவுள் என்றெண்ணாது தன் மருகனாகக்கருதி அவருக்கு மாறாக இந்திரன், பிரமன் முதலிய தேவர்களைக்கொண்டு ஓர் யாகம் செய்விக்கையில் சிவபெருமான் கட்டளையின்படி வீரபத்திரக்கடவுள் அவ்வியாகசாலைக்குச் சென்று ஆங்குக் கூடியுள்ள தேவர்களைப் பலவாறு

வதைத்து அத்தக்கனுடைய தலையை வெட்டி அதற்குப்பதிலாக அங்கு நிறுத்தப்பெற்றிருந்த ஓர் ஆட்டின் தலையை வெட்டிப் பொருத்தினர். இக்கருத்தினை, "சந்திரனைத் தேய்த்தருளித் தக்கன்றன் வேள்வியினி, லிந்திரனைத் தோணெரித்திட் டெச்சன் றலையரிந், தந்தரமே செல்லு மலர் கதிரோன் பற்றகர்த்துச், சிந்தித் திசைதிசையே தேவர்களை யோட்டுகந்த, செந்தார்ப்பொழில் புடைசூழ் தென்னன் பெருந்துறையான், மந்தார மாலையே பாடுதுங்கா னம்மானாய்". என்னுந் திருவாசகத்தானும்,

"செருக்கொ டுஞ்சிவ நிந்தைசெய் வாய்க்கிலை தீர்வு
விரிக்கி னென்றுமுன் சிறுவிதி தலையற வெட்டி
யெரிக்கு நல்கிநிந் தனைசெயா மறிமுக மியைத்துத்
தருக்கி நின்றவவ் வீரன்வந் தொருபுடை சார்ந்தான்"

என்னும் பிரபுலிங்க லீலையானு முணர்க.

**தந்தைதாளேறிந்தது** :— சோழமண்டலத்தில் திருச்சேய்ஞலூரில் அந்தணாளர் மரபில் பவித்திரை வயிற்றிற்றோன்றிய விசாரசருமர் என்பவர், இடையர்கள் பசுக்களையடிப்பதைப் பார்த்துப் பொறாமல் இரங்கி அவ்வூரிலுள்ள பசுக்களையெல்லாம் உடையவர்களின் சம்மதி பெற்றுத் தாமே மேய்த்துவருங்காலத்தில் மண்ணியாற்றங்கரையில் மணலினால் ஒரு சிவலிங்கத்தைத் தாபித்து அப்பசுக்களின் பாலைக் குடங் குடமாகக் கறந்துகொண்டுபோய் அன்போடுமபிடேகஞ் செய்து வந்தார். இச்செய்திதெரிந்த அவ்வூரவர்கள் அவரது தந்தையாகிய எச்சதத்தரிடத்திற் சென்று, உமது புத்திரன் பசுக்களை அன்போடு மேய்ப்பவன் போலக் கொண்டுபோய்ப் பாலைக்கறந்து மணலிற்சொரிந்து விளையாடுகின்றான் என்று சொல்லி முறையிட, அத்தத்தர் ஓர்நாள் மைந்தனறியாதபடி மறைந்திருந்து அங்ஙனஞ் செய்தலைக்கண்டு மிகுந்த கோபங்கொண்டு விசாரசருமரைத்தன் கைத்தண்டினாற் பலமுறையடித்துத் திருமஞ்சனப் பாற்குடங்களையுங்காலினால் இடறித்தள்ளினர். உடனே விசாரசருமர் மிகவுஞ்சினந்து தமக்குமுன் கிடந்த ஒரு சிறுகோலை எடுத்துச் சிவாபராதஞ் செய்த தந்தையின்மேல் வீசினர். அக்கோல் மழுவாயுதமாகச் சென்று தந்தையின் காலைத்துண்டித்தது. பின்னர் முன்போல் பூசை புரிந்து வந்தார். விசாரசருமனின் சிவபக்தியை மெச்சிப் பரமசிவன் பார்வதி தேவியோடு பிரத்யக்ஷமாகித் தொண்டர்கட்கெல்லாம் அவரைத்தலைவராக்கித் தாம்ஏற்றுக்கொண்ட அமுதும், பரிவட்டமும், புஷ்பமும் அவர்க்கே கிடைக்கும்படி சண்டேசுர பதத்தைத் தந்தருளினர்.

**தழுவக்குழைந்தது** :— ஓர் காலத்தில் உமாதேவி காஞ்சீபுரத்தின்கண் மாமர நிழலில் எழுந்தருளியுள்ள பிருதிவிமயமான சிவலிங்கத்தை (ஏகாம்பரேசுவரரை) ஷோடசோபசாரங்களோடும் பூசித்து வருகையில், பரமசிவன் அத்தேவியாரது பக்தியின் உறுதிநிலைமையைப் பரிசோதிக்கத்திருவுளங்கொண்டு சகலதீர்த்தங்களையுமொருங்கேவந்து சேரும்படிநினைக்க, எல்லாத்தீர்த்தமுங் கம்பையாற்றோடு கூடிப் பெருவெள்ளமாய்ப் பெருகிவர, அதனைக்கண்டு பார்வதிதேவி மிகக்கலங்கி அன்பினாலுண்டான

அச்சத்தால் அவ்விலிங்கத்தை இறுகத் தழுவிக்கொள்ள, இலிங்கவடிவமாகிய உமாபதி அம்பிகையின் முலைத்தழும்பும் வளைத்தழும்பும் திருமேனியில் விளங்குமாறு குழைந்து காட்டினர்.

**தாருகவன முனிபத்தினியரின் கற்பைப்பரிசோதித்தது :—** ஒருகாலத்திற் பரமசிவன் தாருகவனத்திலுள்ள முனிவர்களது மனைவிமார்களின் கற்புநிலையைப் பரீக்ஷிக்க எண்ணித தாம்ஒரு விடசங்கமத் திருவுருவங்கொண்டு அவரில்லந்தோறுஞ் சென்று பிக்ஷாடனஞ்செய்ய, அம்முனிபத்தினியர்கள் அவரைநோக்கிக் காதல் கொண்டு, மனவுறுதியழிந்து மேனிமெலிந்து, கைவளை கழன்று விழுமாறு மிக்க வருத்தமடைந்தனர்.

**திரிபுரமெரித்தது :—** முன்னொரு காலத்தில் தாருகாக்கன் கமலாக்கன் வித்யுன்மாலி என்னும் மூன்றசுரர்களிருந்தனர். அவர்கள் தவஞ்செய்து பிரமதேவனிடம் தனித்தனி பொன், வெள்ளி, இரும்புகளாலாகி எங்கும் பறந்து செல்லும் அழியாத மூன்றரண்களைப் பெற்றபின்னர் எங்கும் பறந்துசென்று தேவர் முதலிய யாவரையும் துன்புறுத்தினர். திருமால் பலவித சூழ்ச்சிகள் செய்தும், சிவபூஜா பக்தியிற் சிறந்த அவர்களை வெல்லமுடியாதவராய்ச் சிவபெருமானிடம் முறையிட அப்பெருமான் பூமியைத் தேர்த்தட்டாகவும், சூரிய சந்திரர்களைத் தேருருளையாகவும், தேவர்களைத் தேருறுப்புக்களாகவும், பிரமனை வலவனுகவும், மேருவை வில்லாகவும், ஆதிசேடனை நாணுகவும், திருமாலை அம்பாகவும், அக்கினியை அம்பின் முனையாகவும், காற்றை அம்பினீர்க்காகவும், நான்கு வேதங்களைக் குதிரைகளாகவுங் கொண்டு அத் திரிபுரத்தை எரிக்கச் சென்றனர். திரிபுரங்களை அழிப்பது எம்மைக்கொண்டன்றோ எனத் தேவர்கள் செருக்குற்றெண்ணினர். அதையறிந்த பரமசிவன் புன்னகை கொண்டார். அந்த அவமதிச்சிரிப்பின் பிரகாசம் அத்தேரையழித்து முப்புரங்களையும் சுட்டெரித்தது. அசுரர் மூவரும் சிவபக்தராதலின் இரக்ஷிக்கப்பட்டனர்.

**திருமால் கண்மலர் பறித்துச்சாத்தியது சக்கரம் பெற்றது :—** சிவபெருமான் திருவடி விரலால் தரையிற் கீறியுண்டாக்கப்பட்டுச் சலந்தராசுரனைக் கொன்ற சக்கராயுதத்தை அரக்கர் முதலியோரை அழித்தற்குப் பெறும்பொருட்டுத் திருமால் நாள்தோறும் ஆயிரந்தாமரை மலர்களைக்கொண்டு சிவபெருமானை அருச்சித்து வழிபட்டு வருகையில் ஒருநாள் பரமசிவன் அவ்விஷ்ணுவினது அன்பு நிலைமையைப் பரிசோதிக்க எண்ணி ஒரு மலரை மறைத்திட திருமால் மனந்தளர்ந்து தமது செந்தாமரை மலர்போலுங் கண்களொன்றைப் பறித்து அருச்சித்தா ரென்பதாம். இக்கருத்தினை,

"பங்கய மாயிரம் பூவினி லோர்பூக் குறையத்
தங்க ணிடந்தரன் சேவடிமேற் சாத்தலுமே
சங்கர னெம்பிரான் சக்கரமாற் கருளியவா
றெங்கும் பரவிநாந் தோணேக்க மாடாமோ"

என்னுந் திருவாசகத்தா னுணர்க.

**பிரமன்தலையைக்கோய்தது :—** ஒரு காலத்தில் பிரமன் தானே முதற்கடவுளென்று கூறிச் செருக்குற்றிருக்கையில், சிவபிரான் தாமே முதல்வரென்று தெரிவிக்குமாறு திவ்விய சொரூபத்தோடு எதிரில் தோன்ற, அவ்வயனது ஐந்தா முகம் — 'எனது நெற்றியினின்றுந்தோன்றிய நீயோ முதல்வன்? என்று கூறிச் சிவனைப் பழித்தவளவில், அப்பெருமான் தமது அம்சமாகிய வயிரவரை நோக்கியருள, அவர் தமது இடக்கைவிரலின் நகத்துநுனியால் அவ்வைந்தாந்தலையைக் கொய்துவிட, அக்கபாலம் அப்படியே அவர் கையில் ஒட்டிக்கொள்ளுதலும், உருத்திரமூர்த்தி தருமத்தை உலகத்தவர் அறிந்து அனுஷ்டிக்குமாறு தாம் அனுஷ்டித்துக்காட்டும்படி வயிரவரை நோக்கி இப்பாவந்தொலையப் பிச்சையெடுக்க வேண்டும்' என்று உரைக்க, அவர் அங்ஙனமே பலகாலம் பலதலங்களினுஞ் சென்று கைக்கபாலத்தோடு பிச்சையெடுத்தனர்.

**பிரமகபாலத்திற் பிச்சை யெடுத்தது :—** சிவனது அம்சமாகியவயிரவமூர்த்தி பிரமகபாலத்தைக் கையிற்கொண்டு திருமாலிடம் பிச்சைக்குச் சென்றபோது அவர் தமது சக்கராயுதத்தால் தமது தலையையரிந்து அதினின்று பெருகுகின்ற இரத்தத்தைப்பலகாலம் அக்கபாலத்திற் சொரிந்தும் அது பாதியும் நிறையாமையால் வாளாபோயினர். இக்கருத்தை,

"காதியாயிரம் மால்களைப் பிழிந்துமாங் கனிபோற்
கோது வீசினுங் கடல்கவிழ்த் தனையசெங் குருதி
பாதி யாயினு நிரம்புறுக் கபால பாணியனாய்
மாது பாதிய னவைபிடைப் புகுந்தனன் வடுகன்"

என்னும் பிரபுலிங்கலீலையானுணர்க.

**புலிக்கால் பெற்றது: —** மழமுனிவர் சிதம்பரத்திற்குச் சென்று திருமூலட்டானேசுரரை அருச்சித்திருக்குநாளில் ஒருநாள் அவர் விடிந்தபின் சென்று மலரெடுக்கலாமென்றால் வண்டூதும், விடியுமுன் எடுக்கலாமென்றால் வழி தெரியாது, மரங்களில் ஏறினால் பனியினால் வழுக்கும் அதனால் பழுதில்லாத மலரை எவ்வாறெடுத்துப் பூசிப்பேனென்று வருத்தப்படும்போது சிவபிரான் காட்சி தந்து அம்முனிவர் விருப்பத்தின்படி கைகால்களில் புலியின் உறுப்பையும் அதில் கண்களையும் கொடுத்தருளினார்.

**புலித்தோல் யானைத்தோல் போர்த்தது :—** சோழ அரசன் ஒருவனது விருப்பத்தால் சமணர்கள் அபிசாரயாகஞ்செய்து அதினின்று எழுப்பினதொரு மதயானையை விக்கிரமபாண்டியனைக் கொல்லும்படி ஏவியனுப்ப, யாவருமஞ்சும்படி வந்த அவ்யானையை அவ்வரசன் வேண்டுகோளாற் சோமசுந்தரக்கடவுள் ஒரு வில் வீரனது வடிவமாய்த் தோன்றி நரசிங்கபாணத்தைத் தொடுத்துக் கொன்று வீழ்த்தினர். அன்றியும் கஜாசுரன் என்பான் தேவர்களை வதைத்துத் திரிந்து வருங்காலையில் அத்தேவர்களின் வேண்டுகோட்படி சிவபெருமான் அட்ட வீரட்டங்களுள் ஒன்றாய பழுவூரில் (வழுவூர் என்று தற்போது வழங்கி வருகிறது) அக்கஜன் முன் தோன்றி அவனோடு பொருது வீழ்த்தி அத்தோலைப் போர்த்திக்கொண்டனர்.

அன்றியும் கஜாமுகாசூரன் என்பவனை விநாயகப்பெருமான் தமது கோடுகளில் ஒன்றை முறித்து அதனால் அவ்வசுரனைக்கொன்றார்.

அன்றியும் கந்தபுராணத்துள் முருகப்பிரான் அசுரர்களை வதைத்தபோது அவ்வசுரர்களில் ஒருவன் யானையுருவத்தோடும் வந்து அபஜயப்பட்ட வரலாறும் நோக்கத்தக்கது.

**மன்மதனை எரித்தது:—** முன்னம் சூரபன்மனுடைய கொடுமைக்காற்றாது அமரர் யாவரும் அலமந்து அரனை அணுகி முறையிட்டனர். அவர் அபயாத்தமளித்து யான் அவனுக்கு அவன்செய்த தவத்திற்குவந்து கேட்டவற்றை அளித்தேன்; அவன் உம்மாலும் மற்றைத் தேவராலும் யான் இறக்கக்கூடாது என்றவரத்தையும் வாங்கிக்கொண்டிருக்கின்றான். அவனை எனக்குப்பிறக்கும் முருகன் என்னும் குழந்தை கொன்று உங்களைக்காப்பான் நீங்கள் சென்றுவாருங்கள் என்று சொல்லியனுப்பினர். தேவர்யாரும் தங்கள் தங்களிருப்பிடஞ் சென்றனர். பின் பல நாட்களாகியும் குழந்தையும் பிறக்கவில்லை. அசுரரின் கொடுமையும் அடங்கிற்றில்லை; ஆதலால், மறுபடியும் தேவர்கள் யாவரும் ஒன்றுசேர்ந்து ஆறணியண்ணல் கல்லால விருட்சத்தினடியில் அமர்ந்து சனகாதியர்க்கு மோனமாய் ஞானத்தை யுணர்த்திக்கொண்டிருக்கிறார். பார்வதிதேவியுடன் சேர்ந்தாலல்லவா குழந்தை பிறக்கும்; ஆதலால், நாம் எவ்வாறாயினும் பார்வதியுடன் சேரும்படிசெய்யவேண்டும் என்று யோசித்து இக்காரியம் செய்வதற்கு மன்மதனே தகுதியுடையோன் எனத் தீர்மானித்து அவனை அரனிடம் செல்லப்பணித்தனர். அமரர்கோன் ஆணையை மீறவியலாமல் மன்மதன் அதிவிரைவிற் கைலைசென்று யோகத்திலிருக்கும் கடவுளின் பின்புறமாகச்சென்று நின்று மலரம்பைத் தொடுத்துவிட்டான். மலரம்பு பட்டமாத்திரத்தில் யோகுநீங்கப் பின்புறம் திரும்பி அங்கியாம் நெற்றிக் கண்ணைத் திறந்தார். உடனே ஆங்குநின்ற மதன் நெருப்பினால் இறந்து சாம்பலாயினன்.

**மான் மழு முதலியவற்றைத் தரித்தது:—** பரமசிவன் தம்மை மதியாத தாருகவன முனிவர்களது மனநிலையைப் பரிசோதிக்க நினைந்து ஒருவிடவுருவங்கொண்டு அவர்கள் வீடுகள் தோறுஞ் சென்று பிக்ஷாடனஞ் செய்து தம்மை நோக்கிக்காதல் கொண்ட அவர்கள் பத்தினிமார்களது கற்புநிலைமையைக் கெடச்செய்ய, அதுகண்டு பொறாமற் கோபங்கொண்ட அம்முனிவர்கள் அபிசாரயாகமொன்று செய்து அவ் வோமத் தீயினின்று எழுந்த நாகங்கள், பூதங்கள், மான், மழு, புலி, யானை, முயலகன், முதலியவற்றைச் சிவனைக் கொன்று விடும்படிஏவ, சிவபெருமான் தம்மேற் சீறிவந்த நாகங்களை ஆபரணங்களாகவும், பூதங்களைத் தமது கணங்களாகவுங்கொண்டு, மான் மழுவைக் கையில் ஏந்தி, புலியைத் தோலையுரித்து உடுத்து, யானையின் உட்சென்று உடல் பிளந்து அதனுரிவையைப் போர்த்துக்கொண்டு, முயலகனை முதுகிற் காலால் ஊன்றி, அவற்றையெல்லாம் பயனிலவாகச் செய்து விட்டனர்.

**விடம் அருந்தியது :—** முன்னொருநாள் தேவர்களும் அசுரர்களும் ஒன்றுகூடித் திருப்பாற்கடலைக் கடைய எண்ணினர். பின் மந்திர மலையைமத்தாகவும், ஆதிசேடனைக் கயிறாகவுங்கொண்டு கடையுங்காலத்தில்

ஆதிசேடன் வலிபொறுக்க இயலாமல் விடத்தைக் கக்கினன். அவ் விடத்தினைக்கண்டு பயந்தோடி தேவர்கள் யாவரும் சிவபெருமானிடம் முறையிட்டனர். அரன் அஞ்சியோரைக் காக்கும் அருங்குணம் வாய்ந்தவ னுதலால் உடனே அவ்விடத்தைத் தான் அருந்தித் தேவர்களைக் காப் பாற்றினர்.

**வியாதன் கரமிழந்தது :—** முன்னொருநாள் வாத ராயணர் வேதங்கள் அனைத்தையும் உணர்ந்து இருக்காதி நான்கு வேதங் களாக வியாசஞ் செய்து பதினெண் புராணங்களையும் இயற்றியவராயி னும் தாம் ஒருகாலத்தில் காசியில் கங்கைக்கரையின்கண் நின்று சிவ பெருமானை மறந்து திருமாலுக்கே பரத்துவம் கூறித் தமது கையைத் தூக்க அச்சமயத்தில் அவர் நா எழாமல் கரம் துணிக்கப்பட்டார். இவ் வபசாரத்தைப் பின்னர் நினைந்து சிவபெருமானுக்குப் பரத்துவம் கூறி அன்னாரைத்துதித்துப் பேறுபெற்றார்.

## முற்றிற்று.

---

# யாப்பிலக்கணச்சுருக்கம்.

சிதம்பரச் செய்யுட்கோவையில் குறிக்கப்பட்டிருக்கும் யாப்பிலக்கணத்தை விளக்கி இந்நூலைக் கற்கப்புகும் இளைஞர் களின் பொருட்டு எழுதப்பெற்றது.

## உறுப்பியல்.

க. எழுத்து :— எழுதப்படுதலின் எழுத்தே அவ்வெழுத்துக்கள் குறில், நெடில், ஆவி (உயிர்), குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக் கம், ஆய்தம், மெய், உயிர்மெய், வல்லினம், மெல்லினம், இடையினம், அளபெடை (உயிரளபெடையும் ஒற்றளபெடையும்) எனப்பதின்மூன்றாகும். இவற்றிற்கு உதாரணம் செய்யுட்கோவை கரு-வது செய்யுளிற் காண்க.

உ. அசை :— அவ்வெழுத்து அசைத்து இசைகோடலின் அசை.

(அ) குற்றெழுத்துத் தனியே வரினும், நெட்டெழுத்துத் தனியே வரினும், குற்றெழுத்து ஒற்றடுத்து வரினும், நெட்டெழுத்து ஒற்றடுத்து வரினும் நேரசையாம். (உ - ம்) போ, து, பூந், தண்.

(ஆ) குறில் இணைந்துவரினும் குறினெடிலிணைந்துவரினும் குறிலிணைந்து ஒற்றடுத்துவரினும், குறினெடிலிணைந்து ஒற்றடுத்துவரினும் நிரையசையாம். (உ - ம்) விரி, நறா, பசுந், துழாய்.

ந. சீர் :— அசை இயைந்து சீர்கொள நிற்றலிற் சீரே.

(அ) ஓரசைச்சீர் அல்லது அசைச்சீர் ஒரோவிடத்து நேரசை யாயினும் நிரையசையாயினும் தனித்து நின்று சீராவது. வாய்பாடு நேரசை க்கு—நாள், நிரையசைக்கு—மலர். (உ - ம்) பூ மலர். (ஆ) ஈரசைச்சீர்

அல்லது ஆசிரியவுரிச்சீர். நேர் நேர் - தேமா, நிரை நேர் - புளிமா இவை இரண்டும் மாச்சீர். நேர் நிரை - கூவிளம், நிரை நிரை - கருவிளம் இவை இரண்டும் விளச்சீர். தேமா புளிமா இரண்டும் ஒத்தாழிசைக் கலிப்பாவில் வாரா, வெண்கலியிலும் கொச்சகத்திலும் வரும். (இ) நேர் நேர் நேர் - தேமாங்காய், நிரை நேர் நேர் - புளிமாங்காய், நேர் நிரை நேர் - கூவிளங் காய், நிரை நிரை நேர் - கருவிளங்காய் இவை நான்கும் காய்ச்சீர்கள் அல்லது வெண்பாவுரிச்சீர்கள். நேர் நேர் நிரை - தேமாங்கனி, நிரை நேர் நிரை - புளிமாங்கனி, நேர் நிரை நிரை - கூவிளங்கனி இவை நான்கும் கனிச்சீர்கள் அல்லது வஞ்சியுரிச்சீர்கள். (ஈ) நாலசைச்சீர் அல்லது பொதுச்சீர். நேர் நேர் நேர் நேர் - தேமாந்தண்பூ, நிரை நேர் நேர் நேர் - புளிமாந்தண்பூ, நேர் நிரை நேர் நேர் - கூவிளந்தண்பூ, நிரை நிரை நேர் நேர் - கருவிளந்தண்பூ, நேர் நேர் நிரை நேர் - தேமாநறும்பூ, நிரை நேர் நிரை நேர் - புளிமாநறும்பூ, நேர் நிரை நிரை நேர் - கூவிளநறும்பூ, நிரை நிரை நிரை நேர் - கருவிளநறும்பூ இவை எட்டும் பூச்சீர்கள். நேர் நேர் நேர் நிரை - தேமாந்தண்ணிழல், நிரை நேர் நேர் நிரை - புளிமாந் தண்ணிழல், நேர் நிரை நேர் நிரை - கூவிளந்தண்ணிழல், நிரை நிரை நேர் நிரை - கருவிளந்தண்ணிழல், நேர் நேர் நிரை நிரை - தேமாநறுநிழல், நிரை நேர் நிரை நிரை - புளிமாநறுநிழல், நேர் நிரை நிரை நிரை - கூவிளநறுநிழல், நிரை நிரை நிரை நிரை - கருவிளநறுநிழல் இவை எட்டும் நிழற்சீர்கள். நிரை நடுவாகிய கனிச்சீர்கள் அதாவது கூவிளங்கனியும் கருவிளங்கனியும் கலிப்பாவுள்ளும் ஆசிரியத்தினும் புகப்பெறா. ஆயினும் கொச்சகத்தில் அருகிவரும். கனிச்சீரும் பொதுச்சீரும் வெண்பாவில் வாரா. இவை யொழிந்த சீர்கள் எல்லாப்பாவினுள்ளும் பாவினத்துள்ளும் வரும். ஆகச் சீர் ௩0. இவற்றிற்குதாரணம் ஆங்காங்குக் காட்டப்பட்டன. பொதுச் சீர்களின் இலக்கணம், (க) பூவீற்றுச்சீர்கள் 8ம் காய்ச்சீர்கள்போன்று (தளைசம்பந்தப்பட்டவரையில்) கொள்ளப்படும். (உ) நிழற்சீர்களெட்டும் கனிச்சீர்கள்போன்று (தளை சம்பந்தப்பட்டவரையில்) கொள்ளப்படும். (௩) வெண்பாவில் பொதுச்சீர்கள் வாரா. (ச) ஆசிரியத்துள்ளும் குற்றுகரம் வந்துழியன்றிவாரா. (ரு) கலியுள்ளும் பெரும்பான்மை குற்றுகரம்வந்துழி யன்றி வாரா. (சூ) வஞ்சியுள் குற்றுகரம் வாராதேயும் வரப்பெறும். (எ) வஞ்சியுள் இரண்டு நாலசைச்சீர்கள் ஓரடியுள் அருகிக் கண்ணுற்று நிற்கவும் பெறும். (அ) அல்லனவாய் வஞ்சியுள் பெரும்பான்மையும் ஓரடியி லொன்றன்றி வாரா - இரண்டுவரினும் கண்ணுற்று நில்லா. (கூ) பாவினத் துள்ளும் பயின்று வாரா. (க0) நிழற்சீர்களெட்டும் வஞ்சியுளல்லது வாரா.

ச. தளை :— சீரிரண்டு தட்டுநிற்றலின் தளையே. தளை யெனினும் பந்தமெனினும் ஒக்கும். தளை எழுவகைப்படும். (அ) நாள் நேர், மா நேர்-நேரொன்றாசிரியத்தளை. (ஆ) மலர் நிரை, விளம் நிரை - நிரையொன்றா சிரியத்தளை. (இ) காய் நேர், பூ நேர் - வெண்சீர் வெண்டளை (ஒன்றியது.) (ஈ) மா நிரை, நாள் நிரை, விளம் நேர், மலர் நேர் - இயற்சீர்வெண்டளை (ஒன்றாதது.) (உ) கலி நிரை, நிழல் நிரை - ஒன்றிய வஞ்சித்தளை. (ஊ) கனி நேர், நிழல் நேர் - ஒன்றாத வஞ்சித்தளை. (எ) காய் நிரை, பூ நிரை - கலித்தளை (ஒன்றாதது.)

ரு. அடி :— ஐந்துவகைப்படும். (அ) குறளடி - இரண்டுசீரான்வந்த அடி. (ஆ) சிந்தடி - மூன்றுசீரான் வந்த அடி. (இ) அளவடி அல்லது நேரடி - நான்குசீரான் வந்த அடி. (ஈ) நெடிலடி - ஐந்துசீரான் வந்தஅடி. (உ) கழிநெடிலடி - ஐந்துசீரின் மிக்க சீரான்வந்த அடி. நான்கு பாக்களுக்கு முரிய அடிகளின் சிறுமை - வெண்பாவிற்கு இரண்டடியே சிறுமை. ஆசிரியப்பாவிற்கு மூன்றடியே சிறுமை. கலிப்பாவிற்கு நான்கடியே சிறுமை. வஞ்சிப்பாவிற்கு மூன்றடியே சிறுமை. நான்குபாக்களுக்குமுரிய அடியின்பெருமை - எல்லாப்பாவிற்கும் பெருமைக்கு எல்லை பாடுவோனது பொருண்முடிவுக்குறிப்பே. வரையறையில்லை.

(சு) தொடை :— அடியிரண்டு தொடுத்தன் முதலாயின தொடையே. ஈண்டு எடுத்துக்காட்டியது அளவடியைப்பற்றியேயாம். அடிமோனை அடியெதுகை அடிமுரண் அடியியைபு அடியளபெடை அந்தாதித்தொடை இரட்டைத்தொடை செந்தொடை எனக்கிடந்த எட்டுத்தொடையும் இணைமோனை முதலான முப்பத்தைந்து தொடைவிகற்பமும் சேர்ந்து நாற்பத்து மூன்றாகும்.

மோனை :— அதாவது முதற்றொடை பல அடிகளிலாவது ஓர் அடியின் பல சீர்களிலாவது முதலெழுத்து ஒற்றுமைப்பட வரத் தொடுப்பது. சிறுபான்மை இனவெழுத்துக்கள் மோனையாம். அ ஆ ஐ ஔ, இ ஈ எ ஏ, உ ஊ ஒ ஓ, ஞந மவ தச - இவை ஒன்றற்கொன்று மோனையாய் வருதலுமுண்டு. அடிமோனைத்தொடை அடிதோறும் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது. இணைமோனை ஓரடியில் க, உ ; பொழிப்பு க, ௩ ; ஒரூஉ க, ௪ ; கூழை க, உ, ௩ ; மேற்கதுவாய் க, ௩, ௪ ; கீழ்க்கதுவாய் க, உ, ௩ ௪ ; முற்று க, உ, ௩, ௪ ; சீர்களில் முதலெழுத்தொன்றி வரத்தொடுப்பது.

இயைபு :— ஈற்றெழுத்து ஒன்றிவரத்தொடுப்பது. எதுகை முதலெழுத்து அளவொத்து நிற்க இரண்டு முதலிய எழுத்துக்கள் ஒன்றி வரத் தொடுப்பது. முரண் - சொல்லானும் பொருளானும் மறுதலைப் படத்தொடுப்பது. அளபெடை - உயிரளபெடையாயினும் ஒற்றளபெடையாயினும் ஒன்றிவரத்தொடுப்பது. இவற்றிற்கும் மோனைபோலப் பெயர் கொள்ளப்படும். அந்தாதித்தொடை அடிதோறும் இறுதிக்கண் நின்ற எழுத்தானும் அசையானுஞ் சீரானும் அடியானும் மற்றையடிக்கு ஆதியாகத் தொடுப்பது.

இரட்டைத்தொடை :— ஓரடி முழுதும் ஒருசொல்லேவரத் தொடுப்பது. (ஈற்றெழுத்து ஒன்று குறையினும் இழுக்காது.) உ - ம். ஒக்குமே ஒக்குமே ஒக்குமே ஒக்கும் நாற்சீரின் மிக்கு வரப்பெறாது.

செந்தொடை :— மோனை முதலாகியதொடையும் தொடை விகற்பமும் போலாது வேறுபடத்தொடுப்பது.

[மருட்செந்தொடை (சிதம்பரச்செய்யுட்கோவை ௬ வதுபாடல்) இனவெழுத்துப்பெற்று மோனை முதலாகிய தொடையும் தொடை விகற்பமும் போலாமைவேறுபடத்தொடுப்பது].

## II செய்யுளியல்.

வெண்பா ஆசிரியப்பா கலிப்பா இம்மூன்றுபாக்களும் அளவடியானும், வஞ்சிப்பா இருசீரடி (குறளடி) யானும், முச்சீரடி (சிந்தடி) யானும் வரப்பெறும். வெண்பாவின் ஈற்றடியும் முச்சீரான்வரும். இணைக் குறளாசிரியப்பாவின் இடையடிகள் இரண்டும் பலவும் குறளடியானும் சிந்தடியானும் வரும். ஒருசார் அம்போதரங்க உறுப்பும் குறளடியானும் சிந்தடியானும் வரும். அராக வுறுப்புக்கள் நாற்சீரின்மிக்கு வருவனவுமுள.

ஓசைகள் :— வெண்பா செப்பலோசையானும் ஆசிரியப்பா அகவலோசையானும் கலிப்பா துள்ளலோசையானும் வஞ்சி தூங்கலோசை யானும் வரும்.

செப்பலோசை, ஏந்திசைச்செப்பல் தூங்கிசைச்செப்பல் ஒழுகிசைச்செப்பல் என மூன்று வகைப்படும். ஏந்திசைச்செப்பல் வெண்சீர் வெண்டளையானும் தூங்கிசைச்செப்பல் இயற்சீர் வெண்டளையானும் ஒழுகிசைச்செப்பல் இவ்விருவெண்டளைகளானும் வரும்.

அகவலோசை, ஏந்திசையகவல் தூங்கிசையகவல் ஒழுகிசை யகவல் என மூவகைப்படும். ஏந்திசையகவல் நேரொன்றாசிரியத்தளையானும் தூங்கிசையகவல் நிரையொன்றாசிரியத்தளையானும் ஒழுகிசையகவல் இவ்விரு ஆசிரியத்தளைகளானும் வரும்.

துள்ளலோசை, ஏந்திசைத்துள்ளல் அகவற்றுள்ளல் பிரிந்திசைத்துள்ளல் என மூவகைப்படும். ஏந்திசைத்துள்ளல் கலித்தளையானும் அகவற்றுள்ளல் வெண்சீர்வெண்டளை கலித்தளைகளானும் பிரிந்திசைத் துள்ளல் பலதளைகளானும் வரும்.

தூங்கலோசை, ஏந்திசைத் தூங்கல் அகவற்றூங்கல் பிரிந்திசைத் தூங்கல் என மூவகைப்மடும். ஏந்திசைத்தூங்கல் ஒன்றியவஞ்சித்தளையானும் அகவற்றூங்கல் ஒன்றாதவஞ்சித்தளையானும் பிரிந்திசைத்தூங்கல் பல தளையானும் வரும்.

பா :— "அத்தொடை பாவி நடத்தலின் பாவே" வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா என ஐவகைப்படும். நூற்பாவும் தனித்துவழங்கும்.

வெண்பாவிலக்கணம் :— செப்பலோசைபெற்று ஈற்றடி முச்சீரான் வரும். வெண்சீரும் இயற்சீரும்வந்து வெண்டளைதட்டு வேற்றுத் தளை விரவாது காசு பிறப்பு நாள் மலர் என்னும்வாய்பாட்டால் இறும். வேற்றுவண்ணம் விரவாது வெள்ளைவண்ணம் எல்லாவண்ணத்துள்ளும் சிறப்புடைத்தாய் மங்கல மரபிற்றாய் அவ்வாறே வேற்றுத்தளையும் அடியும் சீரும் விரைவாமையால் எல்லாப்பாவினுள்ளும் வெண்பாசிறப்புடைத் தென்று முன்வைக்கப்பட்டது. வெண்பாவினுட்கனிச்சீர்வரின் அச்சீரின் இரண்டாம் அசை ஒற்றடுத்த குற்றெழுத்தாலாகிய நேரசையாகவே யிருக்கும். வெண்பாவினுள் வேற்றுத்தளை வருதலாகாதென்பது விதி யாதலின் அந்த இரண்டாம் அசையிலுள்ள ஒற்றை நீக்கி அதிலுள்ள

குறிலோடு மூன்றும் அசையின் முதலெழுத்தைச்சேர்த்து நிரை நேராக அலகிட்டு அச்சீரை விளங்காய்ச்சீராகவேகொள்ளவேண்டும். அச்சீரின் முதலசை எவ்வாறு இருப்பினுமாம். (உ . ம்) மாங் தர்க டம்.

## வெண்பாவகை.

க. குறள்வெண்பா :— (ஓரடி முக்கால்) இரண்டடியான் வருவது. (செய் - வை. க, உ, ௩.) செய்யுள்களிற் கண்டுகொள்க.

உ. இருகுறணேரிசை வெண்பா :– (மூவடி முக்கால்) (அ) இரண்டு குறள் வெண்பாவாய் நடுவு முதற்றொடைக்கேற்ற தனிச்சொல்லால் அடி நிரம்பிச் செப்பலோசை வழுவாது முதலிரண்டடியும் ஒரு விகற்பமாய்க் கடையிரண்டடியும் மற்றொரு விகற்பமாயாயினும் நான்கடியும் ஒரு விகற்பமாயாயினும் வருவது. (செய்-வை. ச, ரு.) (ஆ) ஆசிடை நேரிசை வெண்பா-முதற் குறட்பாவினோடு தனிச்சொல்லிடை வேறுபட்டு விட்டிசைப்பின் முதற்குறட்பாவினிறுதிக்கண் ஒன்றும் இரண்டும் அசைகூட்டி உச்சரிக்கப்பட்டு இரண்டு விகற்பத்தானும் ஒரு விகற்பத்தானும் வருவன. (செய் - வை, சு, எ, அ, கூ.)

௩. இன்னிசை வெண்பா :— (இன்னிசை மூவடி முக்கால்) (அ) ஒரு விகற்பத்தானும் பல விகற்பத்தானும் வந்து நான்கடியாய்த்தனிச்சொல் இல்லாமல் நடப்பதுவும் (செய் - வை. க0, கக, கஉ, க௩, கச.) (ஆ) இரண்டாமடியினிறுதி தனிச்சொற்பெற்று மூன்று விகற்பத்தான் வருவனவும் (செய்-வை. கரு.) (இ) மூன்றாமடியினிறுதி தனிச்சொற்பெற்று இரண்டு விகற்பத்தான் வருவனவும் (செய் - வை. கசு.) (ஈ) தனிச்சொல்லின்றிப் பல விகற்பமாகி அடிதோறும் ஒரூஉத்தொடை பெற்று வருவனவும் (செய் - வை. கஎ.) (உ) பிறவாற்றானும் நேரிசை வெண்பாவிற் சிறிது வேறுபட்டு நான்கடியான் வருவனவும் என இன்னிசை வெண்பா ஐந்து வகைப்படும்.

ச. பஃறொடைவெண்பா :— (பலவடிமுக்கால்) நான்கடியின் மிக்க பலவடியான் வருவது. ரு முதல் கஉ வரை (செய்-வை. கஅ, ககூ, உ0, உக, உஉ, உ௩.)

ரு. நேரிசைச்சிந்தியல் வெண்பா :— (ஈரடிமுக்கால்) நேரிசை வெண்பாவேபோல இரண்டாமடியினிறுதி தனிச்சொற்பெற்று இருவிகற்பத்தானும் ஒருவிகற்பத்தானும் மூன்றடியான்வருவது. (செய்-வை. உச, உரு.)

சு. இன்னிசைச்சிந்தியல் வெண்பா :— இன்னிசை வெண்பாவே போலத் தனிச்சொல்லின்றி ஒரு விகற்பத்தானும் பல விகற்பத்தானும் மூன்றடியாய் வருவது. (செய் - வை. உசு, உஎ. உஅ.)

சவலை வெண்பா :— தனிச்சொலின்றி இரண்டு குறள் வெண்பாக்களை இணைத்துச் செய்யும் வெண்பா. (உ - ம்) "அட்டாலும்...தரும்"

இனம் :— "பாவொத்து இனமாய் நடத்தலின் இனமே."

## வெண்பா வினம்.

க. குறள்வெண்பாவினினங்கள் :—(அ) வெண்செந்துறை அல்லது செந்துறைவெள்ளை. (ஆ) குறட்டாழிசை அல்லது தாழிசைக்குறள்.

உ. வெண்பாவினம் :— (அ) வெளிவிருத்தம். (ஆ) வெண் டாழிசை அதாவது வெள்ளொத்தாழிசை. (இ) வெண்டுறை. (ஈ) வேற் றொலி வெண்டுறை.

வெண்செந்துறை :— இரண்டடியாய்த் தம்முள் அளவொத்து விழுமியபொருளும் ஒழுகியஓசையுமுடையதாய்வருவது. (செய்-வை. உகூ.)

குறட்டாழிசை:— (அ) நாற்சீரின்மிக்க பலசீரான்வந்து அடி யிரண்டாய் ஈற்றடி குறைந்து வருவது. (செய் - வை. ௩0.) (ஆ) அடி யிரண்டாய் அளவொத்து (வெண்செந்துறையையொத்து) விழுமியபொரு ளும் ஒழுகிய ஓசையுமின்றி இவ்வாறே செந்துறைவெள்ளையிற்சிதைந்து வருவனவெல்லாம் செந்துறைச்சிதைவுத் தாழிசைக் குறள் எனப்படும். (செய் - வை. ௩க.)(இ) செப்பலோசையிற் சிதைந்து. வேற்றுத்தளை தட்டு குறள்வெண்பாவிற் சிதைந்து வருவனவெல்லாம் குறள் வெண்டாழிசை எனப்படும். (செய் - வை. ௩உ.)

வெளிவிருத்தம் :— மூன்றடியானு முற்றுப்பெற்று அடிதோறும் இறுதிக்கண் தனிச்சொல்லாய் வருவது. நாற்சீரடியுட்பட்டு அடங்காது வேறாய்வருவது ஈண்டுத் தனிச்சொல் என்க. (செய் - வை. ௩கூ, ௪0.)

வெண்டாழிசை :— (அ) மூன்றடியாய் ஈற்றடி வெண்பாவே போல முச்சீரடியான் இறுவது. (முதலிரண்டடியும் நாற்சீரான்வரும்.) (செய் - வை. ௩௩.) (ஆ) சிந்தியல்வெண்பா ஒருபொருண்மேல்மூன்றடுக்கி வருவது. (செய் - வை. ௩௪.)

வெண்டுறை :— மூன்றடிச் சிறுமையாய் ஏழடிப் பெருமை யாய் இடையிடை நான்கடியானும் ஐந்தடியானும் ஆறடியானும் வந்து பின் சிலஅடி சில சீர் குறைந்து. வருவன ஒருசார் வெண்டுறையின் ஈற்றடி ஒன்றொரு சீர் குறைந்து வருதலுமுளது. (செய் - வை. ௩௫, ௩௬.)

[செப்பலோசையிற் சிறிது வழுவிவந்த நேரிசை இன் னிசை வெண்பாக்களை ஒருபுடைஒப்புமை நோக்கி வெண்டுறைப் படுத்தி வழங்கினு மிழுக்காது. (உ - ம்) இதுவோ திருவாசு.]

வேற்றொலிவெண்டுறை — முன்னர்ச்சிலஅடி ஓரோசையாயும் பின்னர்ச் சில வடி மற்றோ ரோசையாயும் வருவன ஒருசார் வேற்றொலி வெண்டுறை. (செய் - வை. ௩எ.)

ஆசிரியப்பா:–(அகவற்பா) நேரிசையாசிரியப்பா, இணைக்குறளா சிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, அடிமறிமண்டில ஆசிரியப்பா என நான்குவகைப்படும்.

இலக்கணம், அகவலோசையோடு அளவடித்தாகியும் இயற் சீர் பயின்றும் அயற்சீர்விரவியும் தன்றளை தழுவியும் பிறதளை மயங்கியும் நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீர்கள். அதாவது கூவிளங்கனி கருவிளங்கனி வரப்பெறாததுமாயுள்ளது. ஆசிரிப்பா நான்கிற்கும் 'ஏ' என்னும் அசைச் சொல்லால் இறுவது சிறப்புடைத்து. ஓ, என், ஈ, ஆ, ஐ இவ்வெழுத்துக் களானும் வரும்.

க. நேரிசையாசிரியப்பா :—ஈற்றயலடி முச்சீரான்வருவது. (செய் - வை. சக, சஉ.)

உ. இணைக்குறளாசிரியப்பா :— ஈற்றடியும் முதலடியுமொழிந்து இடையடிகள் இரண்டும் பலவும் குறளடியானும் சிந்தடியானும் வருவன. (செய் - வை. சங.)

ங. நிலைமண்டில ஆசிரியப்பா :— எல்லா அடியுந் தம்முள் அளவு ஒத்து நாற்சீரடியாய் வருவது. (செய் - வை. சச.)

ச. அடிமறி மண்டில ஆசிரியப்பா :— எல்லா அடியும் முதல் நடு இறுதியாக உச்சரிப்பினும் ஓசையும் பொருளும் பிழையாது வருவது. (செய் - வை. சரு.)

ஆசிரியப்பாவினினம் மூன்றுவகைப்படும்.

க. ஆசிரியத்தாழிசை :— (அ) மூன்றடியாய்த்தம்முள் அளவொத்து வருவது. (செய் - வை. சசு.) (ஆ) அவை ஒருபொருண்மேல் மூன்றடுக்கி வருதல் சிறப்புடைத்து. (செய் - வை. சஎ.)

உ. ஆசிரியத்துறை :— (அ) நான்கடியாய் ஈற்றயலடி குறைந்து வருவனவும் (செய் - வை. சஅ.) (ஆ) நான்கடியாய் ஈற்றயலடி குறைந்து இடைமடக்காய் வருவனவும் (செய் - வை. சகூ.) (இ) நான்கடியாய் இடையிடை குறைந்து வருவனவும் (செய் - வை. ருO.) (ஈ) நான்கடியாய் இடையிடை குறைந்து இடைமடக்காய் வருவனவும் (செய் - வை. ருக.) ஆகும். [ஆசிரியத்துறையில் எவ்வளவு சீரானும் அடியாய் வரப்பெறும்.]

ங. ஆசிரியவிருத்தம் :— கழிநெடிலடி நான்காய்த்தம்முள் அளவொத்து வருவன. (செய் - வை. ருஉ, ருங, ருச, ருரு, ருசு.)

கலிப்பா :— துள்ளோசைத்தாய் நேரீற்றியற்சீரும் (மாச்சீரும்) நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீரும் (கூவிளங்கனியும் கருவிளங்கனியும்) வாராது நிரைமுதலாகிய வெண்பாஉரிச்சீர்மிக்கு, நேரடித்தாய் கலித்தளையும் அயற்றளையும் தட்டு வருவது. தரவு தாழிசை என்னும் முதலுறுப்பும் அராகம் அம்போதரங்கம் தனிச்சொல் சுரிதகம் என்னும் துணையுறுப்பு முடைத்தாய் ஒத்தாழிசைக்கலி வெண்கலி கொச்சகக்கலி என்ற வேறுபாட்டான் வருவது.

கலியுறுப்புக்களைப்பற்றிய விவரம் :— (அ) தரவு (எருத்தம்) தந்து முன்னிற்றலிற்றரவே. அம்போதரங்க ஒத்தாழிசைக்கலிப்பாவிற்கும் வண்ணக ஒத்தாழிசைக்கலிப்பாவிற்கும் பெருக்கஞ்சுருக்கமில்லை. தரவு ஆறடியே ஆவது. இவ்விரண்டு கலிப்பாக்களையுமொழித்து அல்லாத கலிப்பாவிற்குத் தரவு மூன்றடியே சிறுமை. பெருமை வரையறையில்லை. தரவு கொச்சகக்கலிப்பாவிற்கு நான்கடியே சிறுமை வருவதெனக்கொள்க. (ஆ) தாழிசை – (இடைநிலைப்பாட்டு) தாழிசையொத்து ஆழ்ந்து இறின் அஃது ஒத்தாழிசையே. தரவடியைக்காட்டிலும் தாழிசையடி சுருங்கி வருவது. [தாழிசைகட்கு இரண்டடிசிறுமை நான்கடிபெருமை இடை மூன்றடியானும்வரும்.] (இ) தனிச்சொல் (விட்டிசை, கூன், தனிநிலை)

தனிதர நிற்றலிற் றனிச்சொல். (௬) சுரிதகம். (மட்க்கியல், வாரம், வைப்பு, போக்கியல்) குனிதிரை நீர்ச்சுழிபோல நின்று சுரிந்திறுதலின் சுரிதகம். (௨) அம்போதரங்கம் அசையடி, பிரிந்திசைக்குறள், சொற்சீரடி, எண்,)இது கரைசாரச்சார ஒருகாலைக்கொருகால் சுருங்கிவருகின்ற நீர்த்தரங்கம்போல வருவது. எண்சீர் ஈரடியாலிரண்டும், நாற்சீர் ஓரடியால்நான்கும், முச்சீரால் எட்டும், இருசீரால் பதினாறுமாய்வருவதுசிறப்புடைத்து. எட்டும் பதினாறும் என்று சொல்லப்பட்டன நான்கும் எட்டுமாகி சுருங்கியும் வரப்பெறும். இவற்றைப் பேரெண், அளவெண், இடையெண், சிற்றெண் எனவும் பெயரிட்டு வழங்குவர். பேரெண் நாற்சீரீரடியாய் வருவன. அளவெண் நாற்சீரோரடியாய் வருவன. இடையெண் முச்சீரோரடியாய் வருவன. சிற்றெண் இருசீரோரடியாய் வருவன. (௯) அராகம் (வண்ணகம், முடுகியல், அடுக்கியல்) அராகவுறுப்புத்தான் அளவடிமுதலாகிய எல்லா அடியினும் வரப்பெறும். அடிவரையறையாவது, சிறுமை நான்கடி, பெருமை எட்டடி, இடை ஐந்தடியானும் ஆறடியானும் ஏழடியானும் வரப்பெறும்.

க. ஒத்தாழிசைக்கலி மூன்று வகைப்படும். (அ) நேரிசையொத்தாழிசைக்கலிப்பா - முன் ஒருதரவு வந்து அதன் பின்பு மூன்றுதாழிசை வந்து அதன்பின் ஒரு தனிச்சொல் வந்து அதன்பின் ஆசிரியத்தானுவது வெண்பாவானுவது ஒருசுரிதக வுறுப்புப்பெற்று வருவது. (செய்-வை. ருஎ.) (ஆ) அம்போதரங்க ஒத்தாழிசைக்கலிப்பா - தரவு (ஆறடியில் மாத்திரம் வரவேண்டும்) தாழிசை அம்போதரங்கம் தனிச்சொல் சுரிதகம் ஆகிய ஐந்து உறுப்புக்களை இம் முறையிலே பெற்றுவருவது. (அம்போதரங்கம் தாழிசைக்கும் தனிச்சொல்லுக்கும் இடையே அவசியம் வரல்வேண்டும்.) (செய் - வை. ருஅ.) (இ) வண்ணக ஒத்தாழிசைக்கலிப்பா - அம்போதரங்க உறுப்பிற்கும் தாழிசைக்கும் நடுவே அராகவுறுப்புப்பெற்றுத் தரவுதாழிசை அராகம் அம்போதரங்கம் தனிச்சொல் சுரிதகம் என்னும் ஆறுறுப்புடன் வருவது. (இக்கலிப்பாவில் தரவு ஆறடியில் மாத்திரம் வரல்வேண்டும்.) (செய் - வை. ருகூ.)

௨. வெண்கலிப்பா இரண்டு வகைப்படும். (அ) கலித்தளை தட்டுக் கலியோசைதழுவியும் வெண்டளை தட்டு வெள்ளோசைதழுவியும் வந்து ஈற்றடிமுச்சீரான் முடிவது. (செய் - வை. சுo.) (இவ்வெண்கலிப்பாவில் வேற்றுத்தளை தட்டு அருகிவரவும் பெறும்.) (செய் - வை. சுக.) பஃறொடை வெண்பாவில் கலித்தளை தட்டுமாயின் அது வெண்கலி என்று வழங்கப்படும். (அ) கலிவெண்பா பஃறொடை வெண்பாவே. (வேற்றுத்தளை விரவாது). பஃறொடை வெண்பாவுக்குரிய பன்னிரண்டு அடிகளைக்காட்டிலும் அதிகமாய்ப்பெற்று (தனிச்சொற்பெற்றும் பெருதும்) வருவது கலிவெண்பாவாகும். (உ - ம்) திருமடல், உலா, மேகவிடுதூது முதலியன.

௩. கொச்சகக்கலிப்பா ஐந்துவகைப்படும். இதனிலக்கணம் — ஒரு தரவு வந்தும் இருதரவுவந்தும் தாழிசைசிலவந்தும் தாழிசை பலவந்தும் தரவு தாழிசை அராகம் அம்போதரங்கம் தனிச்சொல் சுரிதகம் என்னும் ஆறுறுப்புக் தம்முள் மயங்கியும் வெண்பாவினேடும் ஆசிரியத்தினேடும்

மயங்கியும் வருவனவெல்லாம் கொச்சகக்கலிப்பாவாகும். தனிச்சொல்லும் சுரிதகமும் இடையிடைவரப்பெறும். (அ) தரவு கொச்சகக்கலிப்பா (1) கலித்தளை தட்டு தனிச்சொல்லும் சுரிதகமும் பெருது தரவுஒன்ருய் வருவது. (செய் - வை. சுங.) (2) கலித்தளை தட்டு தனிச்சொல்லும் சுரிதகமும்பெற்று தரவு ஒன்ருய் வருவது. (செய்-வை. சுச.) (இவ்விரண்டிலும் ஒருதரவு மாத்திரம் வரக்கூடும். அதுவும் குறைந்தது நான்கடியாக இருக்கவேண்டும்.) (ஆ) தரவிணைக்கொச்சகக்கலிப்பா - தனிச்சொல்லும் சுரிதகமும் பெற்று இரண்டு தரவுடன் வருவது. (செய் - வை. சுரு.) (இ) சிஃருழிசைக் கொச்சகக்கலிப்பா - தரவு ஒன்றும் சில தாழிசை (குறைந்தது மூன்று தாழிசைகள்) யும் இடையிடை தனிச்சொல்லும் பெற்று சுரிதகத்தான் இறுவது. (செய் - வை. சுசு.) (ஈ) பஃருழிசைக் கொச்சகக்கலிப்பா - தரவு ஒன்றும் பலதாழிசைகளும் தனிச்சொல்லும் சுரிதகமும் பெற்று வருவது. (செய் - வை. சுஎ.)

உ. மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா - உறுப்புக்கள் தம்முள்மயங்கியும் பிறவற்ருேடுமயங்கியும் வரும். வரலாற்று முறைமையோடுங் கூட்டிக் கலியுறுப்பில்மிக்கும் குறைந்தும் பிறழ்ந்தும் உறழ்ந்தும் மயங்கியும் கலியுள் வரக்கூடாத நேரீற்றியற்சீரும் நிரை நடுவாகிய வஞ்சியுரிச்சீரும் ஐஞ்சீரடியும் வந்து ஒத்தாழிசைக்கலிப்பாக்களோடு ஒவ்வாது வருவனவெல்லாம் மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா. (செய் - வை. சுஅ.) தரவு இரண்டு தாழிசை ஆறு தனிச்சொல் ஒன்றுக்குமேல் மிகுதி. (கலித்தொகை, குறிஞ்சி - காமர்கடும்புனல்.)

---

## கலியினம்.

க. கலித்தாழிசை (அ) இரண்டடியும் பலவடியும் வந்து ஈற்றடி மிக்கு அல்லாத அடிகள் தம்முள் ஒத்தும் ஒவ்வாதும் வருவது. (செய் - வை. எ0, எக.) (ஆ) தனியே வரப்பெறுமாயினும் ஒரு பொருண்மேல் மூன்றடுக்கி வருதல் சிறப்புடைத்து. (செய் - வை. சுகூ.) (சீர்வரையறுத்தில்லாமையால் எனைத்துச்சீரானும் அடியாய் வரப்பெறும். (இடையடிகள் மடக்கிவரவும் பெறும்.)

உ. கலித்துறை :— அளவொத்த ஐஞ்சீரடி நான்காய் நிகழ்வது. இக்கலித்துறை, கலிநிலைத்துறை, காப்பியக்கலித்துறை, விருத்தக்கலித்துறை எனவும் வழங்கப்படும். (அ) கட்டளைக்கலித்துறை — 'அடியடிதோறும் ஐஞ்சீராகி முதற்சீர் நான்கும் வெண்டளைபிழையாக் கடையொரு சீரும் விளங்காயாகி நேர் பதினறே நிரை பதினேழு என்று ஒதினர் கலித்துறை ஓரடிக்கெழுத்தே' - அதாவது நான்கடியாய் ஒவ்வோரடியினும் ஐந்து சீர்கள் வரப்பெற்று அச்சீர்களுள் முதல் நான்குசீரும் வெண்டளைபொருந்தி நிற்ப கடைச்சீரொன்றுமே 'கூவிளங்காய் கருவிளங்காய்' என்பனவற்றுள் ஒன்ருய்ப்பொருந்தப்பெற்று நேரசை முதலாகத்தொடங்கிய அடிகள் ஒவ்வொன்றிலும் பதினறுஎழுத்துக்களும் நிரையசைமுதலாகத்தொடங்கிய

அடிகள் ஒவ்வொன்றிலும் பதினேழு எழுத்துக்களும் பொருந்தப்பெற்று முடிவது. (செய் - வை. எ௩, எ௪.) (எழுத்து எண்ணுங்கால் ஒற்றுக்களைச் சேர்க்கக்கூடாது.)

முதற்சீர்நான்கும் பெரும்பான்மையும் இயற்சீர்களேயாகவும் சிறுபான்மை அவற்றோடு தேமாங்காய்ச்சீர், புளிமாங்காய்ச்சீர்கள் விரவியும் வரப்பெறும். ஈற்றுச்சீராகிய விளங்காய்ச்சீர்கள் இரண்டனுள் கூவிளங் காய்ச்சீருக்குப் பதிலாக அதனோடு ஒருபுடை ஒத்தனவாகிய தேமாங்கனி தேமாந்தண்பூச் சீர்களும், கருவிளங்காய்ச்சீர்க்குப்பதிலாக அதனோடு ஒருபுடை ஒத்தனவாகிய புளிமாங்கனி புளிமாந்தண்பூச் சீர்களும் சிறுபான்மை வரப்பெறும். இக்கட்டளைக்கலித்துறையில் வெண்பா விற்போல ஓரடியின் இறுதிச்சீர் அடுத்தஅடியின் முதற்சீரோடு வெண்டளை பொருந்தி வரவேண்டும் என்னும் நியதியில்லை. அது நான்கடியினும் சீர்கள் அளவொத்திருக்கவேண்டும் என்னும் நியதியில்லை. அது பெரும் பான்மையும் ஏகாரத்தையும் சிறுபான்மை ஓகாரத்தையும் ஈற்றிற்பெற்று முடியும். மெய்யை ஈற்றிற்பெற்று முடியும் கட்டளைக்கலித்துறைகளு முண்டு. கட்டளைக்கலித்துறை, திலதக்கலித்துறை எனவும், கோவைக் கலித்துறை எனவும், விருத்தம் (திருவிருத்தம்) எனவும் சொல்லப்படும். [நாலாயிரதிவ்யப்பிரபந்தம், திருவாசகம், தேவாரம் முதலியவற்றில் இக்கட்டளைக் கலித்துறைக்கு விருத்தம் எனப் பெயர் கொடுக்கப்பட்டிருக் கிறது.]

௩. கலிவிருத்தம் :— நாற்சீரடி நான்காய் அளவொத்து வருவது. (செய் - வை. எ௫.)

கட்டளைக்கலிப்பா :— முதற்சீர் மாச்சீராய் வரப்பெற்ற நாற் சீரடி தான் தன் முதற்சீரின் முதலசை நேரசையாயின் பதினேரெழுத்தை யும் நிரையசையாயின் பன்னிரண்டெழுத்தையும் பெற்று அரையடியாய் நிற்ப, அதனோடு அவ்வாறே வரப்பெற்ற மற்றோர் அரையடியுஞ் சேர்ந்து முழு அடியாகிய அடி நான்கொத்து வருவது. (உ - ம்) அண்டர் போற்றுந் திருவரங் கேசனர் ... ... ... ... இதற்குக் கட்டளை,

தேமா
புளிமா } கூவிளம் கூவிளம் கூவிளம்.

நடுவிலுள்ள இரண்டு கூவிளங்களுக்குப் பதிலாக தேமா கருவிளம் அல்லது தேமா புளிமாங்காய் வரவும் பெறும்.

தரவுகொச்சகக்கலிப்பாவிற்கும் கலிவிருத்தத்துக்கும் உள்ள வித்தியாசம் — துள்ளலோசையிற் சிறிதும் வழுவாது நாற்சீர் நாலடியான் வருவது தரவுகொச்சகக்கலிப்பா. துள்ளலோசையிற் சிறிது வழுவி நாற்சீர் நாலடியான் வருவது கலிவிருத்தம்.

வஞ்சிப்பா :— (குறைந்தது மூன்றடி) வஞ்சிக்கொடிபோல் அளவடியையும் புறநிலை வாழ்த்து முதலியவற்றையும் வஞ்சித்து வருவது. (செய் - வை. எ௬, எஎ.)

பொதுவிலக்கணம் (அ) இருசீரடி (குறளடி) யானும் (ஆ) முச்சீரடி (சிந்தடி) யானும் (செய் - வை. எசு.) தூங்கலோசைத்தாய் வரும். இதில் பதினறு பொதுச்சீர்களும் நான்கு கனிச்சீர்களும் வரப்பெறும். குறளடி வஞ்சிப்பாவும் சிந்தடி வஞ்சிப்பாவும் எப்பொழுதும்தனிச்சொற் பெற்று ஆசிரியச் சுரிதகத்தால் இறும். வஞ்சிப்பா ஆசிரியச்சுரிதகத்தா னல்லது வெள்ளைச் சுரிதகத்தால் இறப்பெறுது.

---

## வஞ்சியினம்.

க. வஞ்சித்தாழிசை :— குறளடி நான்காய் ஒரு பொருண் மேல் மூன்றடுக்கியே வருவது. அதாவது மூன்று வஞ்சித்துறைகள் கொண்டது ஒரு வஞ்சித்தாழிசையாம். (செய் - வை. எஅ.)

உ. வஞ்சித்துறை :— இருசீரடி நான்காய் ஒரு பொருண்மேல் ஒன்ருய் வருவன. (செய் - வை. எகூ.)

ங. வஞ்சி விருத்தம்:- முச்சீரடி நான்காய் வருவது. (செய்- வை. அ0.)

மருட்பா :— (மயக்கம்) புறநிலைவாழ்த்தும் கைக்கிளையும் வாயுறைவாழ்த்தும் செவியறிவுறூஉம் என்னும் நான்கு பொருண்மேலும் வெண்பாமுதலாக ஆசிரியம் ஈருக வருமெனின் அது மருட்பாஆகும்.

சமனிலை மருட்பா :—மருட்பாவில் வெள்ளடியும் ஆசிரிய வடியும் சமமாய் வருவது.

வியனிலை மருட்பா :— மருட்பாவில் வெள்ளடி குறைந்து ஆசிரியவடி மிகுந்துவருதல்.

(அ) புறநிலை வாழ்த்து மருட்பா :— முன்னர் வெண்பாவும் பின்னர் அகவலும் புறநிலை வாழ்த்தாய் வருவது. (செய் - வை. அக.) (ஆ) கைக்கிளை மருட்பா :—அவ்வாறே கைக்கிளைப்பொருளில் வருவது. (செய் - வை. அஉ.) (இ) வாயுறை வாழ்த்து மருட்பா :— அவ்வாறே வாயுறை வாழ்த்துப்பொருளில் வருவது. (செய் - வை. அங.) (ஈ) செவி யறிவுறூஉ மருட்பா :— அவ்வாறே செவியறிவுறூஉப் பொருளில் வருவது. (செய் - வை. அச.)

புறநிலைவாழ்த்தும் வாயுறை வாழ்த்தும் செவியறிவுறூஉ மருட் பாவினின்றி வெண்பாவேயாயும் ஆசிரியமேயாயும் வரப்பெறும். கலியும் வஞ்சியுமாய் வரப்பெறு. கைக்கிளை எல்லாப்பாவானும் வரப்பெறும். மருட் பாவேயாய் வருக என்னும் யாப்புறவில்லை. கைக்கிளை வெண்பா முதலாக ஆசிரியம் ஈருக வரும்வழி ஆசிரிய அடி இரண்டேயாய் அவற்றுள் ஈற்றய லடி முச்சீராயும் வரும். (மூன்ருயும் வருகிறது திருவரங்கக் கலம்பகம் ருள, செய் - வை. அஉ செய்யுட்களைப்பார்க்க.) சீர்கள் அளவொத்து வருதல் — ஒரு செய்யுளின் ஓரடியில் எவ்வெவ்விடங்களில் எவ்வெச்

சீர்கள் வந்தனவோ அவ்வவ்விடங்களில் அவ்வச்சீர்களே மற்றைய அடிகளினும் வருதல். (அதாவது) ஓரடியில் மாச்சீர்வந்தவிடத்தில் மற்றைய வடிகளினும் மாச்சீரே வருதல். இங்ஙனமே மற்றைச்சீர்களுக்கும் இவ்விதி கொள்க.

அடிகள் அளவொத்து வருதல் — ஒரு செய்யுளில் ஓரடியில் எத்துணைச் சீர்கள் வந்தனவோ அத்துணைச்சீர்களே மற்றைய அடிகளினும் வருதல். அளவு ஒவ்வாமல் வருதலாவது, சில அடிகளில் சிலசீர்கள் மிக்கும் குறைந்தும் வருதல். (விருத்தங்களில் சீர்கள் நான்கடியினும் அளவொத்து வரும். சிறுபான்மை சிலவடிகளிற் சில சீர்கள் ஒவ்வாது வரும்.)

---

## ஒழிபியல். (வாக்கியசேடம்).

சீருந் தளையும் கெடவந்தவிடத்துக் குற்றியலுகாரமும் உயிரளபெடையும் அலகு காரியம்பெறா. குற்றியலிகாரமும் குற்றியலுகாரமும் ஒற்றியல் பினவாய் நிற்கும்; உயிரளபெடைகள் நெட்டெழுத்தின் இயல் பினவாய் நிற்கும். அவை அலகுகாரியம் பெறும்போது குற்றியலிகரமும் குற்றியலுகாமும் குற்றெழுத்தின் பயத்தவாம். அலகுகாரியம் பெறாத போது குற்றியலிகாமும் குற்றியலுகாமும் மெய்யெழுத்தின் பயத்தவாம். ஒன்றரை மாத்திரை என்றோதப்பட்ட ஐகாரக்குறுக்கம் குற்றெழுத்தே போலக்கொண்டு அலகிடப்பெறும். ஐகாரக்குறுக்கம் குற்றெழுத்தேபோலக் குறிலோடும் நெடிலோடும்கூடிநின்று நிரையசையாகியும் தனியே நின்று நேரசையாகியும் வரும். ஒற்றுக்கள் அளபெழுந்தவிடத்து நேரசையாம். அளபெழாதவிடத்து ஒற்றுக்கள் அலகுபெறா. முன் பொது வகையால் தனிக்குறில் நேரசை யென்றாராயினும் விட்டிசைத்து நின்றவழியல்லது மொழி முதற்கண்நின்ற தனிக்குற்றெழுத்து நேரசையாமென்று உடம்படப் பெறாது. விட்டிசையாதவழி மொழிமுதற்கண் தனிக்குறில் குறிலோடும் நெடிலோடும் கூடி நிரையசையாம். (குறிப்பு, தற்சுட்டு, ஏவல், சுட்டு, வினா இவற்றில் விட்டிசைக்கும்.) மொழிக்கு மூன்றிடத்தும் விட்டிசைத்து வந்த குற்றெழுத்து நேரசையாமென்பதும் விட்டிசைப்பதுதான் குறிப்பு ஏவல் தற்சுட்டு வினா சுட்டு என்னும் ஐந்தன்கண்ணும் என்பதும் குற்றெழுத்து விட்டிசைத்துநின்றவிடத்து மற்றோரெழுத்தினோடுங்கூடி நிரையசையாகா தென்பதும் பெறப்பட்டன. நெட்டெழுத்து அளபெழுந்துவருமெனின் அஃது இரண்டு நேரசையாக வைக்கப்படும். மூன்று மாத்திரையின் மிக உச்சரிப்பினும் நேர் நேராக வைக்கப்படும். குற்றெழுத்தினோடு புணர்ந்த நெட்டெழுத்து அளபெழுந்தால் அவ்விரண்டனையுங்கூட்டி நிரையசையும் நேரசையுமாக வைக்கப்படும். பின்னின்ற குறிலோடும் நெடிலோடுங் கூடி அளபெடை நிரையசையாகாது.

இயற்சீர் வெண்டளையான் வந்த வெண்பாவடியும் வஞ்சியடியும் ஆசிரியப்பாவினுள் வந்து மயங்கப்பெறும். வெண்சீர் விரவிய இயற்றளை வெள்ளடியும் கலியடியும் ஆசிரியத்துள் அருகி வரப்பெறும். வஞ்சிப்

பாவினுள் ஆசிரியவடியும் கலியடியும் விரவி வரப்பெறும். வஞ்சியுள் ஆசிரியவடி பயின்றுவரும். கலியடியும் வெள்ளடியும் அருகியன்றி வாரா.) (உ - ம்) (பட்டினப்பாலை.) கலிப்பாவினுள் வெண்பா அடியும் ஆசிரிய வடியும் புக்கு மயங்கப்பெறும். ஒருசார் கலிப்பாவினுள்ளும் ஆசிரியப் பாவினுள்ளும் ஐஞ்சீரடியும் அருகி வரப்பெறும். வெண்பாவினுள் ஐஞ்சீரடி வரப்பெறாது.

கையனார் முதலியோர் கொள்கைப்படி தொடைவிகற்பங்கள் ஆவன :— (அ) முரண்தொடை (இரணத்தொடை, பகைத்தொடை) ஐந்துவகைப்படும். கடைமுரண் — அடிதோறும் இறுதிச்சீர்கள் மறுதலைப் படத்தொடுப்பது. கடையிணைமுரண் - கடையிருசீர்க்கண் மறுதலைப்படத் தொடுப்பது. பின்முரண் — இரண்டாஞ்சீர்க்கண்ணும் நான்காஞ்சீர்க் கண்ணும் மறுதலைப்படத்தொடுப்பது. கடைக்கூழைமுரண் — முதற்சீர்க் கண்இன்றி ஒழிந்த மூன்று சீர்க்கண்ணும் மறுதலைப்படத்தொடுப்பது. இடைப்புணர்முரண் — நடு இருசீர்க்கண்ணும் மறுதலைப்படத்தொடுப்பது. (மோனை, இயைபு, எதுகை, அளபெடை என்னும் தொடை நான்கிற்கும் இவ்வாறே ஒட்டிக்கொள்க.) (ஆ) மோனையும் எதுகையும் — வருக்க வெழுத்தும், நெடிலெழுத்தும், இனவெழுத்துமாகிய மூன்றும் எதுகையும் மோனையுமாய் வந்தால் அவை வருக்க எதுகை, நெடிலெதுகை, இன வெதுகை எனவும், வருக்க மோனை, நெடில்மோனை, இனமோனை எனவும் வழங்கப்படும். இனவெதுகை – வல்லினவெதுகை, இடையினவெதுகை, மெல்லினவெதுகை என மூன்று வகைப்படும். இனமோனை — வல்லின மோனை, மெல்லினமோனை என மூன்று வகைப்படும். (இ) எதுகை — தலையாகெதுகை, இடையாகெதுகை, கடையாகெதுகை என மூன்று வகைப்படும். மோனை – தலையாகுமோனை, இடையாகுமோனை, கடையாகு மோனை என மூன்று வகைப்படும். தலையாகெதுகை — அடிதோறும் சீர் முழுதும் எதுகை ஒன்றி வருவது. இடையாகெதுகை — அடிதோறும் இரண்டாம் எழுத்தொன்றே ஒன்றிவருவது. கடையாகெதுகை — வருக்க வெதுகை முதலாகப் பிறவழியால் வருவது. தலையாகுமோனை — அடி தோறும் சீர் முழுதும் மோனை ஒன்றி வருவது. இடையாகுமோனை— அடிதோறும் முதலெழுத்தொன்றுமே மோனை ஒன்றி வருவது. கடை யாகுமோனை — வருக்கமோனை முதலிய பிறவழியால் வருவன. (ஈ) உயிரெதுகை — இரண்டாம் எழுத்தொன்றாதாயினும் இரண்டாம் எழுத் தின் மேலேறிய உயிரொன்றிவருவது. ஆசெதுகை — ய, ர, ல, ழ என் னும் ஒற்று நான்கும் ஆசாய் வரும். (உ - ம்) (காய்மாண்ட, பூமாண்ட) முதலியன. இடையிட்டெதுகை — அடிதோறும் இடையிட்டு வருவது. இரண்டடி யெதுகை — முன்னிரண்டடி ஓர் எதுகையாய்ப் பின்னிரண் டடியும் மற்றோரெதுகையால் வருவது. மூன்றாமெழுத்தொன்றெதுகை — வந்துழிக்கண்டு கொள்க. மோனை முதலியவற்றிற்கும் இவ்வாறே கொள்க. (உ) விட்டிசை வல்லொற்றெதுகை — வல்லொற்று அடுத்தாற்போல விட்டிசைத்துக் குற்றெழுத்தினோடு புணர்வது விட்டிசை வல்லொற் றெதுகை. (உ - ம்) நொஅலைய. விட்டிசை மோனை - முதலெழுத்து இரண்டடிக்கண்ணும் விட்டிசைத்து வந்தால் விட்டிசைமோனை — அநு மோனை ம, வ, வழியெதுகை - அநுப்பிராசம் - மண்டலரும் விண்டலரும்

பாவினங்கள் எல்லாத்தொடையானும் வருமென்றாராயினும் பெரும்பான்மையும் தலையாகுமோனையிற்றிரிந்தும் வாரா எனவும் செந்தொடையொழிந்து எல்லாத்தொடைக்கும் இனவெழுத்து வரத்தொடுப்பதும் வழியெதுகை (அநுப்ராஸம்) வரத்தொடுப்பதும் சிறப்புடைத்து.

கூன் (பாத்திரத்தின் மூக்கு) — அடிமுதற்கண்பாவினது பொருளைத்தழுவித்தனியே நிற்பது கூன் எனப்படும். வஞ்சிப்பாவின் அடியின் இறுதிக்கண்ணும் நடுவின் கண்ணும் வரப்பெறும். வஞ்சியடியின் நடுவும் இறுதியும் அசை கூனுய் வருதல் சிறப்புடைத்து. சீர் கூனுய் வரினும் உகர இறுதியாகிய நேரீற்றியற்சீராயல்லது வாரா. அசைச்சீர் எல்லாப்பாவினுள்ளும் அருகியல்லது கூனுய்வாராது எனவே வெண்பா ஆசிரியம் கலி என்னும் இவற்றின் இடையும் இறுதியுங் கூன்வரப்பெறுது.

வகையுளி :— முன்னும் பின்னும் அசை முதலாகிய உறுப்புக்கள் நிற்புழியறிந்து குற்றப்படாமல் வண்ணம் அறுத்தல்.

வாழ்த்து வசை — இவற்றின்பேதங்களாகிய மெய்வாழ்த்து மெய்வசை இருபுற வாழ்த்து இருபுறவசை என்பன உண்மையில் வசையாக வேனும்,

இனிப் பாயிரத்தின் வகைகளையும் எழுத்தின் அகத்திலக்கணத்தையும் புறத்திலக்கணத்தையும் சொல்லின் பாகுபாட்டையும் அகப்பொருளையும் புறப்பொருளையும் அவற்றின் திணை துறைகளையும் குணத்தையும் அலங்காரத்தையும் சொல்லணி பொருளணி முதலியவைகளையும் முத்தகம் குளகம் என்னும் செய்யுளையும் பாட்டியலிற் கண்ட சொற்றொடர்நிலைச் செய்யுளையும் பொருட்டொடர்நிலைச் செய்யுளையும் ஏனைப் பிரபந்த வகைகளையும் பொருள்கோளையும் எழுத்துக்குற்றம் முதலிய குற்ற வகைகளையும் வனப்புக்களையும் விரிந்த நூல்களிற்கண்டுகொள்ளலாம் பின்னர்க்கூறிய நூல்வனப்பு எட்டுவகைப்படும். அவற்றுள் அம்மை-சிலவாய் மெல்லியவாய சொற்களால் ஒள்ளியவாய பொருண்மேல் சிலவடியாற் சொல்வது. அழகு — செய்யுட்சொல்லாகிய திரிசொற்களான் ஓசை இனியவாகப் புணர்க்கப்பட்டது. தொன்மை — பழையதாகி நிகழ்ந்த பெற்றியுரைக்கப்படுவது. தோல் — இழும் என்னும் மெல்லியவாகிய சொற்களால் விழுமியவாய்க்கிடப்பனவும் எல்லாச்சொற்களானும் பல வடியாய்க்கிடப்பனவும் என இருதிறத்தனவாம். விருந்து — புதியவற்றின் மேற்று — இது இப்பொழுது உள்ளாரைப்பாடுவது. இயைபு — ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள என்னும் பதினொருபுள்ளியும் ஈறாக வந்த பாட்டு. புலன் — இயற்சொல்லால் பொருள்தோன்றச்சொல்லப்படுவது. இழைபு — வல்லொற்றியாதுந்தீண்டாது செய்யுளியல் வாழ்த்தாகவேனும் வசைபோன்று வாழ்த்தாகவேனும் வாழ்த்துப்போன்று வசையாகவேனும் இருபுறமாகவும் தனியாகவும் தாய்தந்தை என்னும் இருமரபுபற்றியும் பற்றாதும் வரும்.

உடையாரால் எழுத்தெண்ணி அடிவகுக்கப்பட்ட குறளடி முதலாகப் பதினேழ்நிலத்து ஐந்தடியும் முறையானே யுடைத்தாய் ஓங்கிய சொற்களால் வருவது.

செய்யுளியலுடையார் குறளடிக்கு ௪ — ௬ எழுத்துக்களும், சிந்தடிக்கு ௭ — ௯ எழுத்துக்களும் அளவடிக்கு ௧௦ — ௧௪ எழுத்துக்களும், நெடிலடிக்கு ௧௫ — ௧௭ எழுத்துக்களும், கழிநெடிலடிக்கு ௧௮ — ௨௦ எழுத்துக்களும், ஒற்று நீக்கி நிலம் ஆகவரும் என்று கூறுவர்.

---

## சந்தம், வண்ணம்.

௧. ஒரு செய்யுள் சந்தக்குழிப்புகளை ஆதாரமாகக்கொண்டுவருங்கால் வண்ணச்செய்யுளாகின்றது. தொல்காப்பியம், யாப்பருங்கலம், யாப்பருங் கலக்காரிகை முதலிய இலக்கண நூல்களில் கூறியுள்ள வண்ணம் வேறு. அவைகள் சீர்கள் தளையும்வகையால் விளையும் செப்பல், அகவல், துள்ளல் தூங்கல் என்னும் ஓசைநோக்கிக் கூறப்படுவன. அவற்றின் தொகை நூறு என்பர் அவிநயனார்.

௨. சந்தக்குழிப்புகள் தத்த, தாத்த, தந்த, தாந்த, தன, தான தன்ன, தய்ய என எட்டு வகையாம். இவை இவ்வெட்டின் நீடலாகி தத்தா, தாத்தா, தந்தா, தாந்தா, தனா, தானா, தன்னா, தய்யா என்னு எட்டுடன் கூடிப்பதினாறும். இவை ஒவ்வொன்றும் ஒரு முழுச்சந்த இப்பதினாறன்மேல் ன, னா, என்னும் உயிர்மெய்கள் தனித்து வரினு இவற்றோடு த், ம் என்னும் ஒற்றுக்கள் சேர்ந்துவரினும், அல்லது இ வொற்றுக்கள் தனித்துவரினும் அரைச்சந்தம் எனப்படும். தந்தன, தந்த என்பதில் னவ்வும் னாவும் தனித்து வந்து அரைச்சந்தமாயின. தந்தன தந்தனாத், தந்தனம், தந்தனாம் என்பதில் னவ்வும் னாவும் முறையே த், என்னும் ஒற்றடுத்து அரைச்சந்தமாயின. தந்தத், தந்தம் என்புழி த், என்னும் ஒற்றுக்கள் தனித்து வந்து அரைச்சந்தமாயின. தந்தன என்பதி உள்ள தந்த முழுச்சந்தமும் ன அரைச்சந்தமும் ஆகலில் தந்தன என்ப ஒன்றரைச்சந்தம். இங்ஙனமே மற்றவற்றையும் கொள்ளவேண்டு வலித்தல், மெலித்தல்களால் தய்ய என்னும் சந்தம் முறையே தன்ன, த என ஆகும். தன்னச்சந்தம் மெலித்தலால் தனச்சந்தமாகும். சந்தங்க சிலசேர்ந்து ஒருதுள்ளலாகும். பல்வகைத்துள்ளல் கொண்டது ஒ குழிப்பு. அளவில் எண்வகைத்தாகிய சந்தம் புணருமிடத்துத்தோன்று குழிப்புகள் கணக்கிலடங்கா பெற்றிபற்றி “அளவிற் கெண்வகைத்தாகி வண்ணம் புணர்ப்பின் றோன்றிப் பொலிவ வாய குழிப்பின் தொகைக்கு கோடியும் சிறிதே” என்பர். மூன்று குழிப்பும் ஒருசிறு தொங்கல் துள் லும் சேர்ந்தது ஒருகலையாகும். சிலகலைகள் இரண்டு தொங்கற்றுள்ளல்க கொண்டுவருதலுமுண்டு.

௩. சந்தப் பாக்கள் கலிவண்ணம், வகுப்புவண்ணம், உடற்கூற்று வண்ணம், வண்ணவிருத்தம், சந்தவிருத்தம் என ஐவகைத்தாம். எட்டுக்கலை கொண்டதாய் இடையிட்ட எதுகை யுடையதாய், தொங்கலும் தொடை யும் பலவாகி வருவது கலிவண்ணம். இவ்வண்ணம் மிக்கு வருங்கால் அடிக்கு நாலுகலையாகவும், எட்டுக்கலையாகவும், பதினாறுகலையாகவும் வருவதுமுண்டு. கலிவண்ணங்களில் முதற்கலையில் தெய்வச்செயலையும், இரண்டாவது கலையில் பாட்டுடைத்தலைவனது கிளை, கொடை, விருது முதலியவற்றையும், மூன்றாவது கலையில் புகழையும் வாகையையும், நான்காவது கலையில் நாடு நகரங்களையும் கூறி மற்றைப்பாதியாகிய நான்கு கலைகளிலும் அகப்பொருளில் ஏதாவது ஒரு துறையை அமைப்பர். கலி வண்ணத்தின் முற்பகுதிக்கு ஆண்கலையென்றும் பிற்பகுதிக்குப் பெண்கலை யென்றும் கூறுவர். தொங்கல்கள் ஒன்றாகத்தொகுக்குமிடத்து ஒரு செய்யுளாக அமைதலுமுண்டு. வண்ணத்திரட்டு என்னும் ஒரு அருமை யான நூலில் காணப்பெறும் சிற்றம்பலவாணர் வண்ணம், அண்ணாமலையார் வண்ணம், செண்டலங்காரப்பெருமாள் வண்ணம் ஆகியவைகள் கலி வண்ணங்களுக்கு உதாரணமாம்.

௪. எட்டு, பதினாறு, முப்பத்திரண்டு, அறுபத்துநான்கு என்னும் நான்குவகையில் கலைவகுத்து நான்கு எதுகையும் மோனையும் அமைய ஒருபொருளின் புகழைப் பல படியாக வகுத்து வகுத்து வருணித்துக் கூறுவது வகுப்பு வண்ணமாம். அருணகிரிநாதர் அருளிய வேல்வகுப்பு, மயில் வகுப்பு என்பனவும், கலம்பகம் என்னும் பிரபந்தத்தின் ஒருறுப் பாகிய புயவகுப்பும் வகுப்பு வண்ணங்களாம்.

௫. மேற்கூறியாங்கு உடலின் தோற்றம், வளர்ச்சி, முடிவு ஆகிய வற்றை விதந்தோதுவது உடற்கூற்று வண்ணமாம். பட்டினத்துப் பிள்ளையார் அருளிய உடற்கூற்று வண்ணம் இதற்கு உதாரணமாம். கலிவண்ணம் போல் எட்டுக்கலையும், எதுகை மோனையும் அமைந்து துதி முதலானபொருள்கொண்டு வரும்பாக்கள் வண்ணவிருத்தமாம். இவை கலி வண்ணம்போலவே மிக்குவருங்கால் அடிக்கு நான்கு கலையாகவும், எட்டுக் கலையாகவும், பதினாறுகலையாகவும் வரும். குறுகி வருங்கால் நான்கு கலையாக வருதலுமுண்டு. அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்யாவும் வண்ணவிருத்தங்களே. சில பாவும் பாவினங்களும் சந்தக்குழிப்பை ஆதார மாகக்கொண்டு வருங்கால் சந்தவிருத்தங்களாகின்றன. சிற்சில விடங் களில் ஓசை கெடாது சந்தம் பிறழ்ந்து வருதலுமுண்டு. காவியங்களிலும், புராணங்களிலும், கலம்பகங்கள் முதலான பிரபந்தங்களிலும் இச்சந்தப் பாக்கள் பயிலப்படுவதுண்டு. இச் சிதம்பரச் செய்யுட்கோவையின் ௪௦, ௫௩, ௫௫, ௫௬, செய்யுட்கள் சந்தவிருத்தங்களே.

பதினான்கு சீர் விருத்தம் :— "கண்டுபடுகுதலை.............."
சீரைக்கணம் என்றும் ஒரு குற்றெழுத்தின் ஓசையை மாத்திரை என்றும் கொள்ளுக. ஒரு சீரில் ஐந்து மாத்திரை இருக்கும் ; அங்கிங்கெ, தங்கும்ப, டிக்கிச்சை. நெட்டெழுத்து தனித்து வரினும் ஒற்றடுத்து வரினும் இரண்டு மாத்திரைஅளவு உச்சரிக்கப்படும் ; ஞதபடி, காசமா, நான்முகனு

பூர்த்தியா. சீரின் முதலில் வரும் ஐகாரம் இரண்டு மாத்திரை அளவு உச்சரிக்கப்படும் ; மைய ஒரு, ஐயநின், வைத்துயிர்க் ஏழாவது சீர் பல், பால், பா என்பதுபோல நின்று இரண்டு மாத்திரை அளவு உச்சரிக்கப் படும் ; மனவாக்கி னில், சலிசெய்கு வாம், னந்தசிவ மே. ஏழாவது சீர் பா ல என்பதிற்போல் தனிக்குற்றெழுத்தில் முடியுமானல் அந்தக் குற்றெழுத்தை நெட்டெழுத்தைப்போல இரண்டு மாத்திரை அளவு உச்சரிக்க வேண்டும் ; பூர்த்தியா கி, னிச்சை போ ல. வல்லெழுத்து முதலியவற்றின் முன்வரும் லகர ளகர ஒற்றுக்களும், வகரத்தின் முன் வரும் மகர ஒற்றும், மெல்லினம் முதலியவற்றின் முன் வரும் ணகர னகர ஒற்றுக் களும் அலகு பெறா. ய, ர, ழ ஒற்றுக்களும் அலகு பெறா. இவை சீரின் முதற்கண் அன்றி ஏனைய இடங்களிலும் வரும் ; கங்குல்பக, கன் மங்கள் போராடுதே, நித்திரை கொள் வேன், ஆராயும் வேளையிற், நிற்கும் வண், னுக்கிருகண் மணியாயு, திருமாய ன் வெற்றிபெறு, பேய்க்கு மொரு, பா ர் க்கு மிட, ரூர்ப்பா ழ் த்த. குறில் நெடில் இணைந்தும் குறில் நெடில் இணைந்து ஒற்றடுத்தும் வரும் அசையில் முதலில் நிற்கும் குற்றெழுத்து ஓசை பெறா ; தவாத சாந், துவாதசாந், பரோட்சஞா. 1, 5, 8, 12 சீர்களில் மோனை வரவேண்டும். அடிகள்தோறும் எதுகை நயமாக இருக்கவேண்டும். மகுடம் பிராசமும் சந்தஇன்பமும் பெற்று வரல்வேண்டும்.

செய்யுளியற்றல் — முன்னர்க் கூறிய விதிகளைக்கொண்டு பாக்களையும் பாவினங்களையும் தக்க பொருள்களை அமைத்து அணி பெற இயற்றல்வேண்டும். வஞ்சித்தாழிசை இருசீரான் நாலடிபெற்று வரும், மா விளம் (ஒற்றி யூரனை), எனவும் விளம் மா (காமரு சித்த) எனவும், இவை போல்வன வாகவும் வரும் ; விளம் தேமாவுக்குப்பதிலாக மா புளிமா வரலாம் (ராம னிடத்தில்). வஞ்சி விருத்தம் முச்சீரான் வருவது, அது மா விளம் விளம் (ஒட்ட ராமனை யும்பரும்) எனவும், இதிலும் விளத்திற்குப் பதிலாக மாங்காயும் (கைத்தோ டுஞ்சிறை கற்போயை) எனவும், கூவிளம் கூவிளத்திற்குப்பதிலாக தேமா கருவிளமும் (சிட்ட னென்று தொழுதலால்) எனவும், இவை போல்வனவும் வரும். நாற்சீரால் வரும் கலிவிருத்தம் விளம் விளம் மா கூவிளம் (சொற்றுணை வேதியன் சோதி வானவன்) எனவும், மா கூவிளம் கூவிளம் கூவிளம் (பொன்னை மாதரைப் பூமியை நாடிடேன்) எனவும், இதிலும் விளத்திற்குப்பதிலாக மாங்காயும் (அன்னம் பாலிக்கும் தில்லைச்சிற் றம்பலம்), கூவிளம் கூவிளத் திற்குப்பதிலாக தேமா கருவிளமும் (தன்னந் தனியனே) எனவும், விளம் விளம் விளம் விளம் (காலையார் வண்டினங் கிண்டிய காதொறும்) எனவும், விளம் விளம் விளம் மா எனவும், இவைபோல்வனவும் வரும். இவ்வாறு யாதேனும் ஒருகட்டளை பிறழாது வருவது கலிவிருத்தம். இனி ஓரடியின் நாற்சீரும் இயற்சீர் வெண்டளையிலும் வெண்சீர் வெண்டளையிலும் கலித் தளையிலும் வருவது இன்னிசைக்கொச்சகம் ; (வண்டிறைக்கும்மலர்க் கொன்றை) முதலிய செய்யுள்களை நோக்குக. கட்டளைக் கலித்துறை இலக்கணம் முன்னர்க்கூறப்பெற்றது. கலிநிலைத்துறையாவது — மா கூவிளம் விளம் விளம் மா என ஐந்துசீரான் வருவது. (அன்னங் கண்படு

தண்பனை நிடதகா டளிக்கும்.) இங்ஙனமே காப்பியக்கலித்துறையும், திலதக்கலித்துறையும் ஒவ்வோர் கட்டளைபற்றி வருவதனைக் கண்டுகொள்க. (கொச்சக ஒருபோகு - மூவா முதலா வுலகமொரு மூன்று மேத்தத், தாவாத வின்பந் தலையாயது தன்னி னெய்தி.) இச்செய்யுள் ஈற்றுச்சீர் தேமா வாகவும் அதற்குமுன்சீர் தேமா அல்லது புளிமாவாகவும் முதல் நான்கு சீர்களும் மாமுன் நிரையும் விளமுன் நேரும் காய்முன்னும் கனி முன்னும் நேரேனும் நிரையேனும் பெற்று வருவது.

அறுசீர் விருத்தம் :— மா மா காய் மா மா காய் (பாடற் கினிய வாக்களிக்கும் பாலுஞ் சோறும் பரிந்தளிக்கும்) எனவும், விளம் மா தேமா விளம் மா தேமா (பத்தனுய்ப் பாட மாட்டேன் பரமனே பரம யோகி — இதில் விளத்திற்குப் பதிலாக மாங்காய் வரும்—அத்தாவுன்) எனவும், காய் காய் காய் காய் மா தேமா (கறங்குதிரைக் கருங்கடலுங் காரவுணப் பெருங் கடலுங் கலங்கக் கார்வந்) எனவும், இவை போல்வனவும், இவைபோல் யா தேனும் சந்தம்பற்றி வருவனவும் உள.

எழுசீர் விருத்தம் :— விளம் மா விளம் மா விளம் விளம் மா (சோதியே சுடரே சூழொளி விளக்கே சுரிகுழற் பணைமுலை மடந்தை— இதில் விளத்திற்கு மாங்காயும் வரும்—பால்கொள் வெண்) எனவும், விளம் விளம் விளம் மா விளம் விளம் மா (சேரணி திகழ்தரு வேதநன் னூலர் திரிபுர மெரிசெய்த வழகர்) எனவும் வரும் ; இவைபோல்வனவும் சந்தம்பற்றி வருவனவும் கொள்க.

எண்சீர் விருத்தம் :— காய் காய் மா தேமா காய் காய் மா தேமா (அரியானை யந்தணர்தஞ் சிந்தை யானை யருமறையி னகத்தானை யணுவை யார்க்கும்) எனவும், காய் காய் காய் மா காய் காய் காய் மா (இல்லையே யென்னாத வியற்பகைக்கு மடியேன்.........) எனவும், விளம் விளம் விளம் மா விளம் விளம் விளம் மா (போற்றியென் வாழ்முத லாகிய பொருளே... ......) எனவும் வரும்; இவை போல்வனவும் கொள்க. இவற்றிற்கு எது கையும் மோனையும் ஏற்ற இடங்களில் வரும். வித்தியார்த்திகள் பிரபுலிங்க லீலை, திருவிளையாடற் புராணம், பெரியபுராணம், முதலிய சீரிய நூல்களி லுள்ள செய்யுட்களின் கட்டளைகளை உற்று நோக்கி அறிந்து கொள்க. பராபரக்கண்ணி முதலியவை ஈரடியால் அடிக்கு நான்குசீர் பெற்று வெண் டளை பிறழாது வரும். (பாராயோ வென்னைமுகம்.........) இனிச்சந்த விருத்தங்கட்கும் முன்னர்க் கூறிய குழிப்புக்களைக்கொண்டு செய்யுள்களை அமைக்கலாம்.

அணியாவது செய்யுட்கு அழகு செய்து நிற்பது ; [அலங் காரம்]. அது சொல்லணி, பொருளணி என இருவகைப்படும். யமகம், திரிபு, பிராசம் முதலாகச் சொற்பற்றி நிகழ்வன சொல்லணிகளாம் ; [சப்தாலங்காரம்]. (யமகமாவது—பலஅடிகளிலாயினும் ஓரடியில் பல இடங்களிலாயினும் வந்த எழுத்துத் தொடர்களே மீண்டும் வந்து பொருள் வேறுபடுவது. திரிபாவது—ஒவ்வோரடியிலும் முதலெழுத்து வேறுபட் டிருக்க, இரண்டு முதலிய பலஎழுத்துக்கள் ஒன்றி நின்று பொருள் வேறு

படுவது. பிராசமாவது—வந்த எழுத்துக்களே மீண்டும் வருவது. பொருளணி—உவமையணி முதலாகப் பலவாறு பொருள்பற்றி நிகழ்வனவாம்; [அர்த்தாலங்காரம்] உவமையணி—இரண்டு பொருள்களுக்கு ஒப்புமை விளங்கச் சொல்வது; [உபமாலங்காரம்]. மற்றும் இதர அணிகளை அலங்கார நூல்களுட் காண்க. இவற்றிற்குதாரணம் செய்யுட் கோவையில் ஆங்காங்குக் குறிக்கப்பட்டன.

பொருளாவது—சொல்தொடர் கருவியாக அறியப்படுவது அது—அறம் பொருளின்பமும், அவற்றின் நிலையின்மையும் அவற்றின் நீங்கிய வீடுபேறும் என விவரிக்கப்படும். அப்பொருள் அகப்பொருளும், புறப்பொருளுமென இருவகைப்படும். அகப்பொருளாவது ஒத்த அன்பினராகிய தலைவனும் தலைவியும் உள்ளத்து உணர்வால் அனுபவிக்கும் இன்பம். கைக்கிளை முதலியவற்றின் இலக்கணங்களை விரிந்த நூல்களிலும் இலக்கியத்தை இச்செய்யுட்கோவையிலும் கண்டுகொள்க. புறப்பொருளாவது—மேற்கூறிய ஒத்த அன்புடையவராலேயே யன்றி எல்லாராலும் அனுபவித்து அறியப்பட்டு இது இவ்வாறு இருந்ததெனப் பிறர்க்குக் கூறப்படும் பொருள்; அது—அறமும், பொருளும். அது—வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என ஏழுதிணைகளாக வகுக்கப்படும்.

“வெட்சி நிரைகவர்தல் மீட்டல் கரந்தையாம் வட்கார்மேற் செல்வது வஞ்சியாம்—உட்கா தெதிரூன்றல் காஞ்சி எயில்காத்தல் நொச்சி அதுவளைத்த லாகு முழிஞை—யதிரப் பொருவது தும்மையாம் போர்க் களத்து மிக்கோர் செருவென்றது வாகையாம்”. என்றதனால் புறத்திணை இலக்கணமும் அத்திணை துறைகளுக்குச் செய்யுட்கோவையில் இலக்கியமும் நோக்கி உணர்ந்து, இவ்வாறு இச் செய்யுட்கோவையால் அறம் பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு உறுதிகளையும் பெறுவது மாந்தர்க்கு உரியதாகும்.

முற்றிற்று.

சுபம்.

# பாட்டு முதற்குறிப் பகராதி.


| பாட்டு. | | பக்கம். |
|---|---|---|
| அங்கட்கமலத் | ... | 23 |
| அங்கமலன் | ... | 39 |
| அடிகொண்ட | .... | 53 |
| அந்நலம் | .... | 44 |
| அம்பேறுண் | ... | 20 |
| அம்மநின் | ... | 59 |
| அரசியல் | .... | 74 |
| அரிதென்று | .... | 72 |
| அருங்கலை | ... | 39 |
| அருவமு | .... | 44 |
| அருவருக்கு | .... | 34 |
| அருவெணி | ... | 61 |
| அறனன்று | ... | 2 |
| அறிவினி | ... | 61 |
| அற்புதமணி | ... | 50 |
| ஆங்கற் | .... | 65 |
| ஆடகச்செம் | ... | 8 |
| ஆதிமுதனுணர்ந் | .... | 9 |
| இருகூற்றுருவத் | .... | 66 |
| இருக்கோல | ... | 58 |
| இலதெனி | .... | 61 |
| இலவிதழ் | .... | 44 |
| இன்னருளே | .... | 62 |
| உண்டாங்கெனினு | ... | 31 |
| உம்பர்பெருமாற் | ... | 16 |
| உருவல | .... | 22 |
| உலகமொ | ... | 44 |
| உளவையி | .... | 61 |
| எண்பயிலா | ... | 61 |
| எத்தொழிலுங் | .... | 61 |
| எவ்விடத்தி | .... | 61 |
| எவ்வுருவு | .... | 62 |
| என்னென்று | ... | 72 |
| ஒருநோக்கம் | ... | 58 |
| ஒன்றினம் | ... | 73 |
| ஓருருவாய் | .... | 61 |
| கங்கைக்குக் | .... | 15 |
| கடநாக | .... | 43 |
| கடிக்கமலப் | .... | 58 |
| கடித்தாமரைக் | ... | 71 |
| கண்ணுதல் | .... | 3 |
| கம்பக்கரடக் | ... | 16 |
| கம்பைமாநதி | ... | 18 |
| கருந்தாது | ... | 12 |
| கருமிடற்றன் | .... | 17 |
| கரும்புஞ் | .... | 68 |
| கறையரவுக் | ... | 4 |
| கறைவிட | ... | 43 |
| கற்பனைகழன்ற | .... | 45 |
| கனகமார் | .... | 19 |
| கனமளித்த | .... | 33 |
| காதன்மகளிர் | .... | 10 |
| காமருயிர் | .... | 10 |
| காளியாடக் | .... | 66 |
| குழைதூங்கு | .... | 54 |
| கூகாவென்று | .... | 69 |
| கூற்றங் குமைத்த | .... | 6 |
| கூற்றிருக்கு | .... | 22 |
| கைத்தலத்த | .... | 36 |
| கொன்செய்த | .... | 37 |
| கோமுனிவ | .... | 34 |
| கோளாருண் | ... | 20 |
| சத்தமுமாகி | ... | 28 |
| சிலைக்கோடு | .... | 56 |
| சிலைமுகங் | .... | 56 |
| சிற்றம்பலத்து | ... | 29 |
| சீராட்டு | ... | 61 |
| சூன்முகத்த | ... | 60 |
| செக்கர்சடை | ... | 11 |
| செம்பொன் | .... | 18 |
| செல்லார் | .... | 65 |
| செவ்வாய்க் | ... | 68 |

| | | | |
|---|---|---|---|
| சேல்செய்த | .... 49 | பைந்துழாய் | ... 54 |
| சொல்லொடு | ... 44 | பொற்றாது | ... 24 |
| சொன்மாலை | ... 39 | பொன்னம்பலத்து | .... 29 |
| தண்ணென் | .... 25 | பொன்செய் | .... 73 |
| தந்தைநீ | ... 62 | பொன்புரிந்த | .... 11 |
| தாமடிகண் | .... 59 | பொன்மன்றம் | ... 9 |
| திங்கட்சடைக் | ... 32 | போற்றுமின் | ... 16 |
| திருமுடியிற் | ... 3 | மதுவிரி | .... 37 |
| தீர்த்தமென் | .... 27 | மல்லாண்ட | ... 53 |
| தேரினை | ... 39 | மறைதங்கு | ... 56 |
| தேன்மறிக்கும் | .... 37 | மாயிரு | ... 26 |
| தொடலைக் | .... 50 | மாயிருஞாலத் | .... 30 |
| தொல்லுலகம் | ... 43 | மாயையினு | ... 61 |
| நலனழிந்து | ... 40 | மீனேற்றின் | ... 54 |
| நன்னிறங் | ... 39 | முதிராவிளமுலை | ... 40 |
| நாகம்பொதி | ... 30 | முத்தேவர் | ... 65 |
| நான்மறைக்குந் | .... 59 | முத்தொழிலின் | .... 44 |
| நின்னலா | .... 62 | முத்தொழிலின்முதற் | 58 |
| நீரிற்குமிழி | ... 6 | முருகுயிர்க்கு | ... 37 |
| நெஞ்சகங் | .... 62 | முன்புலகீன்ற | .... 18 |
| படர்தரும்வெவ் | ... 21 | முன்மலையுங் | .... 43 |
| பரசிருக்குந் | .... 21 | மெய்த்துயர | .... 61 |
| பருந்தளிக்கு | ... 74 | மேதக்க | ... 61 |
| பலகலையுங் | .... 59 | வணங்கு | ... 4 |
| பல்பேருழி | ... 53 | வண்டுஞ்சுரும்பு | ... 14 |
| பாடுவார் | ... 40 | வம்மினமரங்காண் | .... 75 |
| பாரித்த | .... 39 | வரத்திற் | ... 5 |
| பானற்கருங்கட் | ... 67 | வருநீலப் | ... 43 |
| பிணியென்று | .... 72 | வளங்குலாவரு | .... 35 |
| பிறையளிக்குஞ் | ... 37 | வானோருண் | .... 20 |
| பின்றாழ்நறுங் | .... 19 | வாழிதிரு | .... 6 |
| புற்புதமுங் | ... 60 | வாழ்த்துமின் | ... 75 |
| புனலழுவம் | .... 8 | வானேநிலனே | ... 13 |
| பூந்தண் | ... 25 | விசையிலெம் | ... 44 |
| பூங்கொன்றைக் | ... 1 | விடமார்ந்த | ... 56 |
| பூந்தண்பசுந் | .... 7 | வின்மதனை | ... 13 |
| பெரியைநீ | ... 44 | வெஞ்சம | .... 24 |
| பெருவெள்ளப் | ... 61 | வெள்ளெருக்குங் | .... 56 |
| பேதைமீர் | .... 39 | வையமீன்ற | ... 69 |
| பேரம்பலத்து | ... 29 | | |


PRINTED AT THE SRI AMBAL PRESS, SHIYALI.

உ

சிவமயம்.

கணபதிதுணை.

ஸ்ரீமத் குமரகுருபர சுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

# சிதம்பரச் செய்யுட் கோவை.

இது

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

உசு-வது மஹா சந்நிதானம்

ஸ்ரீ ல ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த

பரமாசாரியவர்ய சுவாமிகள்

கட்டளையிட்டருளியபடி

வைத்தீசுவரன்கோவில் மகா-ள-ள-ஸ்ரீ

வித்வான், மு. ஷண்முகதேசிகரவர்கள்

இயற்றிய

பதவுரை, குறிப்புரைகளுடன்

சீகாழி வித்துவசிகாமணி, மகா-ள-ள-ஸ்ரீ

ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை அவர்களால்

பார்வையிடப்பெற்று

சீகாழி

ஸ்ரீ அம்பாள் பிரஸில் அச்சிடுவிக்கப்பெற்றது.

காப்பிரைட்] 1937 [பிரதிகள் ரூ.

29 DEC 1982